

கலை
தீபாவளி மலர் ·60.
ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்
வடிவுக்கு வளைகாப்
கதை, வசனம் A.P.நாகராஜன்
டைரக்ஷன் K.சோமு
சங்கீதம் K.V.மஹாதேவன்
பாடல்கள்: மருதகாசி
BALU BROS
தயாரிப்பு: V.K.ராமசாமி. A.P.நாகராஜன்


ரெமி
Remy
BEAUTY
AIDS
Remy


நவம்பர் வெளியீடு!
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
திலகம்
டைரக்ஷன் :
கிருஷ்ணன் பஞ்சு
திரைக்கதை, வசனம்: K.N.நாராயணசாமி
AVM
புரொடக்ஷன்ஸ்




சென்னை ராஜ்ய பூரண வினியோகஸ்தர்கள் :

# THE DRUG HOUSE

டிரக் (ஹ்) ஹவுஸ் சேலம்

**Sole Prop: R.V. CHOCKALINGAM**

*Manufacturer's Representatives*

**Post Box No. 55, SALEM-1.**

Telegrams:
**"CHOCKS"**

Telephone:
**488 : : 269**

*Branch:* **25, Chinnathambi St., G. T. MADRAS-1.**

# புத்தொளி

# பூத்துக் குலுங்க...

எண்ணற்ற விளக்குகள் விழாவிற்கு எழில் சேர்க்கும். இதயங்களோ இன்பப்பண் ஆர்க்கும். கண்கள் ஒளி சேர்க்கும். விழா, கவலையினைத் தீர்க்கும். களிப்பினை வார்க்கும், எல்லோருக்கும்!

பாதுகாப்பான உணர்விற்குப் பாதை அமைக்கின்றன, மகிழ்வும், மனநிறைவும்!

உங்களுக்கும், உங்கள் அன்பிற்கு உரியவர்களுக்கும், உறுதியான வருங்காலப் பாதுகாப்பிற்கு வகைசெய்ய ஆயுள் இன்சூரன்சு அல்லால் வேறு வழியும் உளதோ?



**ஆயுள் இன்சூரன்சு போல**

**ஆதரவு தருவது எதுவுமே இல்லை**


ASP/LIC-SP-8





S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே • தபால் பெட்டி 1151, மதராஸ்-21



விரைவில் வருகிறது!
அறிமுகம் விஜயன்
L.விஜயலட்சுமி
நடிக்கும்
குமரி பிலிம்ஸ்
பாதை தெரியுது பார்!
மற்றும்
S.V. சகஸ்ரநாமம்
S.V. சுப்பையா
T.S. முத்தையா
T.K. பாலச்சந்திரன்
R. முத்துராமன்
A. வீரப்பன்
சுந்தரிபாய்
சாந்தினி
கதை, வசனம்
R.K. கண்ணன்
இசை
M.B. சீனிவாசன்
ஒளிப்பதிவு & டைரக்ஷன்: நிமாய் கோஷ்
NEGATIVE RIGHTS CONTROLLED BY: SAKTHI FINANCIERS, MADRAS.
குமரி பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்.,
124 - ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.
BHARATH STUDIO


Releasing Shortly all over India
SUSPENSE .. SUSPENSE AND MORE SUSPENSE
ASHOK KUMAR
RAJINDER KUMAR
NANDA
JEEVAN
MANMOHAN KRISHNA
SHASHIKALA
NANA PALSIKAR
DEWAN SHARAR
AND
MEHMOOD
ALL-INDIA FILM CORPORATION RELEASE
BR FILMS
KANOON
PRODUCED & DIRECTED BY B. R. CHOPRA
STORY C. J. PAVRI
DIALOGUE AKHTAR-UL-IMAN
PHOTOGRAPHY M. N. MALHOTRA
MUSIC SALIL CHOWDHURY
Distributors for South :
Nizam : Movies Private Ltd., Secundrabad
Mysore : Rattan Pictures, Bangalore
Tamilnad : All India Pictures, Madras


# Diwali Greetings



May the radiant beam
of glorious dawn
dispel
the gloom of all our sorrows

EASTERN RAILWAY


Central -A.


வழக்கமாக உபயோகியுங்கள்
நீம்
டூத் பேஸ்ட்
குழந்தைப் பருவம் முதல்
பற்களையும், பல்லீரல்களையும்
வலுவுள்ளதாகச் செய்கிறது.
தயாரிப்பு:
கல்கத்தா
கெமிகல்
NTP-190 TM


கல்கெமிகோவின்
காஸ்டரால்
இனிமையான மணமுடைய
விளக்கெண்ணெய்
கூந்தலைச்
செழிப்பாக வளரச்
செய்கிறது
தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்
கல்கத்தா - 29
தென் இந்தியா ஆபீஸ்: 5/149 பிராட்வே.
மதராஸ் - 1

# நிரந்தர எழில்

பல நூற்றுண்டுகள் கழிந்த பின்பும் இன்றும் அதே வர்ண ஜ்வலிப்பு? அவ்வளவு ஜீவனுடன் விளங்குகின்றன, அஜந்தாவின் எழிலோவியங்கள். என்ன கம்பீரமாக ராஜபவனி வருகிறது பாருங்கள்!



**Spartan**


இதே நிரந்தர எழிலே பிரசித்தி பெற்ற "ஸ்பார்ட்டன்" வண்ணங்கள் மூலமாக எங்கும் பரப்ப பாடுபட்டு வருகிறது அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் ஸ்தாபனம்.

மெம்பர்: இந்தியன் பெயிண்ட் அஸோஸியேஷன்.

**அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ்**
பிரைவேட் லிமிடெட்
**செம்பியம்-மதராஸ்—11.**

APC-65B

எல்லோருக்கும் எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்கள்




வெள்ளி விழாக்கள் கொண்டாடும்
சித்திரங்களையும், நூறு நாட்களுக்குமேல் ஓடும் சித்திரங்களையும்
விநியோகிப்பவர்கள்.....

*Phone* : 84178.

**சிவாஜி பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்**

3. பஸந்த் ரோடு..... சென்னை-6.

BAW BROS



வெளியிடுவோர்
ஓவியன் அ. பானு

ஆசிரியர்
ஓவியன் அ. சீ

# மலருக்கு மணம் ஊட்டியவர்கள்......

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
டாக்டர் மு. வரதராசனர்
முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்
டாக்டர் அ. சிதம்பரநாதன்
தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன்
பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்
கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு
கவிஞர் கா. மு. ஷெரீப்
டார்க்டர் லக்ஷ்மி
உதவிக் கமிஷனர் குழந்தைவேலு
ஜெகசிற்பியன்
ராஜம் கிருஷ்ணன்
எல்லார்வி
கோ. வி. மணிசேகரன்
க. இராஜேஸ்வரி அம்மையார்
பாஸ்கர தொண்டமான்
பிலோ இருதயநாத்
பி.டி. சுந்தரம்
பாலு சகோதரர்கள
கௌதமன்
ராதா
கலைச்செல்வம்
ஜீவகன்'
க. மல்லிகா
சீ. ரா.
தார்ரா
சென்னப்பன்

இதில் வரும் கதை கட்டுரைகளில் உள்ள சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே

# அணங்கா? பிணியா?

(சித்திரமும் கட்டுரையும்)

ஓவியர் அ. சீனு.

கொடி போன்ற உடல்; கொவ்வைக் கனி போன்ற இதழ்; முத்துச்சரம் போன்ற பற்கள்; முழுநிலா போன்ற வட்ட முகம்; முகம் திரிந்து குலையாத புத்தம் புதிய எழில் மார்புகள்-இத்தனையும் படைத்த இந்த காவியத் தலைவியை பருவம் வந்ததும் காதல் நோய் வந்து பற்றிக்கொண்டது.

மலை போன்ற தோளும், மாற்றார் படை நடுங்கும் உடலும் படைத்திருந்த திண்தோள் மறவன் ஒருவனின் காதல் விளையாட்டுத் தோட்டமாக மாறிய இவள் பின்னர் தினைப்புனக் காவலுக்கு என்று ஊருக்கு வெளியே செல்லும் பொழுதெல்லாம் இவ்வாறு கட்டழகுக் கோலம் கொண்டு தன்னைத் தொட்டணைக்க காதலன் வாரானோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தாள். இந்தச் செய்தி சிறுகச் சிறுக ஊருக்குத் தெரிந்து விடவே அவர்கள் இவள் போகும் பொழுதெல்லாம் தம் வாயை மென்றனர். இவளை ஒரு காமவல்லி என்றனர். ஆனால், தன்னந்தனியளாக தன் காதலனின் வருகைக்காக பொய்கைக் கரையிலே காத்துக்கிடந்த இவளோ தன்னருகில் ஜோடியாக விளையாடி மகிழ்ந்த பறவைத் தம்பதிகளிடம் "எல்லோரும் காமம், காமம் என்று நான் செய்யத் தகாததைச் செய்து விட்டது போல அலறி ஓடுகிறார்களே! அவர்கள் அப்படி அலறி ஓடுவதற்கு காமம் என்ன கண்டால் அறைந்துவிடும் பேயா? அல்லது தொட்டால் ஒட்டிக்கொள்ளும் நோயா?" என்றாள். இதனையே மிளைப்பெருங் காந்தன் என்ற குறுந்தொகைக் கவிஞர்

"'காமம் காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே"

என்ற சொல்லோவியமாக்கியுள்ளார். அதனையே நாமும் இங்கு அழகிய மூவண்ண ஓவியமாக்கியுள்ளோம்.

கலை


பாலு சகோதரர்கள்


BALU BROS.
செடி மார்க்
சிவபுரி புகையிலை
[பிரைவேட்] லிட்.,
71, ஸ்டேஷன் ரோடு,

# தமிழ்த் தாயின் தலைமகனாருக்கு

## அன்புக் காணிக்கை

பைந்தமிழ் நாட்டின் முழுமுதற் புலவனே! 'புவிமீது எங்கள் தமிழுக்கு இணையானது எது?' என்று நாங்கள் நெஞ்சம் நிமிர்ந்து கேட்பதற்கு வகைசெய்த பொய்யாமொழியாரே! தமிழ்த் தாயின் தலைமகனாகத்தோன்றி, தரணி எல்லாம் தமிழ் நெறியை பரப்பும் பொதுமறையை எமக்கு அளித்த வள்ளுவப் பெருந்தகையே!


B.B.

உங்கள் மலரடிகளுக்கு எங்கள் உழைப்பால் விளைந்த இந்த வண்ண மலரை அன்புக் காணிக்கையாக்குகின்றோம்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலிதரும்"

என்ற தங்கள் குறளடிகளுக்கு ஏற்ப எங்களது அயராத முயற்சி அளித்த வெற்றிப் பரிசு இது. உண்மையில் இதனை எங்கள் வெற்றி என்பதைவிட தமிழ்ப் பழங்குடி மக்களின் வெற்றி என்றுதான் கூறவேண்டும். ஏன் எனில் மூளை வசதி ஒன்றைத் தவிர மற்ற வசதியேதும் அற்ற நாங்கள் மாற்றாரும், வியக்கும் வண்ணம் இந்தக் கலைக் களஞ்சியத்தைத் தயாரித்ததற்கு அவர்கள் அளித்த ஊக்கமும் - உற்சாகமும்தான் நல்ல எருவாகப் பயன்பட்டன. எங்களுக்கு சோர்வுவரும் நேரத்தில் எல்லாம்,

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சிதரும்"

என்ற தங்களுடைய பொய்யா மொழிதான், எங்களை மலர் வேலையின் இடையிலே துவண்டு விடாமல் காப்பாற்றியது.

எனவே தமிழர்களால், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காகவே நடத்தப்படும் இந்த ஏடு, இன்று தன்னுடைய மூன்றாவது மலரை - காவிய மணமும் - ஓவியச் சிறப்பும் உடைய இந்தக் கருத்துப் புதையலை - தமிழ் மக்களின் சார்பாகத் தங்களுடைய பொன்னடிகளுக்கு காணிக்கை ஆக்குகின்றது. தமிழ்க் கடலையே கடைந்த சான்றோரான தாங்கள், தங்கள் மழலை செல்வங்கள் தீட்டி மகிழ்ந்த இந்த சிறு முயற்சியையும் ஏற்றருள வேண்டுகிறது.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
லோகா அமிர்தம் எங்கள் தெய்வம்.

# தமிழர்களின் ஒற்றுமையும் தமிழ் மொழியின் வளர்ச்சியுமே நமது இலட்சியம்

"யாதும் ஊரே! யாவரும் கேளீர்" என்ற பரந்த உள்ளம் படைத்திருந்த நாட்டிலே தான் இன்று பார்க்குமிடமெல்லாம் பகைத் தீயைச் காண்கின்றோம். "காக்கைக்குருவி எங்கள் சாதி" என்று பாடிய பைந்தமிழ்ப் புலவர் பிறந்த நாட்டிலேதான் ஒரே வயிற்றில் பிறந்தவர்களே கூட கட்சி வெறியின் காரணமாக கீரியும் பாம்புமாக சீறிக் கொண்டு நிற்கும் வேடிக்கையைக் காணுகின்றோம்.

தமிழ் மண்ணிற்கே உரிய இந்தச் சாபக்கேடு — பிரிவு மனப்பான்மை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கிருத்து பிறப்பதற்கு முன்னரே இங்கு முடி சூடியிருந்த கரிகாலன் காலம் முதல் இன்றைய நம்முடைய முதலமைச்சரான காமராஜர் காலம் வரையில் தமிழர் வரலாற்றில் வழுக்கி விழும் இடமெல்லாம் இந்த உள்நாட்டுப் போர்களையும் அதனால் முடியிழந்தவர்களின் கணக்கையும்தான் காண முடிகிறது. உடனிருந்தே கொல்லும் வியாதி போல — இலங்கை வேந்தனை உடனிருந்தே கொன்ற விபீஷணனைப் போல நம்முடனேயே இருந்து கொண்டு நம்மை மாய்த்து வரும் இந்த உட்பகையை, பொன்னைத் தேய்க்கும் அரத்தைப் போல ஒருவனது குடியைத் தேய்க்கும் கொடுங் கருவி என்று பொருள் படும்.

'அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி"

என்ற குறளாக கற்பவர்தம் நெஞ்சத்தில் பதிய வைக்க முயல்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் தமிழர்களும் அவர்களுக்குவழிகாட்டவேண்டிய தலைவர்களும் இன்று பிளவைக் குறைப்பதற்கு மாறாக அதனை வளர்ப்பதையே தங்களுடைய வாழ்க்கை நெறியாகக் கொண்டுள்ளனர்.

எனவேதான் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து கொண்டு தமிழகத்தின் மானத்தையே குலைத்து வரும் தமிழர் தலைவர்களின் ஒற்றுமையைக் கலை தன்னுடைய முழு முதற் இலட்சியமாகக் கொண்டது. அதனால்தான்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற தமிழ்மறை அதனுடைய தாரகமந்திரமாகியது. சொல்பவர்கள் எத்தன்மை உடையவர்களாக இருந்தாலும் — மக்கள் சமுதாயத்தில் அவர்களுக்கு எந்த அளவிற்குச் செல்வாக்கு இருந்தாலும் 'கலை' ஏடு அவர்கள் நல்லது செய்தபோது தலைவணங்கவும் அல்லது செய்த போது கண்டனக் கணை தொடுக்கவும் என்றுமே தயங்கியதில்லை.

இன்று தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது நம்மை ஆளபவர்களோ அல்லது அவர்களுக்கு எஜமானர்கள் என்று கருதப்படும் வட நாட்டினரோ அல்ல. நம்மிடையே உள்ள ஒற்றுமை இன்மைதான் நம்மை தாழ்த்திக் கொண்டு வந்துள்ளது. உலகையே ஆளவல்ல நம்முடைய தலைவர்கள் மட்டும் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து நாட்டின் நலன் என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு விட்டால் விந்தியம் மட்டுமல்லாது இமயமும் சேர்ந்தே தமிழன் சுட்டிய திசை நோக்கிப் பாயக் காத்திருக்கும்.

அந்த நல்ல நாள் நாளையே அரும்ப வேண்டுமானால் நாட்டு மக்களான நாம்தான் முதலிலே கட்சிப் பூசல்களை ஒதுக்கி விட்டு, ஓரணியில் திரள வேண்டும். ஏனெனில் "ஆட்டிடையன் தான்

மாறுவானே தவிர ஆடு மாருது!'' என்ற பழமொழிக்கு ஏற்ப இன்றிருக்கும் தலைவர்கள் நாளை மாறலாம் — இன்று ஒரு கட்சியை ஆதரித்தவர்கள் நாளையே அதனை அழிக்கப் புறப்படலாம். ஆனல் மக்களும் நாடும் மட்டும் என்றும் மாருதவர்கள். அதிலும் நம்முடைய தாயகத்தைப் போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள்தான் மகேசனுடன் வைத்துஎண்ணப்படவேண்டியவர்கள் அந்த மகேசர்களின் — தமிழ்ப் பெருங்குடி மக்களின் தாழ் பணிந்து இந்த வண்ணமலரை அவர்களுக்கு அன்புப் பரிசாக்குகின்ருேம்!

தமிழக ஒற்றுமைக்கு அடுத்ததாக, தமிழ் மொழியின் வளர்ச்சியையே கலை தன்னுடைய வளர்ச்சியாகக் கருதுகிறது. தமிழுக்குப் பகைவர்கள் என்ருல் அவர்கள் கலைக்கும் பகைவர்கள்தான். தமிழுக்கு நண்பர்கள் என்ருல் அவர்களுக்கு கலை என்றும் சிரம் தாழ்த்தித் தொண்டு செய்யக் காத்திருக்கின்றது "ஆன என் தமிழ் ஆட்சியை நிறுவுவதற்கு அல்லல்கள் வரினும் ஏற்போம்; ஊன் உடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டிற்கு உவப்புடன் நாம் சேர்ப்போம்!" என்ற புரட்சிக் கவிஞரின் புதுமைக் கருத்துக்களையே தன்னுடைய கொள்கையாகக் கொண்ட கலை ஏடு, தமிழ் காக்கும் கேடயமாகத் திகழ்வதாலேயே, தமிழகத்துப் புலவர் தம் இதயம் கவர்ந்த ஒன்ருக — சிலம்பை இதுவரையும், சீவக சிந்தாமணியையும் — கம்பர் தந்த கவி அமுதையுமே புரட்டிக் கொண்டிருந்த பைந்தமிழ்ச் சான்ருேர்களின் கரத்திலே கூடத் திகழும் இலக்கியத் திங்கள் இதழாகக் காட்சி தருகிறது.

தமிழகத்திலேயே மிகக் குறுகிய காலத்தில் பெரும் அளவில் வளர்ந்த ஏடான இது, வையத்தில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிருர்களோ அங்கெல்லாம் தமிழகத்தின் கலைத் தூதுவனுகச் சென்று வருகிறது. கன்னித் தமிழர் வாழும் கம்போடியாவிலும் பண்டையக் கடாரமான பர்மாவிலும் — தமிழர்களுக்கு மதிப்பிருக்கும் மலேயாவிலும் — மற்றும் அவர்கள் நிலை உயர்ந்திருக்கிற ஈழத்திலும் 'கலை'க்கென்று ஒரு தனி மதிப்பிருக்கிறது. இலண்டனிலும், ஆப்பிரிக்காவிலும், அயர்லாந்திலும் கூட அதற்கென்று வாசகர்கள் இருக்கிருர்கள். ஜப்பானிற்கும், சீனத்திற்கும், அமெரிக்காவிற்கும் கூட அதனுடைய பிரதிகள் திங்கள் தோறும் செல்கின்றன.

ஏன் எனில் கலை ஏடு, மற்ற சில ஏடுகளைப் போல ஒரு தனி மனிதனுக்கு என்ருே அல்லது ஒரு குறிப்பிட்ட மனிதருக்கு என்ருே நடத்தப்படும் விளம்பர ஏடு அல்ல; தமிழ் மக்களின் நன்மை ஒன்றிற்கு என்றே நடத்தப்படும் இலட்சியப் பத்திரிகை. அதிலே வருகின்ற நடுநிலைமைக் கொள்கைக்கு என்றே இன்று நானிலம் முழுதும் அதனை வாழ்த்தி வரவேற்கிறது.

இதுவரை தன்னந் தனியாக இருந்து கொண்டு, பத்திரிகை என்ருல் அது ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்துதான் இருக்க வேண்டும் என்ற கட்சி இருள் சூழ்ந்த தமிழகத்தில் — கட்சி சார்பற்ற பொதுப் பணி ஆற்றிக் கொண்டிருந்த உங்கள் கலைக்கு இப்போது துணைவன் ஒருவனும் 'திருவள்ளுவன்' என்ற பெயரிலே கிடைத்துவிட்டான்.

எனவே இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து தமிழர்களின் ஒற்றுமையையும், தமிழ் மொழியின் வளர்ச்சியையுமே தமது இரு கண்களாகக் கொண்டு தொண்டாற்றுவார்கள் என்று முதலிலே உங்களிடம் உறுதி கூறிக் கொள்ளும் அதே நேரத்தில், மற்ருெரு நற்செய்தியையும் எங்கள் வாழ்வின் ஒளியான தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

இந்த மலர் உங்கள் கையிலே திகழும் அதே நேரத்தில் 'கலை'க்கென்று சென்னை மவுண்ட்ரோட்டில் புதிய மாளிகை ஒன்றை நாங்கள் விலைக்கு வாங்கியிருப்போம். அதில் விரைவிலேயே அச்சுக் கலையின் நுணுக்கங்கள் யாவும் உடைய நவீன இயந்திரங்களுடைய மிகப் பெரிய அச்சகம் ஒன்றைத் துவக்க இருக்கிருேம். இதுவரை ஓவியக் கண்காட்சியாக - நடமாடும் கலைக் களஞ்சியமாக இருந்த எங்கள் வண்ண ஓவியங்கள் யாவற்றையும் தொகுத்து அங்கு கண்கவரும் ஓவியக் கண்காட்சி ஒன்றையும் நிரந்தரமாக நிறுவ ஏற்பாடு செய்துள்ளோம்.

எங்களுடைய இந்த வளர்ச்சியைக் கண்டு சில 'நல்லவர்கள்' திகைக்கிருர்கள். 'பழுமரத்தில் தான் கல் விழும்' என்ற முதுமொழிக்கு ஏற்ப வளர்கின்ற நேரத்தில்தான் தூற்றல் மழையும் கிளம்பும் என்பதை நாங்கள் அறியாதவர்கள் அல்ல. எனவேதான் தூற்றுபவர் தூற்றட்டும் போற்றுபவர் போற்றட்டும் என்று எங்கள் கடமையைச் செய்துகொண்டிருக்கிருேம்.

பிறரைத் தூற்றுவதினலேயே ஒருவருடைய வளர்ச்சியைத் தடுத்துவிடலாம் என்ருல் உலகத்தில் ஒரு சாக்ரடீசும், பிராட்லாவும், இங்கர்சாலும்,

இவ்வளவு புகழ்படைத்திருக்க முடியாது. ரப்பர் பந்தை அழுத்த அழுத்த அது விசை கொண்டு எழுவதுபோல ஒருவரைத் தூற்றத் தூற்றத்தான் அவருடைய புகழும் வளருகிறது என்ற பொது நீதிக்கு ஏற்ப, நாமும் இந்த பொருமைக் காரர்களின் தூற்றல் மழையையே நம்முடைய இலட்சியப் பயிர் வளர்வதற்கான நல்ல பருவ மழையாகப் பயன்படுத்தியதால்தான் இன்று கலையின் விற்பனே மேருமலை என உயர்ந்து நிற்கின்றது.

அச்சியற்றும் பத்திரிகை-அதிலும் உயர்ந்த ரகப் பத்திரிகை கிடைப்பது அரிதாக உள்ள இக் காலத்தில் ஒருவர் மலர்போட எண்ணுவதே அரிது. அப்படி எண்ணிய பிறகு அதனே எண்ணியவாரே செய்துமுடிப்பது அதனினும் அரிது. இன்றைய நிலையில் நல்ல மலரை, அதிலும் 5 ரூபாய் விலையுள்ள ஒரு வண்ண மலரை வெளியிடுவதைவிட ஒரு கோயிலையே கட்டி முடித்திருக்கலாம் — எட்டுக் குடும்பங்களுக்குத் திருமணமே செய்துவைத்திருக்கலாம். ஏன்! ஒரு திரைப்படத்தையே எடுத்து முடித்திருக்கலாம்.

பொருட் செலவிலும், உடல் உழைப்பிலும் அந்த அளவிற்கு கடினமாக இருந்து வெளிவந்துள்ள இந்த மலர் உண்மையிலேயே ஒரு காவியப் புதையலாக—நம் வாழ்வோடு வாழ்வாக இயைந்துபோன திரையுலகின் கலங்கரை விளக்கமாக-தமிழ்ச்சான்ருேர்களின் கருத்துப் புதையலாக வெளிவந்துள்ளதால் இதனே நாங்கள் ஒரு விளம்பர மலராக மாற்றி, ரசிகப் பெருமக்களுக்கு ஏமாற்றம் அளிக்க விரும்பவில்லை.

இதில் வந்துள்ள விளம்பரங்கள் யாவும் கலையின் உண்மைத் தகுதியை உணர்ந்த விளம்பர ஸ்தாபனங்கள் கொடுத்ததே தவிர, மற்றவர்களைப்போல நாம் பிறருடைய வீட்டுப்படியேறிப் பெற்றவைகள் அல்ல. எனவே ஏதோ வேண்டியவர்கள் வந்தார்கள் என்பதற்காக விளம்பரங்களைக் கொடுத்துவிட்டு, பின்னர் "அட்டைபோல் பிய்த்து எடுத்துவிட்டான் ஐயா! அதனுல்தான் கொடுத்துத் தொலைத்தேன்" என்று பேசும் இரட்டை நாக்குக்காரர்களின் விளம்பரங்கள் இதில் வரவில்லை.

இதில் விளம்பரங்கள்தான் அதிகமாக வரவில்லையே தவிர விஷயதானங்களுக்கு குறைவில்லை என்பதை மாற்ருரும் ஏற்றுக்கொள்வர். புராணங்களில் அஸ்வமேத யாகம் செய்வதே போல இரவையும் பகலாக்கி உழைத்த எங்கள் இலட்சியத் தயாரிப்பை – பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்தத் தாய் தன் செல்வக் குழந்தையை பார்த்துப் பார்த்துப் பூரிப்பதுபோல நாங்களும் அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பார்த்துப் பார்த்துப் பூரிக்கின்ருேம். குழந்தையின் ஒரே ஒரு புன்சிரிப்பில், தாய் தான் இதுவரை பட்ட துயரை எல்லாம் மறந்துவிடுவதைப் போல, மலரை வாங்கிப் புரட்டியதும் உங்கள் முகங்களிலே மலரும் அந்த புன்முறுவலைக் கண்டதுமே எங்களுடைய துயரமெல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல மறைந்து விடுகின்றன.

"காலத்தினுற் செய் நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"


என்ற குறள் தவழ்ந்த நாட்டில் வாழும் பெரியோரே! தாய்மாரே! நல்லிளஞ் சிங்கங்காள்! கன்னித் தமிழின் கட்டிளமையைப் பாடுவதற்கு நாங்கள் சுந்தரம்பிள்ளையோ அன்றி அதனுடைய ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசும் தமிழ் மணத்தைப் போற்றுவதற்குப் புதுமைப் பாவலர் பாரதியாரோ, வரலாற்றுச் சுவையோடு தமிழ் மணம் கமழும் நாவல் எழுத நாங்கள் கதைக்கடல் கல்கியோ அல்ல. என்ருலும் எங்களால் இயன்ற அளவு காவியமணமும் ஓவியமணமுமுடைய இலட்சியப்படைப்பாக இந்த வண்ண மலரைத் தயாரித்து தமிழ்ப் பெருங்குடி மக்கள் முன் படைக்கின்ருேம்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்ற குறள் கற்ற நீங்கள் அவற்றில் நல்லனவற்றை ஏற்று அல்லனவற்றைக் கைவிட இருகரம்கூப்பி வேண்டுகிருேம்.

எங்கள் இதயம் கனித்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

★



# அண்ணலின் நகைச்சுவையும் மனிதத்தன்மையும்

**டாக்டர், ஏ.சக்கரவர்த்தி** M.A., D.Phil (OXON)

உலகில் வாழ்ந்து மறைந்த இலட்சிய வாதிகளெல்லாம், தங்களின் உயர்ந்த இலட்சிய வாழ்க்கைகளுக்கிடையே ஒரு சில நகைச்சுவைக் கதிர்மணிகளை அவ்வப்போது உதிர்த்துக்கொண்டிருந்த காரணத்தினாலேதான் ஓரளவுக்காவது நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்து முடித்திருக்கிறார்கள்!

மதத்தையும், மூடப்பழக்கங்களையும் கண்டித்தும் பெரும்பாலோரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்ட லட்சியவாதி சாக்ரடீஸ், தன் பெருந்துயர வாழ்க்கையின் இறுதிக் காலங்களை இளைஞர் மணிகளிடையே நகைச்சுவை பேசுவதன் மூலமாகத்தான் கழித்தார்! லிங்கனும், வால்டேரும், ரஸலும், பெர்னாட்ஷாவும்கூட அப்படித்தான்!! ஏன் அண்ணல் காந்தியாரின் சுதந்திர வாழ்க்கையும் அப்படித்தான் கழிந்தது! அந்த அமர அண்ணல் பேசிய, தரத்தாலும்லட்சியத்தாலும் உயர்ந்த நகைச்சுவைகள், உள்ளபடியே அழிக்கமுடியாத ஒன்றாகும்! அவைகளில் சில பலவற்றை கலையின் இச்சிறப்பிதழில் தீட்டிக்காட்டுவதால் பெருமை கொள்கிறது கலைமலர்!

அந்த அமர அண்ணலின் அழியாததும், மனிதத்தன்மை கலந்ததுமான நகைச்சுவைகள் அவரின் வாழ்க்கையிலிருந்தே திரட்டப்பட்டவையாகும்! அவைகளை இங்கே காணுங்கள்!

ஓர்முறை அவர் 'எர்ரவாடா' சிறையில் விடுதலைப் போராட்டத்தின் காரணமாகச் சிறைபட்டுக் கிடந்தபோது தன்னிடம் ஒரு ஏழு மதசம்பந்தமானதும், தரத்தாலும், இலட்சியத்தாலும் உயர்ந்தது மான புத்தகங்களை உடன் வைத்துக்கொண்டிருந்தாராம்—இவைகளில் ஒன்று மௌலானா அபுல் கலாம் ஆசாத்தால் அளிக்கப்பட்ட 'உருது மதநூலும்' மற்றொன்று அண்ணலின் நித்திய வாழ்க்கையில் தேவைப்படும் பொருள் அகராதியுமாகும்...! இதைத்தான் தடுத்தது சிறை நிர்வாகம் பலேபேர்வழியான அந்தச் சிறையதிகாரி இது சம்மந்தமாக அண்ணலுக்குஓர் யோசனை சொன்னார்! இந்த ஏழு புத்தகங்களையும் சிறை நூல்நிலையத்திற்கு அண்ணல் அன்பளிப்பாகக் கொடுத்து விடுவதென்றும், பிறகு வேண்டும்போது அவைகளை நூல்நிலையத்திலிருந்து கடனாகத் திரும்பிப் பெற்றுக்கொள்ளலாமென்றும் மிகச் சாதுர்யமான யோசனையொன்றைச்சொன்னார். அந்தச்சிறையதிகாரி! இந்த யோசனையைக்கேட்டவுடன் அண்ணலுக்குக் கோபம் வருவதைவிட சிரிப்புத்தான்வந்ததாம்! கல,கலவென்று சிரித்துவிட்டு- 'ஏன் என் வலது கரங்களையும் உங்கள் நூல்நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கேளுங்களேன் கொடுத்துவிட்டு, வேண்டும் போதெல்லாம் திருப்பி வாங்கிக்கொள்ளுகிறேன்!' என்றாராம் வெட்கமடைந்த சிறையதிகாரி அண்ணலிடமே இந்த ஜீவாதார உரிமைக்கு மறுப்பேதும் சொல்லாமல், அந்த ஏழு புத்தகங்களையும் அண்ணலிடம் இருக்க அனுமதித்து விட்டாராம்! எனவே அதுமுதல் தான் என்னவோ, சிறைக்குச் செல்பவர்களெல்லாம் இப்போது புத்தகங்களையும் தைரியமாக உடன் கொண்டுசெல்லுகின்றனர்.

மற்றொருமுறை இதே சிறையில் அண்ணல் தன் நித்தியதேவைக்காக, அதாவது உணவுவேளைகளின்போது ரொட்டியையும், எலுமிச்சம்பழங்களையும் தானே அறிந்து பக்குவப்படுத்துவதற்கு ஒரு சிறு பேனாகத்தியையும் தன்னுடன் வைத்திருந்தாராம் அண்ணல். இது சிறையதிகாரியின் கண்ணை உறுத்தியதாம்! அண்ணல் அதை வைத்துக்கொள்வதைத் தடுக்கமுன் வந்தாராம் அந்தச் சிறை அதிகாரி..! வழக்கம்போலப் பின்வாங்கவோ அல்லது அண்ணலின் நகைச்சுவையைகண்டு ரசிக்கவோ என்னவோ 'கத்தி'யைக்கூடாது; என்றாராம் சிறை அதிகாரி. மறுகணமே அண்ணல் சொன்னாராம் சிரித்தபடி 'ஏன் நான் சாப்பிடக்கூடாது!' என்று தான் சொல்லுங்களேன்! என்றாராம். அது கேட்டுச் சிலையாக சிறை அதிகாரி நின்றார்.

★



எஸ். இராதாகிருஷ்ணன் இந்திய உதவி ஜனாதிபதி,
புதுடில்லி,
6—10—60.

அன்புடையீர்

தங்கள் கடிதம் கிடைத்தது. மிக்க நன்றி. தங்கள் தீபாவளி மலர் வெற்றியடைய வாழ்த்துகின்றேன்.

★

எம். பக்தவத்சலம், செயின் ஜார்ஜ் கோட்டை
உள் நாட்டமைச்சர் சென்னை



அன்புள்ள சகோதரர்களுக்கு,

கலையின் தீபாவளி மலர் வருவதை எல்லோரும் வரவேற்பார்கள். என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



ஆர். வெங்கட்டராமன், செயின் ஜார்ஜ் கோட்டை
தொழில் அமைச்சர் சென்னை
8—10—1960

'கலை' இதழின் மூலம் அன்பர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீமைகள் மறைந்து, உலகில் நன்மைகள் துலங்குவதைக் குறிக்கும் மகிழ்ச்சி நிறைந்த இத்தினத்தில் நாடெங்கும் குதூகலம் தவழ்வதைக் காணலாம். வீடுகளிலும், மக்கள் முகங்களிலும் ஒரு புதுப் பொலிவை உண்டாக்கும் தினம் இது. கலை அம்சம் நிரம்பிய நிகழ்ச்சிகளுக்கு இத்தினத்தில் குறைவு இராது. எங்கு பார்த்தாலும் ஆட்டமும் பாட்டுமாய், இயற்கை அன்னை மனிதனுக்குக் கொடுத்த சக்தி வெளிப்பட்ட வண்ணமிருக்கும். அந்த இன்பமயமான கலை உணர்ச்சிகளை வெளியிடுவதற்கும், வளர்ப்பதற்கும் பத்திரிகைகள் நல்ல வாய்ப்பளிக்கும். அந்த ரீதியில், "கலை" தீபாவளி மலர் மக்களின் கவனம் முழுவதையும் ஆகர்ஷிக்கும் ஒரு "கலை"ப் பொக்கிஷமாகத் திகழும் என்று நம்புகின்றேன்.

இன்பம் பொங்கும் இந்நாளில் "கலை"ப் பத்திரிகைக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# தாரை

சொல்லின் செல்வர் பேராசிரியர்
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

பார்குலா முழு
வெண்திங்கள்
பகல்வந்த
படிவம்போலும்
ஏர்குலா
முகத்தினள்
—கம்பர்

தாரை என்னும் பெண்மணி வானர நாட்டுத் தலைவனான வாலியின் மனைவியாக விளங்கினாள். அவ்வீரனது அளப்பரும் பெருமைக்கேற்ற அறிவும் நிறையும் அம் மங்கையிடம் மாண்புற அமைந்திருந்தன. தலைவன் உயிரும் தாரை உடலுமாக இருவரும் இனிது வாழ்ந்து இல்லறமாகிய நல்லறத்தை இசைபெற நடத்தினார்கள். இவ்வாறு இருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் வாழ்ந்து வரும்போது வாலி இராமனது அம்பால் இறந்து வீடு பெற்றான். தலைவனை இழந்த தாரை கற்பு நெறி வழுவாமல் கைம்மைக் கோலம் பூண்டு அறநெறியில் தலை நின்றாள். மங்கல அணியையும், மற்றைய அணிகளையும் களைந்தாள். வண்ணமும் சுண்ணமும் துறந்தாள். மணங்கமழும் மலர்களை மறந்தாள்; மார்பையும் கழுத்தையும் ஆடையால் மறையப் போர்த்தாள். இவ்வாறு புனையா ஓவியம் போல அப்பாவை விளங்கினாள். கண்டோர் வணங்கும் கைம்மைக்கோலம் பூண்டிருந்த தாரையை அரசனாய அருக்கன் மைந்தன் தன் தாயாகக் கருதி வணங்கி அம்மாதின் சொல்வழி நின்று அரசு செய்தான்.

ஆயினும் சுக்கிரீவன் செல்வச் சிறப்பால் செம்மாந்து மதுவுண்டு மயங்கி இன்பத்துறையில் எளியனாய் அமைந்தான். கார்காலம் முடிந்தவுடன் திருமகளைத்தேடித் தருவதாக இராமனிடம் வாக்களித்த மாற்றத்தை அறவே மறந்தான். குறித்த காலவரை கடந்தும் வானர மன்னனும் சேனையும் வாராதது கண்டு வருந்திய இராமன் அம் மன்னனது மனப்பான்மை அறியுமாறு இலக்குவனை அனுப்பினான். இளையவீரன் சீற்றங்கொண்டு சுக்கிரீவனது அரண்மனையை நோக்கிச் சென்றான். அவனது வேகத்தையும், கோபத்தையும் கண்ட வானரங்கள் மலைகளை அடுக்கி மாளிகை வாயிலை அடைத்தன. இதைக்கண்ட இலக்குவன் அளவிறந்த சீற்றத்தோடு அம் மலைகளைத் தன் காலால் உதைத்தான். மாளிகை வாயிலை மறைத்து நின்ற மலைகள் சின்னபின்னமாய் சிதறி வாயில் திறந்தது. வீரன் விரைவாக உள்ளே சென்றான். வானரங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கிப் பல திசைகளிலும் பரந்து ஓடின. இதைக் கண்ட அறிவிற் சிறந்த அனுமான் இலக்குவனது வெம்மையை எவ்வாறு மாற்றலாம் என்று எண்ணிப் பார்த்துத் தாரையே அதற்குத் தகுதி வாய்ந்தவள் என்று துணிந்தான்.

உடனே அம்மாதினிடம் சென்று அடிபணிந்து அம்மையே அரசன் மதுவுண்ட மயக்கத்தால் அயர்ந்து கிடக்கின்றான், இளையவீரன் சீறிய முகத்தோடு இங்கே வந்துள்ளான். அரண்மனையைக் காவல் செய்த வானரங்கள் எல்லாம் வாயுவேகமாக ஓடி ஒளிந்து கொண்டன. அவ்வீரனது வெம்மையை நீரே விநய மொழிகளால் மாற்றவேண்டுமென்று அன்போடு மொழிந்தான். தாரையும் அவ்வாறே செய்ய இசைந்து தன் தோழியரை அழைத்துக்கொண்டு இளையவன் வரும் வழியை நோக்கிச் சென்றாள். மதிபோன்ற முகமும், மயில்போன்ற சாயலும் அமைந்த மெல்லியல் நல்லாரைக் கண்டபோது இலக்குவன் சிறிது சீற்றம் மாறித் திகைத்து மாமியார் இடையே வந்த மருமகன் போல நாணத்தால் தலை கவிழ்ந்து நின்றான். அப்போது தெய்வக் கற்பு வாய்ந்த தாரை பெண்மையால் மெய் நடுங்க வீரனை நோக்கி, “ஐயனே தேவரும் அறிய ஒண்ணாத் திருவடிகள் வருந்த இங்கு நீர் வருவதற்கு என்ன தவம் செய்தோமோ? உமது வருகையால் எமது இருவினையும் தீர்ந்து இன்ப வாழ்வு எய்தினோம். அஞ்சன வண்ணனது இணை பிரியா இயல்பு வாழ்ந்த நீர் இப்போது அவரைப் பிரிந்து தனியாக வந்த தன்மை என்னை” என்று இசையினும் இனிய மொழிகளால் வினவினாள்.

அவ்வுரையை அமையக் கேட்ட இளையவன் உள்ளத்தில் அருள் நிரம்பியது. சீற்றம் அகன்றது. இவ்வாறு இனிமையாய் உரை செய்த மங்கை யாரென அறிய ஆர்வம் கொண்டு சிறிது முகமெடுத்துப் பார்த்தான். மாரிக்கால மதி போல் ஒளி மழுங்கி நின்ற தாரையைக் கண்டான். அவளது கைம்மைக்கோலத்தை அமர்ந்து நோக்கினான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. தசரத மன்னனை இழந்த தன் தாயாரை நினைத்து நெஞ்சங் குழைந்து நெடிது நின்றான். அப்பால் தாய் போல நின்ற தாரையை நோக்கி “அம்மையே சேனையுந் தானும் சென்று சீதையைத் தேடித் தருவதாக வாக்களித்த மன்னவன் அதனை அறவே மறந்தான். அவன் நிலையை அறிந்து வருமாறு இராமனது ஆணையால் இங்கு வந்தேன்” என்றான். அதைக் கேட்ட தாரை, “ஐயனே சீற்றங் கொள்ளேல். சிறியோர் தவறு செய்தால் பெரியோர் பொறுப்பது முறை அன்றோ? மன்னனும் உமது பணியை மறந்தான் அல்லன். படை திரட்டுமாறு நாடெங்கும் தூதரை அனுப்பியுள்ளான். அப்படைகள் பல வழியாலும் வந்து சேரும் காலத்தை எதிர்நோக்கியிருக்கின்றான். மன்னவன் நீங்கள் செய்த நன்றியை மறக்கவல்லனோ? ஆதரவற்று அச்சமற்று வாழ்ந்த வானரத் தலைவருக்கு அபயம்

அளித்து அரசுரிமை அளித்தீர்கள். இத்தகைய பேருதவி செய்த பெருமக்கள் பொருட்டு உயிரைக் கொடுத்தலும் உரிய தன்றோ? இருமை சான்ற உமது நன்றியை மறந்தோர் இருமைப் பயனையும் இழந்து இன்னல் உழப்பர் அன்றோ? என்று இனிய சொற்களால் எடுத்துரைத்தாள்.

இதைக்கேட்ட இலக்குவன் அருளும் நாணும் அடைந்தான். மன்னவன் மீது கொண்ட சீற்றத்தை மாற்றினன். இவ்வாறு வீரன் செம்மை அணிந்த பின்னரே சொல்லின் செல்வனாகிய அநுமன் அவன் மருங்கு செல்லும் மனத் திறல் பெற்றான். இவ்வாற்றால் தாரையின் பெருமை இனிது விளங்குகின்றது. தான் செல்லும் வழியில் மாருதி நின்ற மரங்களும், மலைகளும் நீராகுமாறு கடுஞ்சினத்தோடு சென்ற இளைய வீரனது வெகுளியை மாற்றிச் சீதளச் சாந்தம் போன்ற தன்மையும், மென்மையும் செய்துவிக்கும் சொல் நயம் தாரையிடம் அமைந்திருந்த தென்றால் அம்மாதின் பெருமையை விரித்துரைத்தலும் வேண்டுமோ? "சொல்லும் முறையே உலகினை வெல்லும் முறையாம்" என்பது அறிஞர் கருத்தாகும். ஆக்கமும் அழிவும் சொல்லால் வருவனவாம். மாற்றானது மனப் பான்மையை எளிதாய் அறிந்து ஏற்ற முறையில் இன்னுரை வழங்கிய தன்மையாலேயே இலக்குவனது "இறுகிய உள்ளம் நெகிழ்ந்து வானர மன்னனைப் பிழைத்தான். சொல்லில் வல்லனாய அனுமனே இலக்குவனது சீற்றம் தெரிந்துணர்ந்து தாரையை முன் அனுப்பி தான் செவ்வி பார்த்துச் சென்ற தன்மையை அறிவோமாயின் தாரையின் சொல் நலச் செம்மை சொல்லாமலே விளங்கும். இத்தகைய செம்மை வாய்ந்த தாரையை வானர மன்னன் தாயென வணங்கிய தன்மை சாலவும் அமைந்ததேயாகும்.

இம் மங்கை ஆழிவாய்த் தோன்றிய அமுதிற் பிறந்தவள் என்று கந்த கூறுகின்றது. மற்றைய மக்களைப் போல் புன்புலால் உடலில் தங்கி நின்று பிறவாது கடலினை எழுந்த அமுதில் தோன்றிய நங்கை பிறப்பாலும் உயர்ந்த வளேயாகின்றாள். வாலியார் கடல் கடைந்தபோது அவ்வாழிவாய்த் தோன்றிய அமுதச் செல்வியை அமரர் அவ்வீரனுக்கே உரிய பெருள்ளாய் அளித்தார் என்றும் அம்மங்கை தன் பிறப்புக்கேற்ற மெல்லியல் வாய்ந்து வாலியின் மனைவியாய் வாழ்ந்தாள் என்றும் அவள் வரலாறு விழங்குகின்றது.

இம் மங்கையைக் கண்டபோது இலக்குவன் "இனையராமென்னை யீன்ற இருவரும்" என்று தன் தாயாரை நினைத்து நைந்தான் என்றால் தாரையின் முகத்தின் தன்மையும், அகத்தின் தன்மையும் ஒருவாறு உய்த்துணரப்படும். செம்மையால் உலகளித்த செங்கோல் மன்னனது தேவியராய்த் திகழ்ந்த கோசலையும், சுமத்திரையும் அம்மன்னன் ஆவி அகன்ற பின்னர் எக்கோலத்தில் விளங்கினார்களோ அக்கோலமே தலைவனையிழந்த தாரையிடமும் விளங்கிற்று என்பதற்கு இலக்குவனது மொழிகளே இசைந்த சான்றாம். கங்கையாற்றங் கரையில் தன்னை ஈன்ற தாயார் மூவரையுங் கண்டு அவர் தன்மை அறிந்திருந்த இலக்குவன் தாரையைக் கண்டபோது அத்தாயரில் இருவரை நினைத்தல் இயல்பேயாகும். மயில் போன்ற சாயலமைந்த மங்கையர் குழுவினரோடு இலங்கிய தாரையைக் கண்டபோது சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற கோசலா தேவியை நினைத்தான். மாசற்ற மனத்தளாய தாரையைக் கண்ட போது "அறந்தர்னே என நின்ற தனது அன்னையை" நினைத்தான். தசரதன் இறந்த துயரம் பொறுத்து உலகிலுள்ள உடலெல்லாம் உயிரிழந்தாற் போல வருந்தவும் இடரிலா முகத்தோடு இனிதிருந்த கேகயமாதின் கோலத்தைத் தாரையின் முகத்தில் இலக்குவன் காணாமையால் அவளை நீத்து எஞ்சிய தாயர் இருவரையும் நினைந்தான் என்று கருதுவது பொருந்தும்.

இத்தகைய நலங்களும், பெருமையும் வாய்ந்த தாரையார் பஞ்ச கன்னியருள் ஒருவராகப் பாராட்டப்படுவது பெரிதும் பொருத்த முடையதேயாகும். ஒரு தாய் வயிற்றில் அடங்க நின்று பிறவாத பேறுபெற்ற மாதரில் தாரையார் ஒருவராய்த் திகழ்வதாலும், வலிமையில் ஒப்புயர்வற்ற வாலியின் மனைவியாய் அமைந்து அப்பெருமானுடன் இல்லறத்தை இனிது நடத்திய பெருமை வாய்ந்தவராதலாலும், அப்பெருமான் இறந்த பின்னர், மன்னனுக்கும் மன்னுயிர்க்கும் தாயாகச் செம்மை சான்ற கைம்மை நெறியை மேற்கொண்டு மனத்தின்கண் மாசின்றி வாழ்ந்த மாண்புடையாராதலாலும், நாள் தோறும் அறிஞரால் நினைக்கப் பெறும் ஐம்பெருங் கன்னியரில் தாரையார் ஒருவராய்த் திகழ்வது அமைவுடையதேயாகும்.

1

# கலையும் கடமையும்

## தென்னாட்டுப் பெர்னாட்ஷா டாக்டர் மு. வரதராசனார்

தந்தை ஒரு நாள் மாலையில் நடக்கும்போது உடன் வருமாறு தம் ஐந்து வயது மகனை வற்புறுத்துகிறார். தந்தை நாள்தோறும் நடந்து செல்கிறார். மகனும் செல்கிறான். தந்தைக்குச் சலிப்புத் தோன்றவில்லை. மகன் சலிப்புறுகின்றான். சிலநாட்களுக்குப் பிறகு உடன் செல்லத் தயங்குகிறான். பிறகு மறுக்கிறான். மாலையில் நடத்தல் உடம்புக்கு நல்லது; எங்கே நடக்க வேண்டும் எப்படி நடக்க வேண்டும் என்பவற்றை மகன் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தந்தை விரும்புகிறார். மகனோ அவ்வாறு கற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாகச் சலிப்பு அடைகிறான். அவன் நடக்காமல் இருக்க விரும்புகின்றானா என்றால் அதுதான் இல்லை. விளையாட்டுத் தோழர்களிடையே கூடி நடந்து ஆடியபடியே இருக்கின்றான். ஆனால் நடப்பது ஒரு பயிற்சி என்பதை உணரவில்லை. உணரும் வயது அவனுக்கு இல்லை. தந்தையும் அதை உணர்த்த முடியவில்லை.

வீட்டில் தாயும் உண்கின்றாள்; மகளும் உண்கிறாள். எதற்காக உண்ண வேண்டும் என்று இருவருக்கும் தெரியாது. எதை உண்ண வேண்டும், எப்படி உண்ணவேண்டும் என்பது தாய்க்கு ஓரளவு தெரியும். இளவயதுள்ள மகளுக்குத் தெரியாது, மகள் வயிறார உண்டால் போதும் என்பது தாயின் ஆசை. எதை எப்படி உண்பது என்று மகளுக்கு உணர்த்தாத காரணத்தால் மகள் விருப்பம் போல் உணவு உண்கிறாள். நோயுற்று வருந்துகிறாள்.

ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கிறார். ஏன் கற்கவேண்டும் எதைக் கற்க வேண்டும் எப்படிக் கற்க வேண்டும் என்பதை ஆசிரியர் தெளியவேண்டும். மாணவனுக்கு உணர்த்தவேண்டும். இல்லையானால் கல்விக்கூடம் ஆசிரியர்க்குச் சலிப்பாகும், மாணவர்க்கு வெறுப்பாகும்.

சினிமாத் துறை இன்று பல சிக்கலுக்கு இடமாகி உள்ளது. பொதுமக்கள் அதை மிகுதியாகப் போற்றுகிறார்கள். இளைஞரும் சிறுவரும் அதில் திளைக்கிறார்கள். ஆயினும் அரசியலார் சிலர் கடிந்துரைக்கிறார்கள். பெற்றோர் பலர் வெறுக்கிறார்கள். சான்றோர் சிலர் பழிக்கவும் பழிக்கிறார்கள்.

சினிமாத் துறையில் உள்ள அவ என்ன? மற்றக் கலைகளில் உள்ள சிறந்த பகுதிகள் எல்லாம் சினிமாத் துறையில் உள்ளன. சிறப்பாக ஆடலும் பாடலும் உள்ளன. வாழ்வியலும் வாழ்க்கையை ஒட்டிய கற்பனையும் உள்ளன. ஆயினும் சினிமா இழிப்பிற்கும், பழிப்பிற்கும் இடமாவது ஏன்?

ஆடல் கலையையும், பாடல் கலையையும் குடும்பம் முதல் கோயில் வரையில் இளைஞர் முதல், முதியோர் வரையில் எல்லோரும் போற்றும் நாடு இது. ஆடலையும் பாடலையும் கண்டும் கேட்டும் மனம் விரிவடைய வேண்டும் என்றும் பண்பட வேண்டும் என்றும் ஆசிரியர்களும் மற்ற சான்றோர்களும் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கிறார்கள். அவற்றைக் கலை அரங்கங்களிலும் நூல்களிலும் போற்றுமாறு சொல்கிறார்கள். ஆயினும் சினிமாவில் அவற்றை இளைஞர்கள் கண்டு கேட்டுப் போற்றும் போது தடுக்கிறார்கள். மகன் தன்னோடு நடந்து வர வேண்டும் என்றும், விளையாட்டுச் சிறுவர்களோடு ஆடிக் கெடக் கூடாது என்றும் தடுக்கும் தந்தையின் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இளைஞர்களோ அந்த மகன் நிலையில் உள்ளனர். கலை அரங்கங்களையும், நூல்களில் உள்ள ஆடல் பாடல்களையும் போற்றாமல் இளைஞர்கள் சினிமாவையே மிகுதியாக விரும்புகிறார்கள்.

பெற்றோர் பலர் தங்கள் மக்கள் எப்படியாவது மகிழ்ச்சியாய் இருந்தால் போதும் என்று சினிமாவுக்குச் செல்லப் பணம் கொடுத்து அனுப்புகிறார்கள். எந்தப் படங்களை பார்க்கவேண்டும் எப்படிப் பார்த்து நன்மை பெற வேண்டும் என்று மக்களுக்கு அறிவுறுத்தாமலே அனுப்புகிறார்கள். மகள் வயிறார உண்டால் போதும் என்று ஆசைப்படும் தாயின் நிலை அவர்களின் நிலை. வரையறை இல்லா வகையை அறியாமல் இவ்வாறு சினிமா பார்ப்பதால் மனநோய் அடைந்து வருந்தும் இளைஞர்களும் உண்டு.

கற்பித்தலின் நோக்கமும் கற்கும் முறையும் தெளிவாகாத காரணத்தால் கல்விக்கூடங்களில் ஆசிரியர்களும், மாணவர்களும் சலித்தும் வெறுத்தும் திகைப்பதுபோல் சினிமாக் கலையின் நோக்கமும் முறையும் புரிந்துகொண்டிராது இருப்பதால் படம் எடுப்பவர்க்கும் படம் பார்ப்பவருக்கும் இடையே போராட்டமும் உள்ளது. கல்விக்கூடத்து ஆசிரியர்கள் மேலிடத்துக் கட்டுப்பாட்டுக்கு அடங்கிக் கற்பிக்கிறார்கள்.

ஆகையால் மாணவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பாடத் திட்டத்தின்படிக் கற்பிக்க வேண்டியுள்ளது. படம் எடுப்பவர்களுக்கு அவ்வளவு மிகுதியான கட்டுப்பாடு இல்லை. அரசாங்கத் தணிக்கை ஓரளவு உள்ளது. படமெடுப்பவர்கள் பெரிதும் மக்களின் விருப்பம் இன்னது என்று தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் படம் எடுக்கிறார்கள். அந்நிலையில் சான்றோர் சிலர் குறுக்கிட்டு, 'மக்களுக்கு விருப்பமானதைத் தருவதால் தீமை ஏற்படுகிறது. மக்களுக்கு நன்மையானதை ஆராய்ந்து தரவேண்டும்', என்கிறார்கள். படம் எடுப்பவர்களோ, 'அப்படி ஆராய்ந்து கொடுத்தால் எங்கள் படம் மக்களால் வெறுக்கப்படும்; படத் தொழில் வளராது, போட்ட முதல் போய்விடும்; ஆகையால்தான் மக்களுக்கு விருப்பமானதைத் தருகிறோம்' என்கிறார்கள். இந்த மோதலின் விளைவாகச் சினிமாத் துறையே கெட்டது என்றும், அந்த நாட்டம் கூடாது என்றும் அறிவுரை கூறச் சிலர் முன் வருகிறார்கள்.

இத்தகைய மோதலும் போராட்டமும் வெறுப்பும் பழிப்பும் ஒரு காலத்தில் இசைக் கலைக்கும் இருந்தது. நாடகக் கலைக்கும் இருந்தது. காதல் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இசையும் நாடகமும் ஒரு காலத்தில் வெறுக்கப்பட்டன. இக்காலத்திலும் அத்தகைய கதைகளை வெறுப்பவர்கள் உண்டு. நாடகங்களையும் வெறுப்பவர்கள் உண்டு. சில காவியங்களையும் வெறுப்பவர்கள் உண்டு.

வெறுப்பவர்களும் பழிப்பவர்களும் ஓர் உண்மையை உணர வேண்டும். கலைப்பசி எல்லோருக்கும் இயற்கை. வளர்கின்ற புலன்களைப் பெற்றவர்கள் கலைகளைக் கைவிட முடியாது. கை கால்களுக்கு விளையாட்டுப் போலவும், வயிற்றுக்கு உணவு போலவும், மூளைக்குக் கல்வி போலவும் மனத்துக்குக் கலை மிகத் தேவையானது. ஆகவே கல்விக் கூடத்திலேயே விளையாட்டுக்கும் உணவுக்கும் வசதி செய்து விளக்கம் தருவதுபோல், சினிமாக் கலைக்கும் வாய்ப்பும் விளக்கமும் தருதல் நல்லது.

ஒரு காலத்தில் ஆண் பெண் உறவைப் பற்றி இளைஞர்களின் எதிரே பேசுவதும் தவறு என்று கருதப்பட்டது. ஆனால் இக்காலத்தில் அதைப் பற்றி அறிவியல் முறையில் இளைஞர்களுக்குக் கற்பிப்பதே நல்லது என்று உளநூலார் கருதுகிறார்கள்.

ஆண் பெண் உறவு பற்றிய அறிவு, கற்பிப்பதற்குச் சிக்கல் மிகுந்தது; இடையூறுகளும் மிகுந்தது. சினிமா அப்படிப்பட்டது அன்று. ஆடல் பாடல் வாழ்வின் கற்பனை உணர்ச்சி முதலிய பலவற்றையும் தனித் தனியே விளக்காமல் ஒரு சேர அமைத்து விளக்குவது சினிமாத் துறை. அதில் சிக்கலும் இல்லை. இடையூறும் இல்லை. ஆகவே கல்விக் கூடங்களில் அந்தக் கலை பற்றிய விளக்கங்களைக் கற்பிப்பது எளிதாகும். புதிதாக அறிமுகப்படுத்த வேண்டிய பகுதி இதில் ஒன்றும் இல்லை. தெரியாத வெளிநாட்டையும், மலையையும் பற்றிக் கற்பித்தல் போன்றது இத்துறையில் இல்லை. பழகிய வீட்டையும், தோட்டத்தையும் பற்றிக் கற்பித்தல் போன்றது இது. இளைஞர்களுக்குப் பல படங்களைப் பார்த்தறியும் வாய்ப்பும் அனுபவமும் உண்டு. ஆராய்ச்சி முறையில் அவற்றைப் பற்றி மாணவர்க்கு விளக்கம் தந்தால் போதும்.

பல கலைகளும் சேர்ந்துஅமைவதால் சினிமா ஆற்றல் மிகுந்த கலை என்பதைக் கல்வித்துறையினரும், சான்றோரும் மறத்தல் கூடாது. ஆற்றல் மிகுந்த ஒரு கலையை ஊரெல்லாம் வளர விட்டு விட்டு, கல்விக் கூடங்களிலும் குடும்பங்களிலும் உள்ள இளைஞர் மனங்களில் புகக்கூடாது என்று தடுப்பது பயனற்ற செயல்தான்.

அது பாலைவனத்தில் பகையைக் கண்டபோது மணலுக்குள் தலையைப் புதைத்துக் கொள்ளும் பறவையின் செயல் போன்றதேயாகும். அவ்வாறு அல்லாமல், காட்டின் இயல்பும், கருமுகில்களின் நிலையும், சுற்றுப்புற நிலையும் உணர்ந்து, உணவு தேடி உண்டு, அகவியும் ஆடியும் மகிழும் மயில் போல் வாழ்தலே கடமை. ஆகவே, கலையின் இயல்புகளையும், சினிமாக் கலையின் இயல்பையும் வாழ்விற்கு அது உதவக் கூடிய வகைகளையும், நன்மை தீமைகளையும் மாணவர்க்குக் கற்பித்து, அவர்களை வல்லவராக்குதலே நல்லவர் கடமையாகும்.

★

---

[சொல்வளம் தொடர்ச்சி]

வென்றான், இளித்தான், ஈயென்றான், உறுமினான், ஊளையிட்டான், எக்களித்தான், ஒலித்தான், ஓ வென்றான், ஓதினான், கத்தினான், கலைத்தான், கீச்சிட்டான், குசுகுசு வென்றான், கூவினான், கொக்கரித்தான், கோ வென்றான், சப்பினான், சிரித்தான், சீறினான், சே யென்றான், சொன்னான், திக்கினான், திட்டினான், படித்தான், பழித்தான், பாடினான், பிதற்றினான் பேசினான், பொழிந்தான், போதித்தான், விளக்கினான், வீறிட்டான், வைதான், வாழ்த்தினான், என்ற இவை மட்டுமோ? இன்னும் எத்தனையோ?

இச்சொற்கள் வாயின் அசைப்பை மட்டுந்தானா காட்டுகின்றன? அசைவின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், ஒலிப்பவனது முகத்தையும், அவன் உள்ளத்தையுங்கூட காட்டிக் கொண்டிருக்கின்றன. காணுங்கள். இவை அனைத்திற்கும் "சப்தித்தான்", "கர்ஜித்தான்" என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா? என்று பாருங்கள். அனைத்திற்கும் ஆங்கிலத்தில் சொற்களுண்டா? என ஆராய்ந்து பாருங்கள், இவற்றில் சிலவற்றிற்கேனும் இந்தியில் சொற்களிருக்குமா? என்று எண்ணிப்பாருங்கள். அப்பொழுதுதான் விளங்கும் தமிழின் சொல்வளம்.

இவை தமிழின் சொல்வளத்தைக் காட்டப் போதுமானவை என எண்ணுகிறேன்.

# சொல் வளம்

## முத்தமிழ்க்காவலர்.....
## கி.ஆ.பெ.விசுவநாதம்

உலகின் ஐந்து கண்டங்களிலும் உள்ள 250 கோடி மக்களால் பேசப்படுகின்ற மொழிகள் சற்றேறத்தாழ 2000 மொழிகளாம். அவற்றுள் எழுத எழுத்துக்களைப் பெற்ற மொழிகள் 900–க்கு உட்பட்டவையே. இவற்றுள்ளும் இலக்கிய, இலக்கணச் சிறப்பு உள்ள மொழிகள் 216. இவைகளுள் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ்மொழி ஒன்றிற்கு மட்டுமே உள்ளது. அதுவும் ஒன்றல்ல, பல.

அவை பழமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, வளமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, சுழிச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, பொருட் சிறப்பு, நூற் சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு, என பதினாறும்.

இவற்றை விரிக்கிற் பெருகும். இதனடியில் விளக்குவது தமிழின் வளமைச் சிறப்பு ஒன்று மட்டுமே. இதனைச் "சொல் வளம்" என்பவர் அறிஞர். தமிழிற் காணப்படுகின்ற இச்சொல் வளத்தைப் பிற மொழிகள் எவற்றிலும் காண இயலாது. எடுத்துக்காட்டாக "இலை" என்பதையே பார்ப்போம்.

இதை "லீப்" என்பர் ஆங்கிலேயர். "பத்திரம்" என்பர் வடமொழியாளர். இதற்குத் தமிழில் உள்ள சொல்வளத்தைப் பாருங்கள். தமிழில் எல்லா இலைகளையும் "இலை" என்பதில்லை.

ஆல், அரசு, அத்தி, வாழை, மா, பலா முதலியவற்றின் இலைகளுக்கு மட்டுமே "இலை" என்று பெயர்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "கீரை"

மண்ணிலே படர்கின்ற கொடி வகை இலைகளின் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "பூண்டு"

அறுகு, கோரை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "புல்".

நெல், வரகு முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தாள்"

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தழை"

சப்பாத்தி, தாழை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "மடல்"

கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "தோகை"

தென்னை, பனை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் "இலை" என்பதல்ல, அவற்றின் பெயர் "ஓலை" இவை அனைத்திற்கும் "பத்திரம்" என்ற வடமொழிச் சொல்லோ "லீப்" என்ற ஆங்கிலச் சொல்லோ பொருந்துமா? என்று பாருங்கள். அப்பொழுதுதான் தமிழ் மொழியின் சொல்வளம் நன்கு விளங்கும்.

இச்சொல்வளத்திலும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது இலையின் உருவத்தோடு அதன் பருவத்தையும் சேர்த்துக் காட்டுவதாகும். குழந்தைப் பருவ இலையைத் "தளிர்" என்றும், இளமைப் பருவ இலையைக் "கொழுந்து" என்றும், நடுப் பருவ இலையை "இலை" என்றும். முதுமைப்பருவ இலையைப் "பழுப்பு" என்றும், இறுதிப் பருவ இலையைச் "சருகு" என்றும் கூறுவர். என்னே தமிழின் சொல்வளம்!

இன்னும் மனிதனின் வாயசைப்பிற்குத் தமிழில் உள்ள சொல்வளத்தைக் காணுங்கள். அலறினன், அழுதான், ஆ

[தொடர்ச்சி முன் பக்கம் பார்க்க]

# களவும் கற்று மற

செந்தமிழ்க்காவலர்
டாக்டர். அ. சிதம்பரநாதன்

இக்கட்டுரையில் 'களவுங் கற்று மற' என்ற பழமொழியின் பொருள் நயத்தைப் பற்றி ஆராயப்படும். அவ்வாறு ஆராயு முன்னர் உலகத்திற் பொதுவாக என்ன பொருளில் அச்சொற்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை அறிவது நலம். ஒவ்வொருமொழியிலும் ஒவ்வொரு சொல்லுக்கும் பற்பல பொருள்களிருப்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டியவாறு பொருள் கோடல் பற்றிச் சிலர் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிரிப்பர்; பிரிக்குங்கால் சில சமயங்களில் அச்சொற்களில் அழகு குன்றிவிடும். அழகு குன்றாதவாறும் திறமாகவும் பொருள் கூறுவோர் பலர் உளர். அவருட் சிலர் 'களவுங் கற்று மற' என்பதற்குத் 'திருட்டுத் தொழிலிலும் பழகி அதன் பின்னர் அதை மற' என்ப் பொருள் கொள்வர். இப்பழமொழியிலுள்ள களவு என்றது எத்தகைய களவைக் குறிக்கின்றது என்றறிவதன் பொருட்டே இக்கட்டுரை யெழுந்தது.

சிலர், களவினால் வரும் இழுக்கு ஒன்று மில்லை என்பர். அவர் கூற்று பாம்பினிடத்து நஞ்சின்று என்பதற்கொப்பாகும். கண்ணன் வெண்ணெய் திருடவில்லையா என்றும், அரனன்று கோவணந் திருடவில்லையா என்றும் சிலர்கடாவுவர். கடாயினோர்க்கு விடை பகருமுறையில் நாம் சொல்லக்கூடுவதியாதெனில் நீவிரும் அத்தகைய (கடவுள்) நிலையை யடைந்த பின் அத்தொழிலில் இறங்கலாம் என்பதே. கடவுளார் கல்லாலடிபட்டவாறு நாம் படக்கூடுமானால், அவர் நஞ்சுண்டவாறு நாமுண்ணக்கூடுமானால், அவர் படைத்தளித்துக் காத்தும்பல் லுருவமெடுத்து மியற்றும் பல தொழில்களையும் ஆற்ற வல்லோமானால், நாமுமத் தொழிலில் இறங்கத் துணிந்தானவரே. அன்றி, அவ்விருவிடத்தும் இறங்குவோர் "கொன்னென்றால் வாசல் திறக்கும். கடிவாளம் என்றால் வாயை மூடும்" என்ற பழமொழிக் கலைக்கர்விண் பிறர் பொருளைக் கொள்ள எண்ணுவோரே களவைக் கற்க விரும்புவர். ஆனால் கற்ற பின் அக்களவை மறந்து விடின் பெரும்பாலோர்க்கு இடர் தோன்றும். களவைக் கற்குமொருவர் அதனுடன் பிறந்தவையாகிய பொய், புனை, சுருட்டு முதலிய தீய இயல்புகளுக்கும் ஆளாவரன்றோ. ஆதலால் அத்தகைய 'தீய' இயல்பில் அழுந்த எழுந்ததல்ல இப்பழமொழி என்பதை வலியுறுத்தல் அழகுடைத்தே.

"களவு" சிற்சில விடங்களில் நன்மை பயக்கலாம். [illegible] ஒருவன் தனதுயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி சிறிது நஞ்சு வாங்கி வைத்திருந்தான். அந்த அவன் நண்பன் ஒருவனறிந்து இவன துயிரைக் காக்க எண்ணி அந்நஞ்சைத் திருடிச் சென்றான். நஞ்சருந்த எண்ணியவன் நஞ்சினைக் காணாது முதலில் மயங்கி பின்னர் காலப்போக்கில் தனதுயிரில் மிகவும் பற்றுடையவனாயினன். இவ்வாறு உயிரைக் காக்கும் பொருட்டு நிகழ்ந்த களவு போற்றற் பாலதே. ஏனெனில் ஆசிரியர் திருவள்ளுவனாரும்.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

என்று திருவாய் மலர்ந்தருளினராகவின், அத்தகைய கொல்லாமையாகிய பேரறத்தின் பயனை பெறுவான் குறித்து எழுந்த இக்களவு மாசற்றதாகும். இக்களவினால் பிறர்க்கு நிகழ்ந்த துன்பம் யாதொன்றுமில்லை; இருப்பினும் அத்துன்பம் பின்னர் இன்பத்தில் துய்த்தற்குரிய தென்பதிற் கையமில்லை.

இத்தகைய களவைக் கற்று மறக்கும்படிக் கூறுவதோ, இப்பழமொழியின் நோக்கன்று. இத்தகைய களவுகள் கற்கப்படவேண்டுவதே இல்லை. காலத்திற்கேற்ப இக்களவுகள் பிறந்து தவியின்று நிகழ்தற்பாலன. இத்தன்மையான களவுகள் கற்கும் பொருட்டு நிகழ்த்தப்பட வேண்டுமானால், யாரேனும் ஒருவன் நஞ்சாதல், வேறு உயிர் நீக்கும் பொருளாதல் வாங்கி வைத்திருக்க வேண்டும். இக்களவுகளைக் கற்பதற்கு ஆசிரியர் இப்புவியிலர். தவிர ஒருவன் ஒருயிரைக் காக்கவேண்டிக் களவு செய்யக் கற்றிருந்தபின்னர் மறந்துவிடுவானானால்: வேறுயிர்கள் அவ்வாறு உயிர் நீக்க எண்ணுங்கால் தான் மறந்து விட்டதாகக் கூறி விடுதல் சட்டெழுதி அனுப்பிய களவை மீண்டும் மொழுத்து வர என் செய்வது? ஆதலால், களவுங் கற்று மற என்ற பழமொழிக்கு வேற்று சிறந்த பொருளிருக்கலாமென றெண்ணுவது இயல்பாக்கவே.

சிலர் களவுங் கத்து மற என்று கொண்டு களவையும் பொய்யையும் (அல்லது குற்றத்தையும்) மறந்துவிடு என்று பொருள் கூறுவர். "கற்று" என்பது "கத்து" என்று திரிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுவதை விட்டு, வேறு சிலர் கூறுவதை நோக்குவோம். 'நூல் பல கல்' என்று கூறப்பட்டிருப்பதை யொட்டிக்

களவு நூல்களையும் ஒருவன் கற்றுக் களவைச் செய்கையிற் காட்டாது மறந்துவிடக்கடவன் என்று முரைப்பாருண்டு. ஆனால், ஒருவன் களவைக் கற்காது களவு நூல்களையே கற்கின்றானாதலால், கற்ற களவு நூல்களை மறவாது கற்காத களவுச் செய்கையை மறக்குமாறு கூறப்படலின், அது பொருந்தாதென்க. களவியல் பற்றிய செய்திகளைக் கூறவேண்டியிருக்குமாதலின், அதன் இலக்கணத்தை மறந்து விடு என்று கூறுதல் ஏற்புடைத்தன்று. அன்றியும் கற்ற ஒரு நூலை மறந்து விடுதல் எளிதன்று. அவ்வாறு மறந்து விடுமாறு கற்கும் கல்வியும்கல்வியன்று. ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற்கொழுமையும் ஏமாப்புடைத்து. ஆதலால் மேற்கூறிய பொருளும்பொருந்தாதென்பது வெள்ளிடைமலை.

ஆகவே களவுங் கற்று மற என்பதற்கு வேறு என்ன பொருள் கொள்ளலாம் என்பதை யாராய்ந்து வருங்கால் சிறியேனுக்குத் தோன்றியதை வரைகின்றேன். களவு என்பது அகத்திணையின் பால் நிகழுங் களவொழுக்கத்தைக் குறித்து நிற்பதாகக் கொள்ளலாமோ என்பதே. எனக்குள் நிகழ்ந்து வந்த ஐயப்பாடு, கற்பெனப்படுவது களவின் வழித்தே யாகலானும், பொய்யும் வழுவுந் தோன்றுமுன்னர் காரணமின்றி களவே நிகழ்ந்து வந்தவாகலானும், முற்காலத்தில் தலைவனும் தலைவியும் மணஞ்செய்துகொள்ளுமுன்னர்க் களவொழுக்கத்திற் பழகினதாக ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தினின்று அறியப்படுதலாலும் களவு என்ற சொல் களவொழுக்கத்தைக் குறித்து நிற்பதாகக் கொள்ள இடமேற்படுகின்றது. ஒருவன் ஒருத்தியை மணம் புரியு முன்னர் தனியே அவளைச் சோலையிலோ எயிற்புறத்திலோ அல்லது சந்தடி இல்லாத வேறெந்த விடத்திலோ கண்டிருந்து கூடிச் சில நாள் சென்ற பிறகு யாவருமறிய மணம் புரிந்துகொண்ட செய்தி தமிழ் நூல் வல்லார் யாவருமறிந்ததே.

அவ்வாறு நிகழும் களவு பெயரளவேகளவன்றி உண்மையிற் களவாகாது. ஏனெனில் ஒருவனுக்குரிய பொருளைப் பிறன் கவர்ந்து செல்வதே களவு. பெண்கள் என்றுந் தங்கள் தந்தையின் உரிய பொருளாக மாட்டார்கள். தந்தையினிடத்து இருக்கும் வரை அவள் அவர்கள்பொருளே. ஆனால், எந்த நேரத்திலே பெண் ஒரு ஆண்மகனைத் தலைவனைத் தன் நெஞ்சத்தில் கொள்ளுகிறாளோ அந்த நேரத்திலேயே அவள் தன் உழுவலன்பு [illegible]ருக்கும் தலைவனுக்கே உரிய பொருளாகின்றாள். ஆதலால் தலைவன் தனக்குரிய பொருளைத் தான் கொள்கிறான். ஆயினும் இவ்வொழுக்கம், வேதம் "மறை" என்று வழங்கப்படுவது போன்று களவு என்றே கருதப்பட்டது.

இத்தகைய களவொழுக்கத்தைக் களவு என்ற சொல் குறிக்க, அதிலுள்ள உம்மை தலைவன் கற்க வேண்டிய ஒழுக்க நூல், அறிவு நூல், முதலியவற்றோடும் வில், வேல், வாள் முதலிய படைத் தொழில்களோடும் என்பதைக் குறிக்கா நின்றது. இப்பழமொழி முதலில் தலைவன் தலைவிமாட்டே வழங்கப்பட்டு காலப்போக்கில் யாவர் மாட்டும் அல்லது யாவராலும் வழங்கப்படும் நிலைமையை அடைந்திருக்க வேண்டும்.

இக்களவை கற்பிப்பதற்கு ஆசிரியருண்டு. தலைவன் தலைவிக்கும், தலைவி தலைவனுக்கும் ஆசிரியராவர். களவொழுக்கத்திற் பழகுங்கால் ஒருவர் கண்ணிலுமகப்படாதவாறு நடந்து கொள்ளுவதற்கு வேண்டிய முறைகளை ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்றலின் "கற்று" எனப்பட்டது போலும்.


இனி "மற" என்பது தலைவனும் தலைவியும் களவொழுக்கத்திலேயே எந்நாளும் பழகாமல் சிறிது காலத்திற்குள் களவை மறந்து யாவருமறிய மணம் புரிந்து கொள்ளக்கடவர் என்ற பொருளைக் கொண்டு நின்றது போலும். ஆதலால் "கற்று மற" என்ற சொற்களின் பொருளும் களவொழுக்கத்தைக் குறித்து நிற்பதைக் காண்க.

ஆகவே களவுங் கற்று மற என்பதற்குக் களவொழுக்கத்திற் சிறிது காலம் பழகிப் பின்னர் அதை மறந்து கற்பொழுக்கத்தைக் கொள்க என்ற பொருள் பெறப்படும். கற்ற நூல்களையும், கற்ற படைத் தொழில்களையும் மறவாது மேன்மேலும் பெருக்குவது போல் களவொழுக்கத்தைப் பெருக்காது "நீ கற்ற களவை அறவே (அறவே உன் வாழ்நாள் முழுதும்) மறந்து விடு. வேறொருவரோடுங் காட்டாது நினைத்தல் கூடச் செய்யாதே." என்ற ஆழ்ந்ததோராருமையான பொருளைக் கொண்டெழுந்ததே இப்பழமொழி என்பது எனது சிற்றறிவுக்குத் தோன்றியவாறு. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள்" காணும் அறிஞர் ஏற்ற பெற்றி கொள்ளக் கடவர்.

★



சிறந்த பொருள்களைப்
பெறுவது சிரமமான
காரியம் அல்ல
இல்லற வாழ்வே இன்ப வாழ்வு!
இல்லத்தில் இன்பம் நிலவ
உதவுவது நல்ல உணவு. ருசியும், போஷாக்
கும் மிகுந்த உணவு தயாரிக்க
சூரியன் மார்க்
மைதா, சூஜி, ஆட்டா உபயோகியுங்கள்
RISING SUN BRAND
சுத்தமும், சுகாதாரமும் மிகுந்த
கோதுமைப் பொருள்கள் இவை
என்பது அனைவரும் அறிந்த உண்மை
தயாரிப்பவர்கள்:
செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்
221, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-1
டெலிபோன்: 31241, 31242, 31243, 4165 தபால்பெட்டி எண். 1558
தந்தி: MATHOORAN
EP

தங்க விலாஸ்
ஸ்பெஷல்
புகையிலை
தயாரிப்பாளர்:- M.A. ரெஜாக் & கோ.,
கும்பகோணம்.
BALU BROS

# திராவிடத் திரைக்கதாநாயகிகள்



தமிழரசிகள் குறைந்த திரைவானில் மலையிற் பயிலாத மஞ்ஞையாக; அலையிற் பிறவாத அமுதமாக; விலையிட்டு அளவாத நித்தில மாராத தேறலாக; வளவாண் மதர் நெடுங்கண் மாஞகைக் காட்சி தரும் இந்தத் தமிழரசி ஈ. வி. சரோஜா பழம் பெரும் தயாரிப்பு நிலையமான மாடர்ன் தியேட்டர்ஸாரின் 'கைதி கண்ணுயிர'த்தில் இவ்வாறு



ஞான வொளி வீசும் சோதி முகமும், ஊனமறு நல்லழகும் படைத்த இந்த வான்சுடர்தான் தன்னுடைய மதுரக் குரலாலும் மயக்கும் விழியாலும் தமிழ்த் திரையை வென்று தீர்த்த

- ஆந்திர அழகோவியம்

பானுமதி



கமலம் போன்ற திங்கள் முகமும்;. கயல் போன்ற கரு நெடுங் கண்ணும்; மயில் போன்ற சாயலும்; மழலை மொழியும, காந்த உடலும் படைத்த

- கன்னடத்துப் பைங்கிளி

சரோஜா தேவி.

இமயவர்தம் முடித்தலை இருந்த மூன்றும் பிறையையே அழகிய நெற்றியாகவும், காமனது கரும்பு வில்லையே வளைந்த புருவங்களாகவும், மாலின் நிறத்தையே கரிய பெரிய விழியாகவும், பொன்னின் நிறத்தையே தளிர் மிக்க பருவ உடலாகவும் படைத்துள்ள

- மலையாளம் தந்த
பதுமைப் பாவை
பத்மினி.



முத்துக் கோத்தது போன்ற முறுவலும் முல்லைக் கொடி போன்ற துவளும் உடலும், முகிலனைய கூந்தல் கருங்காடும் படைத்திட்ட இந்தப் பாவை நல்லாள் பேசினால் கிள்ளையும், நடந்தால் அன்னமும் வெட்கித் தலை குனியவல்ல

- கன்னடத்துக் கட்டழகி
சரோஜா தேவி





கலை

தன்னுடைய கொல்லும் விழியாலும்; கொஞ்சும் மொழியாலும்; குறைவற்ற நடிப்புத் திறனுலும் இந்நாட்டார் இதயத்தில் எந்நாளும் உறையும் நடிப்புச் செல்வியாக மாறிவிட்ட

- தமிழரசி எம். என். ராஜம்.

கலை

செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர் விளங்க, மைவாணெடுங்கண் மதர்த்து லவத் தென்றல் உலவும் சோலைவந்து நிற்கும் அல்லி மலர்க் கோதையான

- தமிழரசி ஈ. வி. சரோஜா.



எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

அன்பேயும் பிறவும் முன்னறி தெய்வம்
லோக அமிர்தம் எங்கள் தெய்வம்.

பதிவு எண். M.

தொலைபேசி எண். 85952.

# திருவள்ளுவர்

THIRUVALLUVAR

ஆசிரியர்: வள்ளுவன்

சுவடி: 1] சென்னை ★ திருவள்ளுவராண்டு 1991 சார்வரி - ஸ்ரீ புரட்டாசித் திங்கள் 30-ம் நாள் (15-10-60) ★ 4 பக்கங்கள் விலை 13 காசு [ஓலை: 1

(மாதம் இருமுறைமணவர் ஏடு)

## வரும் இதழில்

- சினிமா உலக பர்மகள்.
- புதுமுறை சினிமா விமர்சனம்.
- தமிழ் வளர்த்த பெரியாரின் வாழ்க்கையில் நடந்த விநோத சம்பவங்கள்.
- எல்லோர் படங்கள்.
- ... கார்ட்டூன்.
- ... வைத்துப் புறமொன்று பேசுவது — படம்.

## வரும் இதழில்

- முத்தமிழ்க் காவலர், தமிழ்ச்செல்வம் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், குறள் விளக்கக் கட்டுரை.
- உலகில் பெண்கள்தான் முதலிடம் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றுகள்.
- சிறுவர்களுக்கு அறிவூட்டும் சிறுகதைகள்.
- சினிமா நடிகர்களின் 'எங்கள் குடும்பம்'.
- எனது விரோதம் பார்! (உலக அதிசயங்கள் — படங்கள்)
- குடும்பப் பெண்களே ஏமாறாதீர்கள்!



புலவர் திருவள்ளுவர் ...

## வாழ்த்துக்கள்



## சூடான செய்திகளும் சுவையான விளக்கமும்

## கிளர்ச்சியின்

## வெற்றி

## நாட்டின் நல்வளப் பத்திரிகைகள்...

மனிதன் கற்றறியத் தொடங்கிய ஆரம்ப காலத்தில், ஓலைச் சுவடி கொண்டும், ஆலம்பட்டை கொண்டும், செப்பேடு கொண்டும் தன் எண்ணங்களை எழுத்தாக்கி மகிழ்ந்தான் அப்படி அவன் எண்ணியதை எழுத்தாணி கொண்டு எவ்வளவு பக்கங்கள்தான் எழுதமுடியும்! அதற்கு எத்தனை காலமும் பிடிக்கும்!

ஆகவே, இந்த தொல்லை மிகுந்த செயலை மாற்றி அமைக்க அறிவு உலகை சமைக்க ஜெர்மானிய நாட்டில் தோன்றிய கட்டனன் பர்க்ன்பவர் கி. பி.-456-ல் பைபிளையே அச்சாக்கி ஆச்சரியத்தில் ஆழ்த்தினுர் முதன் முதலில்.

இருப்பினும் செய்திகளை பரிவர்த்தனை செய்துகொள்ளும் முறை அதற்கு முன்னரே ரோமானியர் ஆட்சிக் காலங்களில் இருந்ததென்றும், ஏழாவது நூற்றுண்டிற்கு முன்பிருந்தே சைனு போன்ற மற்ற நாடுகளிலும் செய்திகளை மிகவும் தாமதமான முறையில் தயாரித்து அனுப்பி வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

செய்தி பத்திரிகை முதன் முதலில் 1558-ல் இங்கிலாந்தில் 'இங்கிலீஸ் மெர்க்குரி' என்ற பெயரில் வெளியாகிற்று. இதனுடைய பிரதி இன்றும் பிரிட்டிஸ் பொருட் காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது.

பின்னர் உலகின் பல பாகங்களிலிருந்தும் வார இதழ், மாதமிருமுறை இதழ், மாத இதழ் போன்றவை தொடர்ந்து வெளிவரத் தொடங்கின. இதனுல் மக்கள் பல்வேறு விதமான நன்மைகளையும், பழக்க வழக்கங்களையும் அறிய ஏதுவாகின்ற உலகப் பெருஞ்சேவையா மிளிரத் தொடங்கின.


இன்று நம் தமிழ்நாட்டில் பத்திரிகைகள் பெருவாரியாக வளர்ச்சியடைந்துள்ளன. அவைகள் மக்களிடையே நின்று நிலவி, புரியும் ஈடு இணையற்ற சேவையைப்போன்று இந்தியாவில் வெறு எங்குமே காண்பது அரிதுதான்.

ஆனுல், நம் சகோதரப் பத்திரிகைகளின் வளர்ச்சி பாரபட்சமற்ற முறையில் அமையவேண்டும். ஒருவருக்குத்தான் ஒரு பத்திரிகை என்ற ஓரே முறை ஒழியவேணடும். அன்றியும் நாம் கற்றிருப்பதும், கலையாகக் கருதுவதும் ஒரு பத்திரிகையை மற்றெரு பத்திரிகை வசைமொழியால் வாழ்த்தி விற்பனையை அதிகமாக்க போட்டிபோடும் முறைதான். இவை ஒற்றுமைக்கே நெருப்பிட்டுக் கொண்டுவரும் தீமை மிக்கச் செயலாகும். ஆகவே, இவைகளை மாற்றிக்கொண்டு பத்திரிகைகள் தோழமை பூண்டு நாட்டின் பெருமக்களுக்கு நற்சேவை புரியவேண்டும். அதற்காகவே, எல்லோரும் ஒற்றுமையாய் கூடாத நமது நட்பு முறையை 'கலை' தீபாவளி மலரின் மூலம் தமிழக பத்திரிகைகள் பெரும்பாலானவற்றையும் இங்கே கூட்டி-தொகுத்துப் பார்க்கிறேம் அடுத்தடுத்தப் பக்கங்களில்..

—ஆசிரியர்







திராவிடநாடு
நக்கீரன்
நடிகன் குரல்
சிம்மக்குரல்
கலைச்சோலை
மாலைமணி
செங்கோல்
திராவிடன்
அமிர்தம்
நவமணி
ஞாயிறு
தமிழ் அரசு
சேவல்
சுயமரியாதை
தென்றல்
திருவள்ளுவர்
TIRUVALLUVAR
செய்தி



கல்கி
புதுமை
பேசும் படம்
மாருதி





# கோ-ஆப்டெக்ஸ்
## கைத்தறி
## ஆடைகள்

ஆடைக்கும் இதர பல அலங்காரங்கட்கும்

சென்னை இராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
"பாலசுந்தரம் கட்டிடம்" எழும்பூர், சென்னை-8.

SISTA'S

மாதர் பகுதி :

# ஆடை அலங்கார அரசிகள்

ஒரு காலத்தில் ஆடைகள் மனிதஇனத்தின் மாண்புடைய மானங்காட்கவே பயன்பட்டு வந்தன...அதற்காகவே உண்டாகின...ஆனால், இன்றோ அவை உடலுக்காக மட்டுமல்லாமல், உயர்வான அந்தஸ்திற்காகவும், அழகிற்காகவும், ஏன்.கவர்ச்சிக்காகவும், விதவிதமான நூதன பாணிகளில், பலரக செயல் முறைகளில் கையாளப்படுகின்றன. ஆகவே, அவைகளை அணியும் ஆரணங்குகளும் முடிசூடா மகளிர்களாகவே திகழவும் செய்கின்றனர். இந்த முற்றிய நாகரிக முற்போக்கு, காலத்திற்கேற்றவாறு பல்வேறுவிதமாய்மாறுபடுகின்றன.

இருப்பினும் பழையனகழிதலும்,புதியன புகுதலும் என்ற பண்பான முறைதான் என்றுமே நாட்டில் நடைமுறையாகி வருகின்றன. உதாரணமாக; நமக்குத் தெரிந்தவரையில் சில காலங்களுக்கு முன்பெல்லாம் வயதுவந்த தாய்மார்கள் தங்கள் முழங்கைக்குச் சற்றுத் தாழ்ந்தே ரவிக்கை என்ற உடையை அணிந்ததையும், சில விதமான கட்டங்கள், வரிகள் போன்றவற்றால் செய்த குறைந்தது 16 முழ புடவைகளையாவது உடுத்தி வந்ததைப் பற்றியும் நாமறிவோம். ஆனால், இள நங்கையர்களோ...சற்று தோள்பட்டைக்குக் கீழோ, அல்லது தோள்பட்டைக்கு மேலோ ரவிக்கைகளை அணிந்ததுடன், நூதன மெல்லிய புடவைகளை உடுத்த ஆரம்பித்தது, அதை 12 அல்லது 10 முழங்களில் கொண்டு வந்து நிறுத்தி விட்டனர் என்பதையும் நாமறிவோம். இவை யாவுமே காலத்திற்கேற்ற நாகரிக முறையே ஆனாலும், இன்றோ ரவிக்கைகளை அணிதலிலும், புடவைகளை உடுத்துவதிலும் அந்தக்கால முறைப்படி (ரவிக்கையை முழங்கைக்கு கீழே சோளி என்ற பெயருடன்) அணிவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இம்முறையைப் போன்றே நாட்டில்.நல்லவைகளே காலப்போக்கில நிலைக்க விடு...








மேலும் நாகரிக வளர்ச்சியில் எம்மாதிரியான முறைகள்தான் கையாளக்கூடும், கையாளக் கூடாது என்ற விதிமுறைகள் எதுவும் கிடையாது போலும். ஏனெனில் இன்று அரியப் பெரிய செல்வந்தர்கள் இல்லத்தினர்களையும் அலங்கரிப்பது பல வண்ண வெட்டு,ஒட்டுத் துணிகளாலான நூதன தையல் முறைகள்தான். ஆனால், அதே முறையைப் பல காலமாக கையாண்டு வரும் வழியற்ற ஏழை எளியவர்களிடமிருந்து இந்த நாகரிக முறை ஒட்டிக் கொண்டதோ என்னவோ...!மேலும்நரிக்குறத்திகள் என்றுமே வெட்டு, ஒட்டு வண்ணத் துணிகளைத்தான் இணைத்து ஆடைகளாக அணிகின்றனர் என்பதையும் உதார்ணமாகக் கூறலாம், இருப்பினும் செல்வந்தர்கள் அணியும் விதத்தில் சாதாரண ஒட்டுத் துணிகள்கூட பெரிய பாஷனாகப் போய் விடுகிறது. எல்லாவற்றையும் விட இன்னும் மிகப் பெரிய பாஷனை நம் திரை அரசிகளின் ரம்ய ஆடைஅலங்காரத்தைக் கண்டு களியுங்கள்.





அடுத்தப் பக்கத்தில் காண்பவை பண்டைக் கால மகளிர்களின் முடி அலங்காரம்.






## பண்டைக்கால பாவையர் முதல் இன்று வரையில் அணிந்திருந்த அணிகலன்கள்

மனிதன் மலைக்குகைகளிலும், மலைப்பொந்துகளிலும் விலங்குகளைப் போல வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இருந்தே அவன் தன்னை அணிகளால் அலங்கரித்துக்கொள்ள தயங்கியதுல்லை. ஆரம்பத்தில்தான் வேட்டையாடிக் கொன்ற மிருகங்களின் தோலை ஆடையாகஅணிந்துகொண்டமனிதன், அதனுடைய பற்களையும், எலும்புகளையும் தனக்கு ஏற்ற அணிகளாக அணிந்து கொண்டான். ஆனால், காலம் மாற மாற அணியும் படியாக மாறலாயிற்று. ஆரம்பத்தில் எலும்பு இருந்த இடத்தில் பின்னர் உலோகமும், உலோகத்திற்குப் பிறகு, முத்தும், வைரமும்கூட அவனுடைய அணிகளிலே இடம் பெற்றன. பண்டைய காலத்தில் இருந்து இன்றைய காலம் வரை பாவையர் அணிந்த பல்வேறு வகையான அணிகளே இங்கு கண்ணைக் கவரும் முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

1. மால்வாநாட்டைச் சேர்ந்த இடைக்காலப் பெண்ணரசிகள் அணிந்திருந்த பல்வேறான வளையல்கள்.

2. இடைக்காலப் பெண்கள் அணிந்த கழுத்தணிகள்,

3. மலையாளப் பெண்கள் அணிந்த முத்தாலான காதணி.

4. கொச்சி நாட்டின் அழகிகள் அணிந்த கழுத்தணி.

5. இடைக்காலப் பெண்கள் அணிந்த விலை உயர்ந்த முத்துமாலைகள்.

6. கொச்சி நாட்டின் மாதர் தலை அணி.

7. பிரஞ்சு தேசத்து மாலுமிகளின் மனைவியர் அணிந்திருந்த கப்பல் உருவ காதணி.

8. பண்டைய மீன்வடிவமுள்ள தங்கத்தால் ஆன கழுத்துப் பதக்கம்.

9. மத்தியப் பிரதேசததைச் சேர்ந்த மகளிர் அணிந்த காதணி.

10. முத்தால் செய்த ஒரிஸா நாட்டுக் காதணி.

11. பண்டைக்கால மோதிரம்.

12. மாளவ நாட்டு காதணி.

13. ராஜபுதனத்தைச் சேர்ந்த பெண்கள் அணியும் தண்டைகள் போன்ற காலணிகள்.

14. வைரமும், முத்தும் பதிக்கப்பட்ட தங்கத்தால் ஆன பழங்கால மாட்டில் என்ற காதணி.

15. கத்தியவாரைச் சேர்ந்த வடநாட்டுப் பெண்கள் அணிந்த ஒரு வகை ஜிமிக்கி.

16. ஒரிஸா நாட்டுப் பெண்கள் அணிந்த காதணி.


17. இங்கிலாந்து பெண்கள் தலையில் அணியும் கற்கள் பதித்த புரோச்.

18. பிரஞ்சு நாட்டு சீமாட்டிகள் அணிந்திருந்த முத்தாலான காதணி.

19. முகலாயகாலத்து அரச மோதிரம்.

20. கிருஷ்ணதேவராயரின் வைரம் பதித்த தலைக் கிரீடத்தில அணியும் இறகு.

21. பெண்கள் தங்கள் முழங்கைக்கு மேல் அணியும் தங்கத்தாலும், வைரத்தாலும் ஆன கடயம்.


7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20



# இராவணன் பெருமை

தமிழறிஞர்
அ. ச. ஞானசம்பந்தன்

பாடும் நாவும் உடைய இராவணன் பெருங் கலைஞன் என்பதில் ஐயமில்லை. தன்னுடைய அரச சின்னமாகிய கொடியில் யாழ் பொலியக் கொண்டிருந்தான் என்ருல் அம்மாபெரும் கலைஞனைப் பற்றி வேறு என்ன சொல்லத் தேவை உளது.

கலைஞர்கள் அனைவருமே ஓரளவு உணர்ச்சி வசப்பட்டவர்கள். அதிலும் பெருங் கலைஞனுகிய இராவணன் உணர்ச்சிக்குப் பெரிதும் இரையாகி விட்டான், என்ருல் அதில் வியப்பு ஒன்றுமில்லை. எனவே, இராவணன் தவறிழைத்தான் என்று கூறுவதைக் காட்டிலும் இராவணனுடைய கலைப் பித்து – அழகுணர்வு தவறிழைத்தது என்று கூறுவது பொருத்தமுடையதாகலாம். உணர்ச்சியை அடக்கிப் பழகாத கலைஞர்கள் துயரம் அடைவது நிச்சயம் என்பதை எடுத்துக் காட்டவே போலும், இராவணனுகிய பெருங் கலைஞன் "வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்" சல்லடைக் கண்களாகத் துளைக்கப் பட இறுதியில் கேவலம் மனிதன் ஒருவனுடைய அம்பால் உயிரிழந்தான். ஆம்! கலைஞன் வீழ்ச்சியிலும் உலகம் ஒரு மாட்சியைக் காண்பதில் வியப்பு இல்லையல்லவா? சாதாரண மனிதன் சாவதிலும் கலைஞன் வீழ்ச்சி எத்தனையோ மடங்கு பெரியது. இறுதியாகத் தான் போர் புரியவேண்டி நேரிட்டது கேவலம் மனிசனுடன் அன்று என்றும் முழுமுதற் பொருளுடனேயே என்றும் தெரிந்துகொண்டும்கூட அப்பெருங் கலைஞன் பேசும்வார்த்தைகள் சிறப்புடையன. "யாரேனும் தான் ஆகுக, யான் என் தனி ஆண்மை பேரேன் இன்றே வென்றி முடிப்பன்; புகழ் பெற்றேன்" என்று சொல்லிச் சாவை உவகையுடன் ஏற்றுக்கொள்ளும் அக்கலைஞன் பெருமையுடையவன்; மாட்சி பெற்றவன் என்பதில் என்ன ஐயம் இருத்தல் கூடும்?

"வேத முதல் காரணனை" முழுமுதற் பொருளே மானிட வடிவம் தாங்கி மண்ணிடை வந்து பிறந்து போரிட்டு, வெற்றிபெற வேண்டிய அளவுக்குப் பெரியவனுக இருந்தான் இராவணன். ஆதலின் தான் போலும் பிற்காலத்தவர்கள் 'இராவணேஸ்வரன்' என்று 'ஈஸ்வரன்' பட்டத்தையும் அவனுக்குத் தந்தார்கள். "முக்கோடி வாழ்நாள், முயன்று உடைய பெருந்தவம், யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரம்" ஆகியவற்றைப் பெற்றவன் சாதாரணமாக இருக்க முடியாதே! புலத்தியன் மரபில் வந்த இராவணன் மரபால் அந்தணனுயினும், அந்த மரபுக்குரிய ஒழுக்கம் சிலவற்றை விட்டுவிட்டான். 'ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்த அறிவு அமைந்தவன்' என்றும் சாம வேதம் இசைத்தலில் வல்லவன் என்றும் பெயர் வாங்கிய இராவணன் அந்த அளவில் நான்மறையாளர்களுடைய பண்பாட்டை மேற்கொண்டிருந்தான். ஆனல் அதற்கு மேல் தேவைப்படுகின்ற கருணை, பண்புடைமை, நடுநிலைமை, நீதி, நல்லொழுக்கம் ஆகியவற்றை ஓரளவு காற்றில் பறக்கவிட்டுவிட்டான். சாதாரண மனிதனுக இருந்து மேலே கூறிய நற்பண்புகள் இல்லாமல் போகுமேயானுல் அதனுல் நஷ்டம் அடைபவன் அவன் ஒருவனே ஆவான்.

ஆனல், சக்தியும், அதிகாரமும், படைபலமும் உடைய ஒருவனுக்கு இந்த நற்பண்புகள் இல்லாமல் போகுமேயானுல் அதனுல் பெருந்தீங்கு விளையும். அவன் ஒருவனை மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்தோர் அனைவரும் பெருந் துயரில் ஆழ்ந்துவிட ஏதுவாகும். எனவே பெரும் வல்லமை வாய்ந்தவனும், பேரரசனுமாகிய இராவணன் இரக்கம் முதலிய நற்பண்புகளை விட்டுவிட்டதனுல் அவன் மட்டும் அல்லலுறவில்லை; அரக்கர் சமுதாயமே அழிவதற்குக் காரணமாயினன்.

இராவணனுடைய தனிப்பட்ட பெருமை ஒருபுறமிருக்க அவனுல் ஆட்சி செய்யப்பட்ட இலங்கையுங்கூட மாட்சி உடையதாக விளங்கக் காண்கிருேம். "நரகம் ஒக்குமால் அந்நன்னெடும் துறக்கம் இந்நகர்க்கு" என்றும், "ஆடுநர் பாடுநர் ஆகி களிக்கின்ருர் அலால் கவல்கின்ருர் ஒருவரைக் காணேன்" என்றும் அனுமனே கூறுவனேல் இலங்கையின் மாட்சியைப் பற்றி வேறு என்ன சொல்லத் தேவை இருக்கிறது? ஒரு இடத்தையோ அல்லாது ஒருமனிதனையோ அறிய வேண்டுமேயானுல் அந்தஇடத்தில் வசிக்கின்றவர்களும், அந்த மனிதனது நண்பர்களும் கூறுகின்றவற்றைக் கேட்டுப் பயனில்லை. பகைவன் கூறுவதைக் கொண்டேஓரளவு உண்மையை அறியமுடியும். இராவணன் மாட்டுத் தீரா நெடும்பகை கொண்டிருந்தவனுகிய அனுமானே மேற்கூறிய முறையில் இலங்கையைப் புகழ்வனேயானுல் இலங்கையின் மாட்சி ஒருவாறு விளங்கும்.

இத்தகைய இலங்கையைக் கேவலம் மிருகபலம் ஒன்றைமட்டும் வைத்துக்கொண்டு இராவணன் ஆட்சி செய்தான் என்று கருதுவது பெருந் தவறு. தனது யாழ் வாசிக்கும் திறமையால் கயிலை மலையிலுள்ள இறைவனையே மயக்கும் சக்தி பெற்றவனும், "நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்படப்

இப்படித்தான் இருந்தனரோ...
இப்படித்தான் இயற்றினரோ...





"மஜையிடைப் பிறவா மணியே என்கோ!
அஜையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை

-சிலப்பதிகார

"துடியள வளவெனு நுணுகிடைக்
காதள வளவெனு மதர் விழி"

-கலிங்கத்துப்பரண

"ளவளர் இளநகையே முழுமதி
புரைமுகமே
இளையவள் இணைமுலையே எணையிடர்
செய்தவையே"
- சிலப்பதிகாரம்

→





"கோலநெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பியிருப்ப
பீலி மஞ்சை நோக்கிப் பேடை மயிலென்றெண்ணி"
- சீவகசிந்தாமணி

←



கவவுக் கடுங் குரையள்; காமர்வனப்பினள்
தவவு மென் முலையள்; கொடிக் கூந்தலளே"
-குறுந்தொகை. →



"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு, →
'ஆஅ! ஒல்' எனக் கூவுவேன் கொல்?"
-குறுந்தொகை

"சிறுதுடிக் துறவன் பெருந்தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே"
- குறுந்தொகை.

←





"நீள் வேலோ அம்போ கயலோ நெடுங் கண்ணே
ளார்ந்த கூற்றமோ கொல்வான் தொடங்கினவே"
-சீவகசிந்தாமணி →



"படையிட்டு நடுங்கும் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றே பெற்றியின் நின்றிடின்" →
- மணிமேகலை



"வளரிள வனமுலை மடந்தை மெல்லியல்
தளரிடை யறியும் தன்மையள் கொல்லோ"
- மணிமேகலை.
←



"வீரவேள் போல் வாரை வீட்டி விழுத்தவர்மேல்
…வேள் கண் சிவப்ப வாய் சிவப்பாள்"
-…வருலா.

அழகில் ரதியும்
நடிப்பில் இமயமுமான

சேரநன்னாட்டுத் தோகை மயில்



புகைப்படங்கள்: நாகராஜராவ்

குறையாத அழகும்
குன்றாத நடிப்புமுடைய

# ஆந்திர அழகோவியம்



மழலைமொழியும்
மானின் விழியுமுடைய

# கன்னடத்துப் பைங்கிளி



கலை

தேன்மதுரக் குரலும்
தெவிட்டாத நடிப்புமுடைய

வடுகர் நாடுதந்த வடிவழகி





1513-ல் கிரேக்கர்கள் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி பிரசவ காலத்தில் இவ்வாறு சூழ்ந்து கொண்டார்கள்.

# தாய்மை

**எஸ். மீனாட்சி**

[பெண்களுக்கு மட்டும் பிரத்தியோகக் கட்டுரை.]

உலக சமுதாயத்தின் வருங்கால வாழ்க்கையே தாய்மையென்ற பண்புப் பேற்றால்தான் வகுக்கப்படுகின்றது. 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை' என்று மட்டும் நாம் கற்றறிந்து விட்டால் போதாது. அத்தாய் தன்னையும், தன் சுற்றத்தையும் தக்கபடி தற்காத்துக் கொள்வதில்தான் பெருமை என்ற பேரின்பம் புதைந்திருக்கின்றது.

ஆகவே, அன்பு சகோதரிகளே! அருமை தாய்மார்களே! உலகின் கண்களே...! நானொரு பெரிய அறிவுமேதையோ அன்றி அனுபவ ஞானியோ அல்ல... இருப்பினும் உங்களுடன் பிறந்த ஒரு சகோதரி என்ற முறையில்... உலகம் உய்விக்கும் மகவுகளைப் பெற்றெடுத்து அவர்களை முடிசூடா மன்னர்களாக, அறிவில் சிறந்த செல்வங்களாக உருவாக்கிட முனையும் அந்தத் தாய்... அவளின் தாய்மைப் பண்பு—அவைகளுக்காக அவள் அனுபவிக்கும் ஆற்றாத சிரமங்களை நான் ஆராய்ந்த விதிமுறைகளோடு ஒப்பிட்டே இக்கட்டுரையை உங்கள் முன் வைக்கிறேன்...

குழந்தைகள் பிறப்பதற்கான உறுப்புகள் மர்மமானவைதான். ஆனால், அவைகளைப்பற்றி அறிய முயற்சி எடுத்துக் கொண்டதனால்தான் இன்று விஞ்ஞான மனப்பான்மை படைத்த, நாகரிகம் முதிர்ந்த காலமாகிற்று. ஆகவே வெட்கப்படுவதால் பயனொன்றும் விளையப் போகின்றதில்லை.

இன்றுமுள்ள சில கற்றோர்களும் பல கல்லாதவர்களும் கூட மறைவான பெருந்திரையென மூடி மறைக்கத்தான் செய்கின்றனர். இப்படிப்பட்ட எண்ண எழுச்சி மாறாத, மாற்றிக் கொள்ளாத முறைகள் ஆதிகாலங்கள் முதற்கொண்டே தோன்றி தொட்டு வருகின்றன.

அக்காலங்களில் கர்ப்பமுற்ற ஒரு பெண், அவளின் முதல் மாதத்திலிருந்தே பலவித சிரமங்களை சூழ்ந்துள்ள பலவிதமானவர்களால் அனுபவிக்கத் தயாராகியுள்ளாள்.



மேலும் பிரசவிக்கும் சமயம்.. அவள் பெண்ணை அன்றி மிருகமாக பாவிக்கப்பட்டிருக்கிறாள். குழந்தையைப் பெற்றெடுப்பதற்குள் மலையிலிருந்தும், மரத்திலிருந்தும் கூட உருள வேண்டியிருந்ததுடன், அடி, உதைகளையும் கூட இம்சையோடு இம்சையாக பொறுத்துக் கொண்டிருக்கிறாள். மேலும் அவள் அனுபவிக்கும் சிரமங்களை எழுத்தினால் மட்டுமல்ல வாயாலும் கூறவே முடியாத கொடுமைகள் அப்பப்பா! இங்கே காணும் சித்திரங்களெல்லாம் அக்கால முறையை விளக்கிடத்தான் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் இப்படியிருந்த பெண்கள் என்ற பேதையர் உலகம் இன்று நினைத்தாலும் வெட்கப்படும் வகையிலிருந்ததை நாகரிக முற்போக்கினால் மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. அல்லது அக்காலமுறை இன்றும் நீடித்திருந்தால் கல்யாணம் செய்துகொள்ளாத கன்னியர்தான் உலகில் அதிகமாக இருந்திருப்பார்கள்! ஆனால், இன்றுள்ள நிலையில் சில செல்வந்தர் மகளிர்களைத் தவிர மற்றவர்கள் அனைவர்க்கும் சுகப்பிரசவமே ஏற்பட்டு வருகின்றது. இந்த நற்பெருஞ் செயலுக்காக விடாமுயற்சியோடு முனைந்த அறிவாற்றல் மிக்க பெருந்தகையர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புடைய மகளிர்களின் மானங்காத்த அறிவுமேதைகளின் முறையில் கர்ப்பகாலத்தில் பெண்கள் கவனித்து நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், விதிகளையும் கர்ப்பமுற்ற பெண்கள் அடையும் மாறுதல்களையும் நான் பெற்ற அனுபவம் மூலம் விளக்குகின்றேன். அறிந்தவர்களும், அறியாதவர்களும் தெரிந்து கொள்வதில் தவறொன்றுமில்லையெனவும் நினைக்கின்றேன்.





கர்ப்ப வளர்ச்சியைப் பற்றிய விளக்கம் :

கர்ப்பிணிகளின் முதல் மாதமுடிவில் வாயில் அடிக்கடி எச்சில் ஊறும். வாந்தியும், அஜீரணம் போன்ற உணர்வும் உண்டாகி, அடிவயிற்றில் சிறிது வலியும் ஏற்படும். இரண்டாவது மாதத்தில் மார்பகம்விரிவடைந்து சிறிது வலியும் ஏற்படும். அதன் மீது பச்சை இரத்தக் குழாய்கள் தடிப்பாகக் காணப்படும். மசக்கை, தலைச்சுற்று ஆகியவைகளும் ஏற்படும். மூன்றாவது மாதத்தில் குழந்தை 2 அவுன்ஸ் எடையுள்ளதாக இருக்கும். அதற்கு கைகள், கால்கள், விரல்கள் ஆகியவை உருவாகி விடும். கர்ப்பவதியின் அடிவயிறு முறுக்கி வலிக்கும். சிலருக்கு பேதியும்ஆகும். நான்காவது மாதத்தில் குழந்தை ஆணா, பெண்ணா என்று அறிந்துகொள்ளமுடியும். தலை பருமனாக இருக்கும். இம்மாதத்தில் குழந்தை பிறந்துவிட்டால் சற்று நேரமே உயிரோடிருக்கும்.



ஐந்தாவது மாத முடிவில் குழந்தை சுமார் 11அவுன்ஸ் எடையுள்ளதாக இருக்கும். குழந்தையின் சகல உறுப்புக்களும் வளர்ச்சியை அடைந்திருக்கும். ஆறாவது மாதத்தில் குழந்தைக்கு கண்ணிமை உருவாகும். ஆனால், ஒட்டிக் கொண்டிருக்கும். ஏழாவதுமாதத்தில் குழந்தை சுமார் 3 ராத்தல் எடையுள்ளதாக இருக்கும். சிசுவின் மேல் தோல் பச்சை மாமிசம் போன்று சிவப்பாக இருக்கும். உடம்பு முழுதும் வழவழப்பான மாவு படிந்திருக்கும் இந்த மாதத்தில் பிறந்து விடுகிற குழந்தையைப் பத்திரமாக பாதுகாத்தால் உயிருடன் காப்பாற்றி விடவும் முடியும். இம்மாதத்தில் கர்ப்பிணிகளுக்கு வயிற்றுவலி அதிகமாகும். எட்டாம் மாத முடிவில் சிசுவின் உடம்பில் சுருக்கம் காணும்.



சிவப்பு வண்ணமாகவும் இருக்கும். தலை அதிக பருமனாகக் காணும். இம்மாதத்தில் பிரசவித்து விட்டால் தகுந்த சிகிச்சை மூலம்உயிர் பிழைக்கவும் செய்துவிடலாம். ஆனால், ஆயுள் மிகக் குறைவாகவேயிருக்கும். இக்காலங்களில் கர்ப்பிணிகளுக்கு பசி மந்தம் ஏற்படும். கைகால்களில் அயர்வு காணும். ஒன்பதாவது மாதமுடிவில்... குழந்தை சுமார் 5 ராத்தல் வரையிலிருக்கும். சிசு பூரணமான அமைப்பை அடையும். பெண் குழந்தையைக் காட்டிலும், ஆண் குழந்தை எடையில் சற்று அதிகமாகவேயிருக்கும் கர்ப்பிணிகளுக்கு வயிற்றுவலி அதிகமாகும். இப்பொழுது பிறந்துவிடுகிற குழந்தைகளை கூடுமானவரையில் காப்பாற்றிவிடலாம். பத்தாவது மாதத்தில், அதாவது கடைசி மாதவிலக்க நாளிலிருந்து 280 முதல் 300 நாட்கள் வரையிலுள்ளகாலம் தான் சரியான பிரசவகாலம். இம்மாதத்தில் குழந்தை சுமார் $7\frac{1}{2}$ ராத்தல் எடையுடையதாகஇருக்கும். சகல உறுப்புகளும் பூரணப் பொலிவுபெற்று விளங்கும்.

கர்ப்பிணிகள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள்-அவர்கள் அன்றாடமும் அரை மணி நேரமாவது சுத்தமான காற்றுக்காக உலாவ வேண்டும். இல்லையேல் இரத்தம் கெட்டுவிடுவதுடன் தாய்க்கும், குழந்தைக்கும் நல்ல இரத்தமில்லாது போய்விடும். மேலும் அவர்கள் ரயில் வண்டி, குதிரைவண்டி, மாட்டு வண்டி, ரிக்ஷாவண்டி ஆகியவைகளில் நெடுந்தூரம் பிரயாணத்தை மேற்கொள்ளக் கூடாது. அவர்கள் மேடுபள்ளமான இடங்களில் படுக்கவோ, உட்காரவோகூடாது. நாற்காலியில் உட்காரும்பொழுதுகூட காலைத்தொங்க விடவேண்டும். சினிமாக்கள், நாடகங்கள் முதலியவற்றிற்கும் போவதுதகாத செயலாகும். ஏனெனில் படங்களில் நிகழும்—அதிகச் சிரிப்பும் சரி, அல்லது மனக்கிளர்ச்சியும் சரி இது கர்ப்பிணிகளுக்கு தீங்கை உண்டாக்கிவிடும். மகிழ்ச்சியோடும், சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும் இருப்பது சுகப்பிரசவத்திற்குஉதவிசெய்தது போன்றதாகும்.

கர்ப்பிணிகளின் உணவுகள் இலேசானதாகவும், மிருதுவானதாகவும் மிதமானதாகவும்இருக்கவேண்டும். உணவு குறைந்தாலும் கெடுதல் உண்டாகும். ஆனால், இக் காலங்களிலும் சிலர் சாம்பல், மண் முதலியவற்றை உட்கொண்டு விடுவார்





கள், இதனால் **சிலரோகங்கள் உண்டாகி,** பிரசவ சமயத்தில் மிகவும் கெடுதியைஏற்படுத்திவிடும்.சாதாரணமாக சாப்பிடுகையில் சாதத்துடன் குழம்பு, பொரியல்வகைகளும், தயிர்மோரைச்சேர்த்துக்கொள்ளுதலும் அவசியம். பசும்பால், பசுநெய், ஆரஞ்சு, சாத்துக்குடி, பேயன் வாழை, மலை வாழை, பூவன் பழம் முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். அன்றாடமும் விதவிதமான கீரையை உட்கொள்ளுதல் மிகவும் நல்லது. மாமிசம் சாப்பிடுவோர் பத்திய மீன்கள், ஆட்டு மார்பு, எலும்பு, ஈரல் ஆகியவைகளுடன், சூப்பும் தயாரித்து சாப்பிடலாம். ஆனால், முக்கியமான தொன்று—சர்ப்பிணி ஐந்து மாதத்திற்கு மேல் தன் தாய் வீட்டிற்குச் சென்றுவிடுவது நன்மையை விளைவிக்கும். ஏனெனில் அகால பிரசவம் ஆகாமலும், மனோ எழுச்சி மிகைப்படாமலும், கர்பபத்திற்கு தீங்கு ஏற்படாமலும், காப்பாற்றிக் கொள்ள ஏதுவாகும்.

கர்ப்ப காலத்தில் நாள் முழுதும் இலேசாகவாவது வேலை செய்தே ஆகவேண்டும்.கடுமையான வேலைகளைச் செய்து களைத்துப் போகவே கூடாது தண்ணீர் குடம் போன்ற பளுவான எதையும் குனிந்து தூக்கி இடுப்பில் வைப்பதோ, மெத்தைப் படிக்கட்டுகளில் அடிக்கடி நடமாடுவதும் கூடாது. சமைக்கும்பொழுது புகை அடுப்பின் முன்னால் வெகுநேரம் உட்கார்ந்திருக்கக் கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் வருந்தி அழவே கூடாது. சேலை முதலியவற்றை இறுக்கமாக அணியக் கூடாது. தினமும் மிதமான சுடு தண்ணீரில் குளிக்க வேண்டும். இம்மாதிரியான சரியான வழிகளைப் பின்பற்றினால் சுகப்பிரசவத்தை அடையலாம். அல்லாது உடம்பு குலுங்காது கர்ப்பிணிகள காலம கடத்தினால் கஷ்டப் பிரசவத்தில் தான் வந்து முடியும் என்பதையும் அறியவும்.




விஞ்ஞான வளர்ச்சியில் இன்று எத்தனையோ பங்கு மேன்மையைக்கண்டு விட்ட பிரசவ முறை

ஆகவே, அன்புச் சகோதரிகளே...! நான் கூடுமான வரையில் மேலே கூறிய விதிகளைச் சரியாக



கையாண்டதால்தான் எனக்கு சுகப்பிரசவம் நிகழ்ந்தது என்று நிச்சயம் கூறுவேன். அதனால் எங்கள் செல்வியும் எவ்வித நோய் நொடியின்றி இனிதே வளர்கிறாள். என்னைப் போன்றே என் சகோதரிகள், தாய்மார்கள் ஆகிய சகலரும் ஆதி கால விதிமுறைகளிலிருந்து மாறி நம்மால் முடியக்கூடிய இவ் வழிகளின்படி நடந்து என்னைப் போன்றே சுகப்பிரசவம் பெற்று தாயும், சேயும் நல்ல தேக வலுவுடன் விளங்க வேண்டுமென்ற ஒரே ஆவலினாலேயே இவைகளைக் கூறுகிறேன்.

அரசியல் மருத்துவ நிலையங்களிலும், இன்னும் சிலவற்றிலும் தாயாகிய — அல்லது தாயாகப் போகும் நர்ஸ்களும், அவர்களுக்கு மேன்பட்டவர்களும் தங்களுக்கு இப்படிப்பட்ட காலமெல்லாம் சம்பவிக்காது என்ற நினைவில்... இவர்களும் தங்களைப் போன்ற பெண்கள்தானே என்பதையும் மறந்து, அங்கு வந்திருக்கும் கர்ப்பப் பெண்களிடம் அதிகார மமதையினால் அடாத முறையில் நடப்பதையும், வேண்டாத வார்த்தைகளைச் சிந்துவதையும், கூடாத செயல்களை கையாளுவதையும் நாமறிவோம். ஏன்?...நம் அரசியலும் நன்கு அறியும்...ஆனால், இதற்கெல்லாம் என்றாவது ஒருநாள் வழியும் பிறக்கும். இருப்பினும் நமது தாய்மைப் பண்பினாலும் மேலே கூறியுள்ளசரியான கையாளக்கூடிய நடைமுறைகளாலேயும் அவைகளை வென்றுவிடுவது வெகு சுலபம என்பதுடன் நமது இனிய வாழ்க்கைக்கு வழியும் பிறந்து விடும்.








# நாளொரு மேனியாக...

ரெக்ஸோனாவில் அடங்கியுள்ளது கேடில்; சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய கேடில், சருமத்திற்கு ஊட்டமளித்து, மழமழப்பாகவும், மென்மையுடனும் மிளிரச் செய்கிறது! ரெக்ஸோனாவின் எடுப்பான நறுமணம் இணைபிரியாமல் உங்கள்மீது கமழ்ந்து இளங்காலைப் புதுமலர்ச்சியுடன் நாள்முழுதும் உங்களை விளங்கச் செய்கிறது. உங்கள் அன்றாட அழகுசாதனமாக ரெக்ஸோனா உபயோகியுங்கள்!

## ...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது

ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. RP.165-50 TM

# செங்கனி

நாவலாசான் ஜெகச்சிற்பியன்

[மூன்று தமிழ்ச் சங்கங்களைக் கண்டு நானிலம் எங்கும்புகழ் மணம் பரப்பிய பாண்டியப் பேரரசு, கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் களப்பிரரின் படையெழுச்சியால் வீழ்ந்துபட்டு, தமிழகத்தின் முன்னூறு ஆண்டுக் கால வரலாற்றில் இருட்டைப் பூசி மெழுகிவிட்டு, மீண்டும் ஆறும் நூற்றாண்டு வாக்கில் மெள்ளத் தலையெடுத்தது. ஆயினும், அது பழைய கீர்த்தியைப் பெறமுடியாமல், பல்லவராலும் சோழராலும் நசுக்குண்டு நலிந்து கிடந்து, பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியிலே, மாவீரன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் முயற்சியால் மீண்டும் ஒரு பேரரசு சகாப்தத்தைத் தோற்றுவித்தது. இப்படித் தோன்றிய அந்தப் பாண்டியப் பேரரசு, ஒரு நூறு ஆண்டுக் கால உன்னத வாழ்வுக்குப்பின், பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியோடு சரியத் துவங்கியது. அப்படி ஒரு பேரரசு சரிந்த துக்ககரமான துவக்க வரலாற்றின் (கி. பி. 1310-1342)சின்னஞ் சிறு கோணமொன்றிலிருந்தே இச்சிறு கதைபிறக்கிறது...]

நளின இளங்காற்றில் அசையும் நாணற் பூச்செண்டுபோல் நடுக்கமுற்று வியர்த்து நின்றாள் செங்கனி. அளவுக்குமீறிய பீதியால் அவள் நெஞ்சு இறுகி அடைத்துக்கொள்வது போல் இருந்தது. அவளது பூமேனியில் புடைத்தோடும் நாளக்கொடிகளில் உருகிய பனிநீர் ஊற்றெடுத்துப் பாய்வதுபோன்ற ஓர் உறைகுளிர் நடுக்கம். நீர்ச்சுழலில் சிக்கிய நீலக் குவளை மலரென நிலையுறாது சுழன்று கொண்டிருந்த தன் அழகிய கண்களை அவசரப் பரபரப்புடன் துடைத்துவிட்டுக்கொண்டு தன் தந்தையைப் பயத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

நெற்றியில் சரம் கட்டிக்கோத்த வியர்வை முத்துக்கள் மடியில் உதிர்ந்து சிதற ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்த அமைச்சர் மாவலி வாணாதிராயர் மெள்ளத் தலை நிமிர்ந்து தம் மகளை ஏக்கத்துடன் பார்த்தார்.

"அப்படியென்றால் முடிவாக என்னதான் தீர்மானித்திருக்கிறீர்கள் அப்பா?" என்று உள்ளடங்கிய குரலில் கேட்டாள் செங்கனி.

நீண்ட பெருமூச்சுவிட்டுப் பலமாகத் தலையசைத்த வாணாதிராயர், "தீர்மானமா? இந்தப் பழம் பெருமைவாய்ந்த பாண்டி நாட்டையும், அதன் மதிப்பு மிக்க அமைச்சர் பதவியையும்விட என் அருமை மகள் செங்கனியையே நான் பெரிதாக நினைக்கிறேன். அவற்றின் பாதுகாப்புக்காக எனது அன்பு மகளைப் பலியிட ஒரு போதும் இசையேன்!" என்று உறுதியான கரகரத்த குரலில் சொன்னார்

செங்கனியின் முகம் வெளுத்துச் சிறுத்தது. சற்று நேரம் வரை முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனமாயிருந்த அவள் ஓர் அவலப் புன்முறுவலுடன் தன் தந்தையை ஏறிட்டுப் பார்த்து, "அப்பா, நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? என்னால் இதை நம்பவே முடியவில்லையே!" என்றாள் நடுக்கத்துடன்.

வாணாதிராயர் சட்டென்று தம் மகளை ஏறிட்டுப் பார்த்தார். "அப்படியானால் நீ எதை எதிர்பார்க்கிறாய்? எதைச் சொன்னால் நம்புவாய்?" என்று அதட்டுவது போல் கேட்டார்.

"அமைச்சர் பதவியை விட உங்கள் அருமை மகளைப் பெரிதாக எண்ணுவது உண்மையாகவும் சரியாகவும் இருக்கலாம் அப்பா! ஆனால், நாட்டின் நலனை விட உங்கள் மகளின் நலன் பெரிது என்கிறீர்களே, அதைத்தான் என்னால் ஏற்க முடியவில்லை! நமக்கென்று ஒரு நாடு இருந்தால் தானே அதில் உங்கள் நலனையும் உங்களுடைய மகளின் நலனையும் காண முடியும்? அடிநாதமே பறிபோய் விட்டால் அப்புறம் இசை மாளிகையை எழுப்புவது எங்ஙனம்?"

அமைச்சர் தம் மகளை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து நோக்கினார். பிறகு ஒரு வித வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "மகளே! நீ சிறுபிள்ளைத்தனமாக வாதமிடுகிறாய். நாம்தான் நாட்டின் நலனில் அக்கறை காட்டி நமனுலகில் புகவும் தயாராய் இருக்கிறோமே தவிர, அதன் நாயகர்களான பாண்டியர்களின் மனதில் அந்த எண்ணமே சிறிதுமில்லை என்பதை நீ அறிய மாட்டாய்!" என்றார் ஆத்திரத்துடன்.

"இருக்கலாம் அப்பா! ஆனால் எந்த நாட்டு மன்னர்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்பது என் முடிவு. ஏனென்றால், அவர்களும் அவர்களது அரசு கட்டிலும் வெறும் உடம்புதான்; மக்கள்தாம் அவற்றை இயங்கச் செய்யும் உயிர். மக்களாகிய உயிரின் துடிப்பைக் கொண்டே மன்னராகிய உடலின் இயக்கத்தை அளவிட முடியும்!"

"பைத்தியக்காரப் பெண்ணே சில உடல்கள் முட்டாள்தனமாகத் தமக்குத் தாமே பல நோய்களை வருவித்துக் கொண்டு உயிரின் வீறார்ந்த இயக்கத்தைப் பலஹீனப்படுத்தி அதை மாய்த்து விடுவதில்லையா?"

"உண்மைதான் அப்பா! ஆயினும் உயிர் எப்போதும் விழிப்புடனும் துடிப்புடனும் இருந்தால், நோய் பிடித்த உடலை நீக்கி விட்டு இன்னோர் உடலைச் சிருஷ்டித்து அதை ஆரோக்கியப் பொலிவுடன் இயங்க வைக்க முடியும். மறுபிறவியில் நம்பிக்கையுள்ள நாம், அழியாத் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள நாம், எந்த உடலின் பலஹீனத்தையும் நினைத்து மனமுடைய வேண்டியதில்லை!"

வாணாதிராயர் மிகுந்த வருத்தத்துடன் தம் மகளைப் பார்த்தார். பிறகு கவலை தோய்ந்த குரலில் அமைதியாகச் சொன்னார்: "செங்கனி! உனது சமத்கார வாதத்தைக் கேட்டு என் நெஞ்சம் குதூகலிக்கிறது. ஆனால் அது முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பான வாதம் என்பதை நீ அறிய வேண்டும். ஆம், மகளே! நீ சொல்லும் அந்த உயிராகிய மக்களின் வாழ்வு இப்போது பல்வகையிலும் பாழ்பட்டு நைந்து நலிந்து கிடக்கிறது. பரந்து விரிந்த பாண்டிய நாட்டின் நிலம் இப்போது உள்ளங்கையளவிற்குக் கரைந்து குறுகி விட்டிருக்கிறது. சேர மன்னனும் மற்றும் பல குறுநில மன்னர்களும் பாண்டிநாட்டின் பல பகுதிகளைப் பிய்த்தெடுத்துக் கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற சடையவர்மன் குலசேகர பாண்டியரின் ஆட்சிக் காலம் வரை பலமிக்க பேரரசாய் விளங்கிய பாண்டிநாடு இப்போது, அவரது பிள்ளைகளின் குறை கால ஆட்சியில் சிதைந்து சின்னாபின்னமாகி விட்டிருக்கிறது. இதை மீண்டும் பழைய நிலைமைக்கு நிமிர்த்தி உயர்த்த இன்றைய மக்களாகிய உயிரால் இயலாதென்றே எனக்குத் தோன்றுகிறது. இந்நிலையில் சிறிதும் பயனற்ற ஓர் இலட்சியத்திற்காக என் உயிரினும் மேலாக வளர்த்துப் போற்றிய உன்னை எப்படி நான் பலியிடத் துணிவேன்? அது விழலுக்கு இறைத்த நீராகும் என்பதில் எனக்கு எள்ளத்தனை சந்தேகமும் இல்லை!"

"நீங்களே இப்படி மனம் சோர்ந்து பேசினால் மற்றவர்கள் என்ன செ..."

வார்கள் அப்பா?" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டாள் செங்கனி.

"செங்கனி!" என்று உரத்த குரலில் அழைத்த வாணுதிராயர், "உனக்கு நேரவிருக்கும் அவமான ஆபத்தை உணர்ந்துதான் இப்படிப் பேசுகிறாயா? இதோ பார்! இந்த நாட்டு மன்னன் என முடிசூட்டிக் கொண்டு அரியாசனம் ஏறியிருப்பவன், என்னிடம் நேரிடையாகச் சொல்லப் பயந்து எழுத்து மூலம் தெரிவித்திருக்கும் இந்த ஓலையைப் படித்துப் பார்!" என்று இரைந்து சொல்லிக் கொண்டே தம் மடியில் வைத்திருந்த ஓலையொன்றை எடுத்து நீட்டினார்.

நடுங்கும் கரங்களால் அவ்வோலையை வாங்கிய செங்கனி தன் மனதிற்குள்ளாகவே படித்தாள்:

"அமைச்சர் மாவலி வாணுதிராயர் அவர்களுக்கு,

நாம் சற்றும் எதிர்பாராத ஆபத்துச் சூழ்நிலையொன்று இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. டில்லி பாதுஷா அலாவுடீன் கில்ஜியின் படைத் தலைவனான மாலிக்காபூர் என்பான் நம் நாட்டின் மீது போர் தொடுப்பதற்காக நமது எல்லைப்புறத்தில் படைகளோடு வந்து பாளையம் இறங்கியிருக்கிறான். அவனை எதிர்த்துப் போரிடும் நிலைமையில் இப்போது நாம் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நமது அசக்தமான நிலையை அவன் அறிந்து கொண்டு தானோ என்னவோ, நேற்று தன் தூதுவன் ஒருவன் மூலம் ஓலையொன்றை எனக்கு அனுப்பியுள்ளான். அதிலே அவன் நம்மிடம், அறுநூற்றுப் பன்னிரண்டு யானைகளும், இரண்டாயிரம் குதிரைகளும், தொண்ணூற்றுராயிரம் துலாம் மதிப்புள்ள கழஞ்சுப் பொன், முத்து முதலானவையும் காணிக்கையாகக் கோரியிருப்பதுமல்லாமல், அடுத்த வாரம் எனது பட்டத்து ராணியாக மாலையிட்டு ஏற்க நிச்சயித்திருக்கும் தங்கள் செல்வக்குமாரி செங்கனியையும் தன்னிடம் கொண்டு வந்து ஒப்படைக்கும்படி கேட்டிருக்கிறான். இவற்றை அவனுக்குத் தர மறுத்தால், நிச்சயம் ஒரு போருக்கு நாம் தயாராய் இருக்க வேண்டும் — அதாவது, பாண்டிநாட்டை இழக்கச் சம்மதிக்க வேண்டும். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இன்றே அதன் விபரத்தை அறிய நான் விரும்புகிறேன்.

சடையவர்மன்

சுந்தர பாண்டியன்"

ஓலையைப் படித்து முடித்த செங்கனியின் கண்கள் புதுப் புனலாயின. அவள் முகத்தைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அழுது கொண்டே, கையிலிருந்த ஓலையைத் தன் தந்தையின் எதிரே வீசியெறிந்து விட்டு அவரிடம் ஒன்றுமே சொல்லிக் கொள்ளாமல் மேன்மாடப்படிகளில் ஏறி ஓடினாள் அவள்.

துக்கம் தாளமாட்டாத வாணுதிராயர் தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் ஆசனத்தில் அப்படியே சாய்ந்து கொண்டார். அவரது மனம் கடந்து போன பல கசப்பும் இனிப்புமான சம்பவங்களைக் கிளறிப் பார்ப்பதில் லயித்தது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால், மூன்றாம் குலோத்துங்கனின் மைந்தனான இரண்டாம் இராஜராஜனின் கைக்கு வந்த மாபெரும் சோழ சாம்ராஜ்யத்தை வீழ்த்திப் பாண்டியப் பேரரசை உதயமாக்கினான் முதலாம் மாறவர்மன், சுந்தர பாண்டியன். தமிழகத்தில் இரண்டாம் முறையாக நிலை நாட்டப் பெற்ற அந்தப் பாண்டியப் பேரரசு பல தலைமுறைகளாகச் சீரும் சிறப்புமாய்த் தழைத்தோங்கி, சில ஆண்டுகளுக்கு முன் காலஞ்சென்ற முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் ஆட்சிக் காலம் வரை மிக உன்னத நிலையில் விளங்கியது.

இந்தக் கீர்த்தி மிக்க பாண்டியப் பேரரசை அழிப்பதற்கென்றே பிறந்தவர்கள் போல், குலசேகர பாண்டியனின் பிள்ளைகளாகத் தோன்றித் தலையெடுத்தார்கள் சடையவர்மன் சுந்தர பாண்டியனும், சடையவர்மன் வீரபாண்டியனும்.

குலசேகர பாண்டியனின் பட்டத்து அரசிக்குப் பிறந்தவன் சுந்தர பாண்டியன்; இளைய ராணிக்குப் பிறந்தவன் வீரபாண்டியன். மன்னன் குலசேகரன் தனது இளைய ராணிக்குப் பிறந்த வீரபாண்டியன் மீதே மிகுந்த வாஞ்சையும் அன்பும் வைத்திருந்தான். அவனுக்கே அதிகச் சலுகையும் அளித்து வந்தான். பட்டத்து அரசியின் மைந்தனான சுந்தர பாண்டியனை அரசியல் முதலான எல்லாவற்றிலும் ஒதுக்கி வைத்து ஓரவஞ்சகமாகவே நடத்தினான். இதற்குக் காரணம் இல்லாமலும் போகவில்லை. சுந்தர பாண்டியன் சிறு வயதிலேயே தன் தாயை இழந்து விட்டான். மாற்றாந்தாயின் கொடுமையான வளர்ப்பினால் அவனுடைய குணமும் நடத்தைகளும் ஓர் இளவரசனுக்குரிய தகுதிக்குப் புறம்பானவையாக அமைந்து வந்தன. அரசியல் ஞானமோ, விவேக சிந்தையோ, போர்க்கலைப் பயிற்சியோ எதுவுமின்றித் தான்தோன்றித்தனமாக வளர்ந்து வந்தான் அவன். இதனால் வெறுப்புற்ற குலசேகரன், தன் இளைய மைந்தன் வீரபாண்டியனுக்கே இளவரசுப் பட்டம் சூட்டினான்.

தனக்குச் சேரவேண்டிய ஆட்சியுரிமைச் சொத்தை அநியாயமாகத் தன் தம்பிக்கு அளித்துத் தனக்குத் துரோகமிழைத்த தந்தையின்மீது அடங்காச் சினம்கொண்டு அரண்மனையைவிட்டு வெளியேறிய சுந்தர பாண்டியன், சில ஆண்டுகளுக்குப் பின் தன்னோடு சில வீரர்களைச் சேர்த்துக்கொண்டுவந்து, தனது தந்தையான குலசேகரனைக் கொலை செய்து, பாண்டிய அரசுக் கட்டிலைக் கைப்பற்றிக்கொண்டான். இளவரசனான வீரபாண்டியன் உயிருக்கு அஞ்சி நாட்டைவிட்டே எங்கோ ஓடிவிட்டான். அவனுடைய அன்னையைச் சிறையிலடைத்துப் பழிதீர்த்துக்கொண்டான் சுந்தரபாண்டியன்.

இதனால் பாண்டிய அரசியலில் ஒரு பெரிய கொந்தளிப்பே ஏற்பட்டுவிட்டது. நாட்டின் ஒற்றுமை குலைந்து



குழப்பமும் கலவரங்களும் மலிந்தன. ஆட்சித் துறையில் எவ்விதப் பயிற்சியும் பெறாத சுந்தரபாண்டியன் தன் மனம் போனபடியெல்லாம் உத்தரவுகளைப் பிறப்பித்து அரசியலில் பல சிக்கல்களை உண்டு பண்ணிக்கொண்டு வந்தான். இதையெல்லாம் ஓரளவுக்கு சரிக்கட்டி, ஆட்சிச் சக்கரம் ஏதோ ஒரு தினுசாக உருண்டுபோய்க் கொண்டிருக்கப் பெரிதும் உதவியாய் நின்றவர் மாவலி வாணாதிராயரேஎனலாம். அவர் குலசேகர பாண்டியனின் ஆட்சிக்காலம் முதலே அமைச்சராய் இருந்து வருபவர், நாட்டு மக்களிடையே மிகுந்த செல்வாக்குப்பெற்றவர். நிர்வாகத்திறமை நிரம்பப்பெற்றவர். ஆயினும் அவரது திறமையெல்லாம் சுந்தரபாண்டியனின் கோமாளித்தனமான உத்தரவுகளால் செல்லாக் காசாகி வந்தன.

இதற்கிடையே, நாட்டைவிட்டு ஓடிப்போன வீரபாண்டியன் சிறிதளவு படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து தன் தமையன் சுந்தர பாண்டியன் மீது போர்தொடுப்பதும், பிறகு அவனது காட்டுத்தனமான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தோற்றோடி மறைவதுமாக இருந்தான். இப்படி இதுவரை ஐந்தாறு யுத்தங்கள் நடந்துவிட்டன. எல்லாம் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு யுத்தங்கள். இதனால் இவ்விருசாரருக்கும் எவ்விதப்பயனும் விளையாமற் போனாலும், நாட்டில் வீணான குழப்பங்களும் பீதியும் நிலவின. இதனைப் பயன்படுத்திக்கொண்டு, ஆங்காங்கே சில சிற்றரசர்கள் தருக்கி நிமிர்ந்து சுயாட்சிப் பிரகடனம் செய்துகொண்டனர். சேரமன்னனும், பாண்டி நாட்டின் சில பகுதிகளைக் கபளீகரம் செய்து கொண்டான். இந்நிலையிலும் அண்ணன் தம்பியிடையே ஒற்றுமை நிலவாமல் ஒருவரையொருவர் விரோதித்துக்கொண்டும், சில்லரைப் போர்கள் நடத்திக் கொண்டுமிருந்தனர்.

ஒரு நூற்றாண்டுக் காலம்வரை மலை உச்சியில் கம்பீரமாகப் பவனி வந்து கொண்டிருந்த பாண்டியப் பேரரசு என்னும் புகழ் மிக்க இரதம், இந்தக் குறுகிய காலக் குழறுபடிகளால் அங்கிருந்து சடசடவெனக் கீழேஉருண்டு விழத்துவங்கிவிட்டது. எந்த விநாடியும் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகலாம் என்ற நிலைமையும் இப்போது ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

இத்துடன் இன்னொரு விஷயமும் நாட்டு மக்களின் மனத்தை வெகுவாகக் கசப்படையச் செய்துவிட்டிருந்தது. அது அமைச்சர் மகள் செங்கனியின் திருமணம் பற்றிய விஷயம்.

செங்கனி அழகின் இலக்கணம்; பிரம்மனின் ஆயிரங்காலத்துக் கலைச் சிருஷ்டியின் வெற்றிச் சின்னம்.

இளமை முதலே இளவரசன் வீரபாண்டியனின் மனத்தைக் கவர்ந்த காதல் ஓவியம். அவளும் அவனிடம் தன் நெஞ்சைப் பறிகொடுத்துவிட்டிருந்தாள். இந்த இளம் பிஞ்சுக் காதலர்களின் உள்ளப் பிணைப்பை அரும்பு நிலையிலேயே அறிந்துணர்ந்த குலசேகரன், தன் இளைய மைந்தனுக்கு அவளையே பட்டமகிஷியாக்கி கொடுத்துவிட முடிவு செய்திருந்தான். அமைச்சர் வாணாதிராயருக்கு இதில்எல்லையற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் இருந்தன. வீரபாண்டியனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டின அடுத்த ஆண்டு அவர்களின் திருமணத்தை நடத்திவைக்க முடிவு கூறியிருந்தான். ஆனால், அதற்குள் அவன் தன்சொந்த மூத்த மகனின் கையாலேயே கொலையுறும்படி நேர்ந்துவிட்டது. இளவரசன் வீரபாண்டியனும் நாட்டை விட்டு ஓடிவிட்டான். இதனால் செங்கனியின் காதல் திருமணம் தடைப்பட்டு நின்றுவிட்டது. மனம் வெறுத்த செங்கனி, ஆடல், பாடல், அறுசுவை உண்டிகளை வெறுத்து ஒரு சந்நியாசினி போலவே நாட்களைக் கழித்து வந்தாள்.

இதற்கிடையேதந்தையைக்கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய சுந்தரபாண்டியன் ஒரு விசித்திர விருப்பம் கொண்டான். அமைச்சர் மகள்செங்கனியைத் தான் மணக்க வேண்டுமென்ற விருப்பம்தான் அது! இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று, செங்கனியின் அளவிடற்கரிய அழகு; மற்றொன்று, தன் தம்பியின் காதலியைத் தான்மணந்து அவனை அவமானப் படுத்தவேண்டும் என்பது!

மன்னனின் இந்த விருப்பத்திற்கு வாணாதிராயர் முதலில் சம்மதம் அளிககவில்லை. தமது மகளின் விருப்பத்திற்கு மாறாகத் தாம் எதுவும் செய்ய இயலாதென மறுத்து வந்தார். முரடனான சுந்தரபாண்டியன் பயமுறுத்தல் செய்து பலாத்காரத்தில் ஈடுபடுவான்போல் தோன்றியதால், சரி என்று தலையசைத்துவிட்டார். செங்கனியோ இந்த மனம் ஒப்பா மணத்தைத் தவிர்க்க மார்க்கமின்றி இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்துக் கொண்டிருந்தாள். திருமண நாளும் நெருங்கிவந்து கொண்டிருந்தது.

இந்நிலையில்தான், எங்கிருந்தோ வந்த வேற்றினத்தானான மாலிக்காபூர் திடீரென ஒரு பெரும் பாறையைத் தூக்கிப் போட்டிருக்கிறான், 'செங்கனியைத் தனக்குக் காணிக்கையாக்கு' என்ற செய்தியின் மூலம்!



செங்கனியைப்பற்றி அறியாத அவனுக்கு அவள்மீது ஆசைமூளக் காரணம் என்ன?

"ஐயா!"

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய் மெள்ள உலாவிக் கொண்டிருந்த அமைச்சர் வாணாதிராயர் சட்டென்று நின்று திரும்பினார். அந்த விசாலமான அறையின் ஒரு பக்கமாக வந்து ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள் செங்கனியின் செவிலித் தாயான கார்த்திகை என்பவள்.

'என்ன சேதி!' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்தார் அமைச்சர்.

"ஐயா, தங்கள் அருமைச் செல்வி இந்த முடிவைத் தங்களிடம் தெரிவிக்கும்படி என்னை அனுப்பினாள். அதாவது, படை திரட்டி வந்திருக்கும் மாலிக் காபூருக்குத் தான் சொந்தமாவதன் மூலம், இந்தப் பாண்டி நாட்டிற்கு நேரவிருக்கும் ஆபத்துத் தவிர்க்கப்படுமானால் அவள் மகிழ்ச்சியுடன் அந்தத் தியாகத்தைச் செய்யத் தயாராய் இருப்பதாகச் சொல்கிறாள்! இனமற இந்த முடிவை நம் மன்னரிடம் அறிவிக்கும்படியும் அவள் தங்களிடம் சொல்லச் சொன்னாள்!" என்றாள் கார்த்திகை பணிவுடன்.

இதைக் கேட்டுப் பேரதிர்ச்சியடைந்தவர் போல் அப்படியே சிலையாக நின்றார் வாணாதிராயர். பிறகு தம்மைத் தாமே தேற்றிக் கொள்வது போல் தமக்குள் மெல்ல முனகிக் கொண்டார்: "ம்...! அவள் இம்முடிவுக்கு வரக் காரணம் என்ன என்பதை நான் அறிவேன். தான் விரும்பிய காதலனை அடைய முடியாமல், தனக்குச் சற்றும் பிடிக்காத ஒருவனை மணப்பதை விட, வேற்றிடத்தான் ஒருவனின் அடிமைப் பொருளாவதே மேல் என்று அவள் முடிவு கட்டியிருக்கிறாள். இனி என்ன செய்வது? இது அவளின் விதியானால் அப்படியே நடக்கட்டும்!"

பாண்டிய மன்னனின் புகழாபரணம் அரண்மனையை நோக்கிப் பிரேத மனிதன் போல் நடந்து சென்றார் அமைச்சர். அவர் தம் மாளிகையை விட்டுப் போன சில விநாடிகளுக்குப் பின், மருத்துவத் துறையில் மகா வல்லவரான மங்கலங்கிழார் என்பவரின் இல்லத்தை நாடி அவசரமாகப் புறப்பட்டுச் சென்றாள் செங்கனி.

குணகடல் நீலப்பேழையைத் திறந்து விரிகதிர் செவ்வரவிந்தம் மலர்ந்தது. சுரி பனி சூழ்ந்த துரியம் அலர்ந்து திரிமுகில் ஒண்ணொளி முத்தம் குவிந்தது. கரிகுழல் படர்ந்து கிடந்த வையம் கனகச் சுடர் புனல் எடுத்துப் புலர்ந்தது.

இந்தக் காவிய எழில் பொங்கும் காலப்போதின் கேந்திரபீடம் போல் விளங்கிய அமைச்சர் வாணாதிராயரின் மாளிகையைச் சார்ந்த நந்தவனத்திலே, சூரியத் தேவனின் பொற்தேரில் பூட்டிய புரவிகளில் ஒன்று எப்படியோ கழன்று கொண்டு கக்ன வெளியைக் கடந்து புவன வெளியை அடைந்து விட்டது போல் ஓடி வந்து நின்றது ஒரு வெண் புரவி.

அப்புரவியின் மீதிருந்து கீழே குதித்து இறங்கிய அழகிய வாலிபன் ஒருவன் செடிகளின் மறைவில் பதுங்கி நின்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அதே சமயம், அங்கிருந்த ஞாழல் மரமொன்றின் அடியில் சோகச்சிலையாய் அமர்ந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்த செங்கனி திடுக்கிட்டு எழுந்து அந்த வாலிபன் நிற்கும் திசை நோக்கி ஓடிவந்தாள்.

சந்தேகமில்லை; அங்கே திருடனைப் போல் வந்து நின்றிருந்தவன், நாடோடியாய்ச் சுற்றித் திரியும் இளவரசன் வீரபாண்டியனே தான்! அவர்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் பிரமித்து நின்றனர்.

காதல் கனல் மணக்கும் குரலில் "செங்கனி...!" என அழைத்துக் கொண்டே அவளை நெருங்கி வந்தான் வீரபாண்டியன்.

"ஹா!...நீங்களா?..." என்று நெஞ்சடைக்கக் கேட்டவாறு பின்னால் நகர்ந்தாள் செங்கனி.

"ஆமாம், கண்ணே! நான்தான். ஏன் இப்படி மிரள மிரளப் பார்க்கிறாய்? என்னை இதற்குள் மறந்துவிட்டாயா என்ன?" என்று கேட்டு மேலும் நெருங்கி வந்தான் வீரபாண்டியன்.

"உங்களை நான் மறக்கவில்லை. ஆனால், நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? என்றாள் செங்கனி விரக்தி படிந்த வேதனைக் குரலில்.

வீரபாண்டியனின் முகம் வெளுத்தது. அவன் அவளை ஏக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்து, "என்ன இப்படிக் கேட்கிறாய் செங்கனி? உன்னைப் பார்ப்பதற்கல்லாமல் வேறு எதற்கு நான் இங்கு வரப்போகிறேன்?" என்று குழறினான்.

"அப்படி என்னைப் பார்ப்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று தான் கேட்கிறேன்!" என்றாள் செங்கனி மீண்டும் அதே அலட்சியக் குரலில்

வெலவெலத்துப் போனான் வீரபாண்டியன். அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஒரு கணத் திணறலுக்குப் பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "செங்கனி! என் மீது இந்த அளவு சினம் காட்டுவது நியாயம்தான். ஆனால், எனது நிலையையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உன்னைக் காதலித்த நான் உன்னை அடையப் பெற இயலாமல், என் விதி என்னை இந்த நாட்டை விட்டே விரட்டி விட்டது. ஆனாலும் நான் மனம் சோராமல் உன்னை எப்படியும் அடையவேண்டுமென்ற ஒரே நோக்குடன் பல முறை நாட்டின் மீது படையெடுத்துவ[illegible]தன், அந்தப் படையெடுப்புக்கு மண்ணாசையோ, இந்நாட்டைக் கட்டியாள வேண்டுமென்ற விருப்பமோ காரணம் அல்ல. [illegible] தந்தையைக் கொன்று, எனக்களித்த அரியாசனத்தைக் கைப்பற்றிக்கொண்ட எனது தமையனை ஒழித்துக்கட்டி அதன்மூலம் உன்னை அடையவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் பலமுறை முயன்றேன் படையெடுப்புகளின் வாயிலாக! ஆனால், அந்த எனது முயற்சிகள் பலனளிக்கவில்லை. அதற்காக இன்னமும் நான் மனம் சோராமல் இருக்கிறேன். அது உனக்குத் தெரியாது. இன்றைக்குத் தெரிந்துகொள்!" என்றான் பரிதாபமாக.

"இன்றைக்கு நான் தெரிந்து கொண்டு என்ன செய்வது? காலம் கடந்து விட்டதே!"

"ஏன் அப்படிச் சொல்கிறாய் செங்கனி? என் அண்ணன் உன்னை மணக்கப் போவதை எண்ணியா இவ்வாறு வெறுத்துப் பேசுகிறாய்?"

"இல்லை; அதையும் காலம்மாற்றிப் போட்டு விட்டது! நான் இப்போது சொல்லும் விஷயமே வேறு!"

"நீ சொல்லாமலே எனக்கு அந்த விஷயம் தெரியும், செங்கனி! ஏனென்றால், அப்படி ஒரு நிலைமையை உண்டு பண்ணியிருப்பவனே நான்தான்!"

செங்கனி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று நடுக்கத்துடன் கேட்டாள்.

வீரபாண்டியன் கலகலவெனச்சிரித்துக்கொண்டே சொன்னான்: "ஆமாம் செங்கனி! உன்னை அடைவதற்காகவே நான் அப்படி ஒரு சூழ்ச்சி செய்திருக்கிறேன்! என் அண்ணன் சுந்தரபாண்டியன் உனக்கு மாலையிடாமல் தடுப்பதற்காகச் செய்த சூழ்ச்சி அது! விளங்கவில்லையா? சொல்கிறேன் கேள்: டில்லி பாதுஷா அலாவுடீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூர் என்பவனை நான்தான் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வரும்படி அழைப்பு அனுப்பினேன்! என் ஜன்ம எதிரியான சுந்தரபாண்டியனை ஒழிப்பதற்கு! இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. தண்டெடுத்து வந்திருக்கும் மாலிக்காபூருக்கு இந்தப் பாண்டி நாட்டைக் கட்டியாள வேண்டுமென்ற ஆசை சிறிதும் கிடையாது. அவனுக்கு வேண்டியது பொன்னும், முத்தும், வைரமும்தான். எனவே, இவையும் இவற்றுடன் சில நூறு கரிபரிகளும் காணிக்கையாக வேண்டும் என அவன் கைப்படவே சுந்தரபாண்டியனுக்கு ஓர் ஓலை எழுதி அனுப்பி வைத்தேன்! அதிலே பாண்டிய மன்னன் மணக்கவிருக்கும் உன்னையும் கேட்டு எழுதச் செய்தேன்! உண்மையில் அந்த மாலிக்காபூருக்கு நீ தேவைப்பட்டவள் அல்ல. அவனுக்கு நான் செய்த இவ்வளவு பெரிய உதவிக்காக அவன் எனக்கு இந்தச் சன்மானம் வழங்க ஒப்புக்கொண்டான்! அதாவது, உன்னைச் சுந்தரபாண்டியனிடமிருந்து பெற்று என்னிடம் அளிக்கப்போகிறான்! இப்போது தெரிந்துகொண்டாயா, செங்கனி, உன்னை அடைவதற்காக நான் எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறேன் என்று?"

இந்த விவரங்களைக் கேட்டுத் துடித்துப் பதறி விட்டாள் செங்கனி. கண்

களில் அனல் பறக்க அவனை விழித்துப்பார்த்து, "துரோகி! பழிகாரா! உன்னுடைய காமப்பசிக்காக இந்தப்பழம் பெரும் பாண்டிய நாட்டையே காட்டிக் கொடுத்து விட்டாயே, அற்பனே! கேவலம், ஒரு பெண்ணுக்காக, புனிதமான என் காதலின் பேரால் இவ்வளவு பெரிய இழிசெயலைச் செய்யத்துணிந்த கோழையான உன் முகத்தில் விழிப்பதே பாவம்! போ! என்முன் நிற்காதே! போய் விடு!" என்று சிறுத்தையெனச் சீறினுள்.

வீரபாண்டியன் அலட்சியமாக அவளை உற்றுப் பார்த்தான். பார்த்துக் கொண்டே அவளை நோக்கிச் சென்றுன்.

செங்கனியின் முகம் ஏன் இப்படி நீலம் பாய்ந்துகாணப் படுகிறது? அவள் முகம் மட்டுமா? இல்லை; அவள் மேனி முழுவதுமே ஒரே நீல நிறமாகத் தெரிகிறதே!...சந்தனம் போல் இருக்கும் அவள் உடலிலிருந்து ஒருவித கனல் மணம் தெறிக்கிறதே!

"போ! போய்விடு! என்னைத் தொடாதே! தொட்டால் சுட்டெரிந்து போவாய்! போய் விடு!" என்று அலறிக் கொண்டே பின்னுல்நகர்ந்தாள் செங்கனி.

அவளுடைய அலறலைச் சிறிதும் பொருட்படுத்தாத வீரபாண்டியன் அவளைத் தாவிப்பற்றி அணைத்து முகத்தோடு முகம் சேர்த்து அதரபானம் செய்தான்.

அடுத்த கணம், சர்ப்பத்தால் தீண்டப்பட்டவன் போல் பெருங் குரலெடுத்துக் கூவிக் கொண்டே அடியற்ற மரம் போல் மண்ணில் சாய்ந்தான் வீர பாண்டியன்.

இதைக் கண்டு பேயெனச் சிரித்தாள் செங்கனி.

"விஷம்! விஷ கன்னி! மருத்துவர் மங்கலங்கிழார் மகா கெட்டிக்காரர்! அவர் சிறுகச் சிறுக என் உடலில் விஷத்தை ஏற்றி என்னை ஒரு நச்சுப் பெண்ணுக மாற்றிய விந்தையை உலகம் அறியாது! ஆனுல் என் காதலன் வீர பாண்டியன் இப்போது அதைஅறிந்து கொண்டான்! கொள்ளையிட்டுப் போக வந்த மாலிக் காபூரை நமனுலகுக்கு அனுப்ப நான் செய்தசூழ்ச்சி என் காதலனையே முதற் பலி கொண்டு விட்டது! அவன் ஒழிய வேண்டியதுதான்! ஒழியட்டும்!"

அந்த நந்தவனமே அதிரும்படி அலறிச் சிரித்தாள் செங்கனி!

அதே சமயம், அவளை மாலிக் காபூரிடம் அழைத்துப் போவதற்கென அரண்மனையிலிருந்து அனுப்பப்பட்டமுத்துச்சிவிகையொன்று தொலைவில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது!


எமது மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்




MALLIKA BATTERY SERVICE

No. 4-C. Mowbraiys Road,

ROYAPETTAH MADRAS-14.

The Dependable House

For Automobile Batteries

For all Cars and Trucks






இயற்கையாகவும், மிக நேர்த்தியாகவும் மை தீட்ட இந்தகாஸ்மரட்டிக் பென்சில் ஸ்டுடியோக்களில் உள்ள ஒப்பனைசெய்பவர்களுக்கு முக்கியம்

தயாரிப்பாளர்கள்:

தி மதராஸ் பென்ஸில் பாக்டரி, மதராஸ்-21



# சீவக சிந்தாமணி

[ராதா]

—*—

காதலும் வீரமும்தான் தமிழரது வாழ்வு என்பதை விளக்குவது போல சமண சமயத் துறவியான திருத்தக்க தேவர் இயற்றிய இந்த மணநூல், காமனும் தோற்கும் கட்டழகனான சீவகன் கனிவாய்ப் பெண்ணரசிகள் எண்மரை மணந்த கதையை காமச்சுவையும், கற்கண்டின் இனிமையும் கூடிய வகையில் விளக்கும் காவியப் புதையலாகும். பிற்காலப் புலவரான கல்வியிற் பெரிய கம்பரது காவியத்திற்கே வழிகாட்டியாக அமையும் புகழ்படைத்த இந்தப் பைந்தமிழ்க் காப்பியத்தைப் பொறித்தால் பொன்னேட்டில் பொறிக்கவேண்டும் என்பதற்காகத்தான் அடுத்துவரும் பக்கங்களிலே பொன்நிறத்தில் அழகோவியங்களாக்கி இருக்கிறோம்.

நாடாளவேண்டிய சச்சந்தன் நங்கைதந்த காதற் கடலாழ்ந்து விட்டதால், பாராளும் பொறுப்பேற்றுக் கொண்ட கட்டியங்காரன் படைநடத்திவந்து அவனைக் கொன்றதும்—நிறைமாதமாக இருந்த விசையை மயிற்பொறியேறிச் சென்று நடுக்காட்டில் மகப்பேறு உற்றதும்—பெற்ற மகனையே விசையைவிட்டுப்பிரிய பெருங்குடி வணிகனான கந்துக்கடன் அவனை எடுத்து வளர்த்ததும்—குழவியாக இருந்த அவன் வாளும் வேலும் ஏந்தவல்ல குமரனாக மாறியதும் - தன் தந்தையைக் கொன்ற கட்டியங்காரனைப் பழிவாங்கக் காத்திருந்ததும் நடந்த கதை-இனி அவன், பழுமரம் தேடும் பறவை போன்று பவளவாய்ப் பைந்தொடி மகளிரை நாடிச் சென்ற கதையைக் காண்போம்.








## காந்தருவதத்தை

வலம்புரி முத்தோடு வைத்து எண்ணப்பட வேண்டிய இந்த வஞ்சி "இசையில் தன்னை வெல்வாருக்கு கடைந்தெடுத்தத் தந்தச் சிலை போன்ற தன்மேனி சொந்தம்" என்று யானைமீது முரசறைந்து நின்றாள். வானத்து மின்னலே இரண்டு குடங்கொண்டு வையத்தில் வந்து பிறந்தது போன்ற இந்த வடிவழகியின் மென்தோள் வேது பெற விழைந்த சீவகன், "பாவை பாடினளா! அல்லது பாவாணர் போற்றும் வீணை பாடியதா?" என்று காண்பவர் வியக்கும் வண்ணம் பாட வல்ல காந்தருவதத்தையையே இசையில் வென்று, குங்குமமும் சந்தனமும் கொண்டு அவளது இளங்கொங்கை மீது தொய்யில் எழுதும் உரிமை பெற்றான்.

## குணமாலை

குணமாலை என்ற பெயர்படைத்த இந்த மயிலனையாள் சோலை நடந்தால், மயில் இவளைத் தன்னுடைய பேடை என்றே அணையச் சென்று பின்னர் வெட்கித் தலைகுனியும். காணும் இளைஞர்களைக் காமக் கடல் வீழ்ந்து தவிக்கச் செய்யும் வேய்த் தோளும் வேல் உண் கண்ணும் படைத்த இந்தப் பாவை நல்லாள் ஒருநாள் சிவிகையில் தன் தோழியோடு வந்தபோது எதிரே மதம் பிடித்த வேழம் ஒன்று ஓடிவந்தது. பல்லக்குத் தூக்கி வந்தவர்கள் பாவையரைத் தனிவழி விட்டுவிட்டுத் தம் உயிர் பிழைக்க ஓடினர். இந்நிலையில் அரிமா என அங்கு வந்த சீவகன் அந்தக் கரிமாவின்மீது பாய்ந்து அதனுடைய மதம் அடக்கினான். பின்னர் யானையின் மத்தகத்தைப் போன்ற எழில் மார்பும், அதனுடைய துதிக்கையைப் போன்ற மென் குறங்கும் படைத்த அந்தப் பாவை நல்லாளை மணந்து அவனது காதல் தாபத்தையும் அடக்கி நின்றான்.





## பதுமை

கட்டியங்காரனது பட்டத்து யானையை வருத்தியதால் சீவகனை வடக்கயிற்றால் பிணித்து வரும்படி அவன் கட்டளை இட்டான். ஆனல் சீவகனே அவன் வீசிய வலைப் படாது தப்பி, வேற்று நாடு ஒன்றில் இந்தக் கட்டழகி வீசிய காதல் வலைப்பட்டு விட்டான். சோலையில் பூப் பறிக்கப்போன இடத்தில் பாம்பு தீண்ட புயலில் சிக்கிய கொடியாகத் துவண்டு விழுந்த இவளைத் தன் திறமையால் காத்த சீவகன், பின்னர் இவள் தோள் தழுவித் துஞ்சும் பள்ளி அறைச் சுகமும் பெற்ருன். காதல் புனலாடிய பின்னர் அவள் கண்ணுறங்கிய நேரம், தேன் உண்ட வண்டு புதுமலரை நாடுவதுபோல இவனும் இந்தப் பதுமையை மறந்தான். வேறு பறவையை நாடிச்சென்ருன்.

## கேமசரி

கேமமாபுரத்தில் மலர்ந்தும் முகராத மலராக-படைத்தும் யாரும் புசியாத விருந்தாக பருவம் அடைந்தும் பயனற்ற ஒருத்தியாக பெண்மைக்கு இன்றியமையாத நாணம் அற்றவளாக இந்த கேமசரி வாழ்ந்தாள். ஆடவரைக் கண்டால் இவள் தலைதாழ்த்திக்கூட அறியாள். யாருக்கும் அடங்காத மதக்களிறாக வாழ்ந்த இவளுக்கே மன்மதனைப் போன்ற சீவகனைக் கண்டதும் எங்கிருந்தோ நாணம் வந்தது. முதன் முறையாக அவளுடைய தலை தாழ்ந்தது. பெண்மைப் பகுதிகள் பூரித்து எழுந்தன. அதேபோன்று இவளைக் கண்டதுமே காமன் கணைபட்டுத் துடித்த சீவகனே இதுவரை தான் காணாத இன்பந்தரவல்ல வல்லிரும்பு போல்வாள் இவள் என்று அவளையும் மணந்துகொண்டான்.





## கனகமாலை

ஒருமுறை வேற்று நாடு ஒன்றின் சோலையில் பழமொன்றை வீழ்த்த பலமுறை முயன்றும் முடியாது தவித்து நின்ற இளவரசன் ஒருவனைக் கண்ட சீவகன் தன் வில்லெடுத்தான். மறுகணமே அந்தக் கனி அவனுடைய காலடி சேர்ந்து நின்றது. இதனைக் கண்ட மன்னன் மகன் இவனைத் தன் கல்விக் கண் திறக்கவந்த ஆசான் எனக் கொண்டான். ஆனால் சென்ற இடத்தில் எல்லாம் கட்டழகு வல்லிகளுக்குக் காமப் போதை தருவதையே வாடிக்கையாகக் கொண்ட இந்த வாலிபனோ தன் மாணவனின் தமக்கையான மன்னன் மகளுக்கே புது வகையான மலர்ச் செண்டு ஒன்றை அவளுடைய தோழி மூலம் அனுப்பி, தன்மீது காதல் கொள்ளச் செய்தான். இரு மனமும் ஒருமனமாவதற்காகத் திருமணமும் செய்து கொண்டான்.

## விமலை

ஒருநாள் இராசமாபுரத்து சோலை வழியே கட்டிளங் காளையாக வீரநடை நடந்து கொண்டிருந்த சீவகன் தூரத்தே வானார் மதிமுகத்த வாளோ, வடுப்பிளவோ தானார் கழுநீரோ, நீலமோ, தாமரையோ என்று வியப்புக் கடலில் ஆழ்த்தவல்ல கண்ணழகி விமலை தன்னுடைய செப்புக் குடமசைய, செங்கைத் தளிர் நடுங்க, பல்காக நிறைத்த மேகலை சிலம்ப பந்தடித்து நின்றாள். இந்நிலையில் அவளது கை விட்டோடிய பந்து சீவகனின் கால் பட்டு நின்றது. பந்தெடுக்கப் பாய்ந்தோடி வந்த விமலை அவன்மீது காதல் மிக்கூர நின்றாள். அவனும் இந்த வையத்தழகியின் தோள் தழுவத் துடித்தான். இவ்வாறு ஒருவரை ஒருவர் மாறி இதயம் புக்கவர்கள், பின்னர் மணமும் முடித்தும் நின்றனர்.





## சுரமஞ்சரி


சீவகன் இவ்வாறு தனக்கென்று ஒரு மனைத் தோட்டத்தையே—மற்றுமுக மடவார்தம் எழிற் கூட்டத்தையே தேடிக் கொண்டு காதல் மன்னனாக உலகு சுற்றி வருகையில், ஆண்வாடையே கூடாதென்ற அழகியான இந்தச் சுரமஞ்சரி கன்னிமாடம் ஒன்றிலே வாழ்ந்துவரும் செய்தியையும், அவளது மேனி வனப்பினையும் தன் தோழன் ஒருவனின் மூலமாகக் கேள்விப்பட்டான். உடனே கனிந்த பழமாக மாறி அந்தக் கன்னியை அடையச் சென்றான். அங்கு இரவு வந்ததும் கிழவனாக வந்தவன், உணர்ச்சி மூட்டும் பண்பாடி அந்தப் பாவையின் நெஞ்சம் கவர்ந்ததோடு கட்டழகனாக மாறி அவளது கன்னி கழித்தும் நின்றான்.

## இலக்கணை

இதுவரை வேற்றுப் பெண்களையே மணந்து கொண்டு வந்த சீவகன் இறுதியில் தனக்கு இன்பத்தின் எல்லை காட்டவல்ல தன் மாமன் மகள் இலக்கணையையும் விட்டானில்லை. எழுதும் 'இயந்திரப் பன்றியை எய்பவர் தோளில்தான்' இந்நங்கை இனி தொத்துவாள்' என்று தன் மாமன் சுயம்வரம் நடத்தியபோது யாராலும் வீழ்த்த முடியாத திரிபன்றி வீழ்த்தி இந்தத் திங்கள் முகத்தழகியின் கரம் பிடித்து, அவளது பெண்மை நலன் உண்ட வீர விஜயனும் தோற்கும் காமவேள் இவன்.



## தையல் கடல்




இவ்வாறு பவழ வாய்ப் பரவை அல்குற் பாவையர் எண்மரை மணந்து ஒருத்தி பாட, ஒருத்தி ஆட, ஒருத்தி மருங்கணைய, ஒருத்தி மார்பகம் தழுவ கன்னிக் கடல் நடுவே காமக் கலம் செலுத்தி இதுவரை யாரும் காணாத இன்பமெல்லாம் கண்டு கொண்டிருந்த இவனைக் 'காம திலகம்' என்றே திருத்தக்கதேவர் குறிக்கின்றார். நாமும் எண் குதிரைத் தேர் ஏறி வரும் ஆதவனைப் போல இந்த அழகரசிகள் எண்மரையும் பூட்டிய காதல் தேர் ஏறி வரும் இவனையும் குமுத மலர் போன்ற குமரிகள் மகிழ வரும் காதற் கதிரவன் என்றே போற்றுகின்றோம்.

களத்தில் புலியானாரும் சாதிக்க இயலாததை—தையல் கடல் கடக்கும் காரியத்தைச் சாதித்த பெருவீரன் என்கின்றோம்.

வாழ்க இவனுடைய புகழ்!
வளர்க சிந்தாமணியின் மணம்!

# பிறந்த நாள் பரிசு



எஸ்.ஆர்

மணி எட்டு இருக்கும். அடையாற்றுக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள அந்த 'நீல மாளிகை" காலைக் கதிரவனின் ஒளிபட்டுப் பளபளத்துக் கொண்டிருந்தது வழக்கமாக ஆறு மணிக்கெல்லாம் எழுந்து விடும் திரை அழகி சித்திராதேவி அன்று மணி எட்டாகியும் இன்னும் ஏனே எழுந்திருக்கவில்லை. அவளை ஆறுமணி 'கால்சிட்'டிற்காக அழைத்துப்போக வந்திருந்த புரொடக்ஷன் மேனேஜர் ஒருவர் முன் ஹாலில் குட்டி போட்ட பூனை போன்று குறுக்கும் நெடுக்குமாக நடந்து தவித்துக் கொண்டிருந்தார்.

"பாப்பாவுக்கு நேற்று பிறந்த நாள் இல்லே! அந்த அசதியிலேதான் இன்னும் எழுந்திருக்கல்லே' என்று வெற்றிலை பாக்கு போட்டுக் குதப்பிய தன் காவிப்பல் வெளித்தெரிய சித்திராதேவியின் தாயார், அந்தப் பக்கம் வரும் பொழுதெல்லால் புரொடக்ஷன் மேனேஜருக்கு சமாதானம்சொல்லிக்கொண்டிருந்தார். அவர் அப்படிச்சொல்லும் பொழுது "அதனுல் என்ன! பரவாயில்லை, அம்மா எழுந்திருக்கும் பொழுதே எழுந்திருக்கட்டும்" என்று புரொடக்ஷன் மேனேஜரின் இதழ்கள் பேசினவே தவிர, உள்ளம் மட்டும் இந்நேரம் எவ்வளவு பணம் 'கால்சிட்'டிற்கு வீணுகியிருக்கும் என்பதையே கணக்கிட்டுக் கொண்டிருந்தது.

மணி ஒன்பது அடித்தும் சித்திராதேவி எழுந்திருக்கும் அறிகுறி கூடக் காணுமற் போகவே பொறுமை இழந்த புரொடக்ஷன் மேனேஜர் முதல்முறையாக சித்திராதேவியின் தாயாரான கனகவல்லி அம்மையாரைச் சற்று முறைத்துப் பார்த்தார். அப்போது அங்கு வந்த கனகவல்லி அம்மையின் தம்பியும், சித்திராவின் மேனேஜருமான பெரிய சாமியும் "பாப்பா இன்னுமா தூங்குது! என்ன அக்கா இது! மணி ஒன்பது ஆச்சு! போய் பார் அக்கா!" என்று கூறி விட்டு நேற்று பரிசாக வந்து குவிந்து கிடந்த பொருள்களை கணக்கெடுக்கப் போய் விட்டார்.

* * *

தன்னுடைய மகளின் தனியறைக்கு கையில் சூடான ஓவலுடன் சென்ற கனகவல்லி அம்மை, மறுவிநாடியே 'கிரீச்' சென்று கூவினுர். பயத்தால் அவருடைய முகம் வெளிறியது. கையில் இருந்த கோப்பை கீழே விழுந்து சிதறியது. கனகவல்லி அம்மையார் போட்ட கூச்சலைக் கேட்டு அங்கு ஓடி வந்த பெரியசாமியும், புரொடக்ஷன் மேனேஜரும் நேற்றுவரை அன்றலர்ந்த ரோஜாவாக இருந்த சித்திராதேவி இன்று பிணமாகக்கிடப்பதைக் கண்டு திகைத்தனர். அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் அழகரசி சித்திராவை வைத்துப் படம் எடுத்துக்கொண்டிருந்த படமுதலாளிகள் எல்லாம் ஆளுக்கு ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டு ஓடி வந்தனர். அவர்களுக்குப் பின்னுலேயே போலீஸ் துப்பறியும் இன்ஸ்பெக்டர்மதிவாணனும் வந்து சேர்ந்தார்.

அவர் வந்ததுமே வாசலிலே அவரை மிக விநயமாக வரவேற்ற பெரியசாமி மாடி அறைக்கு அழைத்துச்சென்றுர். அங்கு தன்னுடைய பட்டுப்போன்ற கன்னங்களும், பவளம் போன்ற இதழ்களும் நீலம் பூத்துக்கிடக்க தமிழகத்து இளைஞர் பலரின் கற்பனைக் காதலியான திரை அழகி தன் மேலாடை கலைந்து கிடக்கப் படுக்கையில் அலங்கோலமாகக் கிடந்தாள். அவளை யார் கொன்றது. எப்படி அவள் இறந்தாள் என்பது யாருக்கும் தெரியாத புதிராக இருந்தது. நாங்கள் வரும் வரையில் பிணத்தின் அருகில் ஒரு துரும்புகூட செல்லக்கூடாது என்று மதிவாணன் பெரியசாமிக்கு தொலை பேசியிலே மிகக் கடுமையாக எச்சரிக்கை செய்திருந்ததால் கலைந்து கிடந்த அவளுடைய மேலாடையைக் கூட யாரும் சரி செய்து விடவில்லை.

அறையினுள் நுழைந்ததுமே தன் துப்பறியும் கழுகுக் கண்களை ஒவ்வொருபகுதியிலும் நன்ருக ஓடவிட்ட மதிவாணன் அவளுடைய காலருகே ஒரு அழகிய யானைத்தந்தத்தால் ஆன பெட்டி தரையிலே திறந்து கிடப்பதைக் கண்டார். இதுவரை அந்த அறைக்கு எத்தனையோ பேர்கள் வந்தார்கள். அவர்களில் பலருடைய கண்களில் அந்த தந்தப் பெட்டி பட்டது. என்ருலும் அவர்களில் யாரும் சிந்திக்காததை மதிவாணன் சிந்தித்தார். இந்தக் கொலைக்கும் அந்தப் பெட்டிக்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும் என்று கருதிய அவர் அருகில் நெருங்கி தன்னுடைய கைக்குட்டையால் அதன் மீது படிந்துள்ள கைரேகைகள்கலைந்துவிடாது மிக நுணுக்கமாக எடுத்துப்பார்த்துவிட்டுபெரியசாமியின் பக்கம் திரும்பி" இந்தப் பெட்டி இங்கு எப்படி வந்தது என்றுதெரியுமா? என்ருர்.

அதற்கு பெரியசாமி பதில்சொல்வதற்குள்ளேயே முந்திக் கொண்ட கனகவல்லி அம்மை, நேத்து பாப்பாவுக்கு வந்த பிறந்த நாள் பரிசுகளிலே இதுவும் ஒன்னு, அத்தனை பரிசுகள் வந்து குவிந்தப்போகூட இது ஒண்ணைத்தான் பாப்பா ஆவலா எடுத்துக்கிட்டு படுக்கப்போச்சு" என்ருர்.

இந்த நேரத்தில் சித்திராதேவியை பரிசோதித்துக் கொண்டிருந்த அரசாங்க மருத்துவர் 'சித்திராதேவியை கருநாகம் தீண்டி மரணம் அடைந்திருக்கிருர். பாம்பு கடித்த இடம் அவருடைய தோள்பட்டையில் இருக்கிறது என்று மதிவாணனின் காதைக்கடித்தார். மறுகணமே முகம் கருத்துப் போன மதிவாணன் "இது பிறந்த நாள் பரிசு இல்லேம்மா! இதுதான் அவர்களுக்கு வந்த மரண நாள்பரிசு, யாரோ ஒருவர் இந்தப் பெட்டியில் கருநாகம் ஒன்றை அவருக்கு பிறந்த நாள் பரிசாக அனுப்பி வைத்திருக்கிருர். நேற்று விழா முடிந்ததும் சித்திராதேவி இந்தப் பரிசை எடுத்துக்கொண்டு வந்து தனியாக அதைத் திறந்த பொழுது அதற்குள் அடக்கி வைக்கப்பட்ட கருநாகம் சீறிப்பாய்ந்து அவருடைய தோளில்தீண்டிவிட்டு மறைந்து விட்டது" என்று நடிகையின் மரணத்திற்கான காரணத்தை விளக்கினுர். பின்னர்

"தந்தப் பேழையை யார் பரிசாகத் தந்தது என்று உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று மதிவாணன் கேட்டபொழுது அந்த வீட்டில் இருந்த யாருக்குமே சரியாக பதில் சொல்லத் தெரியவில்லை. கைரேகை நிபுணர்அந்தப்பேழையை ஆராய்ந்து பார்த்தபொழுது அதில் மூன்று வெவ்வேறு வகையான ரேகைகள் இருக்கின்றன என்பதைக் கண்டார். அதில் ஒன்று சித்திராதேவியினுடையது என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட மதிவாணன், மற்றஇருவரது ரேகைகளையும் யாருடையது என்று கண்டு பிடித்து விட்டால் குற்றவாளிகளை எளிதில் பிடித்து விடலாம் என்று ஆறுதல் அடைந்தார். முதலில் சித்திராதேவியின் பிணத்தை மேற்கொண்டு வைத்திய பரிசோதனைக்காக அனுப்பி விட்டு மதிவாணன் தன்னுடைய புலன் விசாரணையைத் தொடர்ந்தார்.

"நேற்று சித்திராதேவியை கடைசியாகப் பார்க்க வந்தவர்கள் யார் என்று தெரியுமா?"

"நேற்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு இங்கு பிறந்த நாள் விருந்து நடந்தது. திரையுலகில் சம்மந்தப்பட்டுள்ள அனைவரும் இங்கு வந்திருந்தார்கள்."

"நான் அதைக் கேட்கவில்லை. நேற்று விருந்து முடிந்ததும் கடைசியாக விடைபெற்றுக்கொண்டு போனவர்கள் யார் என்று தெரியுமா ?"

"நேற்று கடைசியாக சித்திராவை பார்த்து விட்டுப் போனவர்கள் இருவர்தான். ஒருவர்முன்னணி நடிகரும் சித்திராதேவிக்கு ஏற்ற ஜோடி என்று பொதுமக்களால் ஏகமனதாகப் பாராட்டப்பட்டவருமான மோகன்குமார். மற்ருருவர் மதுரையில் இருந்து வந்திருந்த சித்திராதேவியின் அத்தைமகனும் இப்போதுதான் திரையுலகில் புகழ் வாய்ந்த வசனகர்த்தாவாக மாறிக்கொண்டு வருவோருமான கலைத்தாசன்."

"இவர்கள் இருவரும் விடை பெற்றுக்கொண்டு போகும் போது மணி என்ன இருக்கும்."

'பதிஞேரு மணிக்குமேல் ஆகிவிட்டதால் மோகன்குமாரே கலைத்தாசனையும் தன்னுடைய காரில் ஏற்றிக்கொண்டு ஓட்டலில் விட்டுவிடுவதாக சென்ருர்."

"அவர் எந்த ஓட்டலில் தங்கியிருக்கிருர் என்பது தங்களுக்குத் தெரியுமா ?

"மதுரையில் இருந்து வந்த கலைத்தாசனுக்கு சித்திராவின் விருப்பப்படி நான் தானே ஓட்டல் 'நியூயார்க்'கில் ரூம் பிடித்துக் கொடுத்தேன்"

தனக்கு வேண்டிய விவரங்களை இவ்வாறு பெரியசாமி நெட்டுருசெய்து ஒப்பித்தது போன்று கூறியவற்றில் இருந்து சேகரித்துக் கொண்ட மதிவாணன் மறு விஞடியே தன் ஜீப்பை எடுத்துக் கொண்டு ஓட்டல் நியூயார்க்கிற்கு செல்லக் கிளம்பினுர்.

அந்த நேரத்தில் மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்த ஒரு 'பிளைமவுத்' போலீஸ் ஜீப்பை இடித்துத் தள்ளி விடுவது போல வந்து நின்றது. அதில் இருந்து குதித்த மோகன்குமார் பெரியசாமியிடம் பதறி ஓடிப்போய் 'பாவி இப்படிச் செய்துவிட்டானே !' பரிசு என்று பாம்பைத் தந்துவிட்டானே பாதகன்! " என்று துடித்தான்.

ஜீப்பில் உட்கார்ந்து கொண்டிருந்த மதிவாணனின் காதில் இது விழுந்த உடனேயே கீழே இறங்கி வந்த அவர் 'பரிசு தந்தது யார் என்று தங்களுக்குத் தெரியுமா ?" என்ருர்.

"ஏன் தெரியாமல்? அந்த துரோகி கலைத்தாசன் பரிசைத் தந்தபொழுது நானும்தானே கூட இருந்தேன். அப்போது மட்டும் இது தெரிந்திருந்தால் இங்கேயே அவன் கழுத்தை நெறித்துப் போட்டிருப்பேன்."

"கழுத்தை நீங்களே நெறித்துவிட்டால் பின்னல் நாங்கள் எதற்கு?" என்று விளையாட்டாகக் கேட்ட மதிவாணன், மறு விஞடியே தன்னுடைய ஜீப்பில் ஏறிக் கொண்டு ஓட்டல் நியூயார்க்கை நோக்கி விரைந்தார். அங்கு கலைத்தாசன் தங்கியிருக்கும் அறை எது என்று ஓட்டல் வரவேற்பாளரிடம் இருந்து தெரிந்து கொண்ட மதிவாணன், மாடிப்படி ஏறிச் சென்று ஐந்தாம் நம்பர் அறையைத் திறந்தார், அங்கு யார் கொலையாளி என்று இவர் தேடிவந்தாரோ அந்தக் கலைத்தாசனே கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.

விளக்கு வெளிச்சத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த நிலையிலேயே பார்ப்பதற்கு மிக அழகாகக் காணப்பட்ட கலைத்தாசன் பிணமாகக் கிடந்தார். அவர் எழுதி வைத்துள்ள கடிதம் ஒன்று மின்சார விசிறியின் வேகத்தில் 'என்னைப் பார்! என்னைப் பார்' என்பதுபோல படபடத்துக் கொண்டிருந்தது. கலைத்தாசனை ஒரு பயங்கரவாதியாகக் கற்பனை செய்து கொண்டிருந்த மதிவாணன், மிக எச்சரிக்கையுடனேயே கதவைத் திறந்தார். கொலை செய்யப்பட்டது போல நடித்து தான் அருகில் சென்றதும் கலைத்தாசன் துப்பாக்கி எடுத்துக் கொண்டால் என்ன செய்வது என்று ஒவ்வொரு அடியாகவே முன்னேறி அவர் அருகில் சென்ருர். ஆனுல் இவர் எதிர்பார்த்ததற்கு மாருக உண்மையிலேயே கலைத்தாசன் மாண்டுகிடக்கிருர் என்பதை மேஜைமீது எழுதி வைக்கப்பட்டிருந்த கடிதம் எடுத்துக் காட்டியது!

"என் தாய் நாடே!

வந்தவர்களுக்கெல்லாம் வாழ்வளித்த தமிழ் நாடே! உன்னை விட்டுப் பிரிகிறேன். எந்த மண்ணில் பிறந்தேனே அந்த மண்ணிற்கே பலியாகப் போகிறேன். இந்தக் கோப்பையில் உள்ள விஷம் இன்னும் சிறிது நேரத்தில் சாக்ரடீஸைப் போலவே என்னுடைய வாழ்வையும் முடித்து விடப் போகிறது. அதற்குள் என் இறுதிவேண்டுகோளை—கடைசி எண்ணத்தை உன்னிடம் சொல்லிவிட்டே சாகிறேன்.

நான் திரை அழகி ஒருவளைக் காதலித்தேன். அவளும் என்னைக் காத



லிப்பதாகத்தான் நினைத்தேன். என்னோடு அவள் பேசும் பொழுதெல்லாம் "வையத்திற்கு ஒரே ஒரு நிலவு போல என் வாழ்விற்கு நீங்கள் ஒருவர்தான் அத்தான்!" என்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள். நானும் அவளை என் நெஞ்சத்தில் வைத்தே பூசித்தேன். ஆனால் இன்றுதான் அவள் என்னைக் காதலித்தது எல்லாம் வெறும் நடிப்பு என்று தெரிந்தது. எனக்காகவே வாழ்வதாகக் கூறும் அவள் என் எதிரிலேயே வேறு ஒருவனைக் கட்டி அணைத்ததை இந்தப் பாழும் கண்களாலேயே கண்டேன்.

என்னை வஞ்சித்த அவளுக்கு, பரிசு என்று பாம்புப் பெட்டி ஒன்றைத் தந்து பழி தீர்த்துக் கொண்டேன்.

எனக்கு இந்த உலகம் வெறுத்து விட்டது. இதுவரை யாருக்காக நான் வாழ்ந்தேனோ அவளே துரோகம் செய்துவிட்ட பிறகு இனி நான் வாழ விரும்பவில்லை. இதோ இத்தக் கோப்பையில் உள்ள விஷம் என்னை அழைக்கிறது! விடைகொடுங்கள் எனக்கு...'

சினிமா வசனம் போன்று இருந்த இதைப் படித்ததும் எல்லோரும் சித்திராதேவியைக் கொலை செய்து விட்டு, கலைத்தாசன் விஷம் குடித்து மாண்டு விட்டார், என்று எளிதாக முடிவு கட்டி விட்டார்கள், ஆனால் மதிவாணனின் துப்பறியும் மூளை மட்டும் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும் என்று எண்ணியது. ஏன் என்றால் இறந்து கிடந்த கலைத்தாசனின்முகத்திலே பயத்தின் ரேகைகள் நன்றாகப் படிந்திருந்தன. அவர் விஷம் குடித்த கோப்பையின் மீதும் கடிதத்தின் மீதும் படிந்திருந்த கைரேகைகள் கலைத்தாசனின்கைரேகைகளுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. எனவே இந்த இரட்டைக்கொலையையும் யாரோ ஒருவர் திட்டமிட்டுத் தான் செய்திருக்க வேண்டும். என்று கருதிய மதிவாணன் மேலும் ஏதாவது துப்பு கிடைக்கிறதா என்று கலைத்தாசனின் பெட்டிகளைக் குடைந்தார். அவர் எதிர்பார்த்ததுபோன்றே எழுத்தாளரான கலைத்தாசன் ஒழுங்காக டைரி எழுதி வைத்திருந்தார்; அதில் எழுதப்பட்டிருந்த ஒவ்வொரு வரியும் சித்திராதேவியிடம் அவர் கொண்டிருந்த காதலை விளக்கும் இன்பக் களஞ்சியங்களாகவே இருந்தன. அதைப் போன்று அவரது பெட்டியிலே கிடந்த சித்திராதேவி தன் கைப்படவே எழுதியிருந்த காதல் கடிதங்களும் காதல் இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியங்களாகவே திகழ்ந்தன.

கொலை நடந்த முதல் நாள் வரையிலும் கூட கலைத்தாசனின் டைரியில் சித்திராதேவியைப் பற்றி சிறப்பாகவேதான் எழுதியிருந்தது. கடிதத்தில்அவளைத் துரோகிஎன்றுவெறுத்து ஒதுக்கிய அதே கலைத்தாசன் டைரியிலே அவள் தன் காதல் தெய்வம் என்று போற்றியிருந்தான். முதலில் லேசாக மதிவாணருக்கு அரும்பிய சந்தேகம் இப்போது வலுப்பட்டுப் போகவே அந்த மூன்றாவது கைரேகைக்காரர் யார் என்று கண்டு பிடிக்கும் முயற்சியிலே மிகத் தீவிரமாக இறங்கினார். டைரியைப் புரட்டிக் கொண்டே வந்த அவரது கண்களிலே "இன்று நான் என் காதல் தெய்வத்தின் பிறந்த நாளுக்காக முதல் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுது பாம்பு மலை என்ற ஊரில் இருந்து வந்த முஸ்லீம் பெரியவர் ஒருவர் என் பெட்டியில் ஏறினார். காலையில் இருந்து பேச்சுத் துணைகூட இல்லாது தவித்த எனக்கு இவர் இரவு நெடுநேரம் வரையில் நல்ல பேச்சுத் துணையானார். நான் என் அன்பு தெய்வத்திற்கு என்று தேர்ந்தெடுத்திருந்த பரிசுப் பேழையை இவரிடம் காட்டிய பொழுது உண்மையிலேயே இவர் பூரித்துப் போனார். ஆனால் சென்னையில் இறங்குவதாகக் கூறிய இந்தப் பெரியவர், நான் காலையில் விழுப்புரத்தில் கண் விழிப்பதற்கு முன்பே ஏனோ இறங்கிப் போய் விட்டிருந்தார்.' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனைக் கண்டதுமே பாம்பு மலைக்குப் பறந்தோடிய மதிவாணன் அங்குள்ள பாம்பாட்டிகளை எல்லாம் பிடித்து வைத்துக்கொண்டு மூன்று நாட்களுக்கு முன்பு யாராவது விஷப் பாம்பை விற்றதுண்டா?" என்று மிரட்டினார்.முதலில் 'இல்லை!' என்று மறுத்தாலும் பின்னர் எல்லப்பன் என்ற பாம்பாட்டி மட்டும், சினிமாப் படம் எடுப்பதற்கு என்று வந்த ஒருவருக்கு உண்மையான விஷப்பாம்பு ஒன்றை விற்றதை ஒப்புக் கொண்டான்.

அவனையும் அழைத்துக் கொண்டு சென்னை வந்த மதிவாணர் அவனை மாறுவேடத்தில் ஒவ்வொரு ஸ்டுடியோவிற்கும் தன்னுடைய உதவியாளனோடு அனுப்பி வைத்தார். இரண்டு நாள் ஒவ்வொரு ஸ்டுடியோவையும் சல்லடை போட்டு சலித்த அவர்கள் இருவருக்கும் மூன்றாவது நாள் நல்ல பலன் கிடைத்தது. "அதோ அந்தக் காரில் சாய்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறாரே அவர் தான் என்னிடம் கருநாகம் வாங்கினார்" என்று எல்லப்பன் ஒருவரை அடையாளம் காட்டினான்.

மறுநாள் காலையில் மதிவாணன் மோகன்குமாரின் இல்லத்திற்குச் சென்றார். அங்கு இவரைக் கண்டதுமே அகமும் முகமும் மலர வரவேற்ற மோகன்குமார், தன் தங்கை போன்று இருந்த சித்திராதேவியின் மறைவிற்காகவும் அவளை இழந்ததால் கலை உலகு அடைந்த நஷ்டத்திற்காகவும் பெரிதும் வருந்தினான். அவனிடம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்புகையில் மதிவாணர் வேண்டுமென்றே தன்னுடைய போலீஸ் தொப்பியை விட்டு விட்டுத் திரும்பினார், அவர் வாசற்படியைத் தாண்டும் பொழுது "தொப்பியை மறந்து விட்டீர்களே" என்று கேட்டுக்கொண்டே வந்த மோகன்குமார் அதைத் தானே எடுத்து இன்ஸ்பெக்டரின் கையிலே கொடுத்தான். 'இந்தக் கேஸ் குழப்பத்திலே இதைக்கூட மறந்துவிட்டேன் பாருங்கள்!' என்று புன்முறுவலுடன் அதை வாங்கிக் கொண்ட இன்ஸ்பெக்டர் நேராக கைரேகை பரிசோதனைச்சாலை நோக்கி ஓடினார். அங்கு சென்று பரிசுப் பெட்டியின்மீது இருந்த மூன்றாவது கைரேகையுடனும், கலைத்தாசன் உண்ட விஷக் கோப்பையின் மீது இருந்த கைரேகையுடனும் ஒப்பிட்டுப் பார்த்தார் அவை இரண்டும் ஒத்துப்போகவே மறுவிநாடியே மோகன்குமார் கைது செய்யப்பட்டு கோர்ட்டிற்கு அழைத்து வரப்பட்டான். முதலில் தன்னைக் கைது செய்ததற்காக போலீஸ் இலாக்காவையேதொலைத்து விடப் போவதாக உறுமிய மோகன் குமார், பாம்பு வாங்கி வந்த தன்னுடைய கார் டிரைவரை பாம்பாட்டி அடையாளம் காட்டி விட்டதையும் தன் கைரேகைகளே தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டதையும் உணர்ந்து பெட்டிப் பாம்பாகஅடங்கி விட்டான்.

சித்திராதேவியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு படைத்த தான் அவள் அழகில் மயங்கிப் போய் விட்டதாகவும், அவள் தன்னை உதாசீனம் செய்துவிட்டு கலைத்தாசனைத் தன்னுடைய காதலனாகத் தேர்ந்தெடுத்ததை தன்னால் பொறுக்க முடியவில்லை என்றும், தனக்குப் பயன்படாத அழகை அழித்தே விடுவது என்று முடிவு செய்து விட்ட தான் இருவரையும் சேர்த்தே ஒழித்துவிட இவ்வாறு ஒரு திட்டம் தீட்டியதாகவும், அதன்படி தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான கார் டிரைவரை மதுரைக்கு அனுப்பி கலைத்தாசனை தொலைத்துவிட முடிவு செய்த பொழுது அவன் இந்த தந்தப் பெட்டியை சித்திராவிற்கு பரிசளிப்பதற்காக வாங்கியது தற்செயலாகத் தெரியவந்தது என்றும், உடனே தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, கலைத்தாசன் வாங்கியது போன்றே வேறு ஒரு பெட்டி வாங்கி அதில் பாம்பு மலையில் இருந்து தன் டிரைவர் வாங்கி வந்த கருநாகத்தை அடைத்து எடுத்துக் கொண்டு, முஸ்லீமைப் போல வேடமணிந்து கொண்டு சென்று பாதி இரவில் பெட்டியை மாற்றி விட்டு வந்து விட்டதாகவும், பின்னர் சித்திராதேவியிடம் பரிசைக் கொடுத்து விட்டுப் பிரிந்த கலைத்தாசனையும் அழைத்துச் சென்று கதையாசிரியரான அவரிடம் தான் புதிதாக எடுக்கும் படம் ஒன்றில் சினிமா நடிகை ஒருவளைக் காதலித்து மோசம் போன ஒரு காதலன் மனம் வெறுத்து விஷம் குடித்து மாள்வது போல ஒரு காட்சி வருவதாகவும், அவன் எழுதி வைப்பது போன்ற கடிதம் ஒன்றை கற்பனைக் கடலான அவர்தான் எழுதித்தரவேண்டும் என்று கேட்டதாகவும், அவரும் மகிழ்ச்சியோடு அதை எழுதி முடிக்கப்போகும் நேரத்தில் தன் மோதிரத்தில் வைத்திருந்த விஷத்தை பாலிலே யாருக்கும் தெரியாது கலந்து கொடுத்து தனக்கு போட்டியாக வந்த அந்தக் கவிஞனையும் கொன்று பழிதீர்த்துக் கொண்டதாகவும், தான் எவ்வளவோ காதும் காதும் வைத்தது போல இந்த இரட்டைக்கொலையைச் செய்திருந்தாலும், கலைத்தாசன் எழுதி வைத்திருந்த டைரியும், கைரேகையும் தன்னைக் காட்டிக்கொடுத்து விட்டதாகவும் ஒத்துக்கொண்டு தலை கவிழ்ந்து கொண்டான்.



இலக்கியப் பாவை வைஜயந்திமாலா

சித்திரம் : பாலு சகோதரர்கள்

**வந்த மாலையும் மருண்ட பாவையும்:** முதல் நாள் இவளோடு கூடிக் குலவிவிட்டுச் சென்ற காதலன் மறுநாள் மாலை வருவான் என்று காத்திருந்தாள். அவன் வாராது போகவே தவித்து நின்ருள். காதலன் தான் வந்தான் இல்லையே தவிர ஒவ்வொரு நாளும் மாலை வந்தது. அவளது மேனி வனப்பைக் வெள்ளம் ... கரைத்துச் சென்றது. இதனை விளக்கும் :

“வால்இழை நெகிழ்த்தோர் வாரார் —
மாலை வந்தன்றுஎன் மாண் நலம் குலைத்தே”

... வகையில் இங்கு வைஜயந்திமாலா அழகுக் கோலம் கொண்டுள்ளார்.

நடனத்துறையில் இலக்கண ரீதியில் தனக்கென ஒரு பொலிவு பாணியை வகுத்துக்கொண்டு, தன்னைவிட ஒப்பார் எவருமில்லை என திகழ்ந்து வரும் இந்கலைஅரசி... என்றும் நாடும் ஏடும் போற்றும் வண்ணம் புகழ் பெற்று, தோகை மயிலென, அன்ன நடையென, மானின் துள்ளல் என நடனமாடி நம்மில் ஒரு அன்பு சகோதரி போன்று மதிப்போடு வீற்றிருக்கும் கலை அரசி கமலா வின் பெரு விருப்ப நடனமொன்றின் பாவங்கள்தான் இங்கே காண்பவை :



# நிலைத்து விட்ட நிகழ்ச்சி

V. குழந்தைவேலு B.A.
துணை போலீஸ் கமிஷனர்,
சென்னை.

நான் அந்தக் காலத்தில் போலீஸ் இலாகாவில் சேர்ந்தபோது, நாட்டிலேயும், நாட்டு மக்களிடத்திலேயும் போலீஸ் அதிகாரி என்றால் தனி அன்பும், பயமும், மரியாதையுமிருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டு மக்களுக்குப் போலீஸ் இலாகாவினர் உண்மைக்காக உழைக்கும் உத்தம நண்பர்களாகி விட்டனர்.

நான் போலீஸ் இலாகாவில் சேர்ந்த பிறகுதான், "தனிப்பட்ட ஒருவன், தனது வாழ்வையே நாட்டின் நலனுக்காக அர்ப்பணித்து, ஒவ்வொரு வினாடியும் ஆபத்துப் பாதையில் பணியாற்றுவது போல," என்று உணரலானேன்.

"உடல் பலமும், உள்ள பலமும், உண்மையும், ஊக்கமும், பேரறிவும், உயர் பண்பும், நிலையான பொறுப்பையும் போன்ற குணச் சிறப்புக்கள் நிறைந்து, அவைகளைத் தக்க சமயத்தில் தக்க விதத்தில் கையாளுவதில் தனித் திறமை படைத்தவர்களே, போலீஸ் இலாகாவில் தொடர்ந்து நல்ல பெயரோடு பணியாற்ற முடியும் என்பது எனது அனுபவ வாயியான கருத்து."


நமது இந்தியப் பெருநாட்டிலே உள்ள பல மாகாணங்களைக் காட்டிலும் பல வகைகளிலும் பெரும் புகழோடும், ஊக்கத்தோடும், உண்மையோடும் உழைக்கும் உத்தமர்கள் நமது சென்னை மாகாணத்தைச் சேர்ந்த போலீஸ் இலாகாவினர் என்பது உறுதி. ஏன்? உலகத்திலேயே நமது சென்னை போலீஸ் இலாகாவினருக்குத் தனிப்பட்ட உயர்ந்த இடம் உண்டு என்றால் அது மிகையாகாது.

"குடும்பப் பொறுப்புக்களை மறந்து உற்றார் உறவினரைத் துறந்து, தனது உணர்ச்சிகளையெல்லாம் ஒதுக்கி, திறந்த மனப்பான்மையும் மன உறுதியும் கொண்டு உண்மைக்காக நம் சென்னை போலீஸார் தக்கபடி உழைத்து வருகிறார்கள்.

எனது வாழ்க்கையிலேயே, நான் என்றும் மறக்கமுடியாததான, நிகழ்ச்சிகளில் ஒன்று நான் தஞ்சை மாவட்டத்தில் 1946 வருடம் போலீஸ் அதிகாரியாகப் பணியாற்றியபோது நடந்தது.

பலவிதப் பயங்கர ஆயுதங்களைத் தாங்கிய 9 பேர் அடங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் தஞ்சை மாவட்டத்தையே ஆட்டி வைத்துக் கொண்டிருந்தனர் - அப்போது அனுமதியில்லாப் பலதரப்பட்ட துப்பாக்கிகளையும் பயங்கர ஆயுதங்களையும் அவர்கள் உபயோகித்து வருவதாக நான் கேள்விப்பட்டேன். இந்தக் கொள்ளைக்கூட்டத்தின் தலைவனை கோபால்சாமி சேர்வை என்பவன் திருவாரூரைச் சேர்ந்த "கூத்தாநல்லூருக்குப் பக்கத்திலுள்ள "கருப்பட்டி மூலை" என்ற கிராமத்தில் தன் காதலியுடன் வாழ்ந்து வருவதாகத் தெரியவந்தது.

இக்கூட்டத்தினர் இரவு நேரங்களில் செல்வந்தர்களின் இல்லங்களில் பகிரங்கமாக நுழைந்து, கொள்ளை அடிப்பதும். பகல் நேரங்களில் பார்த்தவரிடத்திலெல்லாம் பணத்தைப் பறிப்பதுமாக இருந்தனர். குறிப்பாக அந்தச் சமயம் மன்னார்குடியிலுள்ள அத்தனை மிராசுதாரர்களையும் மிரட்டிப் பணம் பறித்து விட்டிருந்தனர்



இக்கூட்டத்தினர். இக்கூட்டத்தினர் மீதுள்ள பயத்தால் பறி கொடுத்தவர்களும் இவர்களைப் பற்றிப் பேசவும் கொலை நடுக்கம் கொண்டனர். ஏனெனில், இக்கொள்ளைத் தலைவன் எதையும் துணிந்து சொன்னபடி செயலிலே செய்து காட்டும் பயங்கர மனிதன். அப்போது நான் போலீஸ் அதிகாரியாகத் "திருவாரூரில்" சேர்ந்தபொழுது என் கீழ் அதிகாரிகளும் இக்கொள்ளைக்கூட்டத்தினரைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில், அவர்களுக்குக்கூடப் பயம் போலும்!

அன்று 3-9-1946, திருவாரூரிலிருந்து இருபத்தி ஆறாவது மைலிலுள்ள கம்பங்குடி என்ற கிராமத்திலுள்ள அக்கிரஹாரத்தில் 'குப்புசாமி ஐயங்கார்' என்ற பெரும் பணக்காரர் வீட்டினுள் கொள்ளைத் தலைவன் தனது கூட்டத்தினருடன் புகுந்து கொள்ளையடித்துச் சென்றதாக எனக்குச் சேதி கிடைத்தது. குப்புசாமி அய்யங்கார் தன் வீட்டில் எப்போதும் ஆயிரக்கணக்கான ரூபாய்களையும், நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் வைத்திருப்பதோடு அக்கிராமத்திலுள்ள முக்கால்வாசிச் சொத்துக்களுக்கும் சொந்தக்காரர் ஆவர்.

3-9-46 அன்று இரவு 8 மணிக்கு குப்புசாமி அய்யங்கார் வீட்டின்முன் துப்பாக்கிகளை வெடித்தனர். அந்த வெடிச் சப்தங்களைக் கேட்ட அக்கிராகாரத்தினர் அவ்வளவு பேரும் தத்தம் வீட்டுக் கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிக்கொண்டனர்.

குப்புசாமி அய்யங்கார் வீட்டின் கதவுகளையும் ஜன்னல்களையும் சேதப்படுத்தியும் அவர்களால் உள்ளே நுழையமுடியவில்லை. பின் கொல்லைப்புரம் சென்று அங்குள்ள கதவை உடைத்து உட்புகுந்தனர். உள்ளே அய்யங்கார் தம் மனைவி மக்களுடனும் தாயுடனும் இருந்தவர் இச்சப்தம் கேட்டு பட்டாக்கத்தி ஒன்றைத் துணிவோடு எடுத்துக்கொண்டு கொல்லைப்புரத்தில் காத்துக்கொண்டிருந்தார்.

ராமய்யன் என்ற அக்கூட்டத்தில்

சில விநாடிகட்குப் பின் இரட்டைக் குழல் துப்பாக்கியால் ஜன்னல் வழியே K D கோபால்சாமிச் சுட்டான். என்னுடைய பக்கத்தில் நின்று கொண்டிருந்த "சேர்வை"யின் வலது உள்ளங்கை 5 விரல்களுடனும் அடுத்த விநாடியே பிய்த்துக் கொண்டு போக சேர்வை திடீரெனக் கீழே விழுந்தார். அவர் பிணமாகி விட்டாரென நினைத்தேன். உடனே என் கீழதிகாரிகளுக்கு "திருப்பி ஜன்னல் வழியாகச் சுடுமாறு" கட்டளையிட்டேன். உள்ளிருந்தும் வெளியிலும் துப்பாக்கிகள் சுடப்பட்டன. அன்றைக்கு அக்கிராமத்தில் தீபாவளி கொண்டாடியது போல் வெடி சப்தம் நிரம்பியது. சுற்றிலுமுள்ள வீடுகளைப் பார்த்தபோது விளக்கொளிகள் தென்படவே, அக்கிராமத்தினர் விழித்துக் கொண்டனர் என யூகித்துக் கொண்டேன்.

இரட்டைக் குழல் துப்பாக்கித் தோட்டாக்கள் தீர்ந்து போகவே, ரவைகளைப் போட்டு சுட்டுக் கொண்டிருந்தான். வீட்டின் முன் நின்று கொண்டிருந்த 5 போலீஸாருக்கு ரவைகள் அடிபடவே அவர்கள் கீழே விழுந்தனர்.


ரவைகளும் தீர்ந்து போகவே வீட்டினுள் அமைதி நிலவியது. குண்டுகளெல்லாம் தீர்ந்துபோய் விட்டதாக நாங்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக கோபாலசாமி நடிக்கின்றான் என நினைத்தேன். அப்போது விடியற்காலை 5 மணியாகி விட்டது. "கதவைத் திறக்காவிட்டால், வீட்டைக் கொளுத்துவோம்!", என்று இறுதியாக எச்சரிக்கை செய்தேன். உள்ளேயிருந்த கொள்ளைத் தலைவன் கோபாலசாமி, "நீங்கள் எங்கிருந்து வந்திருக்கும் அதிகாரி? உங்கள் பெயரென்ன?" என்று கேட்டான். "நான்தான் குழந்தைவேலு. சென்னையிலிருந்து மாற்றலாகி, தற்போது திருவாரூர் போலீஸ்அதிகாரியாக இருக்கிறேன்." என்று சொன்னேன். அதற்கு கோபாலசாமி, "தாங்கள்தான் குழந்தைவேலுவா? உங்கள் மீது எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. என்னை அடிக்காமலிருப்பதாக வாக்குறுதி கொடுத்தால் நானே சரணாகதியாகி விடுகின்றேன்' என்றான்.

"பயப்படாதே! உன்னைக் கைது செய்தால் போதும். அடித்து தொந்தரவு செய்ய மாட்டேன்! அது என் பழக்கம் அல்ல," என நான் சொல்லி முடித்ததற்குள் கதவு திறக்கப்பட்டு அவன் என் காலடியில் கிடந்தான், கூட வந்திருந்த சப்-இன்ஸ்பெக்டர் முதல் மற்றும் அனைவரும் அவனது எலும்பைத் தனித்தனியாக எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், "அடிப்பதில் பிரயோசனமில்லை, நியாயம் விசாரிக்க கோர்ட் இருக்கிறது" என அழைத்துச் சென்றேன்.

வீட்டினுள் அவனது காதலியும் அடிபட்ட தம்பியும் இருந்தார்கள், எல்லோருமாக லாரியில் சென்றோம். அப்பொழுது கதிரவன் உதயமாகிக் கொண்டிருந்தான். அக்கிராமத்திலுள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் எங்கள் முன் கூடிவிட்டனர். தஞ்சைமாவட்டத்திலுள்ள அத்தனை மிராசுதாரர்களும் கூட்டம் கூட்டமாக என்னைச் சந்தித்துப் புகழ்ந்து பேசினர், மேல்தஞ்சை செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடந்தது. 14 வருடங்கள் தண்டனை கோபாலசாமிக்கு அளிக்கப்பட்டது. பாக்கிக் கொள்ளைக்கூட்டத்தினருக்கும் 5 முதல் 10 வருடம்வரை தண்டனை கொடுக்கப்பட்டது. கூடவந்திருந்த உள்ளங்கைஇழந்தசேவைக்குஅரசாங்கத்தார் மாதாமாதம் பதினைந்துரூபாய் ஆயுள் வரை கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

நான் மீண்டும் தஞ்சை மாவட்டத் தலைமை போலீஸ் அதிகாரியாகச் சென்றிருந்தபோது K. D. கோபாலசாமியை பற்றி விசாரித்ததில் அவர் மிகவும் பெரும் பணக்காரராக நேர்மையுடன், அதே கருப்பட்டிமூலை கிராமத்தில் வாழ்ந்து வருவது தெரிய வந்தது.

போலீஸ் அதிகாரி என்ற முறையில் பணியாற்றிய வகையில் இதைவிடப் பயங்கரநிகழ்ச்சிகள்என்வாழ்க்கையில் நடந்திருந்தாலும் இந்நிகழ்ச்சிதான் என்றென்றும் என் மனதில் குடியிருப்பது. சாதாரணமாகக் கொள்ளை அடிப்பதில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகள் எக்காலத்திலும் மனம் திருந்தமாட்டார்கள். ஆனால் அதேசமயத்தில் இத்தகைய குற்றவாளியை, அவன் சரணாகதி அடைந்தபோது என்கீழ் பணியாற்றியோர் அவன்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோது நீதி மன்றம் தீர்ப்பளிக்கட்டும்" என்று சொல்லி அவன் எதிர்பாராத அளவில் அன்பாக அவனிடம் நடந்து கொண்டதால் அவன் மனம் திருந்தித் தனது கொள்ளைத் தொழிலை விட்டுவிட்டு இன்றும் மக்களிடத்தேமனிதனாக வாழ்ந்துவர முடிகிறது. இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட அனைவரது பெயர்களும் உண்மையானவை.



வாழ்க்கையில் ஒருவர் நேரிலே
இத்தனைத் தலங்களுக்கும் போக
முடியவில்லை என்றாலும் இங்கேயுள்ள
படத்திலே கண்டுகளியுங்கள்.....

படம்: மடாதிபதியின் மகள்


















# கைரேகை வித்தகர்—பி. டி. சுந்தரம்



ஜோதிடமணியும், ஆருட ஆராய்ச்சியாளரும், கைரேகை கைராசியாளருமான ஒரு அபூர்வ மேதைதான் நம் பி. டி. சுந்தரம் அவர்கள். ரேகை சாஸ்திரத்தில் நல்ல தேர்ச்சியும், அனுபவ ஞானமும், ஆராய்ச்சித் திறனும் பெற்றவர். அயல்நாட்டு கைரேகை முறைகளை விஞ்ஞான ரீதியில் ஒரு அணுவளவுகூட விடாது ஆராய்ந்தவர். தனது சலியா முயற்சியால் நம் நாட்டிற்கு ஏற்ற வகையில் டிகிரி முறையைக் கண்டு பிடித்து அதன் மூலம் அவரவர்களின் பலாபலன்களைச் சரியான முறையோடு விளக்குபவர். இவரின் திறன் சான்ற ஆராயச்சிக்கு உட்படாத பெருந் தலைகளின் கைகள் மிகக் குறைவாகத்தானிருக்கும்.

அவரவர்களின் குணகோணத்தையும், அவரவர்களுக்கு சம்பவிக்கக் கூடிய விதி முறைகளையும் அப்படியே படம் பிடித்தாற்போன்று தெளிவாகவும், விரிவாகவும் விளக்குவதில் அவருக்கு இணை அவரேதான்.

கரணம் தப்பினால் மரணமென நாம் அறிந்திருக்கிறோம். அதே போல் கைரேகை கணித்ததில் சிறிது கணக்குத் தவறியிருந்தால் அவ்வளவுதான்...செல்வந்தன் தரித்திரனாக நிர்ணயிக்கப்பட்டு விடுவான்.

ஆகவே, ரேகை சாஸ்திரமென்பது அவ்வளவு சுலபமல்ல. இப்படிப்பட்ட பிழைகள் ஏதுமின்றி பொறுப்புணர்ச்சியோடு சரியாக ஆராய்ந்த பின்னரே அதில் இனிமை பயக்க விளக்கத் தொடங்குவார் நம் ரேகை சாஸ்திர நிபுணர்.

அச்சமயங்களில் அவர் கூறுபவைகளைத்தான் நாம் ஆச்சரியமுடன் கேட்டுக் கொண்டிருக்க முடியுமே அல்லாது அவரை நாம் எதைப் பற்றியும் கேட்கவே சந்தர்ப்பமின்றி போய்விடும். இத்தகைய வித்தகரான நம் ரேகை சாஸ்திர வல்லுனர் சுந்தரம் அவர்களின் இந்நற்பணி என்றும் நம் நாட்டின் பெரும் பணியாகத் திகழ்ந்து, அவரும் பெரும் செல்வந்தராய் விளங்க வேண்டுமென நான் ஆரூடம் அவருக்கே கூறுகிறேன்.

—ஆசிரியர்

---

அகில உலக மேதை

## பண்டித நேரு

மாநிலம் போற்றும் நமது மாண்புமிக்க பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களது கைரேகைகளின் மொத்த டிகிரி 322. இந்த டிகிரியில் பிறந்தவர்கள், புகழுடன் தோன்றிப் புகழுடனேயே மறைவார்கள்; ஒரு மாமன்னருக்குரிய மாட்சியுடன் திகழ்வார்கள். சூரியன், புதன், சுக்ரன் ஆகிய மண்டலங்கள் மிகவும் அகலம் பெற்று, கை சதுரமாக அமைந்திருப்பதால் இவர் தன் நாட்டைக் காட்டிலும் அயல் நாடுகளில் அதிகப் புகழோடு விளங்குவார். நேர்மை, தியாகம், தன்னலமின்மை இவற்றின் சின்னமாக இலங்குவார். தனரேகையும்; சூரிய ரேகையும் இருதய ரேகையிலிருந்து ஆரம்பிப்பதால், 56 வயதுக்குமேல் ஓர் இணையற்ற ராஜ யோகம் தொடக்கமாகி, இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கும். இன்னும் ஆயிரம் ஆண்டுகள்வரை உலகில் இவரைப்போல் இன்னொரு மனிதர் தோன்றுவது அரிது! இவரது மரணம் திடீரென்று ஏற்படும்.





கங்கை முதல் காவேரி வரை

கல்வி பரப்பிய

டாக்டர் சர் சி. பி. ராமசாமிஐயர்

நம் தாயகத்தின் தலைசிறந்த மேதைகளில் ஒருவராகிய இவர், 316 டிகிரியில் பிறந்தவர். சதுர மான கை; மெல்லிய ரேகைகள். சூரிய, குருமண்டலங்கள் மிக அகலம் பெற்றிருப்பதால், பெரும் பெரும் பதவிகள் வகித்தவர். நோயற்ற நீண்டாயுளும் ஒய்வற்ற சுறுசுறுப்பும் உடையவர் என்பதை ஆயுள்ரேகை அறிவிக்கிறது. புத்தி ரேகை மிகவும் சிறப்பாக அமைந்திருப்பதால், வியக்கத்தக்க நுண்ணறிவும், உயரியமெய் ஞ்ஞான நூலுணர்வும், அதைப் பிறர்க்கு அறிவுறுத்துகிற ஆற்றலும் பெற்றிருப்பார்.

---

தென்னாட்டு

சுபாஷ் சந்திரபோஸ்

பசும்பொன்

**உ. முத்துராமலிங்கத் தேவர்**

தண்டமிழ் நாட்டின் தென்பகுதியில் ஒரு முடிசூடா மன்னராக விளங்கும் தேவரவர்கள் 318 டிகிரிகளையுடையவர். அதன் பயனாக, தனக்கென வாழாப்பிறர்க்குரியாளராக, மக்களின் இதயத்தில் வைத்துப் போற்றப்படுபவர். இவரது புத்திரேகை ஓர் அபூர்வமான அம்சத்துடன் விளங்குவதால், எல்லையற்ற சொல்வன்மையும் இனிய சாதுர்யமும் வாய்க்கப்பெற்றவர். குருமேட்டில் குருரேகை ஆரம்பமாகி சதுர வடிவத்துடன் முடிவடைவது கவனிக்கத்தக்கது, இதனால், வருங்காலத்தில் அரசியல் துறையில் இவர் பெரும் பதவிகள் வகிப்பார். இவருக்குத் தெய்வபலம் நன்றாக இருக்கிறது. தன் இறுதி நாட்களில் இவர் ஓர் உலகம் போற்றும் ஞானியாகத் திகழ்வார்.





SEMMANGUDI, SRINIVAS

## சங்கீதமேதை
## செம்மங்குடி சீனிவாசய்யர்

கர்நாடக சங்கீத மகாவித்வான்களில் ஒருவராகிய செம்மங்குடியவர்கள் கை இது. இவரது ரேகைகளின் மொத்த டிகிரி 312. புதனும் சூரியனும் மிக்கவலிமை பெற்றிருப்பதோடு, இவரது சுண்டு விரலின் அமைப்புபெரிதும்வியக்கத்தக்கதாயிருக்கிறது. இத்தகையவர்கள் பிறவியிலேயே ஒரு கலாமேதையாய் விளங்குவார்கள். புத்திரேகையும் ஆயுள் ரேகையும் மிகவும் அகலம் வாய்ந்திருப்பதோடு, புத்தி ரேகையானது செவ்வாய் மண்டலத்துடன் சேர்வதால் உயர்ந்த பட்டங்கள் பதவிகளுக்கு உரியவராகி, தெய்வபக்தியில் திளைத்து, சிறந்த நூலாசிரியராகவும் புகழ்படைத்து வாழ்வார்.

## மருத்துவமேதை
## கோவை டாக்டர் சிவானந்தம்

இவரது பெயரைச் சொன்னாலே கோவை மக்களின் உள்ளம் குளிரும். காரணம், அவ்வளவு கைராசிக்காரர்; ஏழைபங்காளர். இவரது மொத்த டிகிரி 312. சுக்ர, சூரிய, புத மண்டலங்கள் சிறப்பானபலம் பெற்று, பல ரேகைகள் சூரிய மண்டலத்தை நோக்கிச் செல்வதால், இவர் தம் மருத்துவக் கலையில் ஒப்பற்ற திறம்படைத்தவராய்விளங்குவதோடு, எதிர்காலத்தில் பெரிய பதவிகளையும் வகிப்பார். நீண்ட ஆயுளைப்பெற்ற உத்தமர்.





## தமிழ்நாடு ஈன்ற இலங்கை தொழிலதிபர் கே. கிருஷ்ணசாமி

இவர் ஒரு பெரிய தொழிலதிபர். இலங்கையிலே எல்லோரிடமும் செல்வாக்குப் படைத்தவர். இவரது மொத்த டிகிரி 310. இதன் பலன் குறைவற்ற செல்வமும் குன்றுதநீண்டாயுளும் பெற்றிருப்பார். குரு, சனி, சுக்ர மண்டலங்கள் பலம் வாய்ந்திருப்பதால், சுயமுயற்சியில் பெருவாழ்வு தேடிக்கொண்டவர். சூரிய மண்டலம் அதிக அகலமாயிருப்பதோடு, புதனுடன் நல்ல அம்சம் அடைந்திருப்பதால், எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பார். ஏழைகட்கு இரங்குவார். எவர்க்கும் குறிப்பறிந்து உதவுவார். புதன் மேட்டில் சில அபூர்வமான ரேகைகள் அமைந்துள்ளமையால், வருங்காலத்தே அயல்நாட்டு வர்த்தகத்தில் பெரும் செல்வாக்கைப் பெறுவார்.

## உழைப்பால் உயர்ந்த ஓவியர், 'கலை' ஆசிரியர் அ. சீனு



இவரே இப்பத்திரிகையின் ஆசிரியர் என்பதை நேயர்கள் அறிவார்கள். இந்தத் தீபாவளிமலரில் ஓர் சாதாரண ஒருவரின் கைரேகையையும் சேர்க்க வேண்டுமென்று அவர் என்னிடம் கேட்டுக்கொண்டபொழுது, நான அதற்கு ஒரு நிபந்தனை விதித்தேன். அந்த நிபந்தனை என்னவென்று கேட்காமலே அதற்கு அவர் உட்படவேண்டும் என்றும் நான் வற்புறுத்தினேன். வேறு வழியின்றி அவர் சம்மதித்தார். அதன் பிறகுதான், "உங்கள் கைரேகையைக் கொடுங்கள்!" என்று என் உட் கருத்தை வெளியிட்டேன். பாவம், அவரால் மறுக்க முடியவில்லை!

புகழ் மிக்க ஓவியக் கலைஞர் களாகியபாலு சகோதரர்களில், இவர் இளையவர். இவரது ரேகைகளின் டிகிரி 316. சுக்ரன், சந்திரன், குரு இம்மூன்றும் சிறப்பான வலிமையோடு காணப்படுவதோடு, புத்தி ரேகையும், புதன்ரேகையும், சூரிய ரேகையும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருக்கின்றன. ஓவிய உலகில் இவர் ஒரு தலைசிறந்த நிபுணராகவும், ஆராய்ச்சியாளராகவும் விளங்குவதற்கு இதுவே காரணம். அதுமட்டுமல்ல; குரு மண்டலம் சனி மண்டலத்தோடு கலப்பதால், இவர் கனவிலும் பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டார். எதிரிகளைத் தம் நண்பர்களை விட உயர்வாக நடத்தும் உயர் குணமுள்ளவர். எதிராக வேலை செய்யும் பொறாமைக்காரர்கள் அழிவரே தவிர இவருக்கு ஒரு தீங்கும் விளைவிக்க முடியாது. எதிலும் பெருநோக்குடையவராயிருப்பார். வருங்காலத்தில் உலகம் போற்றும் ஒரு கலை நிறுவனத்தைத் தோற்றுவிப்பார்,

# மன்னாதி மன்னர்கள்

செல்வத்திலே புரண்டு-தங்கத்திலே உண்டு - வைரத்திலே வளர்ந்த இந்த மன்னாதி மன்னர்கள் ஒருகாலத்தில் தங்களுடைய சுட்டுவிரல் அசைவிலேயே இந்தக் குவலயத்தை ஆண்டவர்களாகஇருந்தும்,இன்றைய நிலையில் செல்லாக் காசுகளாக; பழங்கால வாழ்வை மட்டுமே படம் பிடித்துக் காட்டக்கூடிய காட்சிப் பொருள்களாக மாறிவிட்டனர்.


ஸ்வீடன்


இங்கிலாந்து


மொனக்கோ


மான்டெஞ்ஜிரோ


நேப்பால்


இரஷ்யா


பல்கேரியா


டென்மார்க்


கிரீஸ்


எகிப்து












பர்ஸியா



ருமேனியா



நெதர்லாந்து



காஷ்மீர்




டர்க்கி



ஸ்பெயின்



பொகாரா



டொமினிஷியா



கொரியா



சைனா




சயாம்



பிராக்



கானிஸ்தான்




ஆஸ்ட்ரியா



கலாத்



ஐதராபாத்


மைசூர்
திருவாங்கூர்
ஆல்வார்
பரோடா
தோல்ப்பூர்
கப்பூர்தாலா
நாபா
உதயபூர்
ஜெய்ப்பூர்
தேவாஸ்
திப்பீரா
ஜிந்த்



க்கோட்டை



சாச்சின்



பித்தாபுரம்



ராமநாதபுரம்



கடத்தநாடு




வள்ளுவநாடு



வீகாவரம்



கொல்லங்கோடு





அன்று மணிமுடிகள் இருந்த இடத்திற்கு இன்று மக்கள் தலைவர்கள் வந்துவிட்டதால் அன்று செங்கோலேந்தியவர்களுக்கு இருந்த மதிப்பு இன்று இந்தக் கலப்பை ஏந்திகளுக்கு ஜனநாயக நாட்டின் முடிசூடா மன்னர்களுக்கு வந்துவிட்டது.





படிப்படியாக உயர்ந்து வரும் கட்டிடங்களைப் போல இன்று வளர்ச்சியில் உயர்ந்து பூரிப்பால் நிமிர்ந்து நிலையான திகழ்வோடு விளங்கும் பளிங்குப்பாவை சரோஜாதேவி



# சிற்றூரே வாழிய நீ

செந்தமிழ்ப் பாவலர்.....
கவி.கா.மு.ஷெரீப்

வானுயர்ந்த தென்னைமரம்
    வாழைமரம் பாக்குமரம்
தேனிறைந்த கனிகள் தமைச்
    சிந்துகின்ற செழுமரங்கள்
மல்லிகைப்பூந் தோட்டங்களும்
    வற்றாத பொய்கைகளும்
வெள்ளரியும் பாகலுமே
    விளைந்திருக்கும் புறக்கடையும்
குயில்கூவும் தோப்புகளும்
    'குக்கூ'ப்பு றாக்களுள்ள
மயிலாடும் சோலைகளும்
    வழிந்தோடும் நீரருவி
நிறைந்துள்ள கிராமந்தனை
    நினைக்கையிலே காணுதற்கு
விரைந்தேறும் நெஞ்சினிலே
    மேலான ஆசையுமே!
        அங்கே—
காலைக்க திரவன்தான்
    கண்விழிக்கு முன்னெழுந்து
வேலைக்கு செல்லுவதும்
    விரும்பியு ழைப்பதுவும்



மாலையிலே மனைவிமக்கள்
மாடாடு தன்னுடனே
ஓலைக்கு டிசையுள்ள
ஊர்திரும்பி வீடடைந்து
பானைதனை அடுப்பேற்றிப்
பக்குவமாய்க் கூழ்காய்ச்சி
வானமதி யொளியினிலே
மக்களுடன் வாசலிலே
கூழ்குடித்து நிம்மதியாய்க்
குரட்டைவிட்டு மேதூங்கி
வாழ்க்கைநி லைப்பதற்கே
மறுநாளும் காலையிலே
தலையில்சு மையுடனே
தாரமுங்கு ழந்தைகளும்
நிலையாகப் பின்தொடர
நடக்கின்றான் விவசாயி!
விவசாயி வாழுகின்ற
மேலான சிற்றூரே
அவனியிலே மேலதுவாம்
அழகுமிகக் கொண்டதுவாம்!
வானுயர்ந்த தென்னைமரம்
வாழைமரம் பாக்குமரம்
தேனிறைந்த கனிகள்தரும்
சிற்றூரே வாழியநீ!







1. சிறந்த நடிப்பாலும், வசீகர தோற்றத்தாலும் புகழ் பெற்றுவரும் இத்தாலிய அழகி

← ஜினு லல்லோ பிரிக்டா

★

2. காந்தப் பாவை...ஆயிரமாயிரம் இளைஞர்களின் உள்ளங்களை தூண்டில் புழுவென தனது பொலிவு அங்க அமைப்புகளால் துவழச் செய்துவரும் ஒரே......

மர்லின் மன்ரூே →

★

3. இந்த அழகுப் பிம்பத்தின் எழில்வதன திகழ்வு எல்லோருக்கும் சொந்தமல்ல...

↓ அனிதா எக்பர்க்

★

4. அழகுவடிவும், தளிர்வண்ண வதனமும் பெற்றுள்ள......

பிரிகிட்டி பார்டாட் ↓



★ ★

(புகைப்படம் யூசுப் கார்ஸ்)



★



# ஹாலிவுட் வளர்க்கும் அழகோவியங்கள்...!

1. அங்க அழகினுல் உயர்ந்துள்ள நங்கை....

ஜோன்பிராட்ஷா. →

★

2. கவர்ச்சி உடைக்கென்றே பொருத்தமான உடலமைபைப் பெற்றுள்ள வனிதை...

↓ விக்கி டௌகன்.

★

3. உடலழகு ஒன்றினுல் உலகையே மயங்கச் செய்யும் எழில் காந்த கவர்ச்சிப் பாவை...


ஜேம்ஸ் மேன்ஸ் பீல்ட் ↓







# வீட்டு வைத்தியம்



**கணவன் சொல்கிறான் :**

ஆபீசுக்குக் கிளம்பி ஐந்தே நிமிடங்களில் நான் திரும்பி வந்ததும் என் மனைவியின் முகத்தில் கேள்விக்குறி எழும்பியது. எதை மறந்துவிட்டேன், பர்ஸையா? பவுண்டன் பேனாவையா? . . . அல்லது திடீரென உடம்புக்கு ஏதேனும் . . . ?

“ஒன்றுமில்லை, என் சட்டைக்குத்தான் உடம்பு! ” என்று கூறி முதுகுப்புறத்தைக் காண்பித்தேன். எடை காட்டும் கருவியிலுள்ளது போல பத்து நயா பைசா நுழையும் அளவுக்கு ஒரு கிழிசல்! உடுத்தியபோது என் கண்ணில் படாத இந்தக் கிழிசல், பஸ் ஸ்டாண்டில் என் நண்பனின் கண்ணில் பட்டது. பெட்டியிலுள்ள மற்ற சட்டைகளுக்கோ காலர்களில் கோளாறு!

“ஒரே நிமிஷம். சரிசெய்துவிடுகிறேன். போய்விடலாம் ஆபீசுக்கு” என்று ஊசி நூலை எடுத்தாள் மனைவி.

“வேண்டாம். சீக்கு என்று லீவுக் கடுதாசு அனுப்பிவிட்டேன் ஆபீசு சிநேகிதன் மூலமா. இன்னைக்கி ஹாய்யாக இருக்கலாம்” என்றேன்.

ஆனால், ‘ஹாய்’யாக என்றால் . . . ? நல்ல துணிகளெல்லாம் இன்னும் அழுக்கு மூட்டையில் ஐக்கியமாகியிருக்கையில், ஒரு பார்க்கோ, மரீனாவோ, சினிமாவோ போகமுடியுமா? பகல் தூக்கம் ஒன்றுதான் முடியும்!

கண்ணை மூட முயன்ற சமயத்தில் வாசற்புறம் பேச்சுக் குரல் ஒலித்தது: “உன் கணவருக்கு என்ன உடம்பு?”—இக் குரல் என் மனைவியின் சிநேகிதியான டாக்டர் கண்ணம்மாவினுடையது.

“தலைவலியும் கதகதப்பும்” என்றாள் என் மனைவி. எனக்குப் பகீரென்றது. டாக்டரம்மா என் உடம்பைப் பரிசோதிக்க வந்துவிடவே, “என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் சட்டைக்குத்தான் உடம்பு . . .” என்று குழறினேன். கண்ணம்மா புன்னகை புரிந்தாள். நிலைமையை சமாளித்துக்கொண்டு அவளை முன்கட்டுக்கு அழைத்துச் சென்றாள் என் மனைவி.

எனக்கும் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. அப்புறம் என் மனைவி காப்பி சகிதம் என்னை எழுப்பியபோது மணி நான்கு இருக்கும். ஊஞ்சல் பலகை மீது பளிச்சென்று வீற்றிருந்த ஒரு துணி வரிசை என் கண்களைக் கூச வைத்தது. “சலவையாகி வந்துவிட்டதா” என்று கேட்டேன்.


S/P. 4A-50 TM

“எபபடி? பளிச்சென்றிருக்கிறதா?”. என்று முறுவலித்தாள். “நீயே சலவை செய்தது போல நடிக்கிறாயே?” என்றேன்.
“நெஜமா. நான்தான் செய்தேன்!”
“கதைக்காதே. இவ்வளவு பளிச்சென்றா? இவ்வளவு துணிகளையுமா? அபபடியொன்றும் அசந்து தூங்கிவிடவில்லை நான். அடித்துத் துவைத்த சத்தம் என்னை எழுப்பியிருக்காதா?“ என்றேன். ஆனால் அவள் விளக்கிக் கூறிய பிறகுதான் எனக்கு விவரம் புரிந்தது.



மனைவி சொல்கிறாள்:

மனிதருக்கு மட்டும்தான் டாக்டராக இருப்பவர் என்றெண்ணிய போது துணிகளுக்கும் டாக்டராக மாறிவிட்டாளே இந்தக் கண்ணம்மா! துணி கிழிவதைக் காயம் படுவதற்கும், பித்தான்கள்



உடைவதை எலும்பு முறிவுக்கும் ஒப்பிட்டு அவள் பேசியபோது தமாஷாயிருந்தது. அவள் கூறினாள்:
“உங்கள் கணவர் கூறியதுபோல, துணிகளின் ஆரோக்கியமும் நாம் கவனிக்க வேண்டிய விஷயமே. அழுக்கடைந்த துணிகளை நாள் கணக்காக வைத்துக்கொண்டு அப்புறம் சலவைக்குக் கண்மறைவாக அனுப்பிவிடுவது நல்லதல்ல. சுத்தமான நல்ல சோப்பை உபயோகித்து உடனுக்குடனே நம் கையினாலேயே துவைத்துவிடுவது போலாகாது.”
“சொல்வது சரிதான், ஆனால் இப்போது நீங்கள் கட்டிக்கொண்டிருக்கும் வெளுப்பான புடவையைப்போல ஆகுமா வீட்டுச் சலவை?” என்றேன்.
“நல்ல கேள்வி கேட்டீர்கள். இது என் கையாலேயே வெளுத்த புடவை. எல்லாத் துணிகளையும் அன்றன்று நானே துவைத்து விடுகிறேன்” என்றாள். பிறகு கையோடு என்னை அவள் வீட்டுக்கே அழைத்துச் சென்று, தான் அலசி உயர்த்தியிருந்த, தும்பைப் பூத் தோரணம் போன்ற துணி வரிசையைக் காண்பித்தாள். எனக்கு மலைப்புத் தட்டியது.
“ஆனால் ஸன்லைட் விலையைப் பற்றி யோசித்தால் ...” என்று இழுத்தேன். கண்ணம்மா குறுக்கிட்டாள்: ... துணிகள் அடிக்கடி கிழிந்து, அடிக்கடி புதுத்துணி வாங்குவதைப்பற்றி யோசியுங்கள். ஸன்லைட் சலவையில் அந்தக் கவலையே இல்லை. கொள்ளாக் கொள்ளையான நுரை தரும், சக்திவாய்ந்த சோப்பாதலால், அடித்துத் துவைக்காமலேயே பளிச்சென்று வெளுத்து விடும். ஆகவே துணிகளுக்கு ஆயுசு கெட்டி. அதோடு, கொஞ்சம் ஸன்லைட் உபயோகித்தாலும் ஏராளமான துணிகளை வெளுத்துத் தரும். சோப் செலவும் மிச்சமாகும். ஆகவே, இரண்டு விதத்திலும் சிக்கனம், இல்லையா?”
அவள் சொன்னபடியே ஒரு ஸன்லைட் வில்லை வாங்கிவந்து இந்தத் துணிகளுக்குப் போட்டேன். “கண்ணம்மாவின் வாய்க்கு சர்க்கரை தான் போட வேண்டும்!” என்றேன் என் கணவரிடம். பளிச்சிட்ட அந்தத் துணிகளின் மீது பார்வை பதித்திருந்த அவர் திடீரென முகமலர்ந்து “செல்லம், இன்று நாம், சினிமா சாயங்கால ஆட்டத்திற்குப் போகிறோம், தயாராகு”! என்றார்.




S/P. 4B-50 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

Introducing




★ Chocolate Coloured and Flavoured ★

★ Mix with Milk & Drink Hot or Cold ★

BARCOHNE IS DELICIOUS

*Other Products:*

PICKLES, DHIDEER IDLI, DOSAI, BONDA, SAMBAR POWDER Etc.

**SRI GANESHRAM & Co.**

PHONE: 5365 MADRAS-1

---




---

# மண வாழ்க்கையின் இன்ப சுகங்களை அனுபவியுங்கள்

★

ஆண், பெண் ரகசிய வியாதிகளான நரம்பு தளர்ச்சி, சக்தி குறைவு மூலம் மூத்திரத்தில் சக்கரை சத்து, இல்வாழ்க்கையில் வெறுப்பு, சோம்பல், அடிக்கடி இரவிலோ பகலிலோ மூத்திரம் கழிவது, இடுப்புவலி இது போன்ற சிக்கலான கொடிய வியாதிகளை ஆபரேஷன் இஞ்செக்ஷன் அன்றி விரைவில் குணம் ஆகும்படி சிகிச்சைகள் அளிக்கப்படும்.



தங்களுக்கும் மேற்கூறிய கொடிய வியாதிகள் ஏற்பட்டிருந்தால் அதை அகற்றி புதுரத்தம், புதுசக்தி, புதுவாலிபம். புது உணர்ச்சி பெற இன்றே நீர் வெட்கப்படாமல் உலகப் பிரசித்தி பெற்றவரும், 40 வருட அனுபவமுள்ள வருமான கவர்மெண்ட் ரிஜிஸ்டர் (ஸ்பெஷலிஸ்ட்) டாக்டர் **சோகன் G. D. ராஜ்புத்** & Y. H. ராஜ்புத் அவர்களை நேரில் கலந்தாலோசியுங்கள்.

**கவனிப்பு:** நரம்புத் தளர்ச்சிக்கு பிரத்யேக எலக்டிரிக் இயந்திரத்தால் சிகிச்சை அளிக்கப்படும். எல்லா வியாதிகளையும் ரகசியமாக வைக்கப்படும்.

பார்க்கும் நேரம்: காலை 8-மணி முதல் 1-மணிவரை. மாலை 5-மணி முதல் 9-மணி வரை. ஞாயிறும் உண்டு.

## ராஜ்புத் டிஸ்பென்சரி

13, எல்லிஸ் ரோட்


(மவுண்ட் ரோடு ரவுண்டாணா அருகில்)

சென்னை-2.

## கிளை: ராஜ்புத் டிஸ்பென்சரி

3, டவுன்ஹால் ரோட் மேல்மாடி

மணி கபேயின் பக்கத்தில், மதுரை.




" அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை " —குறள்.




" பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து " —பொதுமறை



" கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள "   —முப்பால் (21)



" நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் "   —பொய்யாமொழி (3

# குறளோவிய விளக்கங்கள் :-

[வளவன்]

"அனிச்சப்பூக் கால்களையாள்
பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை" ...குறள்

மலர்களிலேயே அனிச்சப் பூதான் மிக மென்மையானது. எனவேதான் மதிமுக மடவார்தம் மெல்லடிகளுக்கு உவமையாக அதனைப் பைந்தமிழ்ப் புலவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால் வள்ளுவப் பெருந்தகையோ அவர்களிலும் ஒருபடி மேற் சென்று இந்த மயக்கு விழிக்காரியின் பெண்மை நலத்தை எடுத்தியம்புகின்றார். இவள் தன்னுடைய பஞ்சின் மெல்லடி நோக நடந்து வருகையில் தரையிலே நடப்பதில்லையாம். அனிச்சமலர்களைத் தூவிய மலர்ப்படுக்கை மீதுதான் இவள் எடுத்தடிவைப்பாளாம்., அப்படி மலர் தூவும் பொழுதுகூட அவளுடைய தோழிமார் அதனுடைய காம்பு எங்கே இவளுடைய மெல்லடியை வருத்துகிறதோ என்று அதனைக் களைந்து விட்டுத் தான் தூவுவார்களாம்,

ஒருநாள் அவர்களிலே ஒருத்தி தவறிப்போய் ஒரே ஒரு மலரை அதனுடைய கால்களைக் களையாது மறந்து போட்டு விட்டாள். அந்த ஒரே ஒரு மலரின் காம்பேகூட அவளை நெரிஞ்சி முள்ளென வருத்த தன்னுடைய உடுக்கை இடையே ஒடிந்து விழுவது போல அந்தக் கோல முகவதி துவண்டு தன் தோழியின் தோள்களிலே மயங்கிச் சாய்ந்தாள்.

* * *

"பிணையேர் மடநோக்கும் நாணும்
உடையாட்கு
அணி எவனோ ஏதில தந்து
—பொதுமறை

இவளுக்கு மானைப்போன்றே விழிகள் அமைந்திருந்ததால் இவள் நோக்கும் போது மான் மருண்டு நோக்குவது போன்றே இருந்தது. உடுக்கை இடையும் எடுத்த மார்பும், அமையப்பெற்ற இவளிடம் பெண்மை நலன் முழுமையுமே பூரித்து நின்றது போல, பெண்மைக்கு அணிகலனான நாணமும் நன்கு குடிகொண்டிருந்தது.

இந்தக் கன்னியின் மலர் உடல் தரும் கூடல் இன்பம் பெறுவதற்காக வந்த இந்தத் தலைவன் வரும் பொழுதே வழியில் வலம்புரி முத்தாலான முத்துமாலை ஒன்றையும் கூடவே வாங்கிக்கொண்டு வந்தான்,

வந்தவன் தன்னுடைய பள்ளி அறையிலே வந்து நின்ற அவளுக்கு அதைப்பூட்டப் போகும் பொழுது தான் செய்த தவறை உணர்ந்தான். இயற்கை அழகு நிறைந்த அவளுக்கு இந்தச்செயற்கை அழகு எதற்கு என்று வெட்கித் தலைகுனிந்தான்.

* * *

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள"—முப்பால்

நீண்ட நாட்களாகக் கடமையின் காரணமாக இந்தத் தலைவியைப் பிரிந்திருந்த தலைவன் ஒருநாள் மீண்டும் வந்தான். அவன் எப்போது வருவான் என்று காத்துக்கொண்டிருந்த இந்த கொடியனையாளோ அவன் வந்ததுமே தானே வலியச் சென்று தென்றலிற்கும் இடைவெளி இல்லாதவாறு அவனை இறுகத் தழுவி நின்றாள்.

அவள் கோல அழகை கண்ணால் உண்டு, அவளது கிளிப்பேச்சைக் கேட்டு, அவள் தந்த இதழ் அமுதம் உண்டு, அவள் மேனியில் வீசிய புது மணத்தை நுகர்ந்து, போரில் வேல் பாய்ந்த தனது தோளால் அவளது மென்தோளைத் தழுவியும் ஐம்புலன் இன்பத்தையும் அன்று அவள் ஒருத்தியிடமே பெற்றான் அவன்.

* * *

"நன்னீரைவாழி அனிச்சமே
நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"
—பொய்யாமொழி

மயிலாடும் சோலை ஒன்றில் காதற் புனலாட வந்த இந்த இலட்சியக் காதலர்கள் இருவரும் சிறிது நேரம் இன்பக் கடலாழ்ந்து கிடந்தனர். பின்னர் பெண்களுக்கே உரிய சாகசத்தால் அவன்மீது கோபம் கொண்டது போல இவள் ஊடத் துவங்கினாள்.

இவள் ஊடத் துவங்கவே தன் உயிரே போய் விட்டது போல துடித்துப்போன அவன், அவளை 'மானே மணியே' என்று போற்றத் துவங்கினான். ஒரு அனிச்ச மலரைப் பறித்துக்கொண்டு நீதான் மென்மையானது என்று எண்ணிக் கொள்ளாதே. இதோ நான் தழுவத் துடித்து நிற்கிறேனே இவள், உன்னிலும் மென்மையானவள்' என்று அவளை ஒரே அடியாகப் புகழத் துவங்கினான். புகழ்ச்சிக்கு இளகாத பூவையரும் இந்த உலகில் இல்லாததால் இதுவரை ஊடல் கொண்டு நின்ற அவள் மறுகணமே கூடத் தவித்து நின்றாள்.



# தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு

## நமது இதயம் கனிந்த அஞ்சலி

தமிழ் என்றாலே இனிமை என்றுதான் பொருள். அந்த இனிமைக்கும் இனிமை சேர்த்து அதனை என்றும், எதற்கும் துவளாத வளர்மொழியாகச் செய்து தந்தவர்கள் இவர்கள். இவர்களது அயராத முயற்சியால்தான் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் கன்னித் தமிழில் இருந்து உதித்து ஒன்று பலவாயிடினும் இன்னும்இது ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்துசிதையாது இருக்கிறது.


இன்றுதமிழில் ஒரு மறுமலர்ச்சி தோன்றிவிட்டது. தமிழன் தலைநிமிர்ந்து நிற்கத்தலைப்பட்டுவிட்டான். மாஸ்கோ முதல் மலேயா வரையில் எங்கெங்கு மிகப் பெரிய பல்கலைக் கழகங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் தமிழிற்கு என்று தனிப்பகுதிகள் தோன்றி விட்டன. உலகத்தில் தோன்றிய உயர் தனிச் செம்மொழிகளிலேயே தமிழிற்கு இணையான மொழி இல்லை என்று செக்கோஸ்லவாக்கிய கெமிலி சுவலபில் கூட ஆணித்தரமாகக் கூறி விட்டுச் சென்று விட்டார். பைந்தமிழ் மொழியின் பழம் பெருமையைக் காத்து அதனை இந்த புதுப் பொலிவிற்கு உயர்த்திய இந்த செந்தமிழ்ச் சான்றோர்களுக்கு – தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களுக்குத் தலைவணங்குகின்றோம். தமிழ் வளர்த்த இந்தப் பெரியார்களுக்கு நம் இதயம் கனிந்த அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.




சைவ மணங்கமழும் இந்தப் பெரியார் செந்தமிழ் மணங்கமழும் பைந்தமிழ் நூல்கள் இயற்றிய ஞானியாரடிகள்.



சென்ற நூற்றாண்டில் சிறந்த தமிழ் நூல்களை அச்சியற்றித் தமிழ் மக்களின் நன்றிக்குப்பாத்திரரான யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்.



செந்தமிழைக் கற்றும் தமிழ் நூல்கள் சில இயற்றியும் முக்கிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், தமிழ் வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்ட போப்பையர்.



சங்க நூலை ஒத்த, தங்க நூலான கச்சிக் கலம்பகத்தை இயற்றிய இராவ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார்.




எண்ணற்ற தமிழ்நூலை இயற்றிக் குவித்த (கம்பனுக்குப் பின் பிறந்த) கவிதைப் பெருங் கடல் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.



புலவர் பெயரையும் அவர் தம் நூலையும் தனி அட்டவணையாய்த் தமிழில் தொகுத்தும் முதல்முதல் தமிழில் எம். ஏ. தேர்வினில் வெற்றியும் பெற்ற டி. செல்வக் கேசவராய முதலியார்.



திருநெல்வேலித் தலபுராணம் இயற்றியவரும், நெல்லையப்ப கவிராயர் என்று அழைக்கப் பட்டவருமான நெல்லையப்ப பிள்ளை.



பார்புகழச் சித்திரகவி பாடும் இயல்பும் பாட்டிற்குப் பல பொருள் பகரும் இயல்பும் படைத்த அரசஞ் சண்முகம் பிள்ளை.



சிறந்த தமிழ் பயிற்றிச் செந்தமிழைக் காக்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைக் கட்டிக் காத்த தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.



அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் முதலிய நூலாசிரியரும் கவிஞருமான கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை.



நிலைவாட்சி என்னும் இயற்றமிழ் நூலும் இரவிவர்மன் என்னும் நாடக நூலும் பல்வேறு தமிழ் இன்னிசைப் பாடல்களுமியற்றிய முத்தமிழ் வித்தகர் தி. இலக்குமண பிள்ளை



செந்தமிழ்ச் சான்றோரும் தமிழ் வளர்த்த பெரியாருமான திருவையாறு தந்த பைந்தமிழ் அறிஞர் கு. சோ. சுந்தர தேசிகரவர்கள்.



தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தை தன்னேரத்தில் நிறுவிய நற்றமிழ் அன்பர் வ. திருவரங்கம் பிள்ளை.




சித்தாந்தப் பேராசிரியரும் சிவநேசச் செல்வருமான ஒண் தமிழ் வல்ல ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்.



1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர் என்ற நூலாசிரியரும், களவழி, கலிங்கத்துப் பரணி, விக்ரம சோழனுலா முதலிய வற்றை ஆங்கிலத்தில் பெயர்த்தவருமான வி. கனகசபைப் பிள்ளை பி. ஏ.



சூரியநாராயண சாஸ்திரிகள் என்றிருந்த தன் வடமொழிப் பெயரை பரிதிமாற் கலைஞன் என்றே மாற்றி வைத்துக் கொண்டு முத்தமிழில் ஒன்ருன நாடகத் தமிழ் வளர்த்த பெரியார் இவர்.




ஐம்பெருங் காப்பியங்களின் பின் தோன்றிய செந்தமிழ் நாடகக் காப்பியமான மனேன்மணியத்தின் ஆசிரியர் ஆலப்புழைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.



தமிழ் நாவலர் சரிதை என்னும் நூலைப் பதிப்பித்தவரும் இல்லாண்மை என்னும் உரை நடை நூலைச் செய்தவருமான தி. த. கனக சுந்தரம் பிள்ளை.



பெரிய புராணம், சிவஞான போதம் முதலிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும் சிறந்த கட்டுரையாளருமான ஏ. எம். நல்லசாமிப் பிள்ளை பி. ஏ. பி. எல்.



இந்தியத்துணைக் கண்டத்தின் இயல்மொழி முன்னுளில் செந்தமிழ்தான் என்று ஒப்பிலக்கணம் செய்து உறுதிப்படுத்திய மேனுட்டறிஞர் கால்டுவெல்.



திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரும் பிரதாப முதலியார் சரித்திரம், நீதி நூல் முதலியவற்றை இயற்றிய தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளை.



தாமே பயின்று தமிழ்ப் புலவராகி அருந்தமிழ்ப் பணியாற்றிய உரையாசிரியரும் நூலாசிரியருமான நடுக்காவேரி ந.மு. வேங்கடசாமி நாட்டார்.



ஓடி ஒளிந்த தமிழ் ஓலைச்சுவடிகளைத் தேடிப்பிடித்துத் திருத்தி அச்சிட்டுத் தமிழ் காத்த சான்ருேர் உ.வே.சாமிநாதையர்



தனித் தமிழைப் பின்பற்றித் தமிழ் வெறியைத் தூண்டும் இனிக்கும் தமிழ் நூல்கள் இயன்ற வரை இயற்றிய செந்தமிழ்ச் சிங்கம் மறைமலையடிகளார்.



பாரதிக்குப் பிறகு தமிழ் வளர்த்த பெரியாரான நாஞ்சில் நாடு தந்த நல்லறிஞர்—தேன் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை.



தமிழ் வளர்க்க என்றே பிறந்து தன்னுடைய மூச்சு உள்ளவரையில் தமிழ்ப் பணியே செய்து மறைந்த தமிழ்ச் சான்றோர் நமச்சிவாய முதலியார்.



முத்தமிழ் நூல்கள் பல இயற்றியவரும் இலங்கை தந்த எழிற் கவிஞருமான தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.



திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும் தமிழ் மொழி பற்றித் தமிழேடுகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்தவருமான இலாசரஸ் பி. ஏ.




பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற கவிதைகளை யாத்தவரும் கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவருமான முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி.



நகரத்தார் குலத்தின் நல் விளக்காய் வந்து நூல் பல இயற்றிய முதுபெரும் புலவர், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்.



ரா. இராகவையங்கார் மைத்துனரும் தமிழகராதிப் பதிப்பிற்குத் துணை புரிந்தவரும் சாசனத் தமிழ்க் கவி சரிதம், குறுந்தொகை விளக்கம், முதலியவற்றின் ஆசிரியருமான மு. இராகவையங்கார்.



எழுபது மொழி பற்றி அறிந்து "தமிழ்ச் சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி"யைச் செய்து புகழ் பெற்ற இலங்கைப் பெரியார் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.



எண்ணற்ற தமிழ் நூல்கள் எழுதி இந்நாட்டார் இதயங்களில் எல்லாம் வாழ்பவராக மாறிய செந்தமிழ்ச் சான்றோர் காஞ்சி நாகலிங்க முனிவர்.



அருந்தமிழ் இலக்கியமான திருக்குறளைப் பதிப்பித்த சான்றோர்களில் ஒருவரான மு. கந்தசாமிக் கவிராயர்.



தமிழையே உயிராகவும்—சைவத்தையே மூச்சாகவும் கொண்டு வாழ்ந்த கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் இவர்.



ஆங்கில அரசர் அளித்த அரும் பொருளால் பேரும் புகழும் பெற்ற பெருந்தமிழ் அகராதியை ஆறு பதிப்பாக அச்சிட்டு வெளியிட்ட எஸ். வையாபுரிப் பிள்ளை பி.ஏ. பி.எல்.



தமிழ்நாட்டில் தமிழ் மகனுய்ப் பிறந்து தமிழுக்கே தொண் டாற்ற விரும்புகிறேன் என்று காலஞ் சென்ற, கவிஞரும் புல வருமான இலங்கை நவநீத கிருஷ்ண பாரதியார்.



தமிழின் சிறப்பை மேனுட் டார் அறிய தமிழ் இந்தியா, தமிழ் இலக்கிய வரலாறு என்ற சிறந்த ஆங்கில நூல்களைச் செய்த திருநெல்வேலி எப். எஸ். பூரணலிங்கம் பிள்ளை.



வேற்று நாட்டுக்காரராக இருந்தாலும் தமிழின் மீது தணியாத காதல் கொண்டு நாளும் தமிழ்ப்பணி ஆற்றி மறைந்த லாசரஸ் இவர்.



எண்ணற்ற தமிழ் நூல்கள் வெளியிட்டதோடு ஆங்கிலத்தி லும் தமிழிலும் குறளுக்கு அரிய உரை வெளியிட்ட கோ. வடி வேலு செட்டியார் அவர்கள்.



யாழ்ப்பாண வைபவகௌமுதி என்ற நூலாசிரியரும் 'கல்லடி வேலுப் பிள்ளை' யென்ற சொல் லுக்கு உரியவருமான ஈழக் கவி ஞர் ஆசுகவி வேலுப்பிள்ளை.



ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்து, 'யாம் ஐவேம்' என்ற மொழி பெயர்ப் புப் பாடலை எழுதிய ஈழத்துக் கவிஞர் அழகசுந்தர தேசிகர்.



தமிழ்ப் பண்பாட்டுத் தகை மையை விளக்கும் ஆய்வு நூல் களோடு அறிவுரை நூல்கள் இயற்றித் தமிழ் நலங் காத்த தமிழ்த் தந்தை திரு வி. கல்யாணசுந்தர முதலியார்



உலகில் எந்த மொழியிலும் இல்லாத தமிழ் யாழிசையை ஆராய்ந்து அருந்தமிழ் யாழ் நூல் செய்து தமிழிசைக்குப் புத் துயிரூட்டிய யாழ்ப்பாணம் விபு லானந்த அடிகள்.



ஆங்கிலத்தில் 'மில்டன்' எழுதிய 'சொர்க்க நீக்க'த்தின் ஒரு பகுதியை உரை நடையாக வும் செய்யுள் நடையாகவும் இயற்றிய நூலாசிரியர் வெ. ப. சுப்ரமணிய முதலியார்.



அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்று விரிவுரையாள ரும் அருந்தமிழ்க் கலைஞரு மான எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்.



சென்னைக் கல்லூரி ஒன்றின் தலைமைத் தமிழாசிரியையாய் இருந்து சங்கத் தமிழ் வளர்த்த அவ்வையைப் போல தற்காலத் தமிழ் வளர்த்த ஈ. டி. இரா ஜேஸ்வரி.



என்றும் அழியாத பைந்தமிழ் நூல்கள் எழுதிப் பொன்னுடை யுடன் புகழுடையும் படைத்து நின்ற கார்மேகக் கோனர் அவர்கள்.




## "அம்மா, போயிட்டு வாரேன்..."

தென்னிந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் இரு கோடி மக்கள் பஸ் பிரயாணம் செய்கின்றனர். முக்கியமான ஒவ்வொரு கிராமத்துக்கும் திறமையான பஸ் போக்குவரத்து உண்டு.

பஸ் பிரயாண போக்குவரத்தில் ஒரு தரத்தை நிர்ணயிப்பது மட்டும் போதாது. இதனை 1920ஆம் ஆண்டு முதல் டி.வி.எஸ் உணர்ந்திருக்கிறது. புது பஸ் கம்பெனிகள் பலவற்றை அமைப்பதற்கு ஆக்கம் அளித்த ஸ்தாபனம் டி.வி.எஸ். புதுக் கம்பெனிகளுக்கு வேண்டிய பொருளாதார உதவி செய்தல், பஸ் பாடிகளைக் கட்டுதல், பஸ்களைச் சரிவரப் பராமரிப்பதற்கு வேண்டிய பயிற்சி யளித்தல், டயர்களை ரீடிரெட் செய்து புதுப்பித்தல், தேய்ந்துபோன உருப்புக்களுக்குப் புத்துயிரளித்தல் முதலிய பணிகளைச் செய்ய தென்னகத்தில் டி.வி.எஸ் ஸ்தாபனம் தோன்றியது. தென்னிந்தியாவின் சாலைப் போக்கு வரத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்க டி.வி.எஸ் ஸ்தாபனங்களின் வளர்ச்சி ஓர் அளவு கோலாகும். மோட்டார்த் தொழிலில் நாள்தோறும் பெருகிவரும் தேவைகளை டி.வி.எஸ் ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்கின்றன.

பஸ் பிரயாணத்தில் பயமில்லை; பத்திரமாகப் போய்ச் சேரலாம்; அதிலும் குறித்த காலத்தில் போய்ச் சேரலாம். இதனாலேயே "போயிட்டு வாரேன்" என்று சொல்லும் பொழுது மனஉறுதி செயலாக உருவாகிறது.

### டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்

**டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்**
பிரைவேட் லிமிடெட், மதுரை-திருச்சி
திருநெல்வேலி-புதுக்கோட்டை-
சேலம்-கோயமுத்தூர்
மோட்டார் வாகன விற்பனையாளர்கள்
ஆட்டோமொபைல் என்ஜினியர்கள்
மற்றும் பாடி நிர்மாணிப்பாளர்கள்

**மதருஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ்**
கம்பெனி லிமிடெட், மதருஸ்

**சதர்ன் ரோட்வேஸ்**
பிரைவேட் லிமிடெட், மதுரை
பஸ், லாரி போக்குவரவு ஸ்தாபனம்

**மதருஸ் ஆட்டோ சர்வீஸ்**
பிரைவேட் லிமிடெட்
மதருஸ்-பெங்களூர்
மோட்டார் உருப்பு விற்பனையாளர்கள்

**சுந்தரம் மோட்டார்ஸ்**
பிரைவேட் லிமிடெட், மதருஸ்
பெங்களூர்-செகந்திராபாத்
பியட், பிளைமத், பார்கோ, லேலண்ட்
மற்றும் பெர்கூசன் டிராக்டர்கள்
இவைகளின் விற்பனையாளர்கள்

**சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்**
பிரைவேட் லிமிடெட், புதுக்கோட்டை
மதருஸ்-கோயமுத்தூர்
சீர்கேடான டயர்களை
புதுப்பித்துத்தரும் ஸ்தாபனம்

**சுந்தரம் பைனான்ஸ்**
பிரைவேட் லிமிடெட், மதருஸ்

**இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் ஆக்ஸெஸரீஸ்**
பிரைவேட் லிமிடெட், மதருஸ்
அகில இந்தியாவிற்கு ஜி. எம்.
(G. M.) உறுப்பு விற்பனையாளர்கள்

TVS

**டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை**




# தென்னாப்பிரிக்காவில்

'லக்ஷ்மி'

(டாக்டர் திரிபுரசுந்தரி)

நெட்டால், ஆரஞ்சு ப்ரிஸ்டேட், கேப், டிரான்ஸ்வால் என்று நான்கு ராஜதானிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தென்னாப்பிரிக்காவில், நெட்டாலில் தான் தமிழர்கள் அதிகம் வசிக்கின்றனர். அதுவும் டர்பன் நகரில்தான் தமிழர்களின் எண்ணிக்கை மிகவும அதிகமாகக் காணப்படுகின்றது.

தென்னாப்பிரிக்காவின் இன்றைய தமிழ் சமூகத்திலே வாழ்கின்ற இவர்களில் பெரும்பாலானவர்கள், நூறு வருஷங்களுக்கு முன்பு நெட்டால் கரும்புத் தோட்டங்களில் உழைக்க தாய்நாட்டைவிட்டு புறப்பட்டுவந்த தொழிலாளிகளின் சந்ததியார்கள். 'கரும்புத் தோட்டக் கூலி' என்ற நிலையினின்று கல்வியினாலும், வாலிபத்தினாலும் உயர்ந்து தற்சமயம் நாட்டில் வெவ்வேறு பாகத்தில் பலவித தொழில்களில் ஈடுபட்டவர்களாக செல்வச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இயற்கை வளமும் செயற்கை வளமும் மிக்க இந்நாட்டில் சாதாரண எளிய மக்களிடம்கூட பட்டினி, பசி என்ற ஓலக்குரலை நாம் கேட்கவே முடிவதில்லை. 'அம்மா! இரண்டு நாட்களாகப் பட்டினி, என்று கையேந்திக்கொண்டு ஒட்டிய வயிறும் உள்ளடங்கிய கன்னங்களும், பஞ்சடைந்த விழிகளுமாக வந்து நின்ற பரதேசியை நான் இங்கு வாழ்ந்த இந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு தடவைகூட சந்திக்கவேயில்லை. ஆனால் இதை விட கோரமாக உள்ளத்தையும் ஆத்மாவையும் வாட்டும் ஒருபசி மிகவும் கடுமையாக இங்குள்ள மக்களை வாட்டி வதைப்பது உண்மை. இனஒதுக்கல் சட்டம் காரணமாக வெள்ளைக்காரர்களுக்கு உள்ள உல்லாசமான பொழுதுபோக்குகள், ஐரோப்பியர் அல்லாதாருக்குக் கிட்டுவதேயில்லை. உள்ளத்திற்கு உவகை ஊட்டும் நாடகங்களையோ, நடனத்தையோ கண்டுகளிக்க வழியில்லை. நல்ல சங்கீதத்தை காதுகள் கேட்க வாய்ப்பு இல்லை.

எனவே கலை உணர்ச்சியிலே கட்டுண்ட உள்ளத்திற்கு இதைவிட பட்டினி வேறு வேண்டுமா? இதற்காக நாம் இங்குள்ள தமிழர்கள் மீது குற்றம் காண முடியாது. நூறு வருஷங்களுக்கு முன்பு இங்கே குடியேறிய இவர்களின் முன்னோர்கள் கரும்புப் பயிரை இந்நாட்டில் வளர்க்க வந்தார்களே ஒழிய, கலையை வளர்க்க முன் வரவில்லை என்னும் இவர்களது சந்ததியார் தங்களால் இயன்ற வரை இயல், இசை, நாடகத் தமிழை வளர்க்க முயன்று கொண்டிருக்கின்றனர் — இவர்களது முயற்சியை நாம் பாராட்ட வேண்டியது அவசியமாகும்.

நாள் முழுவதும் உழைத்துவிட்டு வீடு திரும்பும் தொழிலாளிக்கு இங்குள்ள ஒரே ஒரு பொழுதுபோக்கு பயாஸ்கோப்பிற்கு போவதுதான், சினிமா என்பதை இங்கு பயாஸ்கோப் என்று அழைக்கிறார்கள்) நிற ஒதுக்கல் சட்டம் காரணமாகஐரோப்பியரும், ஐரோப்பியர் அல்லாதாரும் ஒரே படமாளிகையில் படம் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. எனவே அவரவர்களுக்கு தனித் தனியே படமாளிகைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஐரோப்பியர், ஐரோப்பியர் அல்லாதாரின் படமாளிகையில் படம் பார்க்கலாம். ஆனால் ஐரோப்பியர் அல்லாதார்

வெள்ளைக்காரர்களுக்கு என கட்டப்பட்டுள்ள படமாளிகையில் படம் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆங்கிலப் படங்கள் எல்லாம் சாதாரணமாக ஐரோப்பியர் அல்லாதார் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. சென்சார் வடிகட்டித் தேர்ந்தெடுத்த பல படங்கள்தான் ஐரோப்பியர் அல்லாதார் பார்வைக்கு கிட்டுகின்றன. சமீப காலம் வரை 'க்குவோ வாடிஸ்' எனும் எம். ஜி. எம். திரைச்சித்திரம ஐரோப்பியர் அல்லாதார் பார்க்க கிட்டவில்லை.

டர்பன் நகரில் ஐரோப்பியர் அல்லாதாருக்கு என கட்டப்பட்டுள்ள பல படமாளிகைகளில் 'ஷாலுஹான்' என்னும் படமாளிகை கண்ணையும் கருத்தையும் கவர்வதாக அமைந்துள்ளது. நான்கு வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இம்மாளிகை இந்தியர்களின் கடைகள் நிறைந்த 'கிரேஸ்டீரிட்' எனும் வீதியின்முகனையில் எழுபத்தைந்து அடி உயரத்தில் வானை நோக்கி கம்பீரமாக நிமிர்ந்துநின்று கொண்டிருக்கிறது. ஒரே சமயத்தில் இரண்டாயிரத்து நானூறு பேர்கள் சொகுசானரப்பர் திண்டின்மீது உல்லாசமாக சாய்ந்துகொண்டு படத்தைக் கண்டு களிக்கும் வசதியுடன், நடுக்கும் குளிரையோ, எரிக்கும் வெய்யலையோ மக்கள் உணராதிருக்க உள் முழுவதும் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிறது. இடைவேளையில் விளக்குகள் போடப்பட்டதும் நம்மைச் சுற்றி ஒருமுறை பார்த்தால் கண்களுக்கு விருந்தாக சுவர் முழுவதும் தாஜ் மஹாலின் சித்திர வேலைப்பாடுகள் கருத்தை கவர்கின்றன. டிக்கெட் வாங்கும்வரை மக்கள் அமைதியாக உட்கார்ந்திருக்க அமைக்கப்பட்டுள்ள முன்னறை அலங்காரம் ஒன்றே பார்க்க ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். எனவே மக்கள் இப்படி மாளிகையைப் பெரிதும் ஆதரிக்கின்றனர்.

இதைத் தவிர டர்பன் நகரில் வேறு ஒரு பகுதியான கிளார்வுட் என்னும இடத்தில் திறந்தவெளி கொட்டகை (Drive in Cinema) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. காரை ஓட்டிக்கொண்டு உள்ளே சென்று காருக்குள் குடும்பத்துடன் உட்கார்ந்து • சாப்பிட்டுக் கொண்டே படம் பார்க்க இயலுவதால் கோடை காலத்தில் மக்கள் இதை மிகவும் ஆதரிக்கின்றனர். பிளாஸ்டிக்குகளில் சூடாக காப்பியும், டிபன் செட்டில் இட்டலியும் சட்னியும் நிரப்பிக்கொண்டு பல முறை இரவு வேளையில் நாங்கள் நண்பர்களைத் திரளாக காரில் அடைத்துக்கொண்டு இங்குபடம் பார்க்கச் சென்றிருக்கிறோம். பின்னல் இருப்பவர்கள் என்ன சொல்வார்களோ, சப்தம் போடக் கூடாது என்ற பயமின்றி உரத்த குரலில் விமர்சனம் செய்து கொண்டு இட்டலியை சுவைத்து, நாங்கள் மகிழ்ந்த நாட்கள் பலவாகும்.

பொதுவாக ஐரோப்பியர் அல்லாதாருக்கு என கட்டப்பட்டுள்ள படமாளிகைகள் அனைத்திலும் ஆங்கிலப் படங்கள்தான் அதிகம் காட்டப்படுகின்றன. அடுத்த படியாக அதிகம் திரையிடப்படுவது இந்திப்படங்கள். தமிழ்ப் படங்கள மிகவும் குறைவு. தெலுங்குப் படங்களோ ஐந்து வருஷத்திற்கு ஒன்று அல்லது இரண்டு என்ற விகிதத்தில் காணமுடிகின்றது. அத்தனை பஞ்சம்!

சில வருஷங்களுக்கு முன்பு இங்கு தமிழ்ப் படங்கள் திரையிடப்படுவது மிகவும் அபூர்வமாகிவிட்டது. அந்தக் குறையைத் தீர்க்க 'நாஸ்' என்னும் சினிமா கொட்டகை முன்வந்து அடுத்தடுத்து பல தமிழ்ப் படங்களைத் திரையிட்டு மக்களை மகிழ்விக்கவே, மற்ற படமாளிகைகளும் போட்டியிட்டுக் கொண்டு தமிழ்ப் படங்களை திரையிடத் தொடங்கின. இதனுல்தமிழ் மக்களில் பொழுது போக்குகள் இல்லாத குறை ஓரளவு நிவர்த்தியாகியது என்று சொல்லவேண்டும்.

தமிழ்ப் படங்களைக் காண தவிக்கும் தமிழர்களின் தணியாத தாகத்தைச் சில சமயம் படமாளிகை முதலாளிகள் தங்கள் பெட்டியை நிரப்பும் வழியாக உபயோகிப்பதும் உண்டு. தீபாவளி, கிருஸ்மஸ் போன்ற பண்டிகைகள் நெருங்கும் சமயம் தொடர்ந்து சில வாரங்கள் எந்த தமிழ்ப் படத்தையும் திரையிடாது இருந்து விடுவார்கள். சாதாரணமாக இங்கே ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம். அன்று படமாளிகைகள் மூடப்பட்டு விடுகின்றன. தீபாவளியோ, கிரிஸ்மஸ விடுமுறை தினமோ ஒரு திங்கள் கிழமையில் வந்து வாய்த்துவிட்டால் ஞாயிற்றுகிழமை இரவு பனிரெண்டு மணிக்கு மேல் படம் திரையிட சட்டம் அனுமதிக்கின்றது. எனவே இந்த படமாளிகை முதலாளிகள் பொருள் குவிக்கும் என தாங்கள் எண்ணும் தமிழ்ப் படங்களை அதுவரை பத்திரமாக பெட்டியில் வைத்திருந்து தீபாவளி அல்லது கிரிஸ்மஸ் ரிலீஸாக 'நடு' இரவு' காட்சிகளில் திரையிடுவது மிகவும் சகஜம்.

"உங்கள் உள்ளத்தைக் கவர்ந்த சிவாஜி கணேசனையும், அழகி பத்மினியையும், மூச்சு! தங்கவேலுவையும்...படத்தில்...கொட்டகையில் நடுஇரவு காட்சியில் சந்திக்கலாம்!" என்று ஒரு விளம்பரம் வந்து விட்டதோ போதும். எள் விழக் கூட இடமின்றிக் கூட்டம் கொட்டகைக்குள் குவிந்து விடும். தாய்நாட்டில் ஆடி, ஓடி ஓய்ந்து பெட்டிக்குள் சில வருடங்களுக்கு முன்பே புகுந்து கொண்ட படங்கள் எல்லாம் தென் ஆப்பிரிக்காவிற்கு வந்ததும் புத்தப் புது தீபாவளி, கிரிஸ்மஸ் ரிலீஸாக மாறிவிடுகின்றன! இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் ஆரம்பிக்கும் நடு இரவு காட்சி முடிய மணி நான்காகி விடும். மக்கள் வீடு போய்ச் சேர விடிந்து விடும். "இன்று விடுமுறை தினந்தானே! நமது நண்பர்களைக் கண்டு சேமம் விசாரித்து விட்டு வருவோம் என நாம் கிளம்பினல் நமது நண்பர்களைக் காணவே முடியாது. இரவு முழுவதும் கள்ளிரவுக் காட்சிக்காகக் கண் விழித்துவிட்டு அடுத்த நாள் முழுவதும் அதன் சோர்வு தீரத் தூங்கிக் கொண்டு இருப்பார்கள் அவர்கள்.

தென் ஆப்பிரிக்காவின் தமிழர்களின் ரசிகத்தன்மை நமக்கு மிக்க வியப்பூட்டுவதாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. குடியேற்ற நாட்டில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை நிலையில் மேனுட்டு நாகரிகம் மேலோங்கிப் போய் விடுவதினுல் தாய்நாட்டுத் தமிழர்களின் கலாசார பண்பாட்டின் முழுக் கருத்தையும் இவர்களால் உணர்ந்து கொள்ள இயலுவதில்லை. இதனுல் இவர்களின் ரசனையே வெகு விசித்திரமாக உள்ளது. அழவேண்டிய கட்டத்தில் இவர்கள் சிரிப்பதும், சிரிக்க வேண்டிய கட்டத்திலே வாயை மூடிக் கொண்டு

விழிப்பதையும் நாம் கண்டு ஆச்சர்யமடைகிறோம்.

மதுரை வீரன் படத்திலே காலஞ் சென்ற கலைவாணர் ஒரு இடத்தில் பாட ஆரம்பிக்கிறார் அல்லவா? திருமதி மதுரம் சட்டென்று ஒரு துணியை அவர் முன் விரித்து போட்டு விட்டு 'ம்! பாடுங்க!' என்கிறார் அல்லவா! அந்த காட்சியைக் கண்டதும் நம்மையறியாது நாம் பக்கென்று சிரித்து விடுகிறோம். 'மதுரை வீரனை' நான் இந்நாட்டில் பல முறை சென்று பார்த்தேன். ஆனால் ஒருமுறை கூட படம் பார்ப்பவர்கள் இந்த கட்டத்திலே சிரித்ததை நான் காணவேயில்லை.

நகைச்சுவையூட்டும் நல்ல வசனங்களையோ, நடிப்பையோ கண்டு சிரிக்காவிட்டால் போகட்டும் உள்ளத்தை உருக்கும் கட்டங்களை அனுபவித்து அழுகிறார்களா? என்றால் அதுவும் இல்லை. அதற்கு பதில் கொட்டகை இடிந்து விழும்படி சிரித்து நம்மை பிரமிக்க வைத்து விடுகிறார்கள்!

பதிபக்தி படத்திலே உருக்கமானதொரு கட்டத்தில் சிவாஜி கண்ணீர்விட்டுக் கதறிபுலம்புகிறார் படம் பார்க்கும் கோழையுள்ளப் பெண்களான நாங்கள் சிலர்கூடச் சேர்ந்து கண்ணீர் விடத்தொடங்கினோம். அடுத்த கணம் கொட்டகை அதிரும்படி ஒரே சிரிப்பு! பிரமித்துப்போய் நாங்கள் ரகசியமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விசாரித்ததில் "ஆண் பிள்ளை அழுவதாவது வேடிக்கை! வேடிக்கை! என்று சொல்லி மேலும் மேலும் சிரித்தார்கள். இன்னும் சில சமயம் அவர்களின் சிரிப்பு நமக்குக் கோபத்தை ஊட்டுவதாகவும் இருக்கிறது.

அஞ்சலிதேவி 'பெண்' எனும் படத்திலே மன சஞ்சலத்துடன் நித்திரை செல்ல கட்டிலின்மீது சாய்ந்துகொள்ளும் ஒரு கட்டம் வருகின்றது. 'பெண்' படம் இங்கே திரையிட்டபொழுது அஞ்சலி அவர்கள் படுக்கைமீது சாய்ந்து கொண்டு போர்வையை இழுத்து மூடியதும் சபையில் கொல்லென்று ஒரு சிரிப்பு காதை பிளந்தது. மெல்ல அதைப்பற்றி விசாரித்தபோது எங்களுக்கு கோபம் தாளத்தான் முடியவில்லை. படுக்கையில் படுக்கும்பொழுது தமிழ் நாட்டில் பெண்கள் 'இரவுஉடுப்பு' அணியாது கட்டின புடவையுடன் படுத்து உறங்குகிறார்களே! அடக் கண்ராவியே நாகரிகமே தெரியாத காட்டுமிராண்டிகள்! என எண்ணி சபையோர்கள் சிரித்தனராம்; தமிழரின் நாகரீகம் என்பது என்ன என்பதை உணராத பெருங்குறையினால் ஏற்பட்டது இந்த பேய்ச் சிரிப்பு என உணர்ந்தபோது தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள எங்களுக்குக் கோபம் ஏற்படாதா?

வணங்காமுடி என்ற படத்தில் ராஜ சுலோசனா அரச சபையில் அம்பிகா எனும் நங்கையாக நடனம் ஆடும் காட்சி சினிமா விசிறிகள் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். மண்டலமிட்ட காலுடன் இடையில் கைகளைத் தூக்கி பாதங்களைக் குதித்து தட்டி கழுத்தை ஆட்டியதும் சபையிலே எழுந்த சிரிப்பு வானத்தைப் பிளந்தது. பரதநாட்டியம் என்பது ஒரு கோணங்கி நடனமா? என்று அநேகருக்கு ஒரு திகைப்பு. அதனால் எழுந்த விபரீத சிரிப்பு இது. ஆனால் ஒரு ஆச்சர்யம். இதே அன்பர்கள் தங்கள் பிள்ளைகள் இடுப்பை வளைத்து உடலைக் குலுக்கி, முகத்தைச் சுருக்கி, ஆணும் பெண்ணும் சேர்ந்து கட்டித் தழுவிக் கொண்டு ராக் அண் ரோல் ஆடுவதைக் கண்டு கை தட்டி உற்சாகப்படுத்தி மகிழ்ந்து போகின்றார்கள். மேனாட்டவர்கள் செய்வது எல்லாம் உயர்ந்தது. கீழ்நாட்டவர் செய்வது எல்லாம் தாழ்ந்தது என்ற அடிமைத் தனத்தினால் ஏற்பட்டதானதொரு தாழ்ந்த மனப்பான்மை தான் இதற்குக் காரணமாகும். ஆனால் ஒன்று! எதற்கு சிரித்தாலும் சரி எதற்கு அழுதாலும் சரி, எந்த தமிழ்ப்படத்திலாவது "சொன்னான் சுரைக்காய்க்கு உப்பில்லை என்று" என்ற வசனம் வந்துவிட்டதோ போதும், கொட்டகை பொடியாகிவிடும்படி பெரும் சிரிப்பு பல நிமிஷங்கள் நீடித்து அலைபாய்ந்துவிடும். இதைக் கண்டு நாமும் விழுந்து விழுந்து கூடச் சிரிப்போம் என்பது உண்மை!

தென் ஆப்பிரிக்க தமிழர்களின் கலாசார பண்பாடு உயர தமிழ் சினிமாப் படங்கள் பெரிதும் உதவுகின்றன என்றால் மிகையேயில்லை. தொடர்ந்து தமிழ்ப் படங்களைப் பார்த்ததன் பயனால் இங்குள்ள தமிழர்களுக்குத் தமிழ்மொழிமீது பற்று ஏற்பட்டு உள்ளது. சிவாஜி கணேசனைப்போல் தமிழைப் பேச வேண்டும், பத்மினியைப் போல் சோளி தரிக்க வேண்டும். சாவித்திரியைப்போல் கூந்தலைப் பின்னிவிட்டு குஞ்சலம் வைத்து அலங்கரித்துக் கொள்ள வேண்டும், என்று தமிழ்மீதும் தமிழ் நாட்டு பழக்க வழக்கங்கள்மீதும் ஆசை கொள்ளையாக ஏற்பட்டு உள்ளது. சங்கீதம், நடனம் இவைகளைக் கற்க தீவிரமாக தற்சமயம் இங்கு எழுந்துள்ள ஆவலுக்கும், முயற்சிகளுக்கும் தமிழ்ப் படங்கள்தான் காரணமாகின்றன. எல்லாவற்றையும்விட இங்குள்ள தமிழர்கள் அநேகருக்கு ஒரு பெரும் ஆசை உண்டு. தங்களுடைய வாழ்நாளில் எப்பொழுதாவது தாய்நாடு செல்ல நேரிட்டால் கட்டாயம் ஒரு முறை தமிழ் சினிமா நடிகர்கள் அனைவரையும் நேரில் சந்தித்து விட வேண்டும், கூட சேர்ந்து நின்று ஒரு போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும், அதை இங்குள்ள பத்திரிகைகளில் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தத் தீராத ஆசையாகும்! இந்நாட்டுத் தமிழர்களுக்கு மிகவும் பிடித்தமான நடிகர்கள் கடவுளுக்கு அடுத்தபடியாகக் கருதி இருதயத்திலேயும் வீட்டு முன்னறையிலும் வைத்து பூஜிக்கப் படுகிறவர்கள் காலஞ்சென்ற கலைவாணர், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பத்மினி, சாவித்திரி முதலியோர். பாடகர்கள், காலஞ் சென்ற எம். கே. டி. டி. கே. பட்டம்மாள், கே. பி. சுந்தராம்பாள், சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, ஜிக்கி, சுசிலா, எம். எல். வி., எம். எஸ். முதலியோர்கள்.



# கோயில் மணி

கி.வா. ஜகந்நாதன்

எங்கே பார்த்தாலும் நசநச என்று ஈரம். ஐப்பசி அடை மழை என்பது சரியாக இருக்கிறது. வீதியில் நடந்து செல்வதற்கே அருவருப்பாக இருக்கிறது. ஈசுவரன் கோயிலுக்குப் போகும் கூட்டம் குறைவு; ஆனால், முருக முதலியார் சரியாகச் சந்தியா காலத்துக்குப் போகாமல் இருக்க மாட்டார். சூரியன் மலைவாயில் விழும் நேரத்தில் தரிசனம்செய்தால் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் உண்டு என்று யாரோ அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர் விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டார்.

ஊரில் இரண்டு கோயில் உண்டு. ஒன்று சுப்பிரமணிய சுவாமி கோயில்; மற்றொன்று சிவன் கோயில். சிவன் கோயில் பெரிது; சுப்பிரமணிய சுவாமி கோயில் அவ்வளவு பெரிதன்று. ஊரின் எல்லையில்இருக்கிறது முருகன் கோயில். ஊரைச் சார்ந்து இருக்கிறது சிவன் கோயில். முருகன் கோயிலுக்குப் போகிறவர்களுக்குப் பக்தி அதிகம் என்றுதான் சொல்லவேண்டும். மழையானாலும், வெயிலானாலும் அத்தனை தூரம் நடந்து செல்வதற்கு எல்லோருக்கும் வருமா?

முருக முதலியார் இரண்டு கோயில்களுக்கும் போகிறவர். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சஷ்டி கார்த்திகைகளில் முருகன் கோயிலுக்குப் போவார். மற்ற நாட்களில் சிவன் கோயிலுக்குப் போவார். எங்கே போனாலும் சாயங்கால பூசைக்குத்தான் போவார்.

கோடைக்காலத்தில் வானம் மாசு மறுவின்றி இருக்கும். சூரியன் மலைவாயிலில் விழும்நேரம் நன்றாகத் தெரியும். அந்தச் சமயத்துக்குச் சுவாமிக்குத் தீபாராதனை செய்ய வேண்டுமென்று முதலியார் குருக்களை வற்புறுத்துவார். அவர் சிவன் கோயிலுக்குப் பரம்பரைத் தருமகர்த்தா. கூடிய வரையில் குருக்கள் அப்படியே செய்வார். சூரியன் தெரியாமல் மந்தாரமாக இருந்தாலும் மழை பெய்தாலும் அஸ்தமன நேரம் குருக்களுக்குத் தெரியாது. ஏதோ ஒரு மதிப்பாக ஆறேகால் மணி, ஆறரை மணிக்குத் தீபாராதனை செய்வார்.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அப்படி அன்று. அங்குள்ள முத்துசாமி குருக்கள் சாயங்கால தீபாராதனை செய்தாரானால் நிச்சயமாகச் சூரியன் அந்தக் கணத்தில் மலைவாயில் விழத்தான் வேண்டும். ஒரு நிமிஷம் இந்தண்டை அந்தண்டை இருக்காது. முன்பே அபிஷேகம் செய்து அலங்காரம் பண்ணி நைவேத்தியமும் பண்ணி விடுவார். மணியடித்தது போல் டாண் என்று சூரியாஸ்தமன வேளையில் கற்பூர ஆரத்தி காட்டுவார். சூரியன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அவர் தீபாராதனை செய்யும் நேரத்தில் அவன் மறைவான் என்பதில் அணுவளவும் ஐயம் இல்லை.

இது எப்படி அவரால் முடிந்தது என்று வியப்படையலாம். இது ஒன்றும் பிரமாதமான காரியம் அன்று. முத்துசாமி குருக்களுக்குச் சோதிடம் வரும். ஜாதகம் எழுதித் தருவார். கணிதமும் தெரியும். இன்ன அட்சாம்சத்தில் உள்ள ஊரில் இன்ன நாளில் அகஸ்–அதாவது பகல்நேரம்– இவ்வளவு, இது உதய காலம், இது அஸ்தமன காலம் என்ற கணக்கெல்லாம் அவருக்குத் தெரியும். முன்கூட்டியே அவர் இதை ஒரு வாரத்துக்குத் தெரிந்து எழுதி வைத்துக்கொள்வார். கோயிலில் கடியாரம் இருக்கிறது. அஸ்தமனத்துக்குரிய நேரத்தில் கணக்காகக் கற்பூர தீபம் காட்டும்படி பூசையை ஒழுங்கு பண்ணிக் கொள்வார்.

சிவன் கோயில் சாமிநாத குருக்களுக்கு இது தெரியாது. முத்துசாமி குருக்களிடம் இந்தக் கணக்கைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணமும் தோன்றவில்லை.

முருக முதலியார் அடிக்கடி அவரிடம் குறை கூறுவார். "அந்தக் கோயிலில் டாண் என்று அஸ்தமன சமயத்துக்குச் சாயங்கால பூசை நடக்கிறது நீர் நிதானமாக இருட்டின பிறகு செய்கிறீரே; சிவன் கோயிலில் பிரதோஷ காலம் மிகவும் முக்கியம் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. அந்தப் பூசைக்கு எவ்வளவு மகத்துவம்! நீர் இதையெல்லாம் கவனிக்கிறதே இல்லை" என்று கடிந்து கொள்வார்.

அந்தக் குருக்கள் என்ன செய்வார்! சூரியன் தெரியாத காலங்களில் ஆறேகாலுக்குப் பூசையைச் செய்வார். முருக முதலியாருக்கு அகஸ்கணக்கு என்று ஒன்று இருப்பதே தெரியாது. வானம் மூடியிருக்கும்போது எப்படித் தெரிந்து கொள்ள முடியும் என்றும் யோசிக்கவில்லை. அவருக்கு ஒரே குருட்டு எண்ணம்; "அந்தக் குருக்கள் செய்யும்போது இந்தக் குருக்கள் ஏன் செய்யக்கூடாது?" என்பதுதான். அதைவாய் விட்டுப் பலமுறை சொல்லிவிட்டார்.

அன்று சோமவாரம். விடாமல் மழை பெய்து கொண்டே இருந்தது. வெறும் சோமவாரம் அன்று; கார்த்திகைச் சோமவாரம். கார்த்திகை முதல் தேதியே சோம வாரமாகவந்து விட்டது. ஐப்பசி மழை இன்னும் தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. முருக முதலியார் கோயிலுக்குப் போனார். அப்போதுதான் சாமிநாத குருக்கள் அபிஷேகம் தொடங்கியிருந்தார். "ஏன் ஐயா, இதற்குள் அபிஷேகம் முடிந்திருக்கும் என்றல்லவா நினைத்தேன்? மணி ஆறரை ஆகிறதே!" என்றார்.

"நான் என்ன செய்வேன்! ஆறேகாலுக்கே தீபாராதனை ஆகிவிடும். ஆனால் இந்தக் கடியாரம் ஓடவில்லையே!" என்று கோயிலில் இருந்த ஜாம்பவான் கடிகாரத்தைக் காட்டினார். முதலியாருக்குக் கோபம்வந்து விட்டது. அசுவமேத யாகபலன் கிடைக்காமல் போய்விட்டதல்லவா? ஏதோ கடபுடா என்று பேசி விட்டுப் போய்விட்டார். அந்தக் கோபத்தில் நேரே சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் போனார். அங்கே பூசையெல்லாம் உரிய காலத்தில் ஆகியிருந்தது.

சாமிநாத குருக்களுக்கு அன்று மனசு சரியாகவே இல்லை. தர்மகர்த்தா கோபித்துகொண்டுபோனது அவர் மனசை உறுத்திக்கொண்டேயிருந்தது. "எல்லாம் ஈசுவரன் செயல்" என்று எண்ணிக்கொண்டு அன்று இரவுமுழுவதும் அவர் தூங்கவில்லை.

## 2

சாமிநாத குருக்கள், கோயிலுக்கு ஆராய்ச்சி மணி வாங்கிக்கட்டவேண்டும் என்று முயற்சி செய்கிற செய்தி ஊரே பரவியிருந்தது. முருக முதலியார், "இவர் ஒழுங்காகப் பூசை செய்வது தட்டுக்கெட்டுப் போகிறது! இதற்கு மணி வேறு" என்று அலுத்துக்கொண்டார். குருக்களோ திட்சை




முதலில் குருக்களுடைய விரதத்தைக் கேட்டுப் பரிகசித்தவர்கள் இப்போது வியப்படைந்தார்கள். அவர் விரதத்தை நிறைவேற்றத் தாங்களும் துணை செய்ய முன் வந்தார்கள். பக்கத்து ஊர்களுக்குப் போகும்போதெல்லாம் கோயிலில் பெரிய மணி கட்டும் முயற்சியை எடுத்துச் சொன்னார்கள். எப்படியோ பதினாயிர ரூபாய் சேர்ந்து விட்டது. குருக்கள் நன்றாக விசாரித்துக் கும்பகோணத்தில் கோயில் மணி செய்து பழக்கப்பட்ட இடத்தில் மணி வார்க்க ஏற்பாடு செய்து விட்டார்.

வளர்க்கத் தொடங்கினார். "எதற்குத் தீட்சை?" என்றால், "ஆராய்ச்சி மணி கட்டவேண்டும்; அது கட்டின பிறகு தான் தீட்சை எடுப்பேன்" என்று சொல்லிக் கோயிலில் ஓர் உண்டியலை வைத்துவிட்டார். தினமும் ஒருவேளை சாப்பாடு என்ற நியமத்தை வேறு மேற்கொண்டார். ஊரில் உள்ளவர்கள் பல வெண்கலப்பாத்திரங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பலர் அவருடைய உண்மையான விரதத்துக்கு மனம் உருகிப் பணம் கொடுத்தார்கள்.

மணியின் விலை 8000 ரூபாய். இரண்டரை அடி உயரம். அடித்தால் நாலு மைல் கேட்கும். எட்டாயிரம் ரூபாய் மணிக்குக் கட்டிடம் முதலியன நாலாயிரம். எல்லாம் பதின்மூவாயிரம் திட்டம் போட்டாகி விட்டது. பணம் வரவேண்டுமே!

தீட்சையோடு அவர் கொண்ட விரதங்களில் மற்றொன்று அம்பிகைக்கு அர்ச்சனை செய்வதில் வரும் வரும்படியை மணிக்குப் போட்டு விடவேண்டும் என்பது. அந்த ஆண்டு நவராத்திரி விழாவுக்கு உள்ளூர்ச் செட்டியாருடைய மைத்துனர் ஒருவர்-பெரிய பணக்காரர் கோயம்புத்தூரிலிருந்து வந்திருந்தார். அவர் குருக்களுடைய விரதத்தை அறிந்து ஆயிர ரூபாய் கொடுத்தார். அதிலிருந்து குருக்களுக்கு அதிர்ஷ்டம்அடித்தது. வருகிறவர்கள் எல்லாம் நூறு, இருநூறு என்று கொடுக்கலானார்கள். "அயலூரான் அருமை அறிந்து ஆயிரம் கொடுக்கும் போது நாம் நூறாவது கொடுக்காமல் இருக்கலாமா?" என்று கொடுத்தார்கள்.

சில மாதங்களில் மணியும் வந்தது; மேற்கொண்டு பணமும் வந்து விட்டது. கோயிலில் மணியை வைக்க உயரமானகட்டிடம் கட்டவேண்டும். ஆளுக்கு ஒருயோசனை சொன்னார்கள். முருகமுதலியார் ஓரிடத்தைக் குறிப்பிட்டார். அவருக்கு இப்போது குருக்களிடம் ஓரளவு மதிப்பு உண்டாகியிருந்தது. ஆனாலும் சுப்பிரமணிய சுவாமி கோயில் குருக்கள் சாயங்கால பூசை செய்வது போல இவரால் செய்யமுடியாது என்ற எண்ணத்தை மட்டும் விடவில்லை.

மணியை வைக்க எங்கே கட்டிடம் கட்டுவது என்பது நிச்சயமாகவில்லை. மணி வந்தாயிற்று. அதை அம்பிகையின் சந்நிதியில் வைத்துப் பூசை கூடச் செய்தாகி விட்டது. கட்டிடம் கட்டும் விஷயத்தில் பெரிய மனிதர்கள் ஆளுக்கு ஓர் இடம் சொன்னார்கள். முருக முதலியார், "சிரமப்பட்டுப் பணம் சேர்த்தவர் எப்படிச் சொல்கிறாரோ,அப்படிச் செய்யலாம்" என்று சொன்னார். இதுவரைக்கும் குருக்கள் தம்முடைய கருத்தைச் சொல்லவே இல்லை.

"நீங்கள் எங்கே கட்டிடம் கட்டலாம் என்று எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டார் ஒரு பிரமுகர்.

"என் செயலால் பணம் வரவில்லை. ஈசுவரன் திருவருளால்தான் கிடைத்தது. அவன் திருவுள்ளம் எதுவோ அதன்படிதான் நடக்க வேண்டும்" என்றார்.

"அவன் திருவுள்ளத்தை எப்படித் தெரிந்து கொள்வது?" என்று கேள்வி கேட்டார் ஒருவர்.

"இவ்வளவு செய்தவன் அதையும் தெரிவிப்பான் என்றே நினைக்கிறேன். ஒருவாரம் பொறுங்கள்" என்றார் சாமிநாத குருக்கள்.

## 3

அன்று சாமிநாத குருக்கள் தர்மகர்த்தாக்களையெல்லாம் வரச்சொன்னார். ஊரில் பெரிய மனிதர்களுக்கு ஆள்விட்டு அழைக்கச்சொன்னார். சுப்பிரமணியசுவாமி கோயில் பூசகராகிய முத்துசாமி குருக்களையும் வரும்படி சொல்லியனுப்பினார். எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். குருக்கள் கண்களில் நீர் வரப் பேசலானார். "நாம் ஒன்று நினைக்கப் பரமசிவன் ஒன்று நினைத்திருக்கிறான். இந்தக் கோயிலில் மணியைக் கட்டவேண்டு மென்று எல்லோரும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். சிவபெருமான் வேறு வகையாக உத்தரவு பண்ணியிருக்கிறான்."

"என்ன, என்ன?" என்று பல கூச்சல்கள் ஒருங்கே எழும்பின.

"ஆண்டவன் தனக்கு அந்த மணி வேண்டாம் என்றும் கலியுக தெய்வமாகிய தன் குமரன் திருக்கோயிலில் அதைக் கட்ட வேண்டுமென்றும் என் கனவில் நேற்றுவந்து கட்டளையிட்டான். அவன் திருவுள்ளம் அப்படி இருக்கும்போது நாம் என்ன செய்வது?"

முருகமுதலியார் இப்போது பழைய குரலில் பேசினார். "சந்தியா கால பூசையைச் சரியாகச் செய்யும் இடத்துக்கு ஆண்டவன் பரிசை அனுப்புகிறான். கிருஷ்ணன் பாரிசாத மரத்தைச் சத்தியபாமா வீட்டில் நட, அது ருக்குமணி வீட்டில் பூத்தது மாதிரி ஆயிற்றுக் கதை" என்றார்.

சுப்பிரமணிய கோயில் அர்ச்சகர் ஒன்றும் அறியாமல் விழித்தார். "என்ன மாமா, இப்படிச் சொல்கிறீர்கள்? சுவாமி கனவிலே எப்படி வந்து சொன்னார்?" என்றார்.

"இது முதல்தடவை அல்ல. அவன் அடிக்கடி கனவில் வந்து உற்சாகமூட்டினான். அந்த அடையாளம் எனக்குத் தெரியாதா?"

"இவ்வளவு சிரமப்பட்டு உங்களுக்கு இல்லாமல் போவதா?" என்று ஒரு செட்டியார் கேட்டார்.

"நான் அல்லவா அதைச் சொல்ல வேண்டும்? எனக்காவது, உனக்காவது! இது பகவானுக்காக வந்தது. இதை அவன் சொல்கிற இடத்தில் கட்டவேண்டியதுதான் நியாயம். சுப்பிரமணிய சுவாமி மட்டும் நமக்குச் சொந்தம் இல்லையா? அவர் கோயிலும் இந்த ஊரில்தானே இருக்கிறது?" குருக்கள் குழப்பம் இல்லாமல் பேசினார்.

"சொத்துக்கு உடையவரே கொடுப்பதற்குத் தடை சொல்லாதபோது நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்று நாலு பேர் சொன்னார்கள்.

கடைசியில் அந்த மணியை முருகன் கோயிலில் கட்டிடம் கட்டி வைத்துவிட்டார்கள். முத்துசாமி குருக்களுக்குச் சாமிநாத குருக்களிடம் உண்டான மதிப்புக்கு அளவே இல்லை. "மாமா, நீங்கள் பெரிய தியாகம் செய்துவிட்டீர்கள்!" என்று தனியே அவரிடம் சொன்னார்; கண்ணில் நீர் ததும்பச் சொன்னார்.

"உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். சாயரட்சை அபிஷேகம் ஆரம்பிக்கும்போது இந்த மணியை அடிக்கச்சொல்லு. தீபாராதனை ஆகும்போது வழக்கமாக அடிக்கட்டும். அபிஷேகம் ஆரம்பிக்கும்போது தவறாமல் அடிக்கச் சொல்ல வேண்டும்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சுவாமி சொல்வதாகவே நான் எண்ணுகிறேன்; நீங்கள் கட்டளையிடுவது போலவே செய்கிறேன்" என்றார். முத்துசாமி குருக்கள்.

அன்று முதல் சுப்பிரமணியசுவாமி கோயிலில் சாயரட்சை அபிஷேகம் தொடங்கும்போது மணி அடிக்கும். அது சாமிநாத குருக்கள் காதில் விழும். சிவன் கோயிலிலும் அபிஷேகம் தொடங்குவார். எல்லாவற்றையும் முடித்துவிட்டு அங்கே கற்பூர ஆரத்திமணி அடிக்கிறபோது கணக்காக இங்கும் தீபாராதனை செய்வார்.

முருக முதலியார் குறை இப்போது தீர்ந்துவிட்டது. இரண்டு கோயில்களிலும் சந்தியா காலத்தில் தவறாமல் பூசைநிகழ்ந்தது. ஒருநாள்கோயிலுக்கு வந்தவர் சிரித்துக்கொண்டே, "கடியாரம் ஓடினாலும் ஓடாவிட்டாலும் சந்தியாகால பூசை இப்போதெல்லாம் கணக்காக நடந்து வருகிறதே!" என்றார்.

"ஆமாம்! தெரியாமலா சுவாமி மணியை அந்தக் கோயிலில் கட்டச் சொன்னார்?" என்று சாமிநாத குருக்கள் சொன்னார்.

'நீங்கள் செய்த தியாகம் அது' என்று சொல்ல முதலியாருக்கு வாய் வரவில்லை. ரோசம் தாங்காமல் ஆதி முதலே அந்தக் கோயிலில் மணிகட்ட வேண்டுமென்று சங்கற்பித்துக் கொண்டு, அதைச் சிவபெருமான் கட்டளையாகச் சொல்லித் தம் காரியத்தைச் சாமிநாத குருக்கள் முடித்துக் கொண்டதை முதலியார் அறிந்தால், குருக்களுடைய தியாகத்தை மெச்சியிருப்பாரோ என்னவோ!

• • •







ஸ்ரீராம் டெக்ஸ்டைல்ஸ்
விஜயபுரம் (B. O.) மதராஸ் (H. O.)

எங்களிடம் புதுமாதிரியான டிசைன்களில்

கும்பகோணம் - காஞ்சீபுரம் - பெங்களூர் சுத்தப்பட்டு சேலைகள், பாவாடைகள் பலரக மில், கைத்தறி, ஆர்ட்சில்க் ஜவுளிகள் நியாயமான விலைக்கு கிடைக்கும்.

தயவுசெய்து விஜயம் செய்யுங்கள்.

**Sree Ram Textiles**
2, Thambu Chetty Street, Madras-1
—Branch:—
112/113, Nagari Road, Vijayapuram.
(Tiruvarur)

# களி வாழ்வு

## ஆர். பி. மல்லாரி

சுழன்றுகொண்டிருந்த சக்கரத்தை நிறுத்திவிட்டு "ஏ மண்ணுங்கட்டி அங்கே என்ன செய்யரே!" என்று தன் மகள் குலாபியை அன்போடு கடிந்து கொண்டான் ஜலீல்.

குலாபி இவன் கோபத்துக்கு வகை வைக்கவே இல்லை. தன் வழக்கப்படி 'கலகல'வென நகைத்தாள்.

"மண்ணுங்கட்டியிலே தானே நம்ப புளைப்பே இருக்குது. ஏன் உலகமே மண்ணை நம்பித்தானே நடக்குது."

"ஆமாம்.... நம்ம.... மண்டைக்குள்ளேயும்..."

"களிமண்ணுவே இருக்கட்டுமே...' களிமண் உலகத்திலே இல்லாமே இருந்தாத் தெரியும்."

ஜலீலுக்கு இது பிடிக்கவில்லை; குலாபி, ஏதோ தான் புத்திசாலியைப் போல பேசிக்கொண்டே போனாள். அவன் பூத்தொட்டி செய்வதில் கவனம் உள்ளவன்போல, வேறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

"அடப்பாவிகளா" என்ற ஏசலைக் கேட்டெழுந்தான் ஜலீல். குலாபியும் பக்கத்திலிருந்தாள்.

"உங்கள் புகழ்ச்சிக்கு என் வயித் தெரிச்சலையா கொட்டிக்கணும்?."

"யார் பேசுறது?" என்றான் ஜலீல்.

"பூந்தொட்டியா!" என்றாள் குலாபி ஒரே ஆச்சரியத்தில்.

"அருமையாய் இருப்பினும் அந்தச் சுனை, அரைக்காசுக்குதவா தென்று ஆடாய் பாம்பே!" எங்கிருந்தோ, பாடியவாறு கேலியாகச் சிரிக்கும் சப்தம் கேட்டது. பிறகு பூந்தொட்டி பேசவே இல்லை!

* * *

ஒரு கவிஞன் அந்தப் பூந்தொட்டியைத் தன் வீட்டுக்குக் கொண்டு போய் மறு காரியம் பார்த்தான். ஒரு பக்கம் புல்லாக்கு போட்ட மங்கையும், மற்றொரு பக்கம் நாக்கை நீட்டிய நாகமும் வரைந்திருந்தது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. தனக்கு மிகவும் பிடித்தமான ஒரு மலர்ச் செடியை அதில் வளரச் செய்தான். செடி மிகவும் செழிப்பாக வளர்ந்து பூத்துக் குலுங்கியது. கவிஞன் மனம் மிகவும் பூரித்து விட்டது.



"உள்ளத்துவகை உருவம் பூண்டு
மெள்ள மெள்ள மேனி குலுங்க
கொள்ளை இன்பம் குலவும் பூக்கள்
குடிவைக்கும் தொட்டியும் நீ"

ஒரு கவிதையும் கட்டி வைத்தான்.

பூந்தொட்டி பொறுத்துப் பொறுத்துப்பார்த்தது. அதனால் தன் கோபத்தைத் தாளமுடியவில்லை.

"சே, நிறுத்து! நீயும் ஒரு கவிஞன்; என்னிடமுள்ள குறை மாத்திரம், உன் கவிக் கண்களுக்குத் தெரியவில்லை....?"

கவிஞன் சிரித்தான். "ஆரம்பத்தில், உன் தலையில் மண்ணை வாரிப் போட்டதற்காகக் கோபித்துக் கொள்ளாதே இப்போது உன் இதயத்தில் ஒரு மலர்ச் செடி பூத்துக் கொஞ்சுகிறதே..."

"ஹூம்...கொஞ்சுகிறதா?" அதெல்லாம் உங்கள் நாகரிக உலகத்தில் தான்...பாவி நீங்கள் எல்லாம் சேர்ந்து என்னை தொட்டியாக்கி விட்டீர்களே...பச்சை மண்ணாக இருந்தால், என் இதயத்தில் ஒரு பூச்செடிதானா வளரும்...?

கவிஞன் பதிலொன்றும் சொல்லவில்லை. சொல்லத் தெரியவில்லை. பூந்தொட்டியே தொடர்ந்தது.

"அதோ! அந்த முற்றத்துக்களிமண்ணோடு நானும் அருவமாக இருந்தால் எவ்வளவு பயிர் பச்சைகளுக்கு என் நெஞ்சத்தில் இடங்கொடுப்பேன், இப்போது நான் ஒரு மலடி...!"

குயவன் செய்தது கொடுமைதானா என்று கவிஞன் யோசிக்க ஆரம்பித்தான். எதிர்பாராத வகையில் ஒரே மேகமும் மழையுமாக இருட்டிக் கொண்டு வந்தது. பிசாசுக் காற்று மரங்களையும், செடிகளையும் வேரோடு பிடுங்கி எறிய முயற்சி செய்தது. கவிஞன் பூந்தொட்டியிலுள்ள வேர்ச் செடியை ஒரு பத்திரமான இடத்தில் சேர்த்தான்.

புயல் ஓய்ந்தது. கவிஞன் எத்தனையோ நாட்களாக அரும்பாடுபட்டு வளர்த்த பூஞ்செடிகள், கொடிகள் எல்லாம் சின்னா பின்னமாகித் தரையில் சிதறிக் கிடந்தன. வாழ்க்கையின் பொலிவை எடுத்துக் காட்டி சிரிக்க வேண்டிய புஷ்பங்கள் எல்லாம் கீழே விழுந்து குவிந்து கிடந்து வாழ்க்கையின் நலிவை விளம்பரப்படுத்தின.

கவிஞன் பூந்தொட்டியை வெளியே கொண்டு வந்தான். இந்தச் சூறாவளியிலிருந்து தன்னைக் காப்பாற்றியதால் பூந்தொட்டி தனக்கு நன்றி தெரிவிக்கும் என நம்பினான். பூந்தொட்டியிலிருந்த செடியோ வெளிச்சத்தில் பல நாட்களாக இல்லாத காரணத்தால் துவண்டு கிடந்தது."

"இதுபோல, சுயநலக்காரர்கள் கலைகளின் காவலராக இருக்கும் வரையில், கேவலம் மண்ணுக்குக்கூட உரிமை இல்லை..."

கவிஞன் காதில் இது விழவில்லை. அந்தச் செடிக்கு தண்ணீர் தெளிக்க அவன் பூ வாளியை எடுக்க அப்பால் சென்றிருந்தான்.

பூந்தொட்டியின் இந்த வாக்கியத்துக்கு நிலமகள் கனிவுடன் பதிலளித்தாள்.

"பூந்தொட்டியே...நீ என்ன சொல்கிறாய்?"

பூந்தொட்டிக்கு மிகவும் சந்தோஷம் தன்னை பெற்ற தாய் மண்ணே பேசு கிறாளா? பச்சை மண், சுட்ட மண் ணோடு ஒட்டாது என்று சொல்லு கிறார்களே, அதெல்லாம் மனுச உல கத்தில்தானா?

"மகளே நீ வருந்தாதேயம்மா...புய லால் என் மக்கள் எல்லாரும் மாய்ந்த னர். ஆனால் நீ ஒருத்தியாவது, ஒரு செடியையாவது காப்பாற்றினாயே...,

"இந்தச் செடியை நீயே கவனித் துப் பாரம்மா...ஊசி போட்டுப் பிறக் கும் குழந்தைபோல, சோனியாக இருக்கிறது!"

"சிருஷ்டியை இழந்துவிட்டாய் என்று நீ சொன்னாய்...ஆனால் எவ்வ ளவோ பேரை நீ காக்கலாமே"

"நல்ல காத்தல் தன்மை...ஆனால் அளவுக்கு மீறின சிசுக்களாய் விட் டாலோ...நான் சம்ஹாரமும் செய்து விடுகிறேன். அப்படி கட்டுண்டுஇருக் கிறேனே என்று எண்ணும்போது..."

* * *

"என்ன அதுக்குள்ளே தூக்கமா ?" குலாபி சிரித்தாள். ஜலீல் பதில் சொல்லவில்லை. மனிதர்களும் இந்தப் பூந்தொட்டிகள் போலவா மாறிவரு கிறார்கள்? ஆனால் இந்தப் பகட்டான பூந்தொட்டிகளுக்கு முன், வெறும் கபடமற்ற களிமண் எவ்வளவு தேவலை...,, குலாபி தொடர்ந்தாள்.

"நமக்கு வேண்டிய எத்தகைய கலா அம்சமான உருவையும் நம்மிஷ் டம் போலச் சிருஷ்டிக்கலாமே " என் றான் ஜலீல் மெதுவாக.


சக்கரம் சுழன்றுகொண்டே இருந் தது!

வாழ்க்கைச் சக்கரமும் இப்படிச் சுழல முடியுமா?

சுட்ட மண்ணாக இருந்தால் ஒட்டா மல் தான் இருக்க வேண்டுமா? இது தான் கலையுலகமா?

---

சங்கீத சாகித்ய சிரோன்மணி,
தர்மபுர ஆதீன இசைப்புலவர்.
இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்,
இசைத்துறைத் தலைவர்,
இன்கலைத் தலைமையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம்.



## தமிழன்னை

[இசை : சுத்ததந்யாசி] [பாணி, ஆதி]

[பண்ணியல்]

யாழின் இனிமை யுடையாள் - பைந்தமிழ்க் கன்னி
ஐம்பெருங் காப்பியச் சொல்லணங்காம் இவள் -யாழின்


[துணைப் பண்ணியல்]

வாழ்வு வளம்பெற வாழ்ந்திடுவாள் என்றும்
வானுயர் புகழினை வழங்கிடுவாள் இசை -யாழின்

[பண்ணியல் முடிவு]

தென்னவனால் வளர்த்த தீந்தமிழவையினில்
தெய்வத் தமிழ்மறையைத் தேனெனவே உண்பாள்
பண்ணுறும் இசைவண்ணப் பாட்டினிலே மகிழ்ந்து
பாவையர் ஆடலில் பாணிகொட்டிடுவாள் -யாழின்
மென்மை திகழும்சொல்லில் மெல்லென ஒலிப்பாள்
மெய்யும் உயிரும்ஆகி முதன்மைபெற்றிடுவாள்
தொன்மைப் பனுவல்களைத் தோழமையாய்க் கொள்வாள்
துயதமிழ்ப் புலவர்துணையை விரும்பிடுவாள் -யாழின்

(இயற்றியவர் : எம். எம். தண்டபாணி தேசிகர்)



# திருமண இன்பம்

கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

[ஓவ்வொருவருடைய வாழ்விலும் ஒரே ஒரு திருநாள்; இன்பப் பெருநாள்; திருமணப்புது நாள்; அந்த ஒருநாளை எப்படியெல்லாம் கொண்டாடி மகிழ்கின்றனர் என்பதைச் சித்திரிக்கும் கவிதை இது.]

### குறிக்கோள்

இல்லற மல்லது நல்லற மன்றெனச்
சொல்லியவள் அவ்வைப் பாட்டி!-நல்ல
சுகநிலை பெற வழி காட்டி!
மல்லிகை யில்மணம் வாய்ப்பது போல
வாழ்வினில் இன்பம் சேர்ப்பதனாலே
இல்லறம் - அது - நல்லறம்.
பருவமும் அன்பும் பண்பும் பொருந்திய
ஒருவனும் ஒருத்தியும் உயிர்க்குயிராக
மறுவிலா வாழ்வு மலர நம் முன்னோர்
உருவாக்கியநல் ஒழுக்கமே திருமணம்

### ஊஞ்சல்

மன உறுதி என்னும் இரு கால்கள் நாட்டி
வாஞ்சை என்னும் சங்கிலியைச் சேர்த்துப்
பூட்டி.
இணையில் லாத அன்பென்னும் பலகை
மாட்டி
இன்ப மென்னும் தென்றலினால் அசைவு
காட்டி
மணமக்களே! நீவிர் ஆடி ரூஞ்சல்!
வாழ்வின்பம் சூழ்கவென ஆடி ரூஞ்சல்!

### தாலிகட்டினான்!

காலை நல் ஓரையிலே
காமனது பார்வை யிலே
கோலவண்ண மணவறையில்
கோதையவள் மனமகிழச்
சால்புயரும் ஆணழகன்
தாலி கட்டினான்
சீலமுயர் குடும்பமெனும்
வேலி கட்டினான்!

### நலங்கிடுதல்

வருவீர் நலங்கிடுவீர்-எழில்
மதனன் ரதி போலே
பெரியோர் திரு மொழியின்-பயன்
பெறுவீர் வள முறுவீர்!

### பூப்பந் தாடல்

பந்து வீசி விளை யாடினரே-பூப்
பந்து வீசி விளையாடினரே-மணப்
பந்தலில் அமர்ந்து மலர்க்
கந்தம் வீசும் மணப்
பந்து வீசி விளை யாடினரே!

உள்ளமும் உள்ளமும் உறவுகொண்டாடி
ஓட்டி வருவதைப் போல் குதித்தாடித்
துள்ளி யெழும் பூப் பந்துகை மாறக்
கள்ளமற்ற மாப் பிள்ளையும் பெண்ணும்
பந்து வீசி விளையாடினரே!

**மாலை மாற்றுதல்**


மாலை மாற்றினர்—மண-மாலை மாற்றினர்
வாலிபனும் வேல்விழியும்
மாலை மாற்றினர்!
என் உரிமை உன் உரிமை
என்பதினி நம் உரிமை!
இன்ப துன்பம் அனைத்தும் இனி
இருவர்க்கும் பொதுவுடமை!
என்பதுபோல் உண்மைகளை
எடுத்துரைக்கும் தன்மையிலே
மாலை மாற்றினர்-மணமாலை மாற்றினர்!

**ஊர்வலம்**

இன்று மணம் கொண்டவர்கள் யாரெனவே
ஊரறியச்
சென்று தெருவழியே சிங்கார ஊர்வலமாய்க்
கூடிவரும் வேளையிலே குடி மக்கள் வாழ்த்துக்
கள்
நாடிவரும்உற்சாகம்நல்லபெரும் பேறன்றோ?

**பள்ளியறைக் காட்சி**

நள்ளிரவில் எல்லோரும் கண்ணயரும் நேரம்
நங்கையரில் சிலர்மட்டும் தூங்காமல்
தூங்கிக்
கள்ளமனம் கொண்டவராய்க் கதவோரம்
நின்று
காத்திருக்கக் கவர்ச்சியெலாம் பூத்
தொளிரும் இன்பப்
பள்ளியறைப் பஞ்சணையில் மணமக்கள் வந்து
பகுத்தறியும் நிலைமறந்து பரவசமாய்
அமர்ந்து
தன்னுமத வேட்கையிலே என்செய்வதென்று
தோன்றாமல் விழித்தபடி துடித்தனரே
சும்மா!
களுக் கென்ற சிரிப்பின்ஒலி கதவிடுக்கு
வழியே
காதலரின் காதுகளில் மோதிடவே காளை
வெடுக் கென்று கதவினிலே துவாரத்தை மூடி
மீளுகையில் கன்னிஇதழ் விரித்த நகை
கண்டான்
துடுக்காக நெருங்கிஒரு கனிச்சுளையைக்
'கண்ணே'
சுவைத்துப்பார்!' எனச்சொல்லி நாவி
னிலே தோய்த்தான்!
இடக்கதிலே மயங்கியவள் அவன்மேலே
சாய்ந்தாள்!
இன்பத்தின் எல்லையினை இருவருமே
சேர்ந்தார்!



# ஆண்டவனைப் பற்றி அறிஞர்கள்

தொகுப்பு : 'அம்பலத்தரசன்'

பணக்காரன் பரலோகத்தில்பிரவேசிப்பது அரிதென்று உங்களுக்குச் சொல்கிறேன். மேலும் பணக்காரன் கடவுளுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது.

—ஏசுநாதர்

கடவுள் உருவத்தை மாற்றிக்கொண்டு இரவில் வருவதும், பிச்சையெடுப்பதும் ஆகிய கதைகள் இருத்தல் கூடவே கூடாது. கடவுள்என்பது ஒரு முழுமையான உண்மை. அவர் மாறுவதில்லை; பொய் வேடம் புனைந்து அவர் எவரையும் வஞ்சிக்கமாட்டார். கடவுள் சத்தியத்தின் உருவம். ஆனதால்,பொய்க்கூத்தும் புனைவேடமும், அவரது மாசிலாத சத்தியத் தன்மையைக் குலைத்துவிடும்.

—பிளேட்டோ

கடவுளைப் பற்றிய எண்ணத்திற்கு எப்பொழுதும் அடிமைத்தனமே, அதிலும் மிகவும் மோசமான, ஆதாரமற்ற அடிமைத்தனமே அடிப்படையாய் இருந்து வந்திருக்கிறது. கடவுளைப்பற்றிய எண்ணம் ஒருகாலும் சமூகத்தையும், தனி நபரையும் ஒன்றுபடுத்தி பந்தப்படுத்தியதில்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பார் தங்களை அடக்கி ஆளும் வகுப்பாருக்கு தாங்களாகவே அடங்கிநடப்பதை, தெய்வீகத் தன்மை என்று கடவுளைப் பற்றிய எண்ணம் போதித்து வந்தது.

—லெனின்

ஒவ்வொரு நாளும் அறிவுத் துறையில் வளர்ந்து கொண்டு வருகிற மனிதனைப் பற்றித்தான் கவலைப்படுகின்றேனே தவிர மற்ற எதைப்பற்றியும் நான் கவலை கொள்வதில்லை.

—லிங்கன்

உலகில்பிறக்கும் குழந்தையாவும் நாஸ்திக வாதியாகவே பிறக்கின்றது. பிறருடைய போதனையினாலும்,தயாரிப்பினாலுமே தெய்வ நம்பிக்கை ஏற்படுகிறது. ஒருவனுக்கு எவ்வளவு தூரம் விஞ்ஞான அறிவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமான கடவுள் நம்பிக்கை ஏற்படுகின்றது. அறியாமை அதிகப்பட அதிகப்பட நம்பிக்கையும் அதிகரிக்கின்றது. ஆஸ்திகனுக்கு அறியாமை அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய கடவுளின் தொகையும் அதிகரிக்கின்றது. கடவுள் நம்பிக்கை விவேகத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அதன் போதனைகள் உபயோககரமானவையல்லவென்பதுமட்டுமல்ல தன்னைப் பற்றி கூட அது போதிப்பதற்கு எதுவுமில்லை. வைதீகத்தைத் தவிர்த்து, ஆஸ்திகம் சாரமற்ற, சம்பந்த மில்லாத ஒரு பகற் கனவேயாகும்.

—சார்லஸ பிராட்லா

ரஷியாவை கடவுள் தன்மைபற்ற நாஸ்திக நாடு என்று நையாண்டி செய்தோம், ஆனால் இன்று அந்த ரஷ்யாவானது உலகத்தில் உள்ள எல்லாக் கடவுள்களுடையவும் அருளுக்கும், கருணைக்கும் பாத்திரமாகி அவற்றின் அருள் முழுவதையும் தானே பெற்று உலகத்தின் ஒளியாய் விளங்குகின்றது.

—ஜார்ஜ் பெர்னாட்ஷா

"என்னை யார் உண்டாக்கினர் என்று சொல்ல முடியாது; ஏனெனில் அதற்குப் பதில் சொன்னால், பிறகு கடவுளை யார் உண்டாக்கினர் என்ற கேள்வி தானகவே பிறந்துவிடுகிறது" என்று என் தந்தையார் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். இந்தச் சிறு வாக்கியமானது முழுமுதற் காரணம் என்ற வாதத்திலுள்ள பொய்மையே அப்பொழுதே எனக்கு விளக்கி விட்டது.

—பெர்ட்ரண்ட்ரஸல்

கடவுள் மனிதனது உயர்ந்த சிருஷ்டியாகும்.

—இங்கர்சால்

இந்த உலகத்தில் ஒருவன் பிச்சை எடுத்து தான் வாழவேண்டுமென்றிருந்தால், அப்படி அவனைப் படைத்த கடவுள் ஒழிந்து போகட்டும்.

—திருவள்ளுவர்

ஆத்மா என்று இல்லை; அறிவுக்கெட்டாத ஆண்டவனைக் குறித்து கவலைப்படாதே; எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிரு. மறந்தும் பிறர்க்கு தீங்கு செய்யாதே.

—புத்தர்

ஆலயஞ்சென்று தேங்காய் உடைப்பதோ, கற்பூரம் கொளுத்துவதோ, கடவுள் பணியாகா. ஒவ்வொரு உயிரும் கடவுள் உருவமெனக் கருதி, அவ்வுயிர்கட்கு அன்புப்பணி செய்வதே கடவுள் பணி.

—அண்ணல் காந்தி


ஒருவன் காணிக்கையாகச் செலுத்தும திரவியங்களனைத்தையும் கடவுள் மதிக்கிறாரா? ஒருபோதுமில்லை. எவர் தங்கள் அன்பையும் பக்தியையும் அவருக்கு அளிக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அவர் அருள் பாலிக்கிறார்.

—ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்

நான் பார்த்திருக்கிறேன். ஆனால் நீ பார்க்க முடியாது என்று கூறுகிற எந்த ஆச்சாரியனையும் நம்ப முடியாது. நீயும் பார்க்க முடியும் என்று கூறுகின்றவனையே நம்பலாம்.

—விவேகாநந்தர்


தீப வொளிச் சுடர் போலும் தீந்தமிழ்ச் சுடர்; வைரமணிச்
சுடர் போலும் வைஜயந்திமாலாவின் விழிச் சுடர்; சோபை திகழ்
மேனியழகோ சுடருக்கெல்லாம் சுடர்! சுடர்க் கொடியாள்
சொல்வது கேளீர்: 'நான் உபயோகிப்பது மென்மைகுலவும்
லக்ஸ்'. உங்களுக்கும் உகந்தது அதுவே யன்றோ?
சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்.
சுட்டும் விழிச்
LUX
TOILET SOAP
சுடர்தான்...
LTS.63-543 TM



திராவிடத் திரைக் கதாநாயகர்கள்
மலையாளம் தந்த
மாணிக்கம்
தமிழகம் தந்த
தங்கம்
கன்னடம் அளித்த
கட்டழகர்
ஆந்திரம் அளித்த
அழகரசர்
BALU BROS



வேத மொழியினர் போற்றும் ஊர்வசியும், பைந்தமிழ் நாட்டினர் போற்றும் மாநெடுங் கண் மாதவியும் ஒருருவாய் வடிவெடுத்து புவிமேல் வந்துதித்தது போல தமிழகத்தில் வந்து பிறந்துள்ள இந்த வடிவழகி, பரதநாட்டியக் கலையுலகில் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமான ஒரே ஒரு கலை அரசி கமலாலக்ஷ்மண்.








இரண்டு பெண்டாட்டிக்காரர்கள் படுகின்ற இடர்களை நாம் கதைகளிலே கேட்டிருக்கிறோம். பாரதப் போரையே வென்ற மாயக்கண்ணனையே பாமாவும் ருக்மணியும் படுத்திய பாட்டை நாம் புராணங்களிலே படித்திருக்கிறோம். ஆனால் இந்த நந்தகுமாரனோ இருவரை மணந்தும் இன்பத்தின் எல்லையிலேதான் வாழ்கின்றார்.

படத்தில் நடிக்க வந்தவர்களை காதலித்து கைவிட்டவர்களும், முறைப்படி திருமணம் செய்து கொள்ளாதே கணவனும் மனைவியுமாக வாழ்ந்து திரையுலகிற்கே களங்கம் தேடுபவர்களும் நிறைந்த கலையுலகில் கட்டிய மனைவியோடு காதலித்த கட்டழகியையும் முறைப்படி மணந்து கொண்டு தான் ஒரு கற்றறிந்த கண்ணியவான் என்பதை நிலை நிறுத்திய ஆணழகரும் அவரது ஆசை மனைவியும்.

# ★ பல நாள் வந்தவன் ★

(இளம்பூரணர்)

**சி**றுமியாக இருந்த இந்த வஞ்சிக்கொடி, பருவம் வந்ததும் கார்காலத்துப் பயிர்போல தளதளவென்று வளர்ந்து விட்டாள். அவளுடைய முகத்தில் எங்கிருந்தோ பெண்மைப் பொலிவும், தங்கம் போன்ற அங்கங்களில் ஒருவித பூரிப்பும் வந்து நிறைந்து கொண்டன. அவளுடைய தாய்மார்கள் இளமையில் பூட்டிய மார்புப் பூண், இப்போது அது வீங்கிப் புடைப்பதால் அவளை வருத்திக் கொண்டு நின்றது. இத்தகைய மாநெடுங்கண் மயிலனையாளின் மென்உடலைத் தனக்கேற்ற பஞ்சணையாகக் கொள்ள விழைந்த இந்தக் காளை அவள் சோலை வரும் பொழுதெல்லாம் இப்படி அவளுடைய கடைக்கண் வீச்சுக்காகக் காத்துக்கொண்டு நிற்பான்.

பகீரதன் செய்த தவம் போல இந்த பைந்தமிழ் வீரனும் அந்தக் குமரியை அடைவதற்காகச் செய்த தவமும், ஒரு நாள் இரு நாளில் முடிந்து விடவில்லை. பரமசிவன் பக்தர்களைச் சோதித்து விட்டே அருள் பாலிப்பது போல இந்தப் பாவை நல்லாளும் அவன் பலநாள் வந்து காதல் தாபத்தால் தவித்து நின்ற பிறகுதான் அருள் பாலித்தாள். கூறுவது நாமல்ல;

> " ஒருநாள் வாரலன் ; இருநாள் வாரலன்
> பலநாள் வந்து, பணிமொழி பயிற்றி, என்
> நன்னர்நெஞ்சம் நெகிழ்த்த"

என்று வருமுலையாரித்தி என்ற பெண்பாற் புலவர் குறுந்தொகையில் வடித்தெடுத்த கவிதை ஓவியத்திற்கு ஏற்ற வண்ண ஓவியம் இது.

[அடுத்த பக்கத்திற்கு அடுத்த பக்க மூவண்ண இலக்கிய ஓவிய விளக்கம்]

# பைந்தமிழைக் காக்க ஓரணியில் சேரீர்


## செந்தமிழ் நாட்டினைக் காத்திட வாரீர்!

உலகில் பல ஆறுகள் தோன்றினாலும் அவை யாவும் ஒரே கடலில்தான் சென்று கலக்கின்றன. உலகில் பல மதங்கள் தோன்றினாலும் அவை யாவும் ஒரே ஒரு முழு முதற் கடவுளைப் பற்றித்தான் பேசுகின்றன. அதே போல தமிழகத்திலும் பல்வேறு கட்சிகள் இருந்தாலும் அவை யாவும் மக்கள் நலன் என்ற ஒரே இலட்சியத்தைத்தான் கொண்டவைகளாக இருக்கின்றன. இந்த இலட்சியத்தை அடையும் மார்க்கங்களிலே தான் மாறுபாடு இருக்கின்றதே தவிர மற்று தமிழகத்து கட்சிகளின் கொள்கைகளோ அல்லது அவற்றிற்கு தலைமை தாங்கும் இந்தச் சான்றோர்களோ உலகத் தலைவர்களுக்கு எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. இவர்கள் மட்டும் தங்களுடைய கட்சிப் பிணக்குகளை மறந்து ஓரணியில் திரண்டால் நிச்சயம் உலகமே இவர்களுடைய தாளடியில் வந்து சேர்ந்து விடும்.

ஜனநாயக நாட்டில் பல்வேறு கட்சிகளோ அவற்றிற்கு என்று தனித்தனி கொள்கைகளோ இருப்பது தவறல்ல. ஆனால், கட்சித் தலைவர்கள் தங்களுடைய கட்சிக்கொள்கைகளை வளர்ப்பதற்கு மாறாக — மற்றக்கட்சிக்காரர்களின் மீது துவேஷத்தையே வளர்த்துக்கொண்டு போனால் விளைவு விபரீதமாக இருக்கும் என்பதைத்தான் அண்மையில் நடந்த கத்திக்குத்து சம்பவங்கள் நமக்கு வெள்ளிடை மலை என விளக்குகின்றன.

ஒரே வயிற்றில் பிறந்த அண்ணனும் தம்பியுமாக இருக்க வேண்டியவர்களே மனிதப் பண்பை மறந்து கட்சி வெறி கொண்டு இவ்வாறு கத்தி ஏந்தி நிற்கிறார்கள். கீரியும் பாம்புமாக இருக்கும் இந்நிலை தேர்தல் வரவர முற்றிப் போய் எங்கே வீட்டை விட்டுக் கிளம்புவதே அபாயமானதாக மாறி விடுமோ? வெளியில்போனவர் வீட்டிற்குத் திரும்பி வரும் வரையில் ஒரு பயங்கர சூழ்நிலை உருவாகி விடுமோ என்று நாம் அஞ்சுகின்றோம்.

பண்பிற் சிறந்த தமிழகத்தில் - கண்ணியத்தின் பிம்பங்களான தலைவர்களைப் பெற்ற தமிழகத்தில் இனியாவது இது போன்ற குத்துவெட்டுக்கள் நிகழலாகாது என்று மன்றாடுகின்றோம். தமிழன்னையின் நீண்டநாள் ஆசைக்கனவை நிறைவேற்ற வேண்டுகிறோம்.


BALU BROS


BALU
BROS

# ஓவிய மன்னன் ராஜா ரவிவர்மாவும் உலக ஓவிய மணிகளும்

பாலு சகோதரர்கள்

**வா**னவில்லின் கவர்ச்சியையும், அந்திவானின் பொலிவையும், கானருவியின் சிறப்பினையும், வண்ணப் பிறையின் நேர்த்தியினையும், எழில் நடையில் திகழ்வோடு அமுதாக்கிடுபவன் தான் கவிஞன்.

இதனையே உள்ளம் தொடும் ஒவ்விய வண்ணச் சித்திரமாக்கி மகிழ்பவன் தான் ஓவியன்.

கலை என்றாலே உலக அரங்குகளில் ஓர் தனிப்பட்ட மதிப்பு இருந்துதான் வருகின்றது. காவியத்திற்கு ஒரு புகழ், நல்ல ஓவியத்திற்கு ஒரு உயர்வு என்று இப்படி ஒரு நிலையிருக்கிறது. வள்ளுவர் போற்றப்படுகின்றார் தனிப் பெருங் காவியத்திற்காக. ராஜா ரவிவர்மா போற்றப்படுகின்றார் கண்கவரும் ஓவியத்திற்காக. ஆனால், ஒன்று...இவர்களை பெருமளவுக்கு மேலை நாடுகள் தான் போற்றுகின்றன. ஏனெனில் கலை என்றால், அதைக் காப்பாற்றி, கௌரவமளித்து ஊக்கத்தின் ஏணிகளாக விளங்கி வரும் மேலை நாடுகளின் மேன்மையான பெருந்தன்மையே இதற்குக் காரணமாகும். ஆனால், நம் நாட்டிலோ, நம் திறமைகளை வெளிக் கொணரவே வெட்கப்படுகிறோம். திரையிட்டு மூடி மறைக்கிறோம்...!

ஆனால், ரவிவர்மாவை இன்று உலகம் மைக்கேல் ஆஞ்சிலோவோடு ஒப்பிட்டுப் பேசுகிறது! ஏனெனில் மைக்கேலும் கிருஸ்தவ மதாலயங்கள் என்றுமே மறவாதபடி பைபிளின் அடிப்படையுடன் வண்ணச் சித்திரங்களாக்கி புத்துயிரளித்தவர். அவரைப் போன்றே நம் ரவிவர்மாவும் கடவுளர் தம் கூட்டத்திற்கே எழிலோவியம் சமைத்தவர். பரமசிவம் — அவர் தீட்டிய உருவம். பார்வதியும், இலக்குமியும், சரஸ்வதியும், தமயந்தியும் அவர் படைத்த படைப்புகள்.

ரவிவர்மாவின் சித்திரங்கள் இயற்கைப் பொலிவைப் பின்னணியாகக்கொண்டு தீட்டப்பட்ட உயிரோவியங்கள். அவர் தீட்டும் கண்கள் ஒளி விட்டுக்கொண்டே மட்டுமிருப்பதில்லை; பேசவும்செய்கிறது அவர் அமைத்த எழில் முகம் அழகை வாரித் தெளிக்கும் கவர்ச்சி ஓவியமாக மட்டும் இருப்பதில்லை; உள்ளத்தின் அசைவுகளை தெளிவாக்கிக் காட்டும் மெய்யுணர்வுச் சித்திரமாகவும் இருக்கிறது. இருப்பினும் காணும் அலை எழுச்சியில் இயற்கையும், ஒரு வித சக்தியும் பொங்கி எழுவதைப் போல, வர்மா சமைத்த வண்ண ஓவியங்களிலே அத்தகைய தெய்வீக முலாம்கள் இல்லையே என்று குறை படுவோருமுண்டு. தெய்வங்களைத் தீட்டும் பொழுது மனிதப் பண்பே அதற்கு அதிகமாக தரப்பட்டிருக்கிறது என்று நொந்து கொள்வோரும், இந்திய கலா சாரத்தை தீட்ட ஐரோப்பிய முறையையும், ஓவிய இலக்கணங்களையும் வர்மா கையாண்டிருக்கிறாரே அல்லாமல், பாரத பண்பாட்டிற்கு சிறிதளவும் மதிப்புத் தரவில்லை என்று வருந்தி கண்டிப்போரும் உண்டு. ஆகவே, அந்த அமரருக்கு இந்தியக் கலை மரபில் இடமில்லை என்று எச்சரித்து முடிப்பவருமுண்டு.

எடுத்த எடுப்பிலேயே வர்மாவின் கற்பனைத் திறனைக் குறை கூற ஆரம்பித்து விடுகிறார்கள். தாமரையில் லக்ஷ்மி தகாதென்கிறார்கள்! தகாதுதான் நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம்! ஆனால், கற்பனை அவருடையதல்லவே! கலையார்வம் காரணமாகவும், பக்தியில் அவர் வைத்த நம்பிக்கையின் காரணமாகவும், புராணங்களைப் பிரதிபலிக்கும் வெறுங் கண்ணாடியாக மட்டும் தானே அவர் இருந்திருக்கிறார். அதற்காக எங்ஙனம் அவரை குறைகூறமுடியும்? நாடே வணங்கும் பல நூறு தெய்வங்களின் சிறப்போவியங்களைச் சமைத்தவருக்குதான் இத்தகைய பாராட்டும், அன்புப் பரிசும் கிடைக்கிறது.

ஓவியக்கலையும் அதன் இலக்கணமும், நாட்டுக்கு நாடு சூழ்நிலைக்கேற்ப ஒரு சிறிது மாறுபட்டதாக இருந்தாலும், அது ஓர் உலகின் பொதுசொத்து. உலகம் போற்றும் ஓவியர்களான ரெம்ப்ராண்டும் — ரூபன்ஸும் முறையே டச்சு நாடும் — ஆண்ட்வெர்ப் நகரும் தந்த ஓவியக் கலைஞர்களாவார்கள். ஆனால், அவர்களைப், பயிற்றுவித்தது இத்தாலிய நாட்டு ஓவியப் பள்ளி...அதனால் அவர்களுக்கு டச்சு நாட்டு ஓவியக் கலை மரபிலும், பெல்ஜிய நாட்டு ஓவியக் கலை மரபிலும் இடமில்லாமல் எவரும் செய்யவில்லை. மாறாக அவர்களைப் பெற்றதால் பெருமிதமடைகிறார்கள் அந்த நாட்டு மக்கள்! அதுமட்டுமல்ல, இங்கிலாந்தின் கண்காட்சி சாலையிலும், லக்ஸம் பார்க்கின் அரண்மனையிலும், இன்றும் தங்கள் நாட்டின் செல்வங்களாகப் போற்றப்படுவது இவர்களின் வண்ண ஓவியங்கள் தான்! அங்கே கலை மரபு எவரையும் தடை செய்வதில்லை. ஏனெனில் கலை கலைக்காகவே என்பதால்தான்! ஆனால், இங்குதான் ஏதேதோ பேசப்படுகிறது. ஒவ்வொரு வினாடியும் முன்னேறிக் கொண்டே போகும் உலகில் அடிப்படையில்லாத இத்தகைய வீணான சர்ச்சைகள் வேடிக்கையாக மட்டுமல்ல. வேதனையாகவுமிருக்கிறது!




புதுமையால் பழமை காத்த புகழ் வண்ணக் கலைஞனும், கடவுளர் தம் உருவாரங்களையே தன் கைவண்ணத்தால் நிஜ உருவாக்கிக் காட்டிய வண்ண ஜாலக்காரர் ரவிவர்மாவை பிரதிநிதியாக வைத்தே ... பாரபட்சமற்ற பண்பு நிறைவோடு, உலக ஓவிய ஒளி மணிகளான பெருங் கலைஞர்களின் கைவண்ணமும், அவர்களின் கருத்துச் சிறப்பும், கற்பனை நயமும் பொலிவுடன் புதைந்து உலகெங்கிலும் பிரபலமாக புகழோங்கியுள்ள சித்திரங்களையும், சிற்பங்களையுமே தொகுத்துத் தந்துள்ளோம். அவை உங்களின் கண்களுக்கும், கருத்திற்கும் இனிமையை பயக்கும். வாழ்க ரவிவர்மா! வாழ்க ஓவியக்கலை!!



↑

**மைக்கேல் ஆஞ்சிலோ (1457-1465)**

கவிஞரும்-கவின் மிக்க சிலைசெய்யவல்ல சிற்பியும், இத்தாலியின் ஓவியத் திருமகனுமான இவர் தீட்டிய இந்த 'லாசிபிலா டெல்பிகா' பிற்காலப் புலவர்களுக்கு வழிகாட்டியாக அமையவல்லதாகும். இவர் பத்தொன்பதே வயது நிறைந்த சிறுவனாக இருந்த பொழுது தீட்டிய ஓவியத்திற்கு இணையான ஒன்றைக்கூட இதுவரை வேறுயாரும் தீட்டியதில்லை.

**டான்யூ**

ஜப்பான் பரப்பில் சிறியநாடுதான் என்றாலும், கலைகளைப் பொருத்தமட்டில் அது பிறருக்கு வழிகாட்டவல்ல பொன்னுடுதான். அதிலும் சித்திரக் கலையில் அதற்கு இணையான பிறநாடு ஒன்றை கீழ்த்திசையிலேயே கூறமுடியாதுதான். அத்தகைய புகழ்வாய்ந்த நாடுதந்த வண்ண ஓவியம் இது.

↓





**ஹென்ரிட்டா ரே** ↑

கணவனும் மனைவியுமாக, ஓவியப்பணி செய்த இவரும், இவரது ஆசைக் கணவர் எர்னஸ்ட் நார்மண்டும் ஒரே மாதிரியான ஓவியங்கள் எழுதியதால் எதை யார் எழுதியது என்றே கூடத் தெரியாது பிற்காலத்தவர் தவிக்க நேர்ந்தது.



↑

**மொகலாய ஓவியம்**

பெயர் தெரியாத ஓவியரால் தீட்டப்பட்ட இந்த அழகோவியம், மொகலாய முடிமன்னர்கள் ஓவியக்கலை வளர்த்த சான்றோர்கள் என்பதைச் சொல்லாமற் சொல்லும் கலைப்-பேழையாகும்.



↑

**சை வாங் மூ**

சீனம் தன் மொழியின் எழுத்துக்களையே சித்திர வடிவமாக அமைத்துக்கொண்ட நாடு. அப்படிப்பட்ட நாட்டிலேயே மிக்க புகழ்படைத்த ஓவியரான இவர் தீட்டிய இந்த ஒய்யாரச் சோலையை வண்ணப் படத்தில் பார்த்தால் நிச்சயம் நாம் நம் எண்ணம் இழந்து தவிக்கவேண்டியதுதான்.

**ரூபன்ஸ் (1577-1640)**

முதலாம் சார்லஸ் மன்னனின் நண்பரும், இடைக்காலத்தில் ஓவியக் கலை வளர்த்த வியன்கலைஞனுமான இவர் எழுதிய 'இயேசுநாதர் சிலுவையில் அறையப்படும் காட்சி'யும் கீழே காணப்படும் 'லியூசிபஸ் குமரிகள் கற்பழிக்கப்படுவதும்'தான் ஓவிய உலகிலேயே மிகப் புகழ்படைத்தவைகளாகும். தன்னுடைய இரு மனைவியரையுமே மாதிரியாகக் கொண்டு காதலோவியங்கள் தீட்டுவதற்கு என்றே பிறந்த பிறவிக்கலைஞன் இவன்.

↓






**டோர் (1832-1882)** *மில்டனின் காவியப் புதையலான 'இழந்த சொர்க்கத்திற்கும்', கிருத்துவ வேதமான பைபிள் முழுமைக்கும் யாராலும் தீட்ட இயலாத அழகோவியங்களைத் தீட்டிய இவர் 'கோயில் விபசார விடுதி அல்ல' என்று கூறி கயவர்களைச் சாடிய ஏசுநாதரை இங்கு அழகோவிய மாக்கியுள்ளார்.*



↑ டபுள்யு. இ. பாரஸ்ட் காதலோவியங்களை காமம் மிக்க வகையில் தீட்டுவதில் புகழ் படைத்த இவர் தீட்டிய 'யுரு" என்ற பெயர் படைத்த சோலையில் ஆடும் களியாட்ட மாதர்களும் அவர் தம் காதல் மன்னர்களும்.

லீட்டன் (1830-1896) ஓவியர் உலகின் தலைசிறந்த பதவியான ராயல் அகடமியின் தலைவராக இருந்த இவர் தீட்டிய ஓவியங்கள் ஒன்றிற்கு ஒன்று அழகில் போட்டியிடக்கூடியவை. அவர் தீட்டிய ஓவியங்களிலேயே மிகப் புகழ்படைத்த "பைசியின் குளியல்" இது.





↑ எப். டார்வென்ட் உட் A. R. A.

தாய்மையைப் பிரதிபலிக்கும் பூவியமும் சிற்பமும் உலகில் பல இருந்த போதிலும் சலவைக் கல்லில் தாய்ப்பாசத்தைக் கொண்டு வந்து பேசாத கல்லையும் பேசவைத்த இதற்கு இணையானது வேறு எதுவும் இல்லை

பவுச்சர் (1703-1770) →

பிரஞ்சு நாட்டின் அரசாங்க ஓவியரானஇவர், மாதர் எழிலின் மனோகர நிலையைத் தீட்டுவதில் அன்று முதல் இன்று வரை இணை அற்றவர். இந்த ஓவியத்தை, தான் மாதிரிக்காக வைத்திருந்த அழகியைப் பார்த்து வண்ணத்தில் தீட்டிக் கொண்டிருக்கையில் அங்கு வந்த பதினாலாம் லூயி, அவளை விருந்திற்கு என்று அழைத்துச் சென்றவன் பின்னர் திருப்பித் தரவே இல்லை.





பிராகனுர்ட் (1732-1806) →

பவுச்சரின் மாணவரான இவரும் தம் ஆசிரியரைப்போல கட்டழகு வலிகளை எழுதுவதில் வல்லவர். அவர் தீட்டிய 'மருவும் காதலர்கள்' இவர்கள்.



லியனுர்டோ டாவின்ஸி
← (1452-1519)

இத்தாலியில் பிறந்த பல்துறை மேதையான இவர் நல்லஓவியர். அதை விடச் சிறந்த சிற்பி. உலகம் புகழும் கட்டிடக் கலைஞர். ஆகாயவிமானத்தையே முதன் முதலில் கண்டுபிடித்தும் மதத்திற்கு அஞ்சி அதை வெளியிடாத விஞ்ஞானி. இத்தகைய உலக ஓவிய மன்னன் தீட்டிய அழகோவியம் "மோனலிசா" இவள்.

வில்லியம் எட்டி (1787-1849)

மாதர்களை மயக்கும் மோகினிகளாகத் தீட்டவல்ல இவர் தீட்டிய 'அன்னத்தோடு விளையாடும் அழகு மயில்கள்' இவர்கள்.
→



இங்கரஸ் (1781—1867)

பிரெஞ்சு நாட்டின் கட்டழகிகளை எல்லாம் வண்ணத்தில் தீட்டி, என்றும் அழியாத அழகோவியங்களாக்கிய இங்கரசின் படைப்புகளிலேயே மிகச் சிறந்த 'குளிக்கும் அழகி' இவள்.
←



# 'ஹைட்' பார்க்கின் அற்புதச் சிலைகள்




### புதிய கண்டம்

ஜான்பெல் என்ற புகழ்வாய்ந்த சிற்பி செதுக்கிய இந்தச் சலவைக்கல் சிலை புதியகண்டமான அமெரிக்காவை மிகத்துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இப்போதுள்ளவர்களைப் போல அல்லாது, சிவப்பு இந்தியர்கள்தான் அமெரிக்காவின் பூர்வகுடிகள் என்பதை மறைக்காமல் நினைவு படுத்திய சிற்பியை நிச்சயம் நாம் போற்றாமல் இருக்க இயலாது.

### புகழ்வாய்ந்த கண்டம்

இடைக்காலத்தில் உலகையே வென்ற வல்லரசுகளைத் தோற்றுவித்த புகழ்வாய்ந்த கண்டமான ஐரோப்பா பசு வளத்திலும், நீதியிலும், கலைவளர்ச்சியிலும் சிறந்தது என்பதை விளக்கும் இந்த வனமோகினிகளை மிகவனப்புடன்சலவைக் கல்லில் செதுக்கியவர், சலவைக்கல் சிலை வடிப்பதில் தனக்கு நிகராவார் எவருமில்லாத பி. மாக்டவல் என்ற 'ராயல் அகடமி'யைச் சேர்ந்த புகழ்வாய்ந்த கலைஞராவார்.





### பழைய கண்டம்

பழைய கண்டமும், உலகில் பழம்பெரும் நாகரிகங்களை வளர்த்த கண்டமுமான ஆசியாக்கண்டம் என்றாலே யானையும், அழகு மயிலான ஆரணங்குகளும், தத்துவங்களை வளர்க்கும் பல மதத் தலைவர்களும்தான் நினைவிற்கு வருகின்றனர் என்பதை சலவைக் கல்லிலே சொல்ல வைத்த ஜே. எச். பாலி செதுக்கிய அற்புதச் சிலை இது.





↑ ஹில்ட்டன் R. A.

காமக்கலை சொட்ட ஓவியம் வரையவல்ல இவர் இங்கு தன்மீது காதல் அம்பு வீசும் காமனிடம் இருக்கு வில்லைப் பறிக்கும் கன்னியை கட்டழகு வல்லியாகத் தீட்டியிருக்கிறார்.

↑

கோல்ட்டன்

சலவைக்கல்சிலையில் கற்பனை மெருகேற்ற வல்லவரான இவர் வடித்த சிலைகளிலேயே மிகச்சிறந்ததான பாசத்தைப் பிரதிபலிக்கும் 'அக்காளும் கம்பியும்.'



டி. மாக்லிஸ் R. A.

இடைக்கால ஓவியர்களிலேயே! மிகப் புகழ் வாய்ந்த ஒருவரான இவர் தீட்டிய இந்த 'நீரோடைப் பெண்ணை' இலக்கிய அறிஞரான சார்லஸ் டிக்கன்ஸ் தன் வீட்டு முன் அறையிலேயே மாட்டி வைத்திருந்தார் என்றால் இதன் சிறப்பை என்னவென்று கூறுவது?

→



← ரெம்ரண்ட் (1606-1669)

டச்சு ஓவியரான இவர் இறக்கும்பொழுது ஏழையாகமாண்டாலும், இன்று இவருடைய அழகோவியங்கள் ஒவ்வொன்றும் கோடி ரூபாய்களுக்கு மேலும் விற்கப்படுகின்றன. அத்தகைய அழகோவியங்களில் ஒன்றுதான் இந்தப் 'புனிதக்குடும்பம்.'

கெயின்ஸ்பரோ (1727-1788) →

ஜியூபர்ட்கிரே வலாட்டின் மாணவரும் பதினாலாவது வயதிலேயே ஓவியம் தீட்டக் கிளம்பியவருமான இவர் தீட்டிய 'நீல ஆடைச் சிறுவன்' என்ற அழகோவியம் இது.



டர்னர் (1775-1851)

ஏதாவது ஒரு இடம் இயற்கை வனப்போடு அழகாக இருந்தால் டர்னர் எழுதியதுபோல இருக்கிறது என்று பொது மக்களே கூறும் அளவிற்கு ↓ கணகவரும் வகையில் இயற்கைக் காட்சிகள் தீட்டியவர் இவர்.



## ரவிவர்மா:

உலக ஓவிய மன்னர்களின் வரிசையிலே வைத்து எண்ணப்படும் இந்த திராவிடத்து மேதை, இந்நாட்டுக் கடவுள்களுக்கு கண்கவரும் வடிவம் கொடுத்ததோடு இவ்வாறு கட்டழகு வல்லிகளையும் தம் கற்பனையிலே வடித்தெடுத்தார்.


பாவையரைப் படைப்பதில் புகழ்படைத்த பவுச்சருக்கே எவ்வகையிலும், சளைக்காத இந்த 'கேரளத்துக் கட்டழகியை' உருவாக்கிய இவர் மட்டும் வேறு நாட்டிலே பிறந்திருந்தால் இந்நேரம் உலகம் தெரிந்தவராக மாறியிருப்பார். ஆனால் இவரோ இந்தியாவில் அதிலும்-தென்னாட்டில் பிறந்து விட்டதால் இன்னும் குடத்தில் இட்ட விளக்காகவே-உலகத்தில் பெரும்பாலோருக்குத் தெரியாதவராகவே போய்விட்டார்.



## ஏ. டி. நோவல்:

பிற்கால ஓவியரான இவர் கட்டழகு வல்லிகளை எழுதுவதிலும், சோலைகளை வண்ணத்தில் உருவாக்குவதிலும வல்லவர். அவர் தீட்டிய படங்களிலேயே மிக்க புகழ்படைத்த 'தூங்கும் அழகியும் அவளது தோழியரும்' இது.







↑

**பிராகனர்ட்: (1732-1806)**

பிரெஞ்சு மாதர்களை மிக அழகாகத் தீட்டிய பவுச்சரின் மாணவரான இவரும் காதல் களியாட்டங்களைத் தீட்டுவதில் மிகப் புகழ் படைத்தவர். இவர் தீட்டிய இந்த ஊஞ்சலாடும் கன்னியும் மேலே ஆடும் அவளைக் கீழே இருந்து கண்டுகளிக்கும் கட்டழகனும் ஓவிய இலக்கணத்திற்கே வித்தாக அமைந்தவர்கள்.

↑

**தஞ்சை ஓவியம்:**


கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் தீட்டப்பட்ட இந்தத் தஞ்சை ஓவியம் பிற்காலத் தமிழகத்தின் ஓவியச் சிறப்பை விளக்க வல்ல "தாயும் சேயுமாகும்"



**அஜந்தா :**

ஓவிய உலகில் நம்மை உயர்த்துவதற்கு என்றே தோன்றிய இந்த அழகோவியங்கள் சுவற்றில் எழுதப்பட்டு தலைமுறைகள் பல கடந்துவிட்டாலும் இன்றும் புத்தம் புதிதாகவே, வண்ணத்தின் மெருகுகூட கலையாத வகையில் காட்சி தந்து, ஓவியத்துறையின் மணிமகுடத்தைத் திராவிட கலையுலகிற்கு வாங்கித்தருகின்றன.

←



# ஓவிய ஒளிவிளக்கு மட்டானியா தந்த ஓவியக்கலைப் பொக்கிஷங்கள் (தொகுப்பு : கௌதமன்)

நீர்வீழ்ச்சியின் வனப்பைத் தீட்டிய ஓவியன் உண்டு; அதனழகைப் புகழ்ந்து பாடிய கவிஞனுண்டு; ஆனால் இந்த இரண்டையும் ஏக காலத்தில் செய்த ஒரே 'கலைஞன்'—இதந்தனி அபூர்வம்!

ஓவியன் ஒளிவண்ணச் சித்திரங்களைத் தீட்டிக் காட்டுவதுடன், அதன் புகழான சரித விளக்கங்களையும் கூடத்தானே தீட்டிக்காட்ட முடியும் என்பதை நிரூபித்தவர் இன்றும் வாழும் ஓவிய மேதை மட்டானியா அவர்கள். ஓவியன்-ஓர் எழுத்தாளன்-ஆசிரியனும் கூட ஆகமுடியும். என்ற எண்ணம் அவரால் தான் பரவியது! (அந்த எண்ணத்தைச் செயலால் காட்டி வெற்றி பெற்று மகிழுபவர்களில் இன்றைய கலையாசிரியரும் ஒருவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது)

வாழும் ஓவிய ஒளிச்செல்வம் மட்டானியா அவர்கள் இன்றைய பிரிட்டானியா நாட்டு தலைசிறந்த ஓவியமேதை! சரிதம், இலக்கியம், கலை, நாகரிகம், வீரம், பண்பாடு இவைகளைச் சித்தரிக்க வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்து அவைகளில்-காணும் சம்பவங்களை ஒரு சேரத் தொகுத்து-எழுத்தாலும், தூரிகையாலும்—ஓவியத்துக்கும் எழுத்துக்கும் எல்லைக் கோடுகளமைத்தவர்! பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலியப் பேரறிஞன் லியனார்டோ—டாவின்ஸியைப் (1452-1519) போல பல துறையிலும் புகழ் பெற்றிலங்குபவர் மட்டானியா! பேரறிஞன் டாவின்ஸி பல துறையிலும் வல்லவன்-இன்றைய வான ஊர்த்திக்கு அந்நாளில் தன் ஓவியத்திறனாலும், ஆராய்ச்சியின் நுட்பத்தாலும்-படங்கள் வரைந்து செயலிலும் முயன்ற ஓர் மறக்க முடியா விஞ்ஞானி! லியனார்டோவின் ஓவியங்கள் இன்னும் ஓவியக்கலைக்கு சிகரமமைப்பவையாகும். அத்தகைய பெருமை வாய்ந்த லியனார்டோவின் வாழையடி வாழையாகத் திகழ்பவர்தான் இன்றைய மட்டானியா அவர்கள்!

ஓவியர் மட்டானியாவைப்பற்றி முன்பே நம் கலை இதழ் சிறப்பாகத் தீட்டியிருக்கிறது ஆனாலும் அது போதாது-சிறு பக்கங்கள்-இட நெருக்கடியல்லவா? எனவேதான்-இதோ மீண்டும் அவரின் கவினுறு ஓவியப் பொக்கிஷங்களிலேயிருந்து சில பலவற்றைப் பெயர்த்தெடுத்து உங்களின் அன்புப் பார்வைக்கு வைக்கிறோம்! இன்றைய இளம் ஓவியர்களுக்கெல்லாம் ஓர் உயர் சகாப்தமாக விளங்கும் இவ் ஓவியமேதையும் தலை சிறந்த சரித எழுத்தாளருமான-இவர்-இந்நூற்றாண்டின் ஈடும் எடுப்புமில்லா ஓவிய மன்னர்-என்பதை இவ்வோவியங்களே ஊர்ஜிதப்படுத்துவதை நீங்களே உணருவீர்கள்! வாழ்க மட்டானியா!—வாழ்க ஓவிக்கலை!!

மட்டானியா



To Balu Bros



### ← ஊழியம் செய்ய உலகைத் துறந்தவர்கள்

மாபெரும் மன்னர்களுக்கு வாழ்வில் அடிமைத்தனம் செய்தது போதாதென்று, சாவிலும் ஊழியம் செய்ய, தங்கள் சகாக்களுடன் கட்டுப்பாடாகக் கிளம்பிவிட்டார்களிவர்கள்! 4500 ஆண்டுகளுக்கு முன்னுலிருந்து எகிப்திலே இது ஒரு பழக்கம்-மன்னன் கல்லரைக்குப்போனுல் மாவீரும்-அரண்மனைப் பரிவாரமும் அந்தப்புர ஆரணங்குகளும் அவனுடன் செல்வர்—மாள்வார்! இது வெறும் கதை மட்டுமல்ல; அந்நாளில் நிலவிய வரலாற்று உண்மையும்கூட இதுதான் என்பதை அண்மைய புதைபொருளாராய்ச்சி (1922) விளக்குகிறது! இதை அடிப்படையாகக் கொண்டு ஆரணங்குகள் விஷம் குடித்து தங்கள் மன்னர்க்குப் பணிசெய்ய-மாள்வதை ஓவியமாக்கியிருக்கிறுர் மட்டானியா! சாவை அணைத்து மகிழத்தாமதித்து வந்து நிற்கிறுள் இந்த அழகு மயில். ஆனுல் இளமையும், எழிலும் அவளை இன்னுமிருக்கக் கெஞ்சும் சாயலைப் பாருங்கள்!

### எகிப்தியம் நாடு கடத்துகிறது! →

'எதையெடுத்தாலும் கடவுளென்று வணங்கி நேரத்தைப் பாழாக்காதே, எதற்கும் ஓர் அளவுண்டு —எண்ணுயிரம் கடவுளர்கள் நமக்குத் தேவையில்லை; ஒரே ஒரு கடவுளிருந்தால் அதுவே போது' மென்ருள் — அந்தப் புரட்சிப் பெண்மணி! அவள் கணவன் ' அக்னேடன் ' எகிப்தின் மன்னன் — 3000 ஆண்டுகளுக்கு முன்புளனவே அந்த ஒரு கடவுள் நிபந்தனையைஎளிதில் சட்டமாக்கினுன் அக்னேடன். மதமும்—மதகுருமார்களும் எதிர்ப்பு முகாமமைத்தனர்! நாடே இரு பிரிவாயிற்று! அந்த கொந்தளிப்பிலே ஒரு கொள்கைமுளைத்தது! மன்னன் துவண்டான் —மத குருமார் நிபந்தனை விதித்தனர். ' நீப்பரிடிடி அதுதான் ராணி—நாடு கடத்தப்ப' வேண்டுமென்றனர்! மன்னன் இசைந்தான்! ஓவியர் மட்டானியாவும் அவள் போவதைப் படமாக்கியிருக்கிறுர்





### ← பேரரசியாக மாறிய - சர்க்கஸ் ராணி

யவன நாட்டுப்பேரரசு மட்டும் பெண்கள் நிர்வாணமாகப் பொதுவிளையாட்டரங்கங்களில்தோன்றலாமென்ற விதிவிலக்கை மட்டும் அளித்திருந்தால், 'சக்கைபோடு' போட்டிருப்பாள் இந்த சர்க்கஸ் ராணி.இரண்டு கரடிகளை வைத்துக்கொண்டு, தன்னிஷ்டம் போல் அவைகளின் மீதேறி நின்று எழில் கொண்டிருந்த இந்த சர்க்கஸ் ராணி 'தியோடாரா' தான் எதிர்கால ரோமானியப் பேரரசின் நிகரற்ற சர்க்கரவர்த்தினியாகக் காட்சியளிப் போமென்று அவளே நினைக்கவில்லை! ஆனுல், அந்த அப்பாவியரசன் ஐஸ்டீனியன் இந்த அனுபவம் வாய்ந்த ஆடலழகியை ஒற்றைக்காலில் நின்று திருமணம் செய்துகொண்டதால் அந்த ஆளும் வாய்ப்பை இவள் பெற்றதோடு, அதிகார வெறியையும் கூடவே சேர்த்துப்பெற்று அகில உலகின் சரிபகுதியையே ஆட்டிப்படைத்தாள் இந்த ஆடலழகி. ஆனுலும், செத்துத்தானே போனுள் இறுதியில்!

## பொன் விலங்கேற்ற புகழரசி → ஜெனேபியா

அவள்ஓர் சரிதம் காணு எழிலரசி! கலையில்—கல்வியில்-கவினுறு இளமையில், போரில்—புகழில் அவளுக்கிணை அவளேதான்! நைல் முதல்—யூப்ரடிஸ்வரை அவளாளுகைக் குட்பட்டிருந்தது கி.பி. 270–ல். கொண்ட கணவன் கொலை செய்யப்பட்டபிறகு எகிப்தின் கோலோச்சும் பொறுப்பேற்ருள் ஜெனேபியா! அந்தப் பொறுப்பும் உரிமையும் தமக்குத்தான் சொந்தமென்ருன் ரோமானியப் பெருவீரன் அரேலியன். போர் மூண்டெழுந்தது. போரில் புலியெனக் கிளம்பி வந்த அவளை முதலில் வெற்றி அணைத்துக்கொண்டாலும்இறுதியில் தோல்வி தனது வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டது! சிறைப்பிடிக்கப்பட்டாள் ஜெனேபியா. பொன் விலங்கு அவள் பொலிவு அங்கங்களைபுண்ணுக்க ரோமின் ராஜவீதிகளிலே இழுத்துச் செல்லப்பட்டாள்! ரோம் சிரித்தது! அவளைக் கண்டால் பெண்ணை வென்ற அரேலியனின் பெருவீரத்தைக்கண்டுதான் கேலி சிரிப்பு சிரித்தது ரோம்!



## ← காளையை அடக்கும் கன்னி!


புலியைக் கொல்லும் ஆடவனுண்டு! காளையை அடக்கும் காளையைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிருேம்-ஏன் பார்த்திருக்கிருேம்கூட! ஆனல், காளையை அடக்கும் கன்னியைப்பற்றி கேள்விப்பட்டதில்லையல்லவா? இந்த பயங்கர விளையாட்டு கிரேக்க நாட்டின் ஒரு பகுதியான கிரீஸ்-தீவிலுள்ள கான்ஸாஸ் என்ற பெருநகரின்-மக்களுக்குக் குறிப்பாக ஆடவருக்கு ஒரு சகஜமான விளையாட்டாம்! இதோ படத்தில் பாருங்கள். இந்த கன்னியின் சாதனையை-இவள் காளையை அடக்குவது மட்டுமல்ல; அதன்மீது தன் தங்க உடலும், தளிர்மேனியும், பளபளக்கத் தலைகீழாக நின்று போகிருள் அதன் கொம்புகளை தன்னிரு கரங்களால் பிடித்தவண்ணம்! பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தாலும், உள்ளம் இனிக்கும் பரவசமும் அதில் கலந்திருக்கிறதல்லவா?!



## மணமகள்-ஒரு நாளைக்குமட்டும் →

இவர்கள் எல்லாம் மணப்பெண்கள்-ஒரு நாளைக்கு மட்டும்! பாபிலோனிய கலாசாரமும், மதாலயமும், இந்த திடீர் திருமணத்திற்கு இடமும், ஆதாவும் அளித்துவந்த தாம் அந்நாளில்! ஆண்டுதோறும் நடைபெறும் இந்தத் திடீர் திருமண விழாவிற்கு நகரப் பெண்மணிகள் அத்தனைபேரும் தங்கள் வாழ்நாளில் ஒருதரமாகிலும் போய்த் தீர வேண்டுமாம்! கயிற்ருல் வளையமிடப்பட்டு உள்ளே சிறையிடப்பட்டிருக்கும் இவர்கள் அழகு எந்த ஆடவருக்கும் சொந்தமாம்-ஒரு நாளைக்கு! இந்த விரகதாபம் தனரிக்கும் விபரீத விபசார முறைக்கு விலையேதும் கிடையாதாம்! ஆண்டவனருள் ஒன்றே இதற்கு கிடைக்கும் பெரு விலையாம்! வீசியெறியப்படும் நாணயம் வீழ்ந்து சிதறும் 'வாய்ப்பைப் பெற்றவளுக்கு, அந்த இரவும் பகலும் இனிக்கும் காலமாம்! ஐய்யோ! ஐய்யோ!-தெரியாதயா இப்படியும் ஒருமுறை பண்டையப் பாபிலோனில் இருந்ததென்று!





# கிரேக்க வாழ்விலே ஒரு நாள்

உலகின் சரித்திரத்தை முதன் முதல் வீரத்தால் நிரப்பியவன்—உலக சாம்ராஜ்யாதிபதிகளின் அழகு எல்லைகளைக் காலால் மிதித்தவன் — எண்ணற்ற வேந்தர்களை வேதனைக் கடலில் ஆழ்த்தியவன் — அவன்தான் புகழ் வாய்ந்த கிரேக்க மண்டலாதிபதியன் அலெக்ஸாண்டர்.

அவனின் நண்பனும், சிறந்த வண்ணக் கலைஞனுமான அப்பெல்லஸ், கிரேக்க நல்லுலகத்தின் பூரிப்புக்கும், பெருமிதத்திற்கும் காரணமாவன். அவனின் ஓவியப் பெரும் புகழ் உலகெங்கும் பரவலாயிற்று.

ஆகவே, இத்தகைய சிறந்த வண்ணக் கலைஞ நண்பனிடம் நம்பிக்கை வைத்துத்தான் அவனின் அந்தபுரத்து ஆரணங்கும், அவனின் இதயவீணையின் ஏகாந்த இன்னிசையுமான எழிலரசி கம்பாஸ்பியையின் வண்ண ஓவியம் வேண்டி வந்தான் அப்பெல்லஸிடம் அலெக்ஸாண்டர். ஆனால், அவன் விரும்பிய பிய தெல்லாம் ஓவியம் இயற்கை யளித்த பொன்னுடலோடு காட்சி தர வேண்டும். இவளின் நீலக் கருவிழிகளும், நிகரில்லாப் பிறைநுதலும், ஒளி சிந்தும் இளமுறுவலும், பளபளக்கும் தளிருடலும், உள்ளது உள்ளவாறே — அமைய வேண்டும்! இவள் நிற்கும் சாயலையும், நிமிர்ந்து நோக்கும் நேர் பார்வையையும் — ஏன் நாணிப் போர்த்திடும் மலர்க் கரங்களையும் கூட நேர்த்தியுற நிர்வாணமாகக் காட்ட வேண்டும் உனது தூரிகைக் காவியம்! இது என் அன்புக் கட்டளை என்றான் ஒரு நாள் மணிமுடி காவலன்.


ஆகவே, அப்பெல்லஸின் கலைக்கூடம் அலெக்ஸாண்டரின் அந்தப்புர அழகிக்கு தேவையான வசதிகள் செய்துத் தந்தது. அந்த ஆடலழகி தினமும் வருவாள். ஆடைகளைவாள்; தங்கப் பதுமையென ஒரு அங்கமும் அசையாமல், நகைமுகம் காட்டி நிற்பாள் அப்பெல்லஸின் எதிரில்! அவனோ புதுப்புதுத் தீர்மானங்களுடன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு தன கையிலே உள்ள தூரிகையை வர்ணக் குழைவயிலே தோய்த்தெடுத்து நிமிர்ந்து பார்ப்பானவனே! அப்பப்பா...! மறுகணம் அவளின் அசையாத நிஜபிம்பம் இவன் நெஞ்சத்திலே அசைந்தாடும். அவளின் சிரிக்கும் முகமும், சிங்காரச் சிற்றிடையும் அவனைச் செயலற்றவனாகவே ஆக்கிவிடும். அமைதியைச் சற்று நேரம் உலவ விடுவான்! மீண்டும் தூரிகை எடுப்பான் — ஆனாலும் ஏதோ ஓர் புரட்சி...! மிரண்டுப் பார்ப்பான்... ஆனால், அந்த முழுமதி முகத்தாளுக்கோ இந்தப் பார்வையைத்தான் சமாளித்துக்கொள்ளவேமுடியவில்லை! இருப்பினும் கடைசி வரையில் தங்கள் எண்ணத்தைக் கலந்து பேசியதே கிடையாது!

நாட்களும் நகர்ந்தத. இப்பொழுதெல்லாம் காலை மலருமா என்ற ஏக்கம்தான் இருவரையுமே வாட்டியது.

ஆனால், ஓவியம் மலர மலர இருவர் உள்ளத்திலேயும் உவகை பிறக்கவில்லை. மாறாக கவலைதான் தோன்றி வளரலாயிற்று. மன்னனோ கலை வளர்க்க தன் காதலியின்...! இவர்களோ தங்களுக்குள் காதல் பிறக்கத்தான் அதனைக் கருவியாகக் கொண்டு விட்டனர். ஓவியம் முடிந்ததும் கம்பாஸ்பி வரமாட்டாள் — மன்னன் வருவான் — அவன் அளிக்கும் பரிசுகள் வரும்! ஆனால், இந்த நிலையை அந்த இளம் காதலர்களால் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்! ஆகவே, அலெக்ஸாண்டரென்ற மாபெரும் தடைக் கல்லினின்றும் தங்களை விடுவித்துக் கொள்ள ஏதோ ஓர் புதிய வழி — நல்லதோர் ஒப்பந்தம் கண்டு விட்ட நிலையில் சாந்தியைப் பெறலாயினர். சித்திரமும் பூர்த்தியாயிற்று இந்நிலையில் ஓவியத்தின் நிறைவுகாண வந்தான் மன்னாதி மன்னன். எதிரே நின்ற பேசும் காவியமும் பார்த்தான். அந்தத் தளிர் வண்ணச் சிலையாளின் புது வண்ண மலர் முகத்தை எப்படித்தான் இவ்வளவு ஜீவக்களை ததும்ப தீட்டி முடித்தாயோ என்று அப்பெல்லஸிட ம்வியந்துபாராட்டினான். எத்தகைய பரிசும் அளிக்க சித்தமானான். ஆனால், புதிய காதலர் இருவரும் சோகச் சிலையானார்கள். அரசன் ஒன்றுமே புரியாது திகைத்தான். இறுதியாக அப்பெல்லஸே ஒன்றையும் மறைக்காமல் கூறி முடித்தான்.

இப்படிப்பட்ட விபரீத முடிவுகளைக் கொண்டே தீர்ப்பளிக்க அந்த மாவீர மன்னன் ஆச்சரியச் சிலையானான். ஆவேசத்துடன் எழுந்து தண்டனையைத் தரவேண்டியவன்-நண்பனின் மன முறுக்கும் சோகக் கதை கேட்டு அனுதாபங்கொண்டு, மறுமொழி எதையும் பேசாமல் மளமளவென்று தன்னெதிரே நின்ற கம்பாஸ்பியையின் தளிர் மலர்க் கரங்களைப் பற்றி இழுத்து வந்து— அப்பெல்லஸிடம் ஒப்படைத்து புன்முறுவல் பூத்தான். இத்தகைய காதல் காவியத்தைத்தான் இங்கே மட்டானியா இயற்கை எழில் ஓவியமாக்கியுள்ளார்

[தொடர்ச்சி அடுத்த பக்கங்களில்]



# மாபெரும் பேரறிஞர் பெர்ட்ரெண்ட் ரசல்

ஏயாரெஸ்

பகுத்தறிவைப் போதிப்பவருக்கு உலகம் தரும்பெரும் பரிசு—"நாஸ்திகன்"- என்ற விலை மதிக்கவொண்ணாத பட்டம் தான். ஒருவர் நாஸ்திகரென்று உலகின் வெகு பலரால் அழைக்கப்பட்டாலொழிய அவர் பகுத்தறிவை-மக்களுக்கு வேண்டிய நல்ல நெறிமுறைகளை-போதித்ததாக அர்த்தமல்ல!


இந்தஇலக்கணப்படி சாக்ரடீஸும், ரூஸோவும், வால்டேரும். பூருனோவும், இங்கர்சாலும், பெரியாரும் நாஸ்திகர்கள் தான்! எனவேதான் உலகில் மூடபக்தியும், முரட்டு மதக் கோட்பாடுகளும் இருக்கும் வரையில் இவர்களின் பெயரும் புகழும்கூட வாழுகிறது!

இன்று உலகில் வாழும் இருபெரும் பகுத்தறிவரசர்களில் வயதில் சற்று முதிர்ந்தவராகக் கருதப்படுபவர் பெர்ட்ரெண்ட் ரஸல்! மற்ருெருவர் 82 வயதை எட்டிப்பிடித்து விட்ட தமிழர் தந்தை பெரியாரவர்கள்! இந்த இருவரில் முந்தியவர் மேலை நாடுகளின் அறிவரசர்-பிந்தியவரோ, உலகு காணாத பெருந்தலைவர்!

இந்த இருவரில் பெரியாரைப் பற்றி நமக்குத் தெரியும் - ஆனால், ரஸலைப் பற்றி நம்மில் வெகு பலருக்குத் தெரியாது.

பேரறிஞர் பெர்ட்ரெண்ட் ரஸல், பிரிட்டானிய நாடு தந்த மூவர்களில் பெர்னட்ஷா-எச். ஜி. வெல்ஸ்-ரஸல் இவர்களில் மிகச் சிறந்தவர் என்பது மட்டுமல்ல, இன்றும் வாழுபவர்கூட எண்பத்தி எட்டு வயது -- எஃகு உள்ளம் -- எதையும் தாங்கும் இதயம் -- உரிமைக்காக மட்டுமல்ல; உண்மைக்காகவும் போராடும் பண்பு -- இன்ப துன்பங்களையும், வாழ்க்கையின் சுக துக்கங்களையும், அரசியலின் லாப நஷ்டங்களையும் அறிதியிட்டும், அளவிட்டும் சொல்லும் கணித மேதைத்துவம், எப்பொருளைப் பற்றியும் வரையறுத்த பொருள் விளக்கங்கள் தரும்தத்துவ ஞானம், இவையனைத்தையும் ஒருங்கே பெற்றிருப்பவர் ரஸல் அவர்கள். மனிதன்—மனிதனுகவும், பூர்ணத்துவம் வாய்ந்தவனுகவும், இன்பத்தின் எல்லைகளிலே சஞ்சரித்தவனுகவும் திகழ வேண்டும் என்பதுஅவரது பேரவா! மத வேத சடங்குகள் அவருக்குப் பிடிக்காத ஒன்று -- மூட பக்தியும், அறிவும், பொருளும் அற்ற கோட்பாடுகளும் அவரைநெருங்க முடியாது -- கடவுளைப் பற்றியவர் கவலைப்பட்டதில்லை. ஒழுக்கத்தையும், வண்மையையும், அன்பையும் பகுத்தறிவையும் தான் அவர் தன்வழிகாட்டியாகக் கொண்டிருக்கிருர்.

இன்றும் வாழும் அவரை உலகில் வெகு சிலருக்குப் பிடிக்காது. மதவாதிகளுக்கும், போலிப் பொதுவுடைமை பேசும் புத்துலக எத்தர்களுக்கும் அவரைப் பிடிக்காது. காரணம் அவரின் அரிய கட்டுரைகளிலும், புத்தகங்களிலும், பெரும் பெரும் இலக்கியச் சொற்பொழிவுகளிலும், இந்த இரு சாராரின் கொள்கைக் கோட்பாடுகளையவர் அலசி அலசிக் காட்டியிருப்பதால்தான். ரஷ்ய



ரஸல் 30-வது வயதில்

நாட்டைச் சுற்றிப் பார்த்த அவருக்கு—லெனினையும், டிராஸ்ட்கியையும், கார்க்கியையும் நேரில் கண்டு விவாதித்திருக்கும் அவருக்கு—மார்க்ஸின் தத்துவங்களில் பெருங் குறைகள் தெரிந்ததே இதற்குக் காரணமாகும்!


பெரும் பணக்காரர்களின்—முதலாளிகளின்—கோரப்பிடியிலிருந்து ஏழைகளையும், தொழிலாளிகளையும், மத்தியதர வகுப்பினரையும்-விடுவிக்கும் கம்யூனிஸ முயற்சி இறுதியில் அதிகாரிகளின் ஆணவப் பிடியிலே தான் அவர்களைச் சிக்கித் தவிக்க வைக்கிறது—முந்தி வாழ்ந்த வாழ்வை விடமிக மிக மோசமான வாழ்க்கைக்கே அவர்களை ஈர்த்துச் செல்லுகிறது என்று அனுபவ ரீதியாகக் காண்பித்தவர் ரஸல்! எனவேதான் அவரைக் கம்யூனிஸ நண்பர்களுக்குப் பிடிக்காது.

'மார்க்ஸ் செல்வத்தைப் பற்றிதான் குறிப்பிட்டாரே தவிர -- செல்வத்தின் மூல சக்தி (Power of Money) எங்கே வாழுகிறது என்று தெளிவாகச் சொல்லத் தவறி விட்டார்!'—இதுதான் ரஸலின் குற்றச்சாட்டு!! முதலாளித்துவமில்லாத ஒரு நாட்டில், பொருளாதார பலமே சிறிதும் இல்லாது, தனிப்பட்ட ஒரு சாரார் மட்டும், சில பல தொழில்களில் வெற்றி பெற்றவராக இருந்தால்—அதனுல் மற்றவருக்கு லாபமில்லாதிருப்பது போகட்டும், அதனுல் பெரும் ஆபத்துத்தான் விளையுமென்பதே அவர் சித்தாந்தம்!

இதுவும், இது போன்ற சில பல தீவிரமான உண்மைகளையுமவர் வெளியிட்டதால்தான் அவரைக் கண்டால்—நம் 'காம்ரேடு' களுக்குப் பிடிக்காது. ஆனுல், அதைப் பற்றி அவரும் கவலைப்படுவதில்லை.

பெர்ட்ரெண்ட் ரஸல் பகுத்தறிவு வாதிகளின் நண்பர். நல்ல சமுதாயம் அமைவதிலே பெரிதும் அக்கறை காட்டியவர். குழந்தைகளின் பராமரிப்பு—பாதுகாப்பு—கல்வி போதிப்பு—இவைகளிலே தனிப்பட்ட எண்ண அமைப்பு கொண்டவர். குழந்தைகளைச் சுதந்திரமாக வாழவும்—சிந்திக்கவும் விடவேண்டும். அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலே மத-இன—கட்சி பாகு பாடுகளும், தேவையற்ற பூசற் கொள்கைகளும் புகுத்தப்படக் கூடாது என்பது மட்டுமல்ல -- அவர்களை ஆரம்ப முதல் எப்படி வளர்க்க வேண்டுமென்பதைத் தானே ஒரு அறிவுப் பள்ளியொன்றை அமைத்து (1927-ல்) அதில் இலவசக் கல்வி போதித்து





ரஸல் 30-வது வயதில்

(Russell's School at Beacon Hills 1927) புதிய முறை யொன்றை மற்றவர்க்குக் காட்டித் தந்தார் ரஸல்!

ரஸல் தோன்றியது பெரும் பிரபுக்கள் குடும்பத்தில்–1872-ல்...! வாழ்க்கையில் அவர்களுக்குக் கிடைத்த வசதி அவரை அறிஞனாக்கியது... நல்ல படிப்பு; நாடு சுற்றும் பழக்கம்–உலகம் தெரிந்து கொள்ளும் நல் வாய்ப்பு; எல்லாமே அவருக்குக் கிடைத்தது. எனவேதான் எதிலுமே அவர் சிறந்து விளங்கினார். அது மட்டுமல்ல; தன் 22வது வயதிலே அவருக்கு ஆரம்பித்த திருமண ஆசை 64 வயது வரை அவரைவிடவில்லை! மூன்று திருமணங்கள்! மூன்று மனைவியர்கள்–ஒன்றன்பின் ஒன்றாக!

குழந்தையில்லாததால் ஒன்று — குறை கண்டதால் மற்றொன்று — என்று மூன்று திருமணங்கள் வரிசையாகச் செய்து கொண்டார் ரஸல்... பிரபுக்கள் குடும்பமல்லவா–எதையும் தாங்கும்சக்தியும்அவர்களுக்குக்கூடவேபிறந்ததன்றல்லவா ரஸலின் எழுத்தார்வம் அவரை ஒரு முறை சிறைக்கனுப்பியிருக்கிறது...! ஒரு முறைத் தன் சொத்தை இழக்கவும் வைத்திருக்கிறது...!! 1918-ல் வேலை நிறுத்தக்காரர்களை அமெரிக்க ராணுவம் சுட்டு வீழ்த்தியதைக் கண்டித்து எழுதியதற்காக அவர் 6 மாதம் சிறைத்தண்டனையைப் பெற்றார். அப்பீல் கோர்ட்டிலும் (1919-ல்) அவரைச் சிறைதான் அழைத்தது—நல்ல ஓய்வில்—நிறைய எழுத்தறிவை வெளியிடும் வாய்ப்பையும் அவருக்களித்தது! நிறைய எழுதினார் — அந்தப் பகுதியின் கவர்னரே இவர் சிறையில் எழுதும் ஒவ்வொரு ஏட்டையும் பரிசீலித்து (சில நேரங்களில் அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் அந்த கவர்னரே தவித்திருக்கிறாராம். பரிதாபம்!!) அச்சிட அனுப்புமளவிற்குக்கருதினாராம்ரஸல்



ஸல் குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு களிக்கிறார்.

ரஸல் எழுதுவதோடும், பேசுவதோடும் நின்று விடாமல் உலகின் நாடுகளைச் சுற்றிக் காணவும் முற்பட்டார். அமெரிக்க நாட்டைப் பலமுறை சுற்றியிருக்கிறார் ரஸல்–வால்ட்விட்மன் என்ற மாபெரும் அமெரிக்கக் கவிஞர் இவரது நண்பராக இருந்திருக்கிறார். பிரான்ஸ், ஜெர்மனி போன்ற இடங்கள் இவருக்கு சகஜமான வாசஸ்தலங்களாகும். ரஷ்ய நாட்டை இவர் பார்வையிட்ட பிறகு தான் கம்யூனிஸத்தைப் பற்றியும், மார்க்ஸைப் பற்றியும் தெளிவான அபிப்ராயங்கள் வெளியிடலானார். அதைப்போலவே சைனாவைச் சுற்றினபோது உருவானதுதான்–சைனாவின் பிரச்னைகள்' (The Problems of China 1921) என்ற அரிய நூல். ஜப்பான் நாட்டையும் ரஸல் பார்வையிட்டிருக்கிறார்.

எனவே உலகின்பல முக்கியநாடு நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு இன்று நன்கு ஓய்வுடன், சிந்திக்கவேண்டியபல பிரச்னைகளை சிந்தித்து, ஒவ்வொன்றிற்கும் அழகான விளக்கங்களும், முக்கியத்துவங்களும் அளித்து வருகிறார் ரஸல்.

இன்றைய



கோனார்ட் 11-வது வயதில்



ஓவிய ஒளிவிளக்கு தொடர்ச்சி

## ← கிரேக்க இராமாயணம்

அழகுக்கு அழகு சேர்த்தாள் அந்த ஆரணங்கு! 'ஹெல்லன்" என்றால் அகில கிரேக்கமும் பூரித்தது மட்டுமல்ல; அவளை மீட்க ஆயிரமாயிரம் கப்பற்படை கொண்டு போரிட்ட காலமும் ஒன்றிருந்தது! பாரீஸ் அவளிதயத்தைக் காதற்கணைகளால் துளைத்து, அவள் கணவன் மெனெலைஸைக் கண் கலங்க விட்டு - அவளையும் 'டிராய்' என்ற 'இலங்கைக்கு'த் தூக்கிச் சென்றுவிட்டான்! அவளை மீட்கக் கணவன் மெனலெஸ் - படை கொண்டு வரும் படலமே மேலே காண்பது- திரண்டு வரும் கிரேக்கப் படைகளை மருண்ட விழிகளால் பார்க்கிறாள் ஹெல்லன்! இந்த கிரேக்க - இராமாயணம் கிரேக்கர்களின் போர்த் திறமைக்கு ஓர் பெருமிதம்!

உலகம் ரஸலைத் தத்துவ ஞானி எகிறது. பகுத்தறிவு பேசுபவர்கள் அவரை இந்நூற்றுண்டின் 'விடிவெள்ளி' என்று கருதுகிருர்கள். மதவாதிகள் இவர் பேசுவதெல்லாம் நாஸ்திகமா? அல்லது ஆஸ்திகமாக என்று வியந்து பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்--ஆனுல், இவரோ 88 வயதை நிம்மதியாகக் கடந்துவிட்டு இன்றைய உலகின் வளைவு--நெளிவுகளைக் காணக்காத்திருக்கிருர்!



ரஸலின் 64-வது வயதிலே பிறந்த (1937) அருமை மைந்தன் கோனுர்ட்டும் - மூன்ரும் மனைவி பாட்ரிக்காவும்


" அது மட்டுமல்ல எனக்கு நானே; ஓர் சமயவிரோதி--உலகு அறிந்த மதங்கள் அத்தனையிலும் நம்பிக்கைக் கொள்ளாதவன். ஆனுல், எனக்கு மட்டும் ஒரே நம்பிக்கை இன்னமும் உண்டு...அது என்னவென்ருல் இன்னும் கொஞ்சநாளில் உலகில் எவ்விதமான மதநம்பிக்கையும் நிலைவாமல் செத்தொழிந்து விடுமென்பதுதான் அது" என்று அவர் அன்று எழுதியதை இன்னமும் நிலைநாட்டிக் கொண்டுதான் வாழ்ந்து வருகிருர்...!



ரஸல் தனது 8-வது வயதில்

ரஸல் ஓர் சமுதாயவாதி--கொண்ட மனத்திண்மையினுல் ஓர் புதிய சமுதாயத்தை மலரவைக்க வேண்டுமென்று பெரும் பாடுபட்டவர்--இன்ருே உழைக்கும் காலமும்முடிந்து, செய்ய வேண்டிய கடமையும் முடிந்து காத்திருக்கிருர்,.,நிம்மதியாக...! தன் வாழ்நாளில் அவர் எழுதிய புததகக குவயல்கள் எண்ணிலடங்கா--பேசிய பேச்சுக்களும், தீட்டிய கட்டுரைகளும் மிகமிக ஏராளம். இன்று அவர் எழுத்தோவியங்களில் மிக மிகச் சிறந்தவைகளாகக் கருதப்படுபவை சுமார் 30 புத்தகங்களாகும். இவைகளிலெல்லாம் ரஸலின் எண்ணங்களும்--இதயமும் பிரதிபலிக்கக் காணுகிருேம்.

இத்தகைய மாவீரர் அண்மையில்தான்--மே மாதம் 18-ந் தேதிதான்--88வது வயதைமுடித்தார். இவர் இன்னமும் வாழ்வது மனித சமுதாயத்திற்கு எவ்வளவு பேரதிர்ஷ்ட மென்பதை காலம்தான் முடிவு கட்டவேண்டும்..! வாழ்க மாபெரும் பேரறிஞர் ரஸல். வாழ்க அவரின் கோட்பாடுகள்!



ரஸல் 38-வது வயதில்

---

**ரோமைத் துளைத்த பிரிட்டானிய → மங்கையர் திலகம் — பொடீஷியா**

**உலகையே அடிமைப்படுத்தியதாகப் பூரிப்படைந்த பிரிட்டானிய நாடு, ஓர் காலத்தில் (கி. மு. 55 முதல் கி. பி. 410 வரை) ரோமானிய மண்டலத்திடம் சுமார் 450 ஆண்டுகள் வரை அடிமைப்பட்டுக் கிடந்தது. அந்தப் பெரும் அடிமைச் சகாப்தத்தை ஓர் நாள் (கி. பி. 62-ல்) உடைத்தெறியக் கிளம்பியவள்தான் பொடீஷியா! பொடீஷியா வீறு கொண்ட பிரிட்டானிய அரச பரம்பரையினர் — ஓர் பெரும் பகுதியின் ராணிகூட. அவளையும் அவளின் இரு பெண்களையும் துன்புறுத்தினர் — கற்பழித்தனர்— ரோமானிய அதிகார வெறியர்கள். அதைத் தாங்காமல் வீறு கொண்டெழுந்தாள் பொடீஷியா! அவள் பின்னுல் ஆவேசப் படையொன்று திரண்டெழுந்தது! ரோமானியப் பெருநகர்கள் தீக்கிரையாகின! கொலை, கொள்ளை — கோரம் விளைந்ததங்கே! அஞ்சி ஓடுங்கினர் ரோமானியர்! மிஞ்சிப் போரிட்டாள் பொடீஷியா ஆனுலும் இறுதியில் அவள் பெற்றது தோல்வியும் — விஷக்கோப்பையும்தான்!**



எங்கள் மனமார்ந்த

# தீபாவளி
# வாழ்த்துக்கள்



# ஸ்டாண்டர்ட் டென்


*உறுதியான கார்*

**யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்)**
**பிரைவேட் லிமிடெட்.**

சென்னை – பெங்களூர் – உதகை



# கல்லிலே கலை அழகு



வேல் விழி மாதர் தன் தாள் பணிந்து கிடக்கவல்ல வேந்தனுகப் பிறந்தும் பிறரது சோகம் தவிர்ப்பதற்காகத் தவம்பூண்ட ஆசிய ஜோதி கௌதம புத்தர்

பரந்து விரிந்து கிடக்கும் இந்தப் பாரிலே, ஒரு நாட்டின் பண்பாட்டையோ அல்லது நாகரிகச் சிறப்பையோ நாம் அறிய வேண்டுமென்றால் அந்த நாட்டிலே திரட்டி வைக்கப்பட்டுள்ள படைபலத்தையோ, அல்லது அடுக்கி வைக்கப்பட்டுள்ள அணுகுண்டுகளையோ வைத்துக்கொண்டு கணக்கிட்டு விட முடியாது

படை பலம் மிகுந்த நாட்டை நாம் வேண்டுமானால் வல்லரசு என்று கருதலாமே தவிர, பண்பாட்டுத் துறையில் பிறருக்கு வழிகாட்டியான நல்லரசு என்று கூற இயலாது.

அன்று முதல் இன்றுவரை உலகம் கலை மிகுந்த நாட்டைத் தான் பண்பு மிகுந்த நாடென்று கருதி வருகிறது. எந்த நாட்டிலே நுண்கலைகளான சிற்பமும் ஓவியமும் சிறந்திருக்கின்றனவோ அந்த நாட்டைத்தான் நாகரீக எல்லையைக் கண்ட நாடு என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் கருதுகிறார்கள். ஏன் எனில் மனிதன் சிந்திக்கத் தொடங்கி விட்டான் என்பதன் அறிகுறி தான் அவன் தீட்டி மகிழ்ந்த ஓவியங்களும் செதுக்கி மகிழ்ந்த சிற்பங்களும். எனவே தான் பண்டைய கிரேக்கம் இன்றைய நிலையில் பலம் குறைந்த நாடு தான் என்றாலும் பண்பாட்டுத் துறையில் அதற்கு இருக்கின்ற மதிப்பு, பணம் படைத்த அமெரிக்காவிற்குக் கூட இருப்பதில்லை.



சதிராடும் நிலையில் காட்சி தந்து காண்பவர் தம் உள்ளத்தை மெழுகாக்கிவிட வல்ல கட்டழகுவல்லி இவள்.

அதேபோன்று கரடு முரடாக நின்ற கருங்கற் குன்றுகளை எல்லாம் கண்கவரும் கட்டழகு வல்லிகளாக— சிந்தையைக் கவரும் சிற்பப்புதுமைகளாகச் செய்து காட்டிய கலைஞர்கள் வாழ்ந்த இந்தியத் துணைக் கண்டமும் ஆசியாவிலேயே தலைசிறந்த நாகரிகத் தொட்டிலாகத் தான் திகழ்கிறது.

எனவே தான் உலகையே அழிக்கவல்ல அணுகுண்டுகளுக்கு அதிபதிகளாகிய அமெரிக்கர்களும், வையத்தை வென்றதோடு நில்லாது வானத்தில் உலாவரும் மதியையே வெல்லப் புறப்பட்டுள்ள ரஷ்யர்களும் விஞ்ஞானத் துறையில் எவ்வளவுதான் வளர்ந்திருந்தாலும் இந்தியக் கலைத் துறைக்கு மதிப்புத் தருகின்றனர். கல்லைப் பேச வைத்த நம்முடைய சிற்பப் புலவர்களின் திறமையைக் கண்டு சிரம் தாழ்த்துகின்றனர்.



தன்னுடைய சாடாத இளமையாலும் பங்கயத்தோளாலும் வாராவிருப்பு: வருவிக்கவல்ல இந்த காந்தச் சிலே. இவ்வாறு காத
கடிதம் வேறு எழுத ஆரம்பித்துவிட்டால் அவள் வீசும் காதல்வலேப் படாத ஆடவரும் உண்டோ?

உலகத்தில் நாம் மற்
றத் துறைகளில் பிற்
பட்டவர்கள் என்பதை
மறுப்பதற்கில்லை. பிற
ரோடு வைத்து எண்
ணப்படும்போது நாம்
வறியவர்கள் என்பதி
லும் ஐயமில்லை. நம்மி
டம் அணு ஆயுதங்
கள் இல்லை. ஜலவா
புக் குண்டுகள் இல்லை.
இமைப் பொழுதில்
அகிலத்தையே சுற்றி
வரவல்ல ஏவுகணைகள்
இல்லை. இருந்தாலும்
கலைத்துறையில் மட்
டும் அன்றும், இன்றும்
ஏன்? இனி என்றுமே
நாம் தான் உலகத்தின்
வழிகாட்டிகள் என்று
சொல்லாமற் சொல்
லும் கலைப் பொக்கிஷங்
கள் இவை.

வாழ்க நம்முடைய
கலைக் கோயில்கள்!

வளர்க அங்குள்ள
கலை எழில்கள்!!



கல்விக் கடவுளான துங்கக் கரிமுகன் வடநாட்டுச் சிற்பி ஒருவரின் கற்பனையிலே இவ்வாறு காதல் கடவுளாகவும் காட்சி தருகிறார்.

புகைப்படங்கள்: நாகராஜராவ்


வானத்தில் ஒரே நிலவுதான்
வையத்தில் ஒரே இமயம்தான்
அதேபோன்று
ஒப்பற்ற நடிப்பிற்கும்

# நடிகர் திலகம் ஒருவர்தான்



நடிப்பில் தனக்கு நிகராவார்
எவரும் இல்லாத

தென்னாட்டுப் பால்முனி



கண்கவர் வனப்பும்
பண்புள்ள நடிப்புமுடைய

தமிழ்த்திரையின் அழகரசர்



கலை

திரையில் சுழலும் வாள் ஏந்தி
இந்நாட்டார் தம்
சிந்தை குளிர்வித்த

# தென்னாட்டுத் தீரர் இவர்





# உலக உடற்கூறு வல்லுனர்கள்!

உலகமெங்கிலும் வியாபகமாக விளங்குவது உடற் பயிற்சிக் கலை ஒன்றேயாகும். இக்கலைப் பயிற்சியில் ஈடுபடுவோர் எஃகு போன்ற வலிமையுடையவர்களாவதுடன், அழகிய உடலமைப்போடு கூடிய பொலிவு வதனத்தையும் பெற்று திகழ்வார்கள். இதன் பயிற்சிக் கழகங்கள் பார்முழுதும் பரவிப் பல ஆயிரமாயிரம் இளைஞர்களை ஊக்குவித்து உடற்கூறு வல்லுனர்களாக்கி, அவர்களை வீர வாழ்வும் வாழவைக்கின்றது என்றும் கூறலாம். இதன் வழிவழி நற்பணியில் தோன்றிய...உலகமே வியக்கும் பயங்கர உடலமைப்பைப் பெற்ற மாபெரும் பலசாலி ஹெர்க்குலிஸ், சிங்கத்தையே நடுங்கச் செய்த இரும்பு மனிதர் ஈஜின் சாண்டோ போன்றவர்கள் உடற்கூறு வல்லுனர்களுக்கெல்லாம் வல்லவர்களாக விளங்கியவர்கள். அவர்களின் வரிசையிலே வந்தவர்தான் குன்று போன்ற உடலமைப்பையும், அதிசயிக்கத்தக்க வைரம் பாய்ந்த வலியையையும் பெற்ற... இதோ நீங்கள் காணும் காரல்ஸ்வொபோடா என்பவர்.

இவர் எடை தூக்கும் கலையில் நிபுணர். நிகரற்றவர், என்று போற்றப் பட்டவர். இன்று உடற்பயிற்சிக் கலையில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் அனைவரின் நினைவிலே புகழ் மாலைகளோடு பவனி வருபவர்.


உடற்பயிற்சி செய்வதற்கு இன்று எத்தனையோவித கருவிகள் பல நூதனமுறைகளிலெல்லாம் உள்ளன. ஆனால் அரை நூற்றாண்டுக்குமுன், இதுபோன்ற வசதியான முறைகள் எவையுமே இல்லாதிருந்தன. இருப்பினும் காரல் தனது 26-ம் வயதில் 398 பவுண்டு எடையுடன் கூடியவராகக் காணப்பட்டார். இதற்கு உடற்கட்டு வல்லுனர்களால்கூட விளக்கம் தர முடியவில்லையாம்.

1882-ம் வருஷம் ஜுலை மாதம் 20-ம் தேதி வியன்னா என்ற நகரத்தில் பிறந்திட்ட இந்த ஒப்பற்ற உடல் வலிமைக் கலைஞர், தன் 16-வது வயதிலிருந்துஎடைதூக்குவதைப் பயில ஆரம்பித்தார். ஆனால், அதை அவர் ரீதியான முறையோடு பயிலவேயில்லை. இருப்பினும்இன்று எடைதூக்குவதில் திறமை வாய்ந்தவர்கள் என்று கருதப்படும் கலைஞர்களே மேலும் வியக்கத்தக்கபடி 441 பவுண்டு எடையைக் காரல் இருமுறை தன் தலைக்குமேலே தூக்கிச் சமமாக உயர்த்திப் பிடித்துள்ளார். விஞ்ஞான ரீதியில் முறையோடு இந்தக் கலையைப் பயின்று அதில் திறமை பெற்றவர்களுக்கும் இந்த சாகசச் செயல் வியப்பை அளவிடமுடியா வகையில் அளித்தது.

காரலின் உடற்கட்டு தோற்றத்திற்கு அழகாகவும், வசீகரமாகவும்கூட இருந்ததில்லை என்றாலும், அவரின் உடல் வலிமையோ மற்றவர்கள் யாவரும் வியக்கத்தக்கதாய்த் திகழ்ந்தது. அவரின் மார்பின் சுற்றளவு 56 அங்குலம் என்றால் அவருடைய உருவம் யானைக் குட்டியைப் போன்று விளங்கக் கேட்பானேன்!

ஆனால், இந்தப்பயங்கர பலசாலி அதிக காலம் வரையில் வாழ்ந்திருக்கவில்லை. இவரின் எடை 1908-ல் 200 பவுண்டு, 1909-ல் 240 பவுண்டு, 1910-ல் 290 பவுண்டு, 1912-ல் 330 பவுண்டு, 1914-ல் 398 பவுண்டு. இவ்வாறே நாளுக்குநாள் தனக்குத் தேவையற்ற முறையில் உடல் பருமனவதைக் குறைக்க எண்ணி உணவையே குறைத்துக் கொள்ள ஆரம்பித்தார் காரல். இதன்பயன் காரல் நோய்வாய்ப்பட்டார். அது மட்டுமல்ல. நோயின் கடுமையினால் பெருத்த துன்பத்திற்தும், துயரத்திற்கும் ஆளானார். 1933-ம் வருடம் ஏப்ரல் மாதம் 19-ம் தேதி பிற்பகல் காரல் மயக்கமுற்று ஆழ்ந்த நித்திரைக்கு உள்ளானார். அன்றே மாலை சுமார் 6 மணிக்கு அன்பு மனைவி அன்னாவை கடைசி முறையாகப் பார்த்துவிட்டு நிரந்தரமாகவே கண்களை மூடிவிட்டார் மாபெரும் பலசாலிகாரல். இதைக் கேள்வியுற்ற உடற்பயிற்சிக் கழகங்களெல்லாம் துக்கித்தன. மல்யுத்த வீரர்களும் தங்களது அஞ்சலியைச் செலுத்தினர். காரலின் இறுதிச்சடங்கிற்கு உடற்பயிற்சிக் கலைஞர்களும், மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்து தங்களின் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டனர். இவர்வாழ்ந்தகாலத்தில்,தனது உடல்வலிமைத்திறமையினால் பெற்ற பரிசுகளையும், பதக்கங்களையும் இன்றும் வியன்னா தனது பொருட்காட்சியில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது. இதுவும், இவருடைய கல்லறையும் உடற்பயிற்சிபெறும் இளைஞர்களின் மனதினை ஊக்கப்படுத்தி என்றும் உற்சாகமும் ஊட்டுவனவாய் விளங்குகின்றன.


—'கலை'ச்செல்வம்



**ஸ்டீவ் ரீ வெஸ்:** இவர் மிஸ்டர் யூனிவர்ஸ் என்று அழைக்கப்பட்ட உடற்கூறு வல்லுனர். தனது விடா முயற்சியாலேயே சிறிதுசிறிதாக தேக பலத்தை விருத்தி செய்து பலபோட்டிகளில் வென்று பரிசும் பெற்றவர்.



**டன் ஸ்காட்:** எவ்வாறு உயர்தர பள்ளி மாணவர்களும் சிறந்த உடற்கட்டு வல்லுனர்களாக சோபிக்கமுடியும் என்பதற்கு உதாரணமானவர். இவர் உருண்டுத் திரண்ட பளபளக்கும் உடலமைப்பைப் பெற்றவர்.



**டாக்டர் நார்மன் மார்க்ஸ்:** டாக்டர் பட்டம் பெற்ற இவர் கல்வித் துறையிலும் சிறந்தவர். அதே போன்று தனது உடற்கூறு ஆற்றலினல் பல பரிசுகளை, பல பிரபல நகரங்களிளெல்லாம் இருந்து பெற்றவர். எல்லோருக்கும் நல்ல போதகரும் கூட.




**ஆலன் ஸ்டீபன்:** இவர் பெஞ்ச் பிரஸ் என்ற உடற்பயிற்சியில் வல்லவர். அலட்சியமாய் எடை தூக்குவதிலும் திறமை படைத்தவர். உடற் கட்டை தன் விடாமுயற்சியினால் மிக்க வலிமை பொருந்தியதாக மாற்றிக்



**ஜார்ஜ் எபெர்மேன்:** இவர் 1948-ல் மிஸ்டர் அமெரிக்கா என்று அழைக்கப்பட்ட உடலழகும், வலிமையும் பொருந்தியவர். பார் பயிற்சி நுணுக்கங்களிலும், எடை தூக்குவதிலும் திகழ்ந்தவர்.



**மிஸ்டர் வான் நெஸ்:** அழகிய தேகக்கட்டுடன் கூடியவர் இவர். விஞ்ஞான முறையில் தனது உடலை எஃகுபோன்றதாக்கி நல்ல வலிமை பொருந்திய சீராகவே வாழ்க்கார்.



**கிளாரன்ஸ் ரோஸ்:** ஆர்வமிக்க உடற் பயிற்சியாலும், அயராத ஊக்கத்தாலும், அரிய முயற்சியாலும் சலிப்பை வென்று, அதனால் அற்புதமான உடல் வலிமையைப் பெற்ற மிகச் சிலரில் இருவரும் ஒருவர். தனது திண்தோள் வலிமையினால் எடையைத் தூக்குவதில் தனக்கு நிகர்தானே என்கிற சுறுசுறுப்பான முறையாலும், காண்போர்வியக்கும்வண்ணம் தன் தலைக்கு மேல் எடையை உயர்த்தி ஆச்சரியத்தை அவர்களுக்குள்ளேயே விளைவிக்கும் வித்தகர் பல பிரபல நகரங்களெல்லாம் இவரின் திறமைக்காக அளித்துள்ள பரிசுகள் ஏராளம். இவரின் உடற்கட்டு அழகாகவும், கம்பீரமாகவும், கச்சிதமாகவும் அமைந்திருப்பதுடன், உருண்டுத் திரண்ட உறுதியான தசைகளும்-மேலும் இவரின் உடலுக்கு அழகைக்கூட்டுகின்றது. இவர் நுண்ணிய அறிவாற்றலை தனது பெருமை மிக்க உடல் வலிமையோடு திறமையாக கையாண்டு எதையும் எளிதில் சாதித்து விட வல்ல சமர்த்தர்.

வளர்க உடற்பயிற்சிக் கலை

# தேரும் தேரரும்

**கோவி. மணிசேகரன்**

பொழுது விடிந்தால் போசன் பண்டிகை.

அநுராதபுரத் தலைநகரைப் பார்வையிட்டவண்ணம் பல்லக்கில் வந்து கொண்டிருந்தார் புத்தமகாதேரர். சிங்கள மக்கள் பண்டிகைக்கான ஆயத்தங்களை மிக விரைவு கொண்டு கவனிப்பது தெரிய வந்தது.

முகமலரில் புன்னகை இதழ் விரிக்க புத்தமகாதேரர் அரண்மனையை அடைந்தார். காவலர்கள் மிகப் பணிவன்புடன் தலைவணங்கி வழி விட்டனர். புத்தமகா தேரர் பௌத்தர்களின் தலைவர் என்பது ஒருபுறமிருக்க, அப்போதைய சோழராட்சியின் ஆமாத்திய பிரானுமிற்றே! -- அதாவது முதலமைச்சர்.

ஆமாத்திய பிரானுடைய வருகைக்காகச் சோழமாதேவி அரண்மனைக் கூடத்தில் அமர்ந்திருந்தாள். வரும் செய்தி அறிந்ததும் எழுந்து சென்று வரவேற்றாள். புத்தமகாதேரரும் புன்னகையால் ஆசி கூறி ஆசனத்தில் அமர்ந்தார். இடுப்பிலே இறுகக் கட்டியிருந்த பட்டு நூல் கயிற்றைத் தளர்த்தி விட்டுக் கொண்டார். மஞ்சளும், சிவப்பும் கலந்த அந்தப் பட்டு நூல் கயிறுதான் அவருடைய மதிப்பை உயர்த்தும் அழகியசின்னம்.

"தேவி! நேற்று நான் கூறியதைப் பற்றி நினைத்து உன்னுடைய நெஞ்சு நிலைமைக்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன்!"

வயதில் முதுகிழவரான ஆமாத்திய பிரான் பேச்சை இனிய தோரணையில் தொடங்கினார்.

"ஆம், சுவாமி! நிலைமைக்கு வந்து விட்டது! நாளை நம் திட்டப்படி நிகழ்ச்சி நடந்ததும், என்னுடைய உருவம் புத்த பிரானின் திருக்கோலம் பூணும் என்பது உறுதி!"

"மகிழ்ச்சி, சோழமாதேவி! பெரிதும் மகிழ்ச்சி! நாட்டைக் காக்க இதைவிட வேறு நல்வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை."

"எனக்கும் தோன்றவில்லை, சுவாமி!"

"உண்மை. சோழராட்சி இந்த ராஜரடாவில் நல்ல முறையில் நிலை பெற வேண்டுமானால், நீ பௌத்த மதத்தில் சேர்ந்துதான் ஆக வேண்டும். நாளை நடக்கும் நிகழ்ச்சியின் மூலமாவது சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையைக் கடைப்பிடிக்கட்டும். உறுதியாகச் சொல்ல முடியாது என்றாலும், முயற்சி செய்து பார்க்கிறோம். சோழமன்னர் தான், மதமாற்றத்தில் பிடிவாதம்பிடிக்கிறார் என்றால், நீயாவது முன் வந்தாயே! இதுவே பெருமகிழ்ச்சி! இப்படி ஒரு தியாகம் நீ செய்ய நேரலாம் என்பதை முன் கூட்டியே மன்னரிடம் உத்தரவைப் பெற்றிருக்கிறாயல்லவா?"

"பெற்றிருக்கிறேன், சுவாமி!"

"நன்று. இன்றிரவு நம் தேரோட்டி தேன்மொழியானை, நான் விகாரையில் சந்தித்தாக வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்தால் போதுமானது."

"எப்படியும் செய்வேன் சுவாமி!"

"எனக்கெதிராக தத்ததேரன் செய்யும் சூழ்ச்சிக்கு நாளையாவது முடிவு ஏற்படுகிறதா என்று பார்க்கிறேன்."

"ஆம் சுவாமி! ரோகணமன்னன் கருணுவுக்குத் தத்ததேரர் துணை புரிவதாகக் கேள்விப்பட்டேன்."

"ஒரு விதத்தில் உண்மைதான்! தத்ததேரனுக்குத் தமிழருடைய ஆட்சி எள்ளளவும் பிடிக்கவில்லை. சிங்கள மக்களை நம் பக்கம் திருப்பி விட்டால், பிறகு தத்ததேரன் வாய் அடைபட்டுவிடும். நான் வருகிறேன்."

"மன்னரைக் காணாமல் செல்கிறீர்களே?"

"கண்டு விட்டுச் செல்வதும் சில பல காரணங்களுக்குத் துணை புரியலாம். நான் வந்திருப்பதாகச் சொல், தேவி!"

சோழமாதேவி விடை பெற்றார். புத்தமகா தேரரும் சிந்தனையைப் புனித யாத்திரைக்குச் செலுத்திய வராய் மன்னர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

## 2

அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட அப்போதைய ராஜரடாவின் மாமன்னராக விளங்கியவர்ஏழாரச்சோழர். கி. மு. இரண்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் தமிழகத்துச் சோழநாட்டில் வாழ்ந்த மனுநீதிச் சோழர், மகனை இழந்த மனக் கவலையை மறக்க ஈழம் நோக்கிப் படை எடுத்தார். அப்போது அநுராதபுரத்தை ஆண்டவன் தேவாநும்பிய தீசனின் கடைசித் தம்பி அசேலன் என்பவன். அவனை முறியடித்து ஆட்சியை நிறுவிய ஏழாரச் சோழர் நாட்டை அமைதிப் படுத்த மிகப் பெரும் பணிகளை ஏற்கலானார். எத்தனையோ புத்த விகாரைகளைப் புதுப்பித்தார். பூங்காக்களை அமைத்தார். அப்படியும் சிங்களவர்களை அவரால் நிறைவுபடுத்தவே முடியாமற் போய் விட்டது. அதன் காரணமாகத்தான் தலைமை பிட்சுவான புத்தமகா தேரரை அமைச்சராகக் கொண்டார். பாலிமொழியும், சிங்கள மொழியும் வளர்வதற்கான பற்பல வழிவகைகளைச் செய்தார். அத்தனையும் பயனற்றுப்போயின. இவ்வளவிற்கும் அடுத்த தலைமை பிட்சுப் பதவிக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த தத்த தேரர்தான் காரணம். அவர் சிங்களவர்களைத் தூண்டிய வண்ணமாக இருந்தார். அவருக்கு அநுராதபுரத்தை கமுனு மன்னன் ஆள வேண்டும் என்பது ஆசை! அப்போதைய ஈழத்தின் மூன்று ராஜ்யங்களுக்குள் ஒன்றான ரோகணரடாவை ஆண்டவன் கமுனு-வரலாறு போற்றும் துஷ்ட கமுனு!

சைவமே பெரிதாக எண்ணும் சோழ மாமன்னர் பௌத்தத்தில் சேர்ந்தால் நலம் பயக்கும் என்றும் சிங்களவர்களுள் ஒரு சாரார் கூறினர். அதாவது, தத்ததேரருடைய ஆட்கள். ஆனால், சைவநெறியில் பிறந்து வளர்ந்து மனுநீதி தவறாமல் ஆட்சி செய்து, மகனை முறை செய்த மன்னவரான ஏழாராச் சோழமாமன்னர், இந்த உடன் படிக்கைக்குத் துளியும் ஒப்புக்கொண்டாரில்லை. இதை வைத்துக்கொண்டு பகைவர்கள் பலவிதமாகப் பேசத் தொடங்கினர். அப்போதைய ஈழத்தையே பௌத்தமதம் ஆண்டதாயிற்றே!

நள்ளென்ற இரவு வானிலே நடம் புரிய வந்தது.

இராஜவிகாரையில் புத்தமகாதேரர் கண் விழித்த வண்ணம் தேரோட்டி தேன்மொழிக்காகக் காத்துக் கொண்டிருந்தார். தேன் மொழியான், சோழ மாமன்னருக்குத்தான் தேரோட்டியேயொழிய புத்தமகாதேரரின் அன்புக்குப் பாத்திரமானவன். நாட்டின் நலத்திற்காகத் தன்னைத் தியாகம் செய்ய எந்நேரமும் காத்துக் கொண்டிருப்பவன். அவனைத் தேரருக்கு அதிகமாகப் பிடித்திருந்தது.

விகாரையின் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

தேன் மொழியான்தான் வந்திருக்கிறான் என்று தெளிவாக உணர்ந்த பின்னர் தேரர் கதவங்களைத் திறந்தார். மிகப் பிரம்மாண்டமான அந்தக் கதவங்கள் கிறீச்சிட்டுச் சற்றே திறந்தன. தேரர் எதிர்பார்த்தது போலவே தேன்மொழி உள்ளே நுழைந்தான். கதவங்கள் சாத்தப் பெற்றன.

சோழ ஆமாத்திய பிரான் புத்தமகாதேரர் ஆசனத்தில் அமைதியாக அமர்ந்தார். தேன்மொழியையும் அமரச் சொன்னார். அவன் வழக்கம்போல் நின்றுகொண்டே விஷயத்தைக் கேட்கலானான். இருவருடைய குருசீட மெய்ப்பாடுகளைக் கண்டு ஒளிவிட்டுக்கொண்டிருந்த சரவிளக்குகளைத்தும் புனிதப் புன்னகை பூத்தன. அந்தப் புனிதத் தன்மையை அருகே இருந்த புத்தர்பிரானின் சிலை முகத்திலிருந்து அவை பெற்றன என்று சொல்லவும் வேண்டுமா?

"தேன்மொழி! நாளை நீ செய்யப் போகும் செயலில்தான் உன் பெயருக்கு இனிமை ஏற்படப்போகிறது!" தேரர் பொறுமையாகவே இப்படிப் புகன்றார்.

தேன்மொழி தலைவணங்கினான். அது ஒப்புதலைக் காட்டியது.

"மகனே! நாளை மன்னர் பண்டிகையில் கலந்துகொள்ளப்போகிறார் என்பதை நீ யறிவாயல்லவா?"

"நன்கு அறிவேன் சுவாமி!"

"இந்த விகாரைக்கு அவர் எழுந்தருளப்போகிறார் என்பதை அறிவாயல்லவா?"

"தேரைக்கூட தூய்மைப்படுத்தி ஆயத்தப்படுத்தும்படி மன்னர் தெரிவித்துவிட்டார், சுவாமி!"

"உன்னை அழைத்ததே அதற்காகத்தான் தேன்மொழி! நாளை நீ தேரைச் செலுத்திக்கொண்டு வரும்போது, தாது கோபுர வாசலின்மீது சக்கரத்தை ஏற்றிவிடவேண்டும். அதுவும் எப்படி? வாயில் பழுதாகக் கூடிய நிலையில். உன்னுடைய வேகம் அவ்வளவிற்கு இருக்கவேண்டும்! அந்த நேரத்தில் சாரத்தியத்திலும் சாமார்த்தியம் தளர்ந்துவிடக்கூடாது! தெரிகிறதா?"

தேன்மொழி வியப்பின் விளிம்பில் வேதனைப்படலானான்.

"ஏன் தேன்மொழி இப்படி வியந்து நோக்குகிறாய்?"

"சுவாமி! இது என்ன பொல்லாத திட்டம்? தத்ததேரரிடம் ஒற்றுவேலை பார்க்கும்படி என்னை ஏவினீர்களே, அப்போதுகூட நான் தயங்கியது கிடையாது. இதற்காக நான் தயங்குகிறேன், சுவாமி!"

"இல்லையென்றால் மன்னர்க்கு ஆபத்து நேரலாம்! மன்னரும் பண்டிகையில் கலந்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார். அந்த ஆபத்தை நாமே ஏன் உண்டு பண்ணி பிறகு நேரக்கூடிய பேராபத்தைத் தவிர்க்கக்கூடாது?"

"சுவாமி!"

"சொல் மகனே!"

"சிங்களவர்களின் கோபம் அதிகமாகலாம்!"

"இல்லை, மறுகணமே தணிந்துவிட வழியிருக்கிறது. நீதிக்காக மகனைத் தேர்க்காலில் ஏற்றியவர் மன்னர் என்பதை இங்கு பலரும் அறிவர். அதன் எதிரொலியை நீ நாளை பார்க்கப்போகிறாய்! புத்தபிரான் அறியச் சொல்லுகிறேன்! என்னை நம்பு. நான் சொன்னது போலச்செய்! பலனை நாளையே எதிர்பார்க்கலாம்! திடமான மனத்துடன் போய்வா மகனே!"

மனத்தைத் திடப்படுத்திக்கொண்ட தேன்மொழி விகாரையை விட்டு வெளியேறினான். வெகுநேரம்வரை குதிரையின் குளம்பு ஓசை அமைதியை அலைமோதச் செய்தது.

## 3

குணக்கடலின் ஞானக்கண் திறந்தது.

அறிவார்ந்த ஒளிமயத்தில் அகிலம் திளைத்து மகிழ்ந்தது.

ஆண்டுக்கு ஒருமுறை அவதாரம் செய்யும் ஒருநாள் ஆயுள்கொண்ட பண்டிகைகளுள் ஒன்றான போசன் பண்டிகை, அன்று புதுக்கோலம் புனைந்தது. வழக்கமாக சிங்கள மன்னரை வரவேற்கும் இராஜவிகாரை சில ஆண்டுகளாக மன்னர் வருகையின்றியே பண்டிகைகளை வரவேற்று வழியனுப்பியது. ஆனால், இவ்வாண்டு மீண்டும் மன்னர் வருகை; அதுவும் தமிழ் மன்னர்–சைவத்தின் தனிப்பெரும் தலைவர் வருகை.

சிங்கள மக்கள் வேலையோடு இராஜவிகாரையை வந்தடைந்த வண்ணமாக இருந்தனர். அன்று ஏதோ கொடும் நிகழ்ச்சி நடக்கப்போகிறது என்பது மட்டும் ஒரு சிலருக்குத்தெரியும். இரவுகூட எங்கோ ஒரு வீடு பற்றி எரிந்ததாகப் பலர் முணுமுணுக்கலாயினர்.

விழாவில் மூழ்கிய விகாரையைச் சுற்றிலும் மக்கள் நிரம்பிவிட்டனர். நிற்கமுடியாமல் தவிக்கும் மக்கள் பலர் நிம்மதியாகமொட்டைமாடி வீடுகளின் மீதும் மரத்தின் கிளைகள்மீதும் ஏறியமர்ந்து மனித மூதாதைகளை நினைவு படுத்திக் கொண்டிருந்தனர்.

இருந்தாற்போலிருந்து கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. அது மாமன்னர் ஏழாரச்சோழரின் வருகைக்கு அறிகுறிபோலும்! அந்தக்கூட்டத்தில் எண்பது சதவிகித மக்கள் சோழ மாமன்னரைக் கண்டது கிடையாது. அதனால்தான் போலும் அப்படியான ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

"ஏழாரச் சோழமாமன்னர் வாழி!" —என்ற வாழ்த்துக்குரல் வானைமுட்டியது. இதனை சிங்கள மக்கள் எழுப்பவில்லை. ஒருபுறம் நின்று வரவேற்ற தமிழ் மக்கள் எழுப்பினர். அலங்கரிக்கப்பட்ட தங்கத்தேரில் எண் புரவிகளைப் பூட்டி ஆஜானபாகுவான உருவம் கொண்ட ஏழாரச் சோழ மன்னர் அமர்ந்து வீற்றிருந்த கோலமுடன் விளங்கிக் காட்சி தரலானார்.

தேர் விகாரையை நெருங்க நெருங்க வேகம் சிறிது சிறிதாகக்கூடிக் கொண்டே சென்றது. வழி நெடுக மக்கள்நின்று கவனிக்கலாயினர். தமிழ் மக்களைத் தவிர்த்து மற்ற எவருமே வாய்திறந்தார்களில்லை. அப் படித் தப்பித் தவறி எவரேனும் வாய் திறந்து வாழ்த்தியிருப்பார்களேயானால், அவர்கள் அரண்மனையில் பணி பார்க்கும் சிங்களவர்கள். கடமைக்கும் கூலிக்கும் மானக் கண்கள் கிடையா! ஒற்றுமைக் கரங்கள் கிடையா!

தேர் கடகடவென்ற ஓசையை மிகப்பெருத்த அளவில் எழுப்பியது. அந்த வேகத்தைக் கண்ட ஏழாரச் சோழ மன்னருக்கே ஒன்றும் விளங்கவில்லை. ஏன் தேரோட்டி இப்படி வேகமாகப் புரவிகளைச் செலுத்தவேண்டும்? வழியில் எதையோ கண்டிருக்கவேண்டும்! தேன்மொழி மகா புத்திசாலியாயிற்றே!

மாமன்னரின் சிந்தனை தலையசைக்கச் செய்தது.

வேகமாகச் சென்ற தேரைக்கண்டு சிங்கள மக்களுள் சிலர் சீற்றம் கொள்ளலாயினர். இந்த மன்னனுக்கு எவ்வளவு கொழுப்பு?

தேன்மொழியானுடைய மனம் மட்டும் குழம்பிய வண்ணமாகவே இருந்தது. தேரருடைய இந்தப் பயங்கரமான திட்டத்திற்குத் தானும் உடந்தையாய்விட்ட பிறகு, இனி சிந்தித்துப் பயனில்லை; குழம்பி ஆகப்போவது என்ன? வருவதை அனுபவித்துத்தான் தீரவேண்டும்!–தேரோட்டி இப்படி எண்ணிக்கொண்டே குதிரையின் கடிவாளத்தை ஈடும் தளர்த்தியுமாக இழுத்து விட்டான். மறுகணம்.

கடகடவென்ற ஓசையுடன், ஆஃகாரம், ஓஃகாரம் அமர்க்களப்படுத்தியது. 'புத்தம்'–'புத்தம்' என்ற குரல் வேறு இடையே புகுந்து ஒலித்தது. மக்கள் ஒருவர்மேல் ஒருவராக மோதியவண்ணம் தாது கோபுர வாயிலை நாடினர், இதற்குள் படை வீரர்கள் குதிரைகளைச் செலுத்திய வண்ணம் கூட்டத்தில் புகுந்தனர். குழப்பம் ஏதும் நடைபெறக்கூடாதென்பது ஒருபுறமிருக்க, மாமன்னர் உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாதல்லவா?

## 4

தாது கோபுர வாயிலின் ஒரு பக்கத்தை மகாதேரர் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே இடித்துப்பழுதாக்கி விட்டான் தேன்மொழி. தேரை விட்டுக் கீழே றமயி றங்கிய



சோழ மன்னர் திடுக்கிட்டுப் போனார். அதற்குள் மக்களின் சீற்றம் அதிகரித்தது.

புத்த மகாதேரர் கண்கலங்க மன்னரை நோக்கினார். அது உண்மையான கலக்கம்தான்: 'புத்தபிரானே ஏதோ ஒரு முடிவின்கீழ் இந்தத் திட்டத்தை-ஏன்? சூழ்ச்சியைக் கையாண்டிருக்கிறேன்! மன்னன் உயிரைக்காப்பாற்றிக்கொடு! சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையை வாழ்த்தட்டும்! அப்போது பௌத்தமும் வாழும்! அதைப்பிறப்பித்த சைவமும் வாழும்!

"மாமன்னா! என்ன செயலைச் செய்துவிட்டீர்கள்! முதல் வருகையிலேயே பௌத்த வாயிலுக்கு ஊனம் தேடிவிட்டீர்களே!"

தேரர் அமைதியாகச் சொன்னார். தேரின்மேல் கையூன்றி கலக்கமுடன் நின்றிருந்த தேன்மொழியை நோக்கினார் சோழர். பிறகு சொன்னார்:

"தவறு நடந்துவிட்டது ஆமாத்தியரே! அதுவும் பண்டிகை நாளில்!"

மக்களிடையே கூச்சல் எழுந்தது:

"சோழன் எல்லாளன் வேண்டுமென்றே இக்காரியத்தைச் செய்திருக்க வேண்டும்."

"எங்களை அவமானப்படுத்த வேண்டுமென்பது எல்லாளனுடைய அபிப்பிராயம்!"

"விகாரையை இடித்தவர்களை விடக்கூடாது!"

நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு தத்ததேரன் நன்றாகவே மக்களைத் தூண்டி விட்டார். புத்த மகாதேரரும் இதையே எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பாராத ஒன்றும் நடக்கப் போகிறது. அதை அவர் அறியார்.

"சோழ மாமன்னா! மக்கள் மனக் கோயிலையே இடித்து விட்டீர்கள். அதைச் செப்பனிடவேண்டும்'

ஆமாத்தியர் இப்படிச் சொல்லி முடித்ததுதான் தாமதம், உடன்: "தேன்மொழி! தேரில் ஏறு என்று உரத்த குரலில் கட்டளையைப் பிறப்பித்தார் சோழர். தேன்மொழி தேரில் ஏறிக்கொண்டான். சோழருடைய மனமே நீதியால் மருண்டது.



எவரும் எதிர்பாராத வண்ணம் ஏழாரர் தேர்ச்சக்கரத்தில் தலையை வைத்து, "தேரைச் செலுத்து தேன்மொழி! மகனை முறைசெய்த தேர், இப்போது மன்னனையும் முறை செய்யட்டும்! உம்! செலுத்து" என்று உணர்ச்சி பொங்க முழங்கினார்.

தேன்மொழியா தேரைச் செலுத்துபவன்?

தாம் எதிர்பார்த்தது நடந்துவிட்டதை எண்ணி மகிழ்ந்து கொண்டார் புத்த மகாதேரர்.

மாமன்னர் ஏழாரச் சோழர் சிவ நாமத்தை உச்சரித்தவண்ணம் தேர்ச் சக்கரத்தில் தலை வைத்துக் கண்களை மூடிக்கொண்டார்.

"சோழ மன்னா! புத்த நாமத்தைச் சொல்லுங்கள்! நம் மக்களுடைய மனம் இரங்கும். மன்னருடைய தலையை இழக்க அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள்!

தேரர் இப்படிக் கூவியும், சோழர் சிவநாமத்தை உச்சரிக்கலானார்.

"சோழ மாமன்னா!"

சோழருடைய செவிகள் அடைபட்டுப் பல கணங்களாய் விட்டன. அப்போது...

"புத்தம் சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி!
தம்மம் சரணம் கச்சாமி!"

விகாரையிலிருந்து ஓர் பிட்சுணி வெளியே வந்தாள். மக்கள் அனைவரும் இமைகொட்டாமல் கவனிக்கலாயினர். ஆம். சோழ மாதேவிதான்.

வியப்பு மேலிட தமிழ்மக்கள் சோழ மாதேவியை வாழ்த்தலாயினர். சோழ மாதேவிதான் பிட்சுணிக் கோலம் பூண்டவள் என்று தெரிய வரும் போது சிங்கள மக்களின் வியப்பு பன்மடங்கு பெருகி வாழ்த்து குரல் கொடுக்கலாயினர். இந்நிலை அருகே இருந்த தத்ததேரருக்குத் தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. அவர் இப்படியான ஒரு கட்டத்தில் இப்படியான ஒரு புதிய நிகழ்ச்சி அரும்பும் என்று துளியும் எதிர்பார்க்கவில்லை.

தேன்மொழி, தேரைச் செலுத்தாமல் பேசாது இருப்பதைக்கண்ட தத்ததேரர், உடன் அருகேவந்து, "தேன்மொழி, நீ தேரை விட்டிறங்கலாம்!" என்றார்.

ஒரு சிலர்க்கு வியப்பைத் தந்தது. பொறுத்தருள தத்ததேரரே முன் வந்துவிட்டாரா? அவருக்காகத் தானே இந்த நாடகம்!

தேன்மொழி இறங்கிவிட்டான், மகாதேரர் சமிக்கையின் பேரில். ஆனால், அடுத்து நடந்தது அனைவரையுமே தூக்கி வாரிப்போட்டு விட்டது. மகாதேரர் எதிர்பாராத அந்தக் கட்டம் இதோ வந்துவிட்டது!

"தேன்மொழி! மன்னன் மீது தேரைச் செலுத்த உனக்கு மனம் வராது. ஏனென்றால் நீயும் சைவன்: அதோ உன் மன்னன் கூறும் சிவ மயம் எங்கள் காதுகளைத் துளைக்கிறது. பௌத்தத்தைக் களங்கப்படுத்திய உன் மன்னனை நானே முறை செய்கிறேன்!"

தத்ததேரர் இப்படிக் கூறி முடித்ததும், 'அமைதி, அமைதி!' என்று அமைதியான ஒரு பெண் குரல் கேட்டது. எங்கும் அமைதி.

"தத்ததேரரே! இதோ மறு சக்கரத்தில் நானும் என்னுடைய தலையை வைக்கிறேன்! இணைத்தே முறை செய்யுங்கள்! பதியை இழந்து நான் மட்டும் புத்தரின் பாத கமலங்களை வணங்குவதா?"

தத்ததேரர் ஒரு கணம் தடுமாறி விட்டார்.

புத்த மகாதேரரோ புளகம் கொண்டார். அவர் எதிர்பார்த்த நாடகம் வேறு; இப்போது அவர் எதிர்பாராமலேயே நடக்கும் நாடகம் வேறு.

"தத்தா! இப்போது நீ இருவரையுமே இணைத்துப் பழிவாங்கி விடலாம்; இல்லையா?"

"ஆம்!"

"நன்று. ஆனால், புத்தபிரானின் ஆலயத்தின்முன், ஒரு பிட்சுணியை- அதுவும் ஒரு பாவமும் அறியா பிட்சுணியை - ராஜ பிட்சுணியைத் தண்டிக்க நீ யார்? முதலில் இந்தக் கேள்வியை உனக்குள் எழுப்பிக் கொள்! பிறகே, தம்மத்தைப் பற்றிச் சிந்தி!"

தத்ததேரர் ஒன்றுமே புரியாமல் விழித்தார்.

புத்த மகாதேரர் மக்களை நோக்கிக் கேட்டார்:

"அருமை மக்களே! மன்னர் நம்மை மதித்தே ஆலயத்துக்கு வந்தார். எதிர்பாராமல் இப்படி நடந்து விட்டது. உங்கள் மனமும் பழைய குமுறலை வெளிப்படுத்தியது. அதன்படி மன்னரே தண்டனையை நேமித்து தலை கொடுக்க முன் வந்தார். நாம் நினைத்தால் பொறுத்தருளலாம். பொறுத்தருளலும் நல்ல நோக்கமே! பௌத்தத்தின் தலையான தம்மம்! அப்படி இருக்க தத்ததேரர் தேரில் ஏறியது புத்த பிரானையே அவமதித்ததாகும். அரசபாவம் பொல்லாதது. நம்முடைய புத்தபிரானும் அரசோச்சியவர். இப்போது சோழ மாதேவி, பிட்சுணியாக மாறி, பௌத்தத்திற்குத் தொண்டு செய்ய முன்வந்திருக்கிறார்கள். இந்நிலையில் ஒரு பாவமும் அறியாமல், புண்ணியமே மேலான தொண்டாகக் கருதி வந்த அப்புண்ணியவதி, கணவனுடன் பயணமாக முன்வந்து விட்டார்கள். உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்! நம் பௌத்த தம்மத்திற்கு இது நியாயமா என்று சொல்லுங்கள்!! புத்தபிரான் நம்மைப் பொறுத்தருளவேண்டும்!"

மக்களிடையே ஒருகணம் முனகல் ஏற்பட்டது...

"ராஜராட், வாழி!"

"எல்லாளர், வாழி!"

மக்களின் குரல் ஒரு முகமாக எழுந்து வானையும் வாழ்த்தச் செய்தது. உண்மையில் அப்போது வானம் பிசுபிசுக்கத்தான் செய்தது.

சோழரும், சோழமாதேவியும் எழுந்து, மக்களை முதலில் வணங்கி நின்றனர்.

சோழமாதேவியை நெருங்கி வந்த மகாதேரர் சொன்னார்:

"தேவி! நான் நாட்டைக் காக்க முயன்றேன். அது மன்னரைப் பலி கேட்டது! தாங்கள் மன்னரையே காத்து விட்டீர்கள். இப்போது நாடு காக்கப்பட்டது!"

தேரை நோக்கிய தேரருடைய கண்கள் கலகலவென்று நீரைப் பொழிந்தன! அது மகிழ்ச்சி வெள்ளம்.



சினிமாவாலே கலைகள் எல்லாம்
சிரஞ்சீவியா இருக்குது
செத்ததெலாம் பிழைக்குது
சிக்கிக் கிட்டும் முழிக்குது
செனநாயக நாட்டினிலே செல்லாக் காசாத்
தவிக்கும் கலைகள் (சினிமாவாலே)
செலவு பண்ணிக் கோயில் கட்டச்
செல்வர் மனசில் இடமில்லை
சிலையில் கலையைச் செய்தவருக்கு
செழிச்சு வாழ இடமில்லை
சிற்பமும் ஓவியமும்
சினிமாவில்தான் இருக்குது
செத்துப்போன சிற்பக்கலைக்கு
ஜீவதானம் கொடுக்குது (சினிமா
கச்சேரிப் பாட்டு எல்லாம் வாலே)
கட்டு கடையாய் ஆச்சுது
காலமெல்லாம் பழசைக்கேட்டுக்
காது புளிச்சுப் போச்சுது
காவியமும் பாவினமும்
காட்சிகளில் பூக்குது
கவிகளுக்கு இராசாக்கள் போல்
கனக மழையும் பொழியுது (சி)
ஆலயத்தில் நாட்டியக் கலை
ஆண்ட காலம் போச்சுது
அஞ்சு வயசாகும் போதே
அரங் கேத்தங்கள் ஆச்சுது

# கலைத்தேவி சிம்மாசனம்

## கொத்தமங்கலம் சுப்பு

காலை எடுத்தாடும் போதே
கர்ணம் போட்டு விழுகுது
காட்சியிலே நாட்டியக் கலை
கலந்து நல்லா வாழுது (சி)

இசையிலே புதுமை செய்ய
இதிலே மார்க்கம் இருக்குது
எல்லா வித ரசங்களுக்கும்
ஏத்த பின்னணி கிடைக்குது

தசையுடன் ரத்தம் போலே
சங்கீதமும் கலக்குது
தந்தி, குழல், தோற்கருவிக்கு
தக்க பணமும் கிடைக்குது (சி)

சித்திரம் செழிப்ப தெல்லாம்
சினிமா வோட மகிமை யால்
சீரான விளம் பரத்தால்
கைத்திறமை தெரியுது

உத்தமக் கலை கட் கெல்லாம்
உணவு இதில் கிடைக்குது
உல்லாசத் தோடே இதில்
உண்மை கலந்து இருக்குது (சி)

குத்தம் குறை இல்லாத கலை
குவலயத்தில் ஏதையா?
கூடக்குறைய இருப்பது தான்
கோபுரத்தில் அழகையா!

மொத்த கலைத்துறைகள் எல்லாம்
மங்கிப் போன காலத்தில்
மாட்சிமை தரும் சினிமாவிலே
மலருதையா கலை யெல்லாம் (சி)






# தந்தை

ராஜம் கிருஷ்ணன்

இரவு தாம்பரம் திரும்பி வருகையில், அன்று மணிஒன்பதடித்துவிட்டதென்பதை ராமசாமி அப்போதுதான் உணர்ந்தார். அவ்வளவாக வசதியில்லாத தூர உறவினர் வீடு; எங்கே ஒட்டி விடுவார்களோ என்று தோன்றும்படியான நிலையில் உள்ளவரல்லவா? குளிர்ந்த காற்று ஐப்பசி மாசத்தை நினைவூட்டியது. தூற்றல் படபடவென்று பலக்கத் தொடங்கி விட்டது.

"ம், சீக்கிரம் மாலு, மணியாகிவிட்டது..."

மாலு தொங்கும் சிவப்புப் பாவாடையை வெகுஅழகாக ஒடுக்கி உயர்த்திய வண்ணம், இறங்கி நடந்தாள். தேனீக்கூடு கலைந்தாற்போல் பிளாட்பாரம், மேம்பாலமெங்கும் பரவிய கூட்டத்தினிடையே, அந்த நிலையிலும் கூட, ராமசாமியினால் மகளைப்பற்றிய நம்பிக்கைகளுக்கு உரமூட்டிக் கொள்ளாமலிருக்க முடியவில்லை.

பதினேழு வயசுக்கு, நல்ல வாளிப்பான உடல். நீண்ட விழிகள், இன்னும் கவர்ச்சிகரமாகக் காதளவுக்கு ஓட, மை ரேகைகள் நீட்டி விடப்பட்டிருந்தன. சுருண்ட கேசப் பின்னல்கள் வளைந்து, இரு காதுகளுக்கு மேலே சிவப்புப்பட்டு நாடாமுடிச்சுக்களுடன் அந்தக் கண்ணழகுக்கு முத்தாய்ப்பு வைத்தன. இரு பின்னல்களையும் இணைக்கும் கனகாம்பரச் சரம்; ஒருபுறம் தொங்கி அழகு செய்யும் மல்லிகைச்சரம்; மெல்லிய இதழ்கள்; அரக்குப்பட்டுச் சோளியின் மேல் ரோஜா இதழைப் போல் வண்ணமென் தாவணி, புரளும் பாவாடை...

மாலு, குப்பைக்காட்டுப்பள்ளி ஆசிரியனுக்கு வாழ்க்கைப்பட்டு, புகை அடுப்பில் கருகி, பிள்ளைப்பேற்றில் நலிந்து, குடும்பச் சகதியில் உழலப் பிறந்தவளேஅல்ல. ராமசாமி அன்றே அதைத் தீர்மானித்துவிட்டார். தம்பி என்ற உதவாக்கரைப்பயல் ஒருவன் மீது அவர் நம்பிக்கைவைத்திருந்தார். அவன் தறிகெட்டு ஓடி, அவர் பசுமைக்கனவுகளைமண்ணாக்கிவிட்டான். ஆனால், மாலு பிறந்து விட்டாள். பதினேழாண்டுகளாகப் பல்லைக்கடித்துக்கொண்டு அவர் காத்திருந்ததற்குப் பலன் காணும் நேரத்தைப் பிடிக்க, அவர் பத்து நாட்களாகச் சென்னப்பட்டணத்தில் அலைந்து துரத்திக்கொண்டிருக்கிறார். அது... அது...நாளையே வந்து விடலாம்!

மாலுவின் குறுகுறுக்கும் விழிகளில் பரபரக்கும் துடிப்பு, நடையில் புதுப் புனலின் ஆர்வம், புது மலர்ச்சியின் ஒளி; புது உலகைக் காணும் வியப்பு. எழில், இளமை...ஒன்றிலும் குறைவில்லை. மெத்தென்ற ரப்பர் மிதியடியில் பாதங்கள், அழுங்க மேம்பாலம் ஏறும் அழகைக் கண்டு பெருமிதம் கொள்ளவே பின்னே நடப்பது போல் ராமசாமி பின்னே நடந்தார்.

மேம்பாலம் வருகையிலேயே மழை பலத்துச் சொரியத் தொடங்கி விட்டது. நனைந்தும் நனையாமலும் கூட்டம் ஓட்டமும் நடையுமாய்க் கரையலாயிற்று.

ஒளியைப் பரப்பும் மின்விளக்குகளெல்லாம் கூடப் புகை நடுவே மின்மினி போல் குழம்பியது.

" மழை பெய்கிறதே...! இது வேறு தொல்லையா ?

அந்த அலுப்பும் கோபமும்கூட விழிகளில் எத்தனை ஜாலங்களைக் காட்டுகின்றன !

இந்தப் பொக்கிஷத்தைக் கண்டு எந்த மடையன் வேண்டாம் என்று தள்ளுவான் ? குண்டாய்க் கொழுத்து உருளும் பழைய முகங்களுக்கு மத்தியிலே, ஆகா...! மாலு கஷ்டப்பட்டு, புகுந்து விட்டால் போதும். நட்சத்திர ஒளியாய், அவர் குடும்பத்தை, நித்திய தரித்திரத்தை, ஏமாற்றச் சோர்வுகளை, தோல்வி அவமானங்களை, துடைத்துக் கழுவி விடுவாள். மாலு! என் பதினெட்டாண்டுக் கனவை, நாளையே நீ நிறைவேற்றும் வேளை வந்தாலும் வந்து விடுமடி, அதற்குள் தளராதே, அலுக்காதே!

" என்னப்பா, இங்கேயே நிற்கலாமா ? "

" என்னம்மா செய்கிறது ! ஒன்றிரண்டு ரிக்ஷாவும் போய் விட்டதே ! "

" போப்பா...! " என்று சிணுங்கிக் குழைந்த குமாரி, சட்டென்று, " ஏம்ப்பா ! நம்ம கூட ரயிலிலே வந்தார்களே, அந்தச் சிங்கப்பூர்காரர் வீட்டுக்குப் போனால் என்ன ? ஒரு வேளை அவர்கள் கூடப் பக்கத்து வீட்டில் இருப்பவர் சிற்றப்பாவாக இருக்கக் கூடாதா ? சிற்றப்பா நல்லவரென்று அம்மா கூடச் சொன்னாள். நாம் எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் அவரும் கடிதாசி போடாமலிருக்கலாம். ...அவர் பணக்காரராய் இருந்து, பல பேரைத் தெரிந்து வைத்திருந்தால், நமக்கும் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்...? " என்றாள்.



அவருடைய நப்பாசையை அவள் அறிந்துதான் சர்க்கரைத் துளியாய்ப் பேசினுள்.

அவ்வளவு சுளுவாகக் கதைகளில் நடப்பதுபோல் முப்பது வருஷங்களுக்குப் பிறகு, தம்பி ராஜுவைப் பெரிய பணக்காரனுகச் சந்தித்துவிட முடியுமா? என்னமோ, பச்சைக் குழந்தை உளறுகிருள். அவளுக்கு நம்பிக்கையும், ஊக்கமும் ஊட்ட வேண்டியதல்லவோ அவர் வேலை இப்போது.

"நாளை எப்படியும் புரொட்யூஸர் உன்னைப் பேட்டிக்கு வரச் சம்மதிப்பான். மாலு, நாளை ஏதோ நடக்கும் என்று நிச்சயமாய்த் தோன்றுகிறது. அந்த உதவாத பயல் மூலமாக நமக்கு அதிர்ஷ்டம் வருவதாக இருந்தால் அன்றே வந்திருக்குமே! விட்டுத் தள்ளு! நாளை ஆக வேண்டிய காரியத்தைப் பார்ப்போம்...!"

"போப்பா, உங்க உறவுகாரர் வீட்டிலே இனிமே நான் இடிபட மாட்டேன்!"

ராமசாமி அவள் சிணுக்கத்தையே பார்த்துப் பெரிதாகச் சிரித்தார்.

"போப்பா, நீ சிரிக்கிறே, "ஏண்டி? சினிமாவிலே சேர்க்கிறேன்னு உங்கப்பன்தான் மூளைகெட்டு, மானம் கெட்டுக் கூட்டிவந்தான் என்றுல் உங்கம்மாவுக்குப் புத்தி எங்கே போச்சு? உனக்குத் தானுகட்டும், வெட்கம் மானம் ஒன்றுமே கிடையாதா?" என்றெல்லாம் அந்தப் பூசனிக்காய்ப் பாட்டி இடிக்கிருள். இப்ப நேரம் கழித்துப்போனுலும் இதே பாட்டுத்தான். என்னமோ உறவு உறவுன்னியே, யாருமே பேசுவதில்லை..."

"கிடக்கிருர்கள். இவர்களை எல்லாம் யாரென்று கேட்கும் காலம் நமக்கும் வரும். நீயே சொல்லு, ஜில்லென்று காரில் போய் வந்துகொண்டு எர்கண்டிஷன் பங்களாவில் சுகமாய் இருக்கவேண்டாமா உனக்கு...? இந்தக் காலத்தில் சினிமாவில் சேர்ந்தவர்களுக்கல்லாமல் புகழும் பெருமையும் யாருக்கடி உண்டு? பைத்தியமே என்ன புடவை, எத்தனை நகை.... வேண்டாமா உனக்கு? பூசனிக்காய்ப் பாட்டிக்கும் கொத்தவரங்காய்ப் பேத்திக்கும் வேறு வேலை என்ன? பொறுமை..."

மாலு நகத்தைக் கடித்துத் துப்பிக்கொண்டு வேறு திசையை நோக்கி நின்றுள்.

மழை ஒருவாறு ஓய்ந்து அவர்கள் புறப்படும் தருவாயில், "சாமி? ரிக்ஷா சாமி! ஏறிக்குந்து..."

பழைய தொப்பியும் அழுக்கு அரை வேட்டியுமாய், ஸ்டேஷன் விளக்கொளியில் நனைந்து கொட்ட ஒரு ரிக்ஷாக்காரன் வந்து நின்றுன். எதிர்பாராது கேட்ட குரலினுலோ என்னமோ, ஒரு கணம் திடுக்கிட்டு விட்டாற்போல் ராமசாமி நின்றுர்.

"என்னப்பா ?"

"எங்கே போவணும் சாமி ?"

அவன்...கிழவனில்லை... என்றுலும் கிழவன் மாதிரியே கண்களை இடுக்கிக்கொண்டு நோக்கினுன்.

"நடராஜபுரம் வரியா?"

"ரூபா குடுசாமி.."

ராமசாமி அவனைக் காலோடுதலை நோக்கினுர். மழையும் வெயிலும் பட்டு முகம் கருத்திருக்கலாம். அதே மாதிரி மூக்கு மோவாய்... கண்கள் கூட....சை! அவன் எங்கே? இந்த ரிக்ஷாக்காரனெங்கே?



"இன்னு சாமி பாக்கிறே? பன்னண்டணுக் குடு.,"

அவர் இன்னமும் வியப்பும் மலைப்பும் சுழற்றிவிட்ட சுழலில் சிக்கியவாருகவே நின்றுர். ராஜு, அப்பாவின் ஜாடை. அப்பா சாகும்போது இப்படியேதானிருந்தார். நெற்றிச் சுருக்கங்களும், ஏழ்மையில் முட்டித் தேய்ந்துவிட்ட கன்னத் தெலும்பும் சதைகளும்...அதே கை, கால், சாயை...

"பன்னண்டணுவா? ஏயப்பா? ஏம்ப்பா? புதிசுன்னு ஏமாற்றுகிருயா? நாங்கள் தினம் தினம் வருகிறும். நாலணுத்தான் கூலி. மழைகூட விட்டு விட்டது, போகிறதென்று வேண்டுமானுல் ஆறணு கொடுக்கலாம்" என்றுள் மாலு.

"சரி, சரி எட்டணு கொடுத்துடு, ஏறிக்குந்துங்க..."

கண்ணைச் சிமிட்டுவதுபோல் கொட்டிவிட்டுத் திரும்பி, அவன் ரிக்ஷா ஆசனத்தைத் தட்டினுன்.

"எட்டணுவெல்லாம் கிடையாது. ஆறணுத்தான்!" என்றுள் மாலு.

ராமசாமி சட்டென்று, "எட்டணுத்தான் வைத்துக்கொள். நேரமாகிறது, உட்கார் மாலு". என்றுர்.

மாலு ஏறி உட்கார்ந்தாள்.

"நீயும் குந்துசாமி."

"வேணும்பா, மழை நின்றிருக்கிறது நான் நடந்து வருகிறேன்" என்றுர் ராமசாமி, வேட்டியை மடித்துக் கட்டிய வண்ணம்.

"சொம்மா குந்துசாமி, இந்தப்பய எம்மாம் பளுன்னுலும் இஸுப்பான்"

"அ... இல்லையப்பா, நான் . ரிக்ஷாவில் ஏறுவதில்லை..."

"இன்னுசாமி, நீயும் ஏறிக்கிட்டா கூட ரெண்டணுவரும். ஏஞ்சாமி வயித்திலடிக்கிறே?" என்றுன் ரிக்ஷாக்காரன்.

"உனக்குத்தான் இரண்டணு நான் தருகிறேனென்றேனே?" என்றுர் ராமசாமி.

"உன் தருமம் வேணுசாமி. ஏறிக்குந்து. ரவநேரத்திலே இஸ்துக்கிட்டுப் பூடுவேன்."

"ஏறி உட்காரப்பா?" என்றுள் மாலு அலுப்புடன்.

"வேணும் தம்பி, நீபோ, நான் வரேன் பின்னுலே நடந்து" அவரையும் அறியாமல் குரல் கரகரத்தது. தூற்றல் சிறு கம்பிகளாக விழுந்து கொண்டிருந்தது. ராமசாமி, ரிக்ஷாவுக்குச் சரியாக வேகமாக நடந்தார். ரிக்ஷாக்காரன் அவருடைய கருத்தை உணர்ந்தவன்போல் மெதுவாகவே வண்டியை இழுத்துக்கொண்டு நடந்த வண்ணம் பேச்சுக் கொடுத்தான்.

மனிசன் இஸுக்கிற வண்டின்னு, பெரி...மனிதத்தனமாப் பேசுறே சாமி நீ, அதுக்குன்னு நான் தருமம் வாங்குவேணு சாமி?"

"கிடக்கட்டும், நீ இங்கே எத்தனை நாட்களாய் வண்டி இழுக்கிருய்?"

"இருவது வருசமாய் இஸுக்கிறேன் சாமி, இந்த, இஸ்கூலு, காலேஜு அல்லாத்துக்கும் எத்தினை வாடிக்கை தெரியுமா? நல்ல பொயப்பு சாமி..."

"ஓ...!"

"இந்த வண்டிலே குந்திட்டுப் போனவங்க அல்லாம் பெரிபெரிவேலையிலே கீருங்க. மேலத் தாம்பரத்திலே ஒரம்மா, டாக்டரா, பங்களா கட்டிட்டு கீருங்க. "இங்கேயே வந்திடு, மாசம் அறுவது ரூவா தாரேன், புள்ளிங்களை இட்டுப் போ, உன் வண்டிலே! இன்னுங்க..."

"நீ ஏன் போகலே?

"இன்னு சாமி! மனுசன் அப்டீ கட்டுப் போட்டுக்கிட முடியுமா? அது எனக்குச் சரி வராது. நாம இஸுக்குறும் சொந்தமா, அன்னன்னு சம்பாரிக்கிறும், துண்ணு

றோம். ஒருத்தருக்கு அடங்கிப் போக முடியாது சாமி...!"

ராமசாமிக்கு உடல் சிலிர்ப்போடினாற்போல் குலுங்கியது.

சுதந்தரம் விரும்பி ஓடிப் போன ராஜூவேதானோ?

"சின்னப் புள்ளிலேந்து, கட்டுப்படற கொணம் இவரு கிட்டக் கெடையாது. நல்ல சொகமும் பட்டேன், கயிஷ்டமும் பட்டேன். எப்பவும் யாருக்கும் அடங்கி சலாம் போட்டதில்லே சாமி!"

"உங்கய்யாவும் இதே தொழில்தான் செய்தாரா?"

அவன் சிரித்தான். ராமசாமி பார்த்திருந்தால் அடுத்த கேள்வியைக் கேட்டிருக்கமாட்டார்.

"ஹூம், முன்னுமில்ல, பின்னுமில்ல்சாமி, நடுவிலே வந்தது. காணி கரைய விட்டுப் போட்டு, எத்தினி சோமாரிப் பயங்க பட்டணத்துக்கு ஓடி வந்து ரிக்சா இஸூக்கலே? அது போல...!"

"உனக்குப் பிள்ளை குட்டி, பெண்சாதி என்று குடும்பம் உண்டா?"

"கீது சாமி!"

"எத்தினி பிள்ளைகள்?"

"மூணு."

"படிக்கிறாங்களா?"

"ம்...! பெரீ புள்ளே எட்டாவது படிச்சான். வொர்க்ஷாப்பிலே வேலை பயகிக்கிட்டு சம்பாரிக்கிறான். அடுத்த பய இப்ப எட்டாவது படிக்கிறான். அடுத்தவன் ஆறாவது படிக்கிறான்."

"பொட்டைப் பசங்க இல்லையா?"

"இல்லே சாமி! ஆண்டவன் புண்யத்திலே இதுங்க நல்லாயிருந்தாப் போதும். பெரீ பயல் மாசம் நூத்தி முப்பது ரூபாய் சம்பாரிக்கிறான்... மாசம் இருபது ரூபாயெடுத்துக்கிட்டு பாங்கியிலே போட்டு வச்சிருக்கிறேன்."

ராமசாமி ஒரு கணம் அதிர்ந்தாற்போல் நின்றார்.

"நூற்று முப்பது ரூபாய் பையன் சம்பாதிக்கையிலே நீ ஏன் ரிக்ஷா இழுக்கிறாயப்பா? பையனுக்குக் கல்யாணம் ஆகி விட்டதா என்ன?"

"பச்சைப்புள்ளீங்க, இருவது வருசமாகலே. ஆயிரத்தைந்நூறு ரூவா போல சேர்த்திருக்குது...!"

"உன்னை உன் பயல் ரிக்ஷா இழுக்காதே என்று சொல்லவில்லை? ஏம்பா?"

"அது சொல்லுது. ஆனா அதுக்காவ அது சம்பாதிக்கும் பணத்திலே நான் சொகம் கொண்டாடலாமா?"

"சொகமா? இந்த ஈனப்பிழைப்பை விட்டு விட்டு நீ ஒரு சைகல் கடை வைக்கலாமே? உனக்கு வயசாகலே?"

அவனுக்குக் கோபம் வந்து விட்டதென்பது, அவன் குரலில் புரிந்தது.

'அதும் பணத்தை நான் எடுப்பதா? அப்படியே ஒரு வூடு கீடு வாங்கி, அதுங்களுக்கு ஒரு கண்ணாலம் காழ்ச்சி பண்ணுறதை விட்டு, எனக்கு இன்னா சொகம் சாமி? அதுங்க நல்லா இருக்கிறதைப் பாக்குறதுதானுங்க நம்ம கடமை? நீ வாணா இத்தெ ஈனாயப் பொயப்புன்னுறே. எனக்கு ஈனாயமில்லே. புள்ளீங்க சம்பாரிச்சு நாம நிலேலே குந்துறதை நினைக்கிறதுதான் ஈனாயம். அப்பங்காரன் டூட்டியில்லியா சாமி அதுங்களை நல்லா வச்சுப் பாக்குறது? சொல் சாமி?...நீ இருப்பியா, இந்தப் புள்ளே சம்பாரிக்கட்டுமுன்னு, இன்னாமோ, மனுசன் இஸூக்குற வண்டியிலே குந்தமாட்டேன்னு இப்படியும் நாயம் பேசுறியே?"

ராமசாமிக்குச் சுரீலென்றது.

"ஏ சாமி? மகளா இது?"

"ஆமாம் பா..."

"பட்டணத்துக்குப் புச்சு போல கீது. படிக்குதா?"

"ஆமாம்பா..."

"இதொரு புள்ளிதானா சாமி?"

"இல்லே...ஆறு குழந்தைகள். ஏம்பா? இருபது வருஷமாய் இங்கேயேதான் தொழில் செய்கிறாயா நீ?"

"பெரீ...கதை சாமி. சிங்கப்பூர் பினாங்கெல்லாம் போய் பணம் சம்பாரிச்சேன். எல்லாம் போயி, இங்கே பொயக்கிறேன். இன்னாமோ ஆண்டவன் புண்ணீயத்திலே புள்ளீங்க முன்னுக்கு வந்திட்டா சரி..."

ராமசாமிக்குப் பேச்சு எழவில்லை.

வண்டியை வீட்டண்டை இறக்கினான் ரிக்ஷாக்காரன்.

மாலுவுக்கு சேர்வு, அயர்வு.

கண்களைக் கசக்கிக்கொண்டு இறங்கி, வீட்டுக்குள் அவள் நுழைந்து சென்றாள்.

ராமசாமி, தெரு விளக்கடி வரையிலும் சில்லறை தேடும் சாக்கில் நடந்து வருகிறார். ஆனால், சில்லறையை எண்ணிப் பார்க்காமல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே கையில் கொடுக்கிறார்.

எட்டணாவும் முப்பது நயா பைசாவும் இருப்பதை அவனும் பார்க்காமல் அவரைப் பார்த்த வண்ணமே வாங்கிக்கொள்கிறான். ஒரே கணம்தான். கண்கள் தெரிய விளக்கடியில் புரிந்து கொள்வதுபோல் சந்தித்துக் கொள்ளும் கணம்.

திரும்பி அவன் ரிக்ஷாவைத் தூக்கும்போதும் அவர் நின்றுகொண்டே பார்க்கிறார்.

திரும்பி வருகிறானே என்ன?

மலர்ச்சரம். மாலு தொங்கவிட்டுக் கொண்டிருந்த மலர்ச்சரத்தை, அவளாலேயே நசுக்கப்பட்ட அச்சரத்தை அவன் எடுத்துவந்து அவரிடம் நீட்டுகிறான்.

மலர்ச்சரத்துக்காக வருகிறானா? இன்னொருமுறை பார்க்க வருகிறானா? எட்டணாக்கூலி பேசி, எண்பது நயா பைசா கொடுக்கும் ஆள் பைத்தியக்காரனா என்று பார்த்தா? அல்லது...

ரிக்ஷாக்காரன் வண்டியுடன் தொலைவில் இருளில் செல்கிறான்.

சிங்கப்பூர் போய்வந்தவன், சாடை குரல், நடை, கடையில் எடுபிடி வேலையைவிட்டு, நாடகக் கம்பெனியுடன் ஓடிப்போன ராஜூ, அவரை அடையாளம்தெரிந்துகொண்டானோ? அடையாளம் தெரிந்துகொண்டுதான் ரிக்ஷாக்காரனாகவே நடித்துப் போனானோ?...இல்லை, சாதாரணமான ரிக்ஷாக்காரனே தானோ?

உள்ளே பாத்திரங்களின் மோதல்

"இது வீடா, சத்திரமா? ஒருநாள் பார்க்கலாம், இரண்டு நாள் பார்க்கலாம். எந்த சினிமாக்காரனையேனும் ஜாகைதேடித்தர சொல்வதுதானே?" என்ற பேச்சுக்கள்.

மாலு முழங்கால்களைக் கட்டிக்கொண்டு மூலையில் கவிந்திருக்கிறாள். விம்மல் உடலைக் குலுக்குகிறது; முழங்கால் பாவாடை கண்ணீரில் நனைகிறது.

ஒட்டுதல் ஏதுமில்லாது உறவென்று பேர் படைத்த அந்த வீட்டில் ஏச்சுப் பேச்சுக்களுக்கிடமாக இருந்துகொண்டு, அவர் எத்தனை சோதனைகளுக்கு அவளை உள்ளாக்கிக்கொண்டிருக்கிறார்? உண்மையில் அந்த எதிர்காலம் ஒளிமயமானதா அல்லது அந்த மலர்ச்சரம் போல்...சை!

"அப்பா?"

"ஏம்மா?"

"உங்க இஷ்டப்படியே நான் எல்லாம் செய்யறேம்பா, ஆனால், நம்மோடு ரயிலில் வந்த சிங்கப்பூர்காரர்களின் வீட்டில் போய் விசாரிப்போம். சித்தப்பாவாகவே அவர்கள் சொன்ன பக்கத்து வீட்டுக்காரர் இருந்து விட்டால் சிரமமில்லையேப்பா?"

"வேண்டாம்மா, நாளை....நாளை.... நாம் ஊருக்கே திரும்பி விடுவோம்... இனிமேல் இந்த முயற்சிவேண்டாம்?"

குரலில் வார்த்தைகள் கரைந்தன. பனித்த கண்களின் முன், அந்த ரிக்ஷாக்காரனின்–இல்லை, ராஜூவின் இல்லை, ஓர் தந்தையின் உருவம்தோன்றியது. கனவாய்த் தோன்றிய மூடுபனி, கரைந்து விட்டது.

For Pleasing Result....



Klein & Deyerl

BLOCK MAKERS OF REPUTE

30, MOUNT ROAD — MADRAS-2


VALE'S
MADRAS, BANGALORE.



ஸ்ரீரெங்க விலாஸ்
புகையிலை



# பரதக்கலை

கே. பி. சிவானந்தம்

அதை விளம்ப, மத்தியம திரி காலத்தோடு லயசுத்தமாய் சாதித்த பிறகு பரத நாட்டிய கச்சேரியாகத் தேவாலயங்களிலும் அரசர் சபைகளிலும் முறையாக நடத்துவதற்கு ஏற்ற முறையில் முதல் முதலாகக் கடவுள் வணக்கம் (மேளப்ராப்த்தி) அதன் பின் சபை



அறுபத்து நான்கு கலைகளில் தலைசிறந்து விளங்குவதும், தொன்று தொட்டுக் கலைரசிகர்களால் போற்றப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் வருவது பரத கலையாகும். நம் தேசத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் முதன்மையான சிதாகாசம் என்று போற்றப்படும் சிதம்பரம் க்ஷேத்திரத்தில் எம்பெருமான் தாண்டவநர்த்தனநிலையாக இருந்து பக்த கோடிகளுக்குக் காட்சியளிப்பதே இக்கலையின் மேன்மையை மக்களுக்கு வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்ற சான்றாகும். இந்தக் கலையானது ஆதிகாலத்தில் கூத்தாக விளங்கி வந்தது. இதனை சுமார் 150 ஆண்டுகளுக்குமுன் தஞ்சையில் சமஸ்தான வித்வான்களாக இருந்தவர்களும் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் மாணக்கர்களுமான தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு என்ற நான்கு சகோதரர்கள் காலத்தில் இப்பரத நாட்டியத்தை அரங்குக் கலைபோல் நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அதற்கு வேண்டிய ஆரம்ப பாடமாக 120 [illegible] ஜாதிகளை திட்டம்செய்து வணக்கம் என்று சொல்லப்பட்ட அலாரிப்பையும், அதன்பின் ஜதீஸ்வரம், என்ற நாட்டிய வணக்கத்தையும், அதன் பின்முறையாகச் சப்தம், பதவர்ணம், அல்லது ஸ்வரஜெதி, பதம், தில்லானா, ஸ்லோகம், ராகமாளிகை, தரு, அஷ்டபதி என்ற பாடல்களை பல ராகத்திலும் தன் குலதெய்வமான பிரகதீஸ்வரர் பேரிலும் தங்களை ஆதரித்துவந்த அரசர்கள், மந்திரிகள் பேரிலும், பல சந்தர்ப்பங்களில் யாத்திரையாக வெளிச் செல்லுங் காலையில் ஆங்காங்கேயுள்ள சுவாமி, அம்பாள் பேரிலும் பல எண்ணிறந்த பாடல்களைப் பாகுபாடுடன் அமைத்துக் கச்சேரி முறைக்கு வேண்டிய பக்கவாத்தியங்களையும் சேர்த்து முதன் முதலில் ஆலயங்களிலும் அரசர் சபைகளிலும் முறையாக நடத்தி அழியாப் புகழைதேடிக் கொண்டார்கள். இவர்கள் தஞ்சை திருவனந்தபுரம், மைசூர் சமஸ்தானங்களில் வித்வான்களாக அமைந்து பரிசுகளும் பல பெற்று ஆங்காங்கே இக்கலையை தாங்கள் வகுத்த முறையில் பலருக்குபோதித்துபெரும் புகழ்அடைந்தார்கள். இன்றும் சம்பிரதாய முறைப்படி நாட்டியக் கச்சேரியைப் பார்த்தோமானால் இவர்கள் வகுத்தபடியும் இவர்கள் பாடல்களைக் கொண்டும் இன்றும் நடந்துவரு[illegible] நாம் பலரும் அறிந்ததே.

பரதநாட்டியக் கலையை கச்சேரிரூபமாக அமைத்து அதற்கு வேண்டிய எல்லாப்பாடல்களையும் வகுத்துத்தந்த மகாவித்வான்களான தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம் வடிவேலு ஆகியவர்களுக்கு கலை உலகு கடமைப்பட்டுள்ளது. மேலும், மேல்நாட்டு வாத்தியமான பிடில் வாத்தியத்தை வடிவேல் என்பவர் தஞ்சையில் பாண்டு மாஸ்டராக மேல் நாட்டிலிருந்து அக்காலத்தில் வந்த பாதிரியார் ஒருவரிடம் முதன் முதலில் தெரிந்து கொண்டார். பாதிரியாரும் தான் ஊர் போகும்போது தன் பிடிலை வடிவேலுக்கு அன்பளிப்பாக கொடுத்துப் போனதும் வடிவேலு அவர்கள் நம் கர்நாடக சங்கீத முறையைத் தானே அப்பியாசித்து நன்கு தேர்ச்சி அடைந்ததும், தஞ்சை அரசர் சபையில் முதன் முதலில் வாசித்துக்காட்டியும் பாட்டுக்கச்சேரிக்குப் பக்கவாத்தியமாக வாசிக்கலாம் என்ற முறையை முதன் முதலில் கொண்டு வந்தவரும் வித்வான் [illegible]வேலு ஆவர்.

[illegible]ந்த திருவாங்கூர் மன்னர் ஸ்ரீ சுவாதித் திருநா[illegible] [illegible] அவர்கள் வடிவேலு[illegible] [illegible]த்துப் பிடில் வாத்தியத்தை [illegible] செய்து கேட்டுமகிழ்ந்து, மே[illegible] வாத்தியமான பிடில் வாத்தி[illegible] முதன் மு[illegible] கர்நாடக [illegible]த்தை [illegible] கச்சே[illegible] பக்கவா[illegible] மு[illegible] கொண்டு [illegible] வடி[illegible] அவர்களுக்கு ஸ்ரீசுவா[illegible]த் திரு[illegible] மகாராஜா அவ[illegible] யானைத் தந்[illegible]திலல் பிடில் செய்து அதில் தன் அ[illegible] சாங்க முத்திரை [illegible] பொட்டு 1[illegible] பரிசு கொடுத்த [illegible] பிடிலின் பட[illegible]மும் மேலே காண[illegible]படுகின்றது.


ஜெர்மன் டெலிபன்கன் ரேடியோக்கள்

TELEFUNKEN (WEST GERMANY)

(TELERAD) H-I. F-I. RADIOS

★ சுலபமான மாதத் தவணைகளிலும் கிடைக்கும். ★



★ தஞ்சை & தென்னாற்காடு ஜில்லாக்கள் வினியோகஸ்தர்கள் ★

Model D 639

Rs. 330/- Plus Taxes

மூர்த்தி ரேடியோஸ்

தந்தி: ரேடியோஸ். 12, பெரிய தெரு, கும்பகோணம். போன் நெ. 210.

N. B.:-- Wanted Sub dealers in each town



1





2

## நாட்டியப் புதுமை நாடும் கலையரசி வைஜயந்திமாலா

1. பரதநாட்டியம் ஆடலாம் என்ருல் அது ஆடி ஆடி அலுத்துப் போய்விட்டது.

2. 'நீலவண்ணக்கண்ணு வாடா" என்று மார்வாரி நடனம் ஆடலாம் என்ருலோ இப்போதெல்லாம் அது எனக்...பிடிப்பதல்லை.

3. இப்படி மயில் வேடம் போ...ம் என்ருலோ அதிலும் இப்போது புதுமை இல்லை.

4. இவை எல்லாம் இல்லாது வானத்து ஊர்வசியாக மாறிவிடலாம் என்ருலோ புதுமை போற்றும் இக்காலத்தில்புராணத்திற்கு மதிப்பில்லை.

5. 'தில்லானு" ஆடலாம்என்ருலோபழங் காலப்பாணியைத் தவிர அதில் புதிதேதும் செய்ய இயலவில்லை.

6. எனவே இப்போதெல்லாம் இப்படி குற்ருலக் குறவஞ்சியில்தான் நான் புத்தம் புது நடனப் புதுமைகளைச் செய்யப் போகிறேன்.

புகைப்படங்கள்:-கே. வி. எஸ். சாரி


3
4
6
5

# புதுவாழ்வு தரவந்த புலவர் குழு

**பொ**திய மலையில் பிறந்து, பொற்புடைய பாண்டியனின் மடியிலே தவழ்ந்து, சங்கத்துப் பெரும் புலவர் நாவிலே வளர்ந்த பாவையான தமிழ் முன்னை இடைக்காலத்தில் சங்கமிழந்து-தன்னை வளர்த்த தமிழ் மன்னர்களை இழந்து - வேற்றுமொழி பேசுவோரின் தாக்குதலிற்கு ஆளாகி, கண்ணற்ற ஒருவன் கை கிடைத்த ஓவியம் போன்றும், கையற்ற ஒருவன் அடைந்திட்ட யாழ் போன்றும் பயனற்ற நிலையில் பாழ்பட்டுக் கிடக்கையில் " தாயின் கண்ணீரைத் துடைப்பதற்கு நான் இருக்கிறேன்" என்று திருச்சியில் இருந்து ஒரு ஆண்மைக்குரல் எழுந்தது. முத்தமிழ்க் 'காவலரான நம்முடைய விசுவநாதம் அவர்கள் தானே முன்னின்று தமிழ்ச் சங்கம் ஒன்று அமைக்க முன்வந்தார்.

அதில் இக்காலத் தொல்காப்பியரான தெ. பொ.மீனாட்சி சுந்தரனாரும், மிக்க புகழ் படைத்த கபிலரோடு வைத்து எண்ணப்பட வேண்டிய சேதுப் பிள்ளையும், வரலாற்றுப் பேரறிஞர் பரணரின் வழிவந்த மு. வரதராசனாரும் மாங்குடி மருதனுக்கு எவ்வகையிலும் தாழாத புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரும், செந்தமிழைக் காப்பதற்காக முப்புரியை எாத்த விரிசடைக் கடவுளையே எதிர்த்த நக்கீரரின் மறுபதிப்பான மா. இராசமாணிக்கனாரும், மற்றும் செந்தமிழ் ஆய்ந்த பைந்தமிழ்ச் சான்றோர்களும், தாய் மொழியைக் காப்பதற்காக ஓரணியில் திரண்டனர். தமிழர் தம் வாழ்வின் வழி காட்டியான ஒப்பரிய தமிழ்க் கழகம் ஒன்றை 'புலவர் குழு' என்ற பெயரிலே கண்டனர்.

முன்னர் முடிமன்னர்கள் ஆண்ட காரணத்தால் முழுதாய்ந்த பாவலர்களை ஏற்றிப் போற்றும் கடமையும் அவர்களையே சார்ந்திருந்தது. ஆனால், மணிமுடிகள் மறைந்து மக்களாட்சி தோன்றிவிட்ட இக்காலத்திலே தமிழ்ச் சங்கத்தைக் காக்க வேண்டிய உரிமையும் - தமிழ்ச் சான்றோர்களைத் தொழுது பின்நிற்க வேண்டிய கடமையும் தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

எனவே ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உம் முன்னேற்றம் என்று கண்டறிந்த பெரியோரே! தாய்மாரே! நல்லிளஞ் சிங்கங்காள்! இன்றே, இப்போதே மீண்டும் கட்சிப் பிணக்குகளைத் தூர ஒதுக்கி, மாண்புடைய புலவர் குழு காட்டும் வழிநடந்து தமிழையும், தமிழ் நாட்டையும் காப்போம். தமிழர்தம் பொற்காலத்தை மீட்போம்.







தற்காலக் கபிலர்
பேராசிரியர்
ரா. பி. சேதுப்பிள்ளை

இக்காலப் பரணர்
டாக்டர்
மு. வரதராசனர்

நிகழ்காலத் தொல்காப்பியர்
பன்மொழிப்புலவர்
தெ. பொ.
மீனுட்சி சுந்தரனர்

இன்றைய மாமூலரான
டாக்டர்
அ. சிதம்பரநாதன்




பதுமனரின் மறுபதிப்பான
பன்மொழிவல்ல
கா. அப்பாதுரையனர்

மாங்குடி மருதனுக்குக் குறையாத
புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனர்

நக்கீரரின் வழி வந்த
டாக்டர்
மா. இராசமாணிக்கனர்

கயமனரின் நிழலான
அன்பு
கருணையானந்தர்






தற்கால இறையனர்
டாக்டர்
மொ. அ.
துரையரங்கனர்

இக்கால மோசி கீரரான
பேராசிரியர்
ச. ஆறுமுக முதலியார்

நிகழ்கால ஓரம்போகியாரான
பண்டித
பு. ரா. புருடோத்தம
நாயுடு

இன்றைய பெருங்கடுங்கோவான
கவிஞர்
எம். பி. மாஸ்கரனேஸ்




வில்லக விரலினரின்
வழிவந்த

வித்துவான் முத்து
சு. மாணிக்கவாசக
முதலியார்




அரிசில் கிழாரோடு
வைத்து எண்ணப்பட
வேண்டிய
பைந்தமிழ் வல்ல
பூ. ஆலாலசுந்தரம்
செட்டியார்




ஆலங்குடி
வங்கனரின் வழிவந்த

செந்தமிழ்ச் சான்றோர்
கா. நயினர் முகம்மது



அம்மூவனரின்
மறுபதிப்பான

புலவர்
ந. இராமநாதன்




ஆலத்தூர் கிழாரின்
நிழலான

பேராசிரியர்
கோ. சுப்ரமணியபிள்ளை



இடைக்காலரின்
வழிவந்த

ஔவை
சு. துரைசாமிப்பிள்ளை



இளங்கீரந்தையாரோடு
வைத்து எண்ணப்பட
வேண்டிய

வித்வான்
இராமசாமி அடிகள்



இக்கால இளங்கீரரான

வித்வான்
வே. அய்யா நாய்கர்



ஓரேருழவனர் வழிவந்த

பைந்தமிழ்ச் சான்றோர்
கா. அப்துல்கபூர்



இக்கால திப்புத்
தோளாரான்.

பண்டித வித்துவான்
லெ. ப. கரு. இராம
நாதன் செட்டியார்



நிகழ்கால
தும்பிசேர்கீரரான


பண்டித
அ. கந்தசாமிப்பிள்ளை



பழங்காலப் பனம்
பாரனரின் நிழலான

வித்துவான்
இராம. கோவிந்தசாமி
பிள்ளை









சாண்டிலயனான
மறுபதிப்பான
அறிஞர்
அரசு நாராயணசாமி
நாயுடு

இக்கால கல்லாடனாரான
திருப்பனந்தாள்
கே. எம்.
வேங்கட ராமையா


அம்மூவனின் வழி வந்த
பேராசிரியர்
சி. இலக்குவனார்

கோப்பெருஞ்சோழனின்
வழி வந்த
செந்தமிழ்ச் சான்றோர்
ப. சோதிமுத்து











ஔவையின் கிழலான
மேரி மாசிலாமணி
அம்மையார்

தற்கால
காக்கைபாடினியான
காமாட்சி குமாரசாமி


சேரமான் எந்தையின்
வழி வந்த
பண்டித வித்வான்
சங்குப்புலவர்

நிகழ்கால
நன்னாகையாரான
வித்வான்
சி. துரைசாமி ஐயர்









கொல்லன் அழிசியின்
மறுபதிப்பான
பண்டித
ஞா. தேவநேயப்
பாவாணர்

செல்லூர்க் கொற்றன்
வழி வந்த
பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்

இக்காலக்
கண்ணன் கூத்தனான
தமிழறிஞர்
கி. இராமலிங்கனார்

நிகழ்கால முதுகூத்தனான
வித்துவான்
ஐயன் பெருமாள்
கோனார்



இன்றைய சேந்தன் கீரனை

வித்துவான்
மு. அருணாசலம்பிள்ளை




மீனாக் கந்தன் வழிவந்த

தமிழ்ச் சான்றோர்
தி. செ. பாலசுப்ரமணியம்



மாமிலாடனுக்கு எவ்வகையிலும் குறையாத

வித்துவான்
க. வெள்ளைவாரணன்




பூதத்தேவரின் நிழலான

வித்துவான்
தி. பட்டுச்சாமி ஓதுவார்



மீனெறிதூண்டிலார் வழிவந்த

வித்வான்
வை. சுந்தரேச வாண்டையார்



இன்றைய பேரிசாத்தனை

பெரும் புலவர்
அ. கி. பரந்தாமனார்




தற்காலக் கயத்தூர் கிழாரான

வித்துவான்
க. சங்கரநாராயணர்



நிகழ்காலக் கங்குல் வெள்ளத்தாரான

வித்துவான்
மே. வீ. வேணு கோபாலபிள்ளை



அணிலாடு முன்றிலாரின் மறுபதிப்பான

பெரும்புலவர்
மயிலை சிவமுத்து



உறையூர் முதுகொற்றன் வழிவந்த

பைந்தமிழ்வல்ல
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை



இன்றைய அறிவுடை நம்பியான

புலவர்
ஏ. கே. வேலன்



நிகழ்கால உருத்திர சன்மனை

முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதன்

# இதுதான் சென்னை

மயிலை சண்முகசுந்தரம்

தமிழினத்தின் பெருமைதனைத் தொகுத்தறிவிக்கும் ஓரே சிறப்பு நகர் --சென்னை நகர்தான்! இந்தச் சிங்காரச் சென்னை இன்று உலகில் எந்தத் துறையிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றிலங்குவது வெகு பலரும் --குறிப்பாக -- வடவருக்கு வயிற்றெரிச்சலைத்தான் கிளப்புகிறது!

உலகிலேயே இரண்டாவதாக விளங்கும் மிக அழகிய கடற்கரை சென்னையில்தானிருக்கிறது! இதைப் போலவே அண்மைவரை உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய மில் சென்னையின் பங்கிங்ஹாம் மில்தான். அதுமட்டுமல்ல; உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய யுத்த தளவாட சேமிப்பு நிலையம் (Militery Base) போர்க்காலத்தில் சென்னையாகத்தானிருந்தது -- அதோடு சென்னைப் பிராந்திய வீரர்கள்தான் (Sapers of Minors) உலகிலேயே மிகச் சிறந்த காலாட்படையினராகப் பிரகடனப் பட்டவர்கள்! இந்தியாவிலேயே அறிஞர்களும், படிக்காமலேயே மேதைகளான பேரறிஞர்களும் உலவும் ஒருநிலம் சென்னைதான்! உலகையே பேச்சால் திணற வைத்த ஸர் ஏ. ராமசாமி முதலியாரும், டாக்டர் ஏ. லட்மணசாமி முதலியாரும், ஸர். சி. பி. ராமசாமி அய்யரும் சென்னையின் பிரஜைகள்தான்! உலகிலேயே படிக்காமலேயே விஞ்ஞானியான ஜி. டி. நாயுடுவும், கல்லூரி காணாமலேயே பேரறிஞரான புரட்சித் தலைவர் பெரியாரும், சென்னை மாநில வாசிகள்தான்! அதுமட்டுமல்ல; இன்னும் எத்தனையோ துறையில் சென்னைக்கு முதலிடம் உண்டு. டென்னிஸ்--ஹாக்கி போன்ற துறைகளில் (முந்திய ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ளப் போன ஓர் "உலகையே தோற்கடித்த இந்திய ஒலிம்பிக் கோஷ்டியை," சென்னை மிகச் சுலபமாகத் தோற்கடித்தனுப்பியது மிகவும் குறிப்பிடத்தக்கது!!) சென்னை வளர்பிறையாக இன்னும் உயர்ந்து வருவது நமக்கெல்லாம் ஒரு பெருமிதம்தான்!

அத்தகைய புகழ் வாய்ந்த சென்னையை--ஆச்சாரியார் ஆந்திரர்களிடமிருந்து கத்தியின்றி -- இரத்தமின்றி காத்துத் தந்த சென்னையை -- நாமின்னும் சரியாகச் சுற்றிப் பார்க்காமலும், தினமும் பார்த்து மகிழும் பல இடங்களின் கீர்த்திதனை அறிய முடியாமலும், 'ஏனோ--தானோ'; என்று காலங்கழித்து வருகிறோம்! கோயிலருகே குடியிருப்பவர்கள் கடவுளைக் காண நேரங்கழித்துக்கூட செல்லாமலிருப்பதைப்போல், நம்முடைய முத்திரை யிடப்பட்ட சென்னைதானே-- இதற்கென்ன வீரஉலா -- இதற்கென்ன சரிதக் குறிப்பு சேமிப்பு-- என்று நாம் வெகுபல நாட்களாகவே வாளாயிருந்து விட்டிருக்கிறோம்: ஆனால் இனியும் அவ்வண்ணமே இருந்துவிடாமல், சென்னையின் சரிதத்தையும் அங்கு நிலவிக் கிடக்கும் பல்வேறு பகுதிகளின் -- கட்டிடங்களின் -- புராதனச் சின்னங்களின்-- முழு வரலாறுகளையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளவே நேரம் முயல வேண்டும்!

இந்த நம் முயற்சி நாம் விரும்பிய பலனை மட்டுமல்ல: சென்னை சம்மந்தப்பட்ட எல்லா உரிமைகளையும் நமக்கு நன்கு ஊர்ஜிதப்படுத்தவும் தவறாது!

எனவே 'கலையின்' முதல் முயற்சியாக, சென்னையின் முக்கியத்துவத்தை உயர்த்தும் சிலபல குறிப்புக்களையும், அது சம்மந்தப்பட்ட புகைப் படங்களையும் கீழே தருகிறது நண்பர்கள் பயன்பெற! நேயர்கள் பார்த்து மகிழ!!

### மயிலாப்பூர்

மயிலாப்பூர்-வள்ளுவர் வாழ்ந்து வானளாவப் புகழ் கொழித்த செல்வத் திருக்குறளை இயற்றிய இடம். கமுகும்-தென்னையும் கவினுறு காட்சிகள் பலவும் பெற்ற இவ்விடம்-புராதன இந்து-கிருத்துவ கடவுளர்களின் பிறப்பிடமாம்! பண்டைய நாள் எகிப்திய டாலமிக்கள் மல்லார்ப்பா (Mallarepha) என்ற பெயரில் இதனுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது! இன்றோ அங்கு வாணிபமும் ஒரு பகுதியில் நெசவுத் தொழிலும் நடைபெறுகிறது! இதன்றி அங்கே திறமையான வழக்கறிஞனும், நாடகாசிரியர்களும், எழுத்தாளர்களும் வாழ்ந்து வருவது மிகவும் வரவேற்கத் தக்கது! கபாலீஸ்வரர் கோயிலில் இன்றும் சிற்பக்கலை தவழுகிறது!

### பார்த்தசாரதி ஆலயம்

இது ஓர் பண்டைய வைணவ ஆலயம்! இதனால் சிறப்புறுவது திருவல்லிக்கேணி! வாணிபம் இங்கு வெகு முக்கியம். இதன் மேற்பகுதியை யொட்டி சேப்பாக்கமும் நவாபுகளின் மாளிகைகளும், மதாலயமும் இருக்கின்றது! பார்த்தசாரதி ஆலயம் தென்னகத்திலேயே மிகச் சிறப்பு வாய்ந்த பழம்பெரும் வைணவ ஆலயம்! இதன் வடமேற்குப் பகுதியில் முகம்மதியரின் இருப்பிடங்களும் கலை ஆபீஸுமிருக்கிறது!

### ஐஸ்அவுஸ்

இன்றைய லேடி வெல்லிங்டன் கல்லூரியில் வளைவுக் கட்டிடத்திற்குத்தான் அந்நாளில் ஐஸ்அவுஸ் என்று பெயர். இங்கு அந்நாளில் கப்பலிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'ஐஸ்' பவுண்ட்-4 அணாவுக்கு விற்று வந்ததாம், இது கி. பி, 1842ல் கட்டப்பட்டதாம்!

### சேப்பாக்கம் அரண்மனை!

இன்றைய பொதுத்துறை இலாகாவினர் ஏற்று பணியாற்றிவரும் பெரும் ஆபீஸ் அந்நாளில் கர்நாடக நவாபுகளால் நிர்மாணிக்கப்பட்டு, அவர்களாலேயே உபயோகிக்கப்பட்டு வந்தது, இதை நிர்மாணித்தவர் எட்டாவது கருநாடக நவாபான முகமதலி என்பவரால் (1749-1795) கட்டப்பட்டது. இதனை 1855ல் பிரிட்டிஷார் கடைசி நாவாப்பான கெவுஸ்கானின் மரணத்திற்குப் பிறகு தங்களதாக்கிக் கொண்டனர்! இன்றோ அதுசேர வேண்டியவர்களுக்குச் சேர்ந்து அங்கே சுதந்தரக் கொடியும் பறக்கிறது!

### மெரைன்வில்லா Marine Vella (University Buildings)

'மெரைன் வில்லா'-இது இன்றில்லை... இந்த கட்டடம் இருந்த இடத்தில்தான் இன்று யூனிவர்சிட்டி நூல்நிலையமும், ஆராய்ச்சித்துறை நிலையங்களுமிருக்கின்றன. அன்று இது சேப்பாக்க அரண்மனையின் ஒரு பகுதியாகவும் கூவம் ஆற்றின் தென் பகுதி மாளிகையாகவும், நவாப் முகமதாலி வாலாஜாவின் குளியலிடமாகவுமிருந்தது!

பிறகு லார்ட் கிளைவின் (1798-1803) இருப்பிடமாகவும், கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லியின் ஓய்வு முகாமாகவும், (1799) பிறகு சென்னை அரசாங்கத்தின் சர்ஜன் ஜெனரலின் இல்லிடமாகவுமிருந்தது இதற்குப் பிறகு சென்னை யூனிவர்சிடி நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டு அங்கே தமிழ்க் கலைக்களஞ்சியம் தயாரிப்பது முதல் பல்வேறு சரித ஆராய்ச்சிகளும் புதைபொருளாராய்ச்சிகளும் நடைபெற்றது. ஆனால் அது மீண்டும் 1930-ல் இடித்துத் தள்ளப்பட்டு, இரும்பு வாராவதியை யொட்டிய இன்றைய யூனிவர்சிடி லைப்ரரியாகவும், ஆராய்ச்சிக்கூடமாகவும் நிர்மாணிக்கப்பட்டு தென்னகத்திலேயே பெரும் பணியைச் செய்து வருகிறரது

### செனட் அவுஸ்

மிகமிக அழகான இந்தச் சித்திர மாளிகை 1874ல் கட்ட ஆரம்பிக்கப்

பட்டு 4 ஆண்டுக் காலத்துக்குள் கட்டிமுடிக்கப்பட்டது. இதைக்கட்டி முடிக்க அந்நாளைய செலவு 2,89,729 ரூபாய்களாகும். ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்லூரியின் இறுதித் தேர்வுபட்டங்களெல்லாம் இந்தச் சித்திரமாளிகையிலிருந்துதான் அளிக்கப்படுகின்றன. இந்த விழாவுக்கு கவர்னர்தான் தலைமை தாங்குவார். பெரும் பேரறிஞர்கள்தான் சொற்பொழிவாற்றுவார்கள்.

### பொருட்காட்சிசாலை (மியூசியம்)

43 ஏக்கரா நிலப்பரப்பில் 1778-ல் கட்டப்பட்ட தனிப்பட்டவரின் மாளிகையாகும். 1779-ல் ஒரு கமிட்டிக்கு இது விற்கப்பட்டு அதுமுதல் அவ்விடம் விருந்துகளும் கேளிக்கைகளும் நடைபெற்று வந்தது. 1830-ல்தான் இது அரசாங்கத்தினருக்கு விற்கப்பட்டு 1851 வரையில் இது சென்னை கலெக்டரின் கச்சேரியாக இருந்தது—பிறகு 1851 முதல்தான் இது பொருட்காட்சி சாலையாக மாற்றப்பட்டது. இன்றும் பல புதிய அம்சங்களுடன் காணப்படுகிறது.

### கன்னிமாரா லைப்ரரி !

மியூஸியத்தை யொட்டிய கட்டிடத்திலேயே--கவர்னர் கன்னிமாராவின் பேரால் (1886--1890) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நகர நூல் நிலையமிது. இதை இன்று பெரும்பாலும் மாணவர்கள் உபயோகிக்கத் தொடங்கினால் நாட்டின் அறிவுப் பஞ்சமாகிலும் கொஞ்சம் குறையும்!

### மூர்மார்க்கெட்

ஓர் காலத்தில் சென்னை கார்பொரேஷனின் தலைவராய் இருந்த ஜார்ஜ் மூர் K C B. என்பவரின் பெயராலே நிர்ணயிக்கப்பட்ட வியாபாரஸ்தலமிது--மிக அழகாகவும் வசதியாகவும் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் இதற்கு மூன்று லட்ச ரூபாய் செலவழிந்ததாம்--இன்று இங்கு கிடைக்காத பொருளில்லை--பழைய புத்தகங்கள் அவ்வளவும்--குறிப்பாக சென்னையைப் பற்றி எழுதக் கிடைத்திருக்கும் ஆதார புத்தகங்களும் இங்கிருந்துதான் திரட்டப்பட்டவையாகும்.

### சால்ட் குவார்டர்ஸ்

இது முன்னாளில் உப்பளமாகக் காட்சியளித்த பகுதிகளாகும். ஆனால் இன்றோ வியாபாரப் பொருள்கள் வந்து குவியும் பெரிய ரயிலின் பண்டகசாலை இதனுள்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு தினமும் சரக்குகளைப் பெற்று அதற்காக கட்டப்படும் கூட்ஸ் கட்டணம் மட்டும் 1 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டதென்றால் சென்னை வியாபாரிகள் இதயம் இங்குதானிருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

### ஏழுகிணறு

இங்கு தோண்டப்பட்டுக் கிடக்கும் ஏழுகிணறுகளிலிருந்த நீர்தான் தினமும் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாம் அந்நாளில். ஆனால் இன்றோ இதன் பெரும்பகுதி பொது இலாகாவினரால் ஏற்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு பம்பிங் ஸ்டேஷனுமிருக்கிறது—முன்பெல்லாம் எல்லா கிணறுகளும் வேலை செய்யும்போது தினமும் இங்கு மட்டும் 3 லட்சம் காலன் தண்ணீர் கிடைத்ததாம்! ஆனால் இப்போதுதான் புழலேரியில் சிக்கி நாம் சுழலுகிறோமே!

### பச்சையப்பர் கல்லூரி-1846

பெரும் பெரும் அறிஞர் மணிகளைச் சென்னைக்களித்த பெரும் கல்லூரி இதுதான். கிழக்கிந்தியக் கம்பெனியில் துபாஷாக வேலை பார்த்துவந்த வள்ளல் பச்சையப்பமுதலியாரால் நிர்மாணிக்கப்பட்ட இது இன்று பல கிளைகளுடன் தமிழகத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறது.

### உயர்நீதிமன்றம்

1862 முதல் பணிசெய்யத் துவங்கிய இவ் உயர்நீதிமன்ற மாளிகை சென்னையிலேயே மிகமிக உயர்தரமானதும் வேலைப் பாடுகளமைந்தது மான மாளிகையாகும். இதனுள்ளே பல்வேறு நீதிமன்றங்களிடம் வந்திருக்கின்றன. இதில் உள்ளே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஜட்ஜ் முத்துசாமி அய்யரின் சிலை (1878-1895) பொதுமக்களின் அன்பளிப்புத் தொகையினின்றும் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

### புதிய லைட்அவுஸ்

கப்பற் துறைகளுக்குக் கலங்கரை விளக்கமாக இருந்துதவும் பெரும் கோபுரம் இது. இன்று இதன் விளக்குகள் மின்சாரத்தால் எரிக்கப்பட்டு கடலுள் பலமைல்களுக்கும் அப்பால் தெரியும் சக்தியைப் பெற்றிருக்கிறது. மக்கள் இதன் மீதேறி சென்னையின் பெரும்பகுதிகளைக் காண இன்றும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் இதன் சுழற்படிகளைச் சுற்றிச் சுற்றி மேலேறிச் செல்வது எங்களைப்போன்றவர்களுக்கு மிகவும் கடினம்தான்!

### பழைய லைட் அவுஸ்

வடக்கு மூலையில் 125 அடி உயரமுள்ள கற்களாலான இப்பழம்பெரும் லைட்அவுஸ் - 1838-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கவர்னர் எல்பின்ஸ்டன் என்பவரால் கால்கோலிடப்பட்டு 1843ம் ஆண்டில் முற்றிலும் கட்டி முடிக்கப்பட்டு 1844-ஜனவரி முதல் தேதி முதல் இதில் விளக்கெரிய முற்பட்டதாம். இதன் வெளிச்சம் கடலில் 15 மைல்கள்வரை தெரிந்து கொண்டிருந்ததாம். ஆனால் இன்றோ அது பாழடைந்து கவனிப்பாரற்றும் உபயோகப்படுத்துவாரற்றும் கிடக்கிறது. காரணம் புதிய லைட்அவுஸ் நிர்மாணிக்கப்பட்டதேயாகும்.

ஆனால் இன்றுகூட நீதிமன்றம் தன் ஆண்டுவிழாக் காலங்களிலும் சட்டக் கல்லூரி தன் ஆண்டுவிழாக் காலங்களிலும் இதன் கீழே கூடி, தங்களின் நீதிமன்றச் சின்னமிட்ட கொடியை இதன் மீது ஏற்றிவைத்து மகிழ்ந்தால் மிகமிக கம்பீரமாகவும் பொறுத்தமாகவுமிருக்கும்! ஆனால் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யபடவேண்டுமாமே!

### மணிகார் சத்திரம்
### (Monigar Choultry)

இதுதான் வடசென்னையில் முதன் முதல் துவக்கப்பட்ட தரும ஆஸ்பத்திரி. இதற்குப் பிறகு வந்ததுதான் ஸ்டான்லி ஆஸ்பத்திரி முதலியவைகள். முதன் முதல் இதனைத் துவக்க அரும்பாடு பட்டவர் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த 'ஜான் அண்டர் வுட்' என்ற டாக்டர்தான். 1797-ல் இந்த டாக்டர் வைத்திய சாலை ஏற்படுத்த புரசவாக்கத்தில் ஒரு நிலத்தைத் தருமாறு கம்பெனியாருக்கு விண்ணப்பித்திருந்தார்--அதைக் கம்பெனியார் ஒப்பாமல் பிராட்வேயின் வட கோடியில் இந்த இடத்தை அளித்தனர். இதில்தான் 1799 முதலில் இந்த ஆஸ்பத்திரி கட்டி முடிக்கப்பட்டது. 1809 இத்துடன் நாட்டுவைத்தியமும் ஏழையர் நிதி திரட்டும் ஸ்தாபனமும் இணைக்கப்பட்டது. அது முதல் இங்கு வைத்தியத்துடன்--வைத்தியம் பயிலும் மாணவர்களுக்குப் பாடமும் சொல்லித் தரப்பட்டது. போர்க்காலத்தில் (1914) இது மெதுவாக இடித்துத் தள்ளப்பட்டு இன்றுள்ள ராயபுரம் ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. இன்று இதில் சுமார் 1000 நோயாளிகளை அனுமதிக்கும் சாதனமிருக்கிறது.

### மவுண்ட் ரோட்

ஸெயின்ட் ஜார் கோட்டையையும், ஸெயின்ட் தாமஸ் மவுண்டையும் இணைக்கும் மிக மிக அழகான சாலைதான் மவுண்ட் ரோட்--1795-ல்தான் இந் நெடுஞ்சாலை செப்பனிட்டு முடிக்கப்பட்டது. இன்றோ, சென்னைக்கு அழகும்--பொருளாதாரப் பெருக்கமும் தருவது இந்த மவுண்ட் ரோட்தான்! சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் சென்னைக்கு இதுவும் சைனாபஜாரும்தான் இதயங்கள் போன்றது.

### சைனா பஜார்

இன்று சென்னையின் மற்றொரு இதயமிது. அந்நாளில் இங்கு குவிந்து கிடந்த விலைபொருள்களில் சைனாவின் சாமான்கள்தான் இங்கு அதிகமாக விற்கப்பட்டு வருகிறது. 1644 முதல் முக்கியத்துவம் பெற்றிருந்த இது--1758-ல் போர்க்களமாகவும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இன்றோ இது நேத்தாஜியின் பெயராலே மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. எனினும் மக்கள் அதை இன்னமும் 'சைனா' பஜார் என்றுதான் அழைக்கிறார்கள். பெயர் மாற்றமிருந்தாலும் மன மாற்றம் வேண்டுமல்லவா! அந்த மன மாற்றம் அதிகமாக ஏற்பட முடியாதென்பதற்கு 'சைனா' பஜாரே எடுத்துக் காட்டு.

# தேன் மலைச்சாரல்

திருவையாறு அ. அப்துல் கரீம்

காலையிள வெய்யலிலே காட்டினுக்குள் சென்றேன். கண்கவரும் ஓவியம்போல் மெல்லிலைகள் ஆடக் கார்முகிலைக் கண்டுமயில் தோகை விரித்தாடும். பூக்களுள்ளே தேன் குடித்த வண்டினத்துக் கூட்டம் புத்தம்புதுப் பாட்டியற்றி ஓடினஓர் ஓட்டம்.

தேன்மலையின் மீதுசெல்லப் போகும் என்றன் கால்கள் தேம்பியழப்போவதுபோல் ஏங்கினஓர் ஏக்கம். உச்சிவெய்யல் வேளைக்குள்ளே போகவேண்டும் மேலே. ஓய்ந்த என்றன் கால்களுக்கு நானோபெருந்தொல்லை. தேன்மலையின் சாரலுக்குள் செல்லவேண்டுமென்ற தெம்பினிலே நான் நடந்தேன் கல்லின்முள்ளின் மீது.

ஆழ்ந்த மலைஅமைதி! அழகழகுப் பூச்செடிகள்! வாழ்ந்த குயிலினத்தின் வளம்மிக்க தேன்பாட்டு! ஓயாதொலிக்கும் ஓர் அழகுப் பொன்னருவி! அருவிக்கரையோரம் அமர்ந்தேன் நெடுநேரம். தூயஅருவி துள்ளிக் குதிக்கும். பாயும் இளமான்கள் பருகும் அதன் நீரை! தாவும் முயற்கூட்டம் தாகத்தைத் தாம் தணிக்கும்.

என்னே அழகென்று இருந்தேன் வெகுநேரம்; இயற்கைத் தனிமகளின் எழில்மிக்க அவ்வீடு என்போன்ற காளைக்குத் தக்க துணை தேடும். எண்ணங்கள் என்னுள்ளே ஏதோ கவிசொல்ல வண்ணங்கள் கண்டென்றன் வாயூறிப் போயிற்று.

தேன்மலைச் சாரலிலே தென்றல் அடிக்குங்கால், நான்பெற்ற பேறிந்த நாள்பெற்றேன் என்றெண்ணி, வான்பார்த்து நீல வண்ணத்தைப் பார்த்துக் கான்பார்த்து அருவிக் கரை பார்த்தேன். அவ்வேளை!

அம்மாடி! அம்மா!! அணங்கோ! அணி மயிலோ! அலைபாயும் கடலருகே விளையாடும் எழில்மகளோ! காலைக்கதிரவனின் வாலைச் சிறுமகளோ! பொன்வண்ண மேனிபோல் பூத்த இளங்கரும்போ! என் கண்கள் காணும் ஓர் இனபப் பெருங்கனவோ! என் சொல்வேன் அவளழகை! அழகாய்க் குளிக்கின்றாள்! மெள்ள எழுந்து மிக நடந்தேன். அவள் குளிக்கும்; பள்ளத்தின் ஓரம் படிந்த பெரும் பாறை. பெரும்பாறைபின் நின்றேன்; பின் கண்டேன்; அவளை நான் முன்கண்டேனில்லை. முகமுங் கண்டேனில்லை.

தன்னந்தனியே தான்குளிக்கும் அம்மயிலாள், பொன்னின் நிறந்தாள்! பூத்த இளங்கொம்பு! பின்னல் அவள் முதுகிற் பின்னிக் கதைபேசும். சின்ன இளவிரல்கள் சிவந்து அந்நீர்கிழிக்கும். பின்னே திரும்பியதும் பேரிடியாய்க் கீச்சிட்டாள் என்னைக்கண்டே.பயந்து எழுந்தாள்; துடித்திட்டாள்.

அஞ்சாதே என்றேன்; அறிந்தாள். பயம் நீங்கிக் கெஞ்சும்அக் கண்ணோடு கீழுதட்டை உள்ளிழுத்தாள். ஆடைநெகிழ்ந்து அரைக்கோலம் ஆனஅவள் மேடைக்கு வந்தாள் மெல்ல எனைப்பார்த்தாள்.

குளிரழகுப் பூஞ்சோலை! கூவாக் குயிற் குஞ்சு! தளிரின் ஒளியழகு! தாவாப் பசும் பொன்மான்! கிளியின் இளம்பிள்ளை! கீழ் விழுந்த வெண்ணிலவு! ஆடும் அவள் கண்ணோடு ஆடும்என் இருகண்கள். கூடுங்கள் என்றென்னைக் கூவாளோ எனநினைத்தேன். யார்நீங்கள் என்றஒரு யாழின் ஒலிஉதிர்த்தாள்.

தேன்மலையின் சாரலுக்கு மான்பிடிக்க வந்தவன் நான். ஏன் நீங்கள் இங்குதுள்ளும் மானோஎன்றேமொழிந்தேன். மானோ! மரத் தேனோ! மாளாத செவ்வானோ! ஏனோ முறைக்கின்றீர்? என்றாள் மிகச் சிரித்தேன். சிரித்தாள் அவளுந்தான் செங்கரத்தைத் தொட்டேன்நான் விரித்த இளம்பூவில் விருந்தாகத் தேன்கேட்டேன்.

பார்த்தவுடன் தொட்டுவிடல் தான்தமிழர் பண்பா? பயம்அச்சம் வேண்டாமா? வெட்கம் வேண்டாமா? வேர்த்துவிட்ட என்னுடலை ஏன்துடைத்து விட்டீர்? வெப்பத்தை ஏன் அளித்து முத்தந்தருகின்றீர்? சேர்த்தணைக்கும் உங்களன்புச் செம்மார்பில் என்றன், செவ்விளநீர்க் காய்இரண்டும் குழிபறிக்குமன்றோ? மார்பப்பா! இறுக்காதே! மூச்சுவரவில்லை! மதனா! தேன் அளிக்கின்றீர் குடிக்கின்றேன் என்றாள்.

என்னழகுப் பொற்காடு! எழுந்த இளஞ்சோலை! கன்னல் அடிச்சாறு! கதலி இளங்குருத்து! மின்னும் ஒளிவானம்! மெலிந்த எழிற்கொம்பு! தின்னத் தெவிட்டாத தேனமுது என்றெல்லாம் பின்னும்அந் நேரத்தில் பேரழகை வர்ணித்தேன்.

கண்கள் சிவக்கக் கனிவாய் சிவப்பிழக்கப், பெண்மான் எழுந்தாள், பிறைநுதலை நீவினாள். மூடி அடங்காத மொட்டுகளைத் தன் வெண்மை, ஆடையால் மூடி அழகளித்தாள்; நாளையும், வாருங்கள் என்றாள்என் வாய் திறந்து பேசுதற்குள், ஓடினாள் சாரலுக்குள் ஓர்நொடி தான் காணோமே!

என்னழகுப் பொற்காடு! எழுந்த இளஞ்சோலை! கன்னல் அடிச்சாறு! கதலி இளங்குருத்து! மின்னும் ஒளிவானம்! மெலிந்த எழிற்கொம்பு! தின்னத் தெவிட்டாத தேனமுது என்றெல்லாம், பின்னுங்கால் சொன்னதைப் பெரிதெண்ணித் திரும்பி, என் வீடு வந்தேன்; இருந்தேன் மறுநாளும். பொன்மாதை எண்ணிப் புறப்பட்டேன், வந்தேன்.

இன்றும் அவள்வந்தாள் குளித்தாள் எனைக் கண்டாள். குன்றம் எதிரொலிக்கக் கூவி அலறினாள். வளர்ந்த கரும்புலி போல் வந்தான் ஒரு வீரன். தளர்ந்தஅப் பொற்பாவை தன்னை அணைத்திட்டான். அவன் ஏதே சொன்னாள்; அவன்கேட்டான். ஆகாகா! ஏய்த்தாள் எனநினைத்தேன் ஏங்கி மனம் நொந்தேன்.

வீரன் எதிர்வந்தான் விசிட்டாள் அப்பாவை. வில்லை எடுத்தான் விரைவாய்க் குறி பார்த்தான். வீரனைக் கண்டஞ்சி விலகாது நின்றேன் நான். ஆரேநேற் றெனைத்தழுவி அணைத்த அழகுப்பெண், தூரத்தில் நின்று வெறித்து எனைப்பார்த்தாள்

கண்களை மூடினேன்; களித்த முதல் நாளின் எண்ணங்கள் என்முன்னே எங்கும் நடம்புரியும். என்னழகுப் பொற்காடு! எழுந்த இளஞ்சோலை! கன்னல் அடிச்சாறு! கதலி இளங்குருத்து! மின்னும் ஒளிவானம்! மெலிந்த எழிற்கொம்பு! தின்னததெவிட்டாத தேனமுது என்றெல்லாம் சொன்னேன் அவனா இச்சோதனையைச் செய்கின்றான்?

என்னழகுப் பொற்காடு இருண்ட புலிக்காடா? எழுந்த இளஞ்சோலை எரிந்த கரிவீடா? கன்னல் அடிச்சாறு கசப்பெட்டிக் கனிச்சாறா? கதலி இளங்குருத்து காய்ந்த அடிமரமா? மின்னும் ஒளிவானம் மிரட்டும் பனிவானா? மெலிந்த எழிற்கொம்பு மிகும் நச்சுக் கரும்பாம்பா? தின்னத் தெவிட்டாத தேனமுது எப்போதும், உண்ண முடியாத உயர் நஞ்சா? நேற்றுண்ட, தேனிதழின் ஊற்றெங்கே? தித்திப்பெங்கே? தெவிட்டாத என் அமுதச் செந்தேனெங்கே? மானினத்தின் எழில் எங்கே? மயக்கம் எங்கே? மருள்கின்ற கண்ணழகின் மையல் எங்கே? அடடா! எல்லாம்பொய்யே! பொய்யே! அந்த அழகியை நேற் றனுபவித்த தெல்லாம் பொய்யே! மடவாரை நம்பாதே என்று சொல்லும் மக்கள்சொல் பலித்ததடா! வெட்கக் கேடே!

கண்ணை விழித்தேன் கயவன் குறிபார்த்தான், அம்பென்றன் நெஞ்சில், அணையும் எனநினைத்தேன் அழகுப்பொன் செங்கரங்கள் ஆடினஎன் நெஞ்சில். கண்கவரும் பட்டுப் போல் கட்டழகி தான்நின்றாள். விழித்தேன் மிகப் பார்த்தேன் வியந்தேன் இவள் என்னை நேற்றணைத்த நிலத்து நீள்விழியாள் தேன் விழியாள்.

தூரத்தில் பார்த்தேன் அவளும் இவள் போன்றாள்! ஓர்அச்சில் வார்த்த ஒருமை இருபெண்கள்!! அவள் நின்றாள் அவன் நின்றான்; அருகில் என் பெடை நின்றாள். என்னழகி வீரனிடம் ஏதோ மொழிந்தாள். முன்கோபக்காரனாய் விழித்தஅவ் வீரனோ, மெல்லச் சிரித்தான்பின் தன் இணையைத் தொட்டு முன்சென்றான் அவன்துணைவி பின் சென்றாள். மறைந்தார்.

என்சொக்கத் தங்கத்தை யாரென்றேன்; அவள் அன்புப், பொன்தங்கை என்றாள்; புரிந்தேன் மிகச்சிரித்தேன். மின்னல் இடையாள்என் மேல்சாய்ந்தாள் பொன்மேனி, பட்டால் எவர்வீணாய்ப் பாட்டிசைப்பார் அந்நேரம்?

தேனிதழின் ஊற்றிங்கே! தித்திப்பிங்கே! தெவிட்டாத என்அமுதச் செந்தேனிங்கே! மருள்கின்ற கண்ணழகின் மையல் இங்கே! அடடா! எல் லாம்மெய்யே! மெய்யே! இந்த, அழகியைநேற் றனுபவித்த தெல்லாம் மெய்யே! மடவாரை நம்பாதே என்று சொல்லும் மக்கள்சொல் தோற்றதடா! இன்பம் இன்டம!!!

# மறதி

**இராசாமணி அண்ணி**
**இராசம்மாள்**

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. மறதி மனிதற்கு மட்டும் இல்லாவிட்டால் வாழ்வு நரகமாகிவிடும். எப்படி என்கிறீர்களா? ஒரு பெண் முதற் குழந்தைக்குத் தாயாகிறாள். அது தெய்வாதீனமாக இறந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவள் மனம் என்ன பாடுபடும்? துடிப்பாள்; துவளுவாள். அதன் ஆசைக் கனவுகள் எல்லாம் அழிந்து விட்டதாகக் குமுறுவாள். நெஞ்சம் பொருமுவாள். அந்த துக்கத்திலே தன்னை மறந்து புருஷனையும் மறந்தாளானால் வீட்டின் நிலைமை என்ன ஆகும்? அத்தனையும் பாழ் ஆகும். கொஞ்சம் கொஞ்சமாக மறந்தாளாகில் அவளின் பழைய இனப வாழவு திரும்பும. மீண்டும் தாய்மைப் பேறு பெறுவாள். அவள் இன்பம் காண்பாள். இது மறதியின் மகிமை அன்றோ;

தோல்விதான் வெற்றிக்கு அடிப்படை என்கிறார்கள். ஒருவன் ஏதோ பரீட்சைத் தாளில் நன்றாக எழுதாதபடியால தோல்வியடைகிறான். அத்தோடு அவன் தாடி வளர்த்து எல்லாமே பாழாகி விட்டதே போல் கிழிந்த உடையும் அழுக்கு மேனியுமாகக் காட்சியளிக்கிறான். அவன் வருங்கால வாழ்வு என்ன ஆகும்? அத்தனையும் கானில் காய்ந்த நிலவாகும். ஆக அவனுக்கு மறதிமட்டும் வந்துவிட்டால் தோலவியை மறந்து மீண்டும் பழைய உருவெடுப்பான. மீண்டுவிடும், இனி அவனுக்கு மாண்ட வாழ்வெல்லாம். பிறகு நினைப்பான். இவை மறதியின வாழ்வன்றோ என்று;

ஒருவரிடம் கட்டாயம் அவனை இன்றிரவே தீர்த்துக் கட்டி விடுகிறேன் என்று சபதம் கூறி இருப்பான். அன்றிரவு மறதியின் மகிமையால் அந்த பொல்லாத நினைவு ஓடியிருக்கும். இல்லாவிட்டால் அவன் அன்று தொலைந்திருப்பான். எதன் நிமித்தம் தொலைக்க வேண்டும் என்று நினைத்தானோ அந்த விஷயம் பொய்யாகப் போயிருந்தால் நல்லவேளை மறதியின் மாணபினால் இன்றோ அவன் நிலைத்தான். இல்லையெனில் அவன் வாழவு என்னால் அன்றோ வீழ்ந்திருக்தும் என்று வெம்புவான்?

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அன்பின் இரு கரைகளென விளங்க ஆணும் பெண்ணும். ஏதோ ஒரு ஒத்த.உணர்ச்சியால் ஒன்று சேருகிறார்கள். விதியோ; இல்லை மதியின் விழைவாலோ பிரிகிறார்கள், உடனே அதுதான் காதல் என்றும் அவன் இல்லாமல் இவள் இல்லை என்றும் இவள் இல்லாமல் அவன் இல்லையென்று நினைக்கிறார்கள். ஏன் அந்த அன்பைத் தாயன்பு சகோதர அன்பு இவை போன்று எண்ணக்கூடாது? அப்படி நினைக்க உதவுவது இம்மறதியன்றோ. அதனால் எத்தனை காலத்திற்கு வற்றாத ஆறுபோல் அன்பு பெருகிக்கொண்டிருக்கும்?

தீபாவளி தினத்தன்று புது மாப்பிள்ளைக்கு ஏகப்பட்ட பலகாரங்கள் செய்து வைக்கிறார்கள். ஆனால், பரிமாறும் பொழுது பார்த்து அந்தப் பாழும் மறதி வந்து விடுகிறது. மருமகனுக்குச் செய்ததை மகனுக்குக்கூட கொடுக்கமாட்டாளாம் மாமியார். இந்தப் பழமொழி இம் மறதியால் வந்த விழையன்றோ; கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்தார்களாம். அதுபோல், மறதி எத்தனை நல்லதல்ல என்பதையும் பார்க்கலாம்?

குறிப்பிட்ட நாளில் ஒரு இடத்திற்கு வருவதாக நாம் வாக்குக் கொடுக்கிறோம். ஆனால், அம்மறதியின் விளைவால், போகாமலிருக்கிறோம். நாம் வருவதாகக் கூறிய இடத்தில் எத்தனையோ தடபுடலான வரவேற்புகள் காத்திருக்கும். அத்தனையும் பாழ்தான். வாங்கிய கடனை அடைக்க வேண்டிய தேதி மறந்துவிட்டால், வீடோ, நிலமோ, நகைகளோ ஏலத்திற்குப் போய் விடும், ஏலத்தில் போன முதலை நினைத்து நினைத்து ஏங்கி ஏங்கிச் சாக வேண்டியதுதான்.

பாஷைகள கற்பதற்கு ஒன்றே ஒன்று மட்டும்தான் மிகவும் முக்கியம் அது என்னவென்றால் மறதியின்மை. இதுமட்டும் இருந்து விட்டால் ஒரு பாஷை என்ன? ஒன்பது பாஷைகள்கூட படித்து விடலாம். காமிராவில் இயற்கைக் காட்சிகளை எல்லாம் படம் பிடித்தவன் கழுவுவதற்காக பிலிமை எடுக்கத் திறந்தானும் காமிராவை. அந்தோ. மறதியினால் பிலிம் போடாமலே, அத்தனையும் தட்டி விட்டிருக்கிறான்.

வீட்டைப் பூட்டிச் சாவியை எடுக்காமல் சாவித் துவாரத்திலே வைத்து விட்டு வெளியூருக்குப் போய் விட்டு வந்தார்களாம். திரும்பி வந்து பார்க்கும் பொழுது கதவுகூட இல்லையாம்.

மகபபேறு நிலைய மருத்துவச்சி கொப்புள் கொடியைக் கட்டாமல் கொப்புள் கொடியை அறுத்தாளாம். இரண்டு மூன்று நிமிடங்களுக்கெல்லாம் குழந்தை இறந்து விட்டதாம். குழந்தையின் கொப்பூளைக்கட்ட மறந்ததால் வந்த வினையன்றோ என்று அதிர்ச்சியடைந்து பைத்தியமானாளாம் ஒருத்தி.

மெயிலைப் பிடித்து விட வேண்டும் என்று ஓட்டமாக ஓடினான், டிக்கெட் எடுக்கும் இடத்தை அடைந்த பின் பர்சை எடுத்து வர மறந்ததை அறிந்தான். இதற்குள் வண்டியும் வந்து நின்று விட்டுப் போய் விட்டது. எப்படிப் போவான் இனி?

மறதியைப் பற்றி ஊரில் இருப்பவர்களுக்கு எல்லாம், சொல்லி விட்டேனே. ஆனால் பார்த்தீர்களா என் மறதியை?

ஒரு கட்டுரையை அனுப்புவதற்கு வாங்கி வைத்த தபால் தலையை எங்கோ அல்லவா மறதியாக வைத்துவிட்டேன். அது மட்டுமா அந்தப் பத்திரிகை காரியாலய விலாசத்தையுமல்லவா மறதியாக எங்கோ போட்டு விட்டேன். தபால்காரன் முத்திரையிடப் பார்த்த பொழுது, தபால் தலையும், விலாசமும் இல்லாதபடியால் மறதியாக எங்காவது தூக்கிப் போட்டு விடுவானோ? அப்படியே அலுவலகம் வரை போய் விட்டால் அச்சுக்கோர்க்காமல் மறதியாக இதை விட்டு வைப்பாரோ?

என்னவோ போங்கள். எல்லாம் ஒரே மறதியாக இருக்கிறது. இக் கட்டுரையை நீங்கள் படித்து முடித்து விட்டீர்கள் என்றால் ஆசிரியர் மறக்காமல் இதைப் போட்டு விட்டார்கள் என்று நினைத்து கொள்ளுங்கள். இல்லையென்றால் இதுவும் மறதியின் மகிமை என்று வைத்துக் கொள்ளுங்கள்.



நகைச்சுவை
"ஏன் பத்திரிகையைப் போட்டு அப்படிக் கிழிக்கிறீர்கள் ?"
"காலையிலே இது முகத்திலே முழிச்சுட்டுப் போயி கால் ஒடிஞ்சு வந்திருக்கேனே! தெரியலையா ?"
"செவிட்டுப் பயலை யார்டா ஊர்வலத்திலே விட்டது? வாழ்க ன்னு ஒழிகங்கிறுன்! ஒழிகன்னு வாழ்கங்கிறுன்!"
"யார் சார் ஒரு ரூபாய் நோட்டுக் கொடுத்து சில்லரை வாங்க மறந்தது ?"
"நான் தான் சார் !"
"சில்லரைதான் அப்பவே கொடுத்துட்டேனே ! இந்தக் கிழிஞ்ச நோட்டுக்கு வேறே கொடு! இல்லாட்டிக் கீழே இறங்கு !"
"அடியேய் ! புடலங்காயப் பச்சடி இன்னிக்கு சக்கை மாதிரி இருந்தது. ஒரு வழியாய்த் தின்னுட்டேன் !"
"தின்னு முழுங்கிட்டீங்களா ? முருங்கக்காய்ப் பச்சடியில்லே வைத்திருந்தேன் !"
"ஏண்டி குழந்தையை வாள் வாள்ன்னு கத்தவிடறே?"
"உங்க சமத்துப்பிள்ளை வாள் வாள்ன்னு கத்தாமே காள் காள்ன்னு கத்தும்?"
"கடற்கரையிலே அழகா அருமையா மினுமினுன்னு ஒரு பொம்மை பார்த்தோமுல்லே? அதை இன்னிக்கு வாங்கலாமா ?"
"அழகா ! அருமையா ! மினுமினுன்னு! ஓகோ! இன்னிக்கும் கடற்கரைக்கா? மாட்டேன் சினிமாவுக்குத்தான் போகணும் !"



# அமெரிக்காவும்

(சுப. துரைஅரசன்)

1. மனிதனாகப் பிறந்தவர்கள் யாவரும் ஒரே நிறையுடையவர்கள் என்பதையும், சட்டத்தின் முன்னால் இவர்கள் அனைவரும் ஒன்றுதான் என்பதையும் நாங்கள் நம்புகின்றோம்.

எண்ணத்தை வெளியிடும் சுதந்திரமும், விரும்பிய கடவுளை வழிபடும் உரிமையும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

கல்வி, உடல்நலம், வீட்டு வசதி, வேலை வாய்ப்பு இவைகளில் மனிதர்களாகப் பிறந்த அனைவருக்கும் சம உரிமை உண்டு என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தின் நடைமுறையில் தன் எண்ணத்தை வெளியிடும் வாய்ப்பும், மக்களுடைய எண்ணங்களை மதித்து நடப்பதே அரசாங்கத்தின் கடமை என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். இதுவே நம்முடைய ஜனநாயகத்தில் தனி மனிதனுடைய உரிமைகளாகும்.

குடியரசுத் தலைவர் ட்ருமன் : செப். 28. 1948

2. மேற்கத்திய நாடுகளில் பொதுவாக நிலங்கள் எல்லாம் அவற்றைச் சாகுபடி செய்பவர்களுக்கே உரிமையாக இருக்கின்றன. இவ்வாறு தனித்தனியாக சாகுபடி செய்பவர்கள் தங்களுக்குள் கூட்டாகச் சேர்ந்து கூட்டுப் பண்ணை முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்னும் சட்டம் அதற்குக் குறுக்கே நிற்பதில்லை. அதாவது, அவர்கள் தங்கள் விருப்பம் போல எந்த வகையான சாகுபடியும் செய்வதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது.

திருமதி எடித். ஸாம்ஸன், ஐக்கிய நாட்டு மன்றத்தில் அமெரிக்க பிரதிநிதி அக். 1. 1950

3. நம்முடைய நாட்டில் பொதுமக்களுடைய நன்மையையும், உலக சமாதானத்தையுமே குறிக்கோளாகக் கொண்டு இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

எர்ல் ஜெ. மெக்கார்தி, அமெரிக்கக் கல்வித் தலைமை அதிகாரி, அக். 26. 1950

4. மதத்தில் தலையிடுவதைப் போன்ற எந்தச் சட்டத்தையும் அமெரிக்கக் காங்கிரஸ் என்றும் செய்யாது.

அமெரிக்க அரசியல் சட்ட திருத்தம்...1.

மத சம்பந்தமாக பூரண உரிமை இருத்தல் வேண்டும் என்பதையும், அரசியல் உரிமையைவிட இந்த உரிமை மனித சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத ஒன்று என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

தியேடர் ரூஸ்வெல்ட்

5. ஒரு தனிப்பட்ட முதலாளி தன்னுடைய வேலையாட்களைத் தன்னுடைய விருப்பம் போல் வேலையிலிருந்து விலக்குவதோ, அல்லது தொழிலாளியின் விருப்பத்திற்கு மாறாக அவரை வற்புறுத்தி வேலை வாங்குவதோ குற்றமாகும்.

அமெரிக்கத் தொழிற் சட்டம். பிரிவு. ‘ முதலாளி தொழிலாளி உறவு ’

தொழிலாளர்கள் கூட்டு சேர்ந்து சங்கம் அமைப்பதற்கும், தங்களுடைய உரிமைகளை எடுத்துப் பேசுவதற்கு பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுப்பதற்கும் உரிமை உண்டு.

தேசீயத் தொழிற் சட்டத் திருத்தம்

6. நாம் ஆதிக்கத்தை விரும்புபவர்களல்ல. பிறர் நாட்டைக் கவருவதற்கு நாம் ஒரு போதும் நம்முடைய பலத்தை பயன்படுத்தப் போவதில்லை. யுத்தத்தால் வரும் தீங்கையும், தொல்லைகளையும் நன்கு உணர்ந்த நாம், பெரிய யுத்தத்தை தவிர்ப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் செய்தே தீருவோம்.

குடியரசுத் தலைவர் ட்ருமன். டிச 15, 1950

வரலாற்றுக் காலந்தொட்டு இன்று வரை உலக அமைதிதான் நம்முடைய நோக்கமாக இருந்து வந்திருக்கின்றது. நீதியைக் காப்பதற்கும், அமைதியை வளர்ப்பதற்கும் நாம் நேர்மையான முறையில் பாடுபட்டு வருகிறோம். எனவேதான் இவற்றைக் காப்பதற்காக நாம் சில போது போருக்குக்கூட தயாராகி விடுகிறோம்.

அரசியல் செயலாளர் டீன் அக்கீஸன், நவ 29, 1950

7. அமெரிக்காவில் 1700 நாளிதழ்களும், 10,000 வார இதழ்களும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் உலகச் செய்திகளைத் தம்முடைய விருப்பம் போல் வெளியிடுவதற்கும், அவற்றைத் தம் எண்ணம் போல் விமர்சிப்பதற்கும் உரிமை பெற்றவை. இவை சில போது உணர்ச்சி வசத்தால் பொது நன்மையைப் பாதிக்கக் கிளம்பினால்தான்... சிறையோ, அல்லது பொது மக்களுடைய கண்டனமோ குறுக்கிடுகின்றது. சிறையைவிட பொதுமக்கள் கண்டனத்தைத்தான் நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்.

திருமதி எப். டி. ரூஸ்வெல்ட், அக் 24. 1947.

பத்திரிகைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற எந்தச் சட்டத்தையும் காங்கிரஸ் செய்யாது.

அமெரிக்க அரசியல் திட்டம்—திருத்தம் 1

8. அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும், அவன் நகரத்தில் வாழ்ந்தாலும், கிராமத்தில் வாழ்ந்தாலும் அல்லது அமெரிக்காவின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவனுக்கு ஓட்டுரிமை உண்டு.

அமெரிக்க சட்டம்.

இனம், நிறம், அல்லது முன்னாள் நிலைமை இவற்றை வைத்துக்கொண்டு எந்த குடிமகனுக்கும் ஓட்டுரிமை மறுக்கின்ற அதிகாரம் அமெரிக்க அரசாங்கத்திற்கே கூட கிடையாது.

அமெரிக்க அரசியல் திட்டம். திருத்தம் 15.

9. வானொலியில் பேசுகின்ற உரிமை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் உரிய ஒன்று. பொதுமக்கள் நன்மைக்கு பாடுபடுகின்ற எவருக்கும் வானொலியில் பேசுகின்ற இந்த உரிமை மறுக்கப்படலாகாது.

அமெரிக்க செய்தித்துறை உத்திரவு-ஜன 16. 1941

10. பெரும்பாலும் நம்முடைய திரைப்படங்கள் குறைந்தது ஒரு இரண்டு மணி நேரங்களையாவது இன்பமாகக் கழிப்பதற்குரிய நிலையிலேயே எடுக்கப்படுகின்றன. நம்முடைய படங்கள் சில போது மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தாலும், அவற்றின் முக்கிய நோக்கம் மக்களைக் களிப்பூட்டுவதே.

எரிக் ஜான்ஸ்டன், நவ, 1947.

11. இசை என்பது நாகரீகத்தை வளர்க்கக் கூடிய சர்வதேச மொழி. ஒரு நாட்டு இசையை மற்ற நாட்டினர் இசைக்கும் போது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நெருங்கி வந்து விடுகின்றனர். எனவே, இந்த இரு நாடுகளுக்கும் இடையே இருந்த நெருக்கடியும் படிப்படியாக குறைந்து விடுகிறது.

குடியரசுத் தலைவர் ட்ருமன்—அக். 1946.

12. இன்பகரமான புது மனிதனை உருவாக்க எண்ணச் சுதந்திரத்தை அளிக்கவல்ல புத்தகச் சுதந்திரம் மிகவும் இன்றியமையாத ஒன்று.

அமெரிக்க அரசாங்கத் துணைச் செயலாளர் வில்லியம் பெண்டன், மார்ச். 25, 1948

# இரசியாவும்

1. கூட்டுறவு முறையில்தான் மனிதன் சுதந்திரமாகவும், வளமாக இன்பமாகவும் வாழ்வதற்கான வாய்ப்புக்களோடும் வாழ முடியும்.

காரல் மார்க்ஸ்—"ஜெர்மானிய எண்ணம்."

சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியை பாதிக்காத நிலையில்தான் மனித உரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்படும்.

சிவில் கோர்ட் ஆர். எஸ். எப். எஸ். ஆர். கட்டுரை—1.

2. நிலம், கனிப் பொருள்கள், தண்ணீர், காடு, தொழிற்சாலை, நகரங்களிலும், தொழிற்சாலைப் பகுதிகளிலும் உள்ள வீடுகள் ஆகிய அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. அதாவது, நாட்டு மக்கள் அனைவருக்குமே பொது சொத்து.

இரசிய அரசியல் திட்டம். கட்டுரை—1.

நிலத்தை அரசாங்க உரிமையாக்குவது என்பதுதான் புரட்சியின்போது நாம் மக்களுக்கு அளித்த மிக முக்கியமான வாக்குறுதி என்பதை நாம் மறந்துவிடலாகாது.

"இரசிய அரசாங்கச் சட்டம்" விஸன்ஸ்கி.

3. தொழிலாளர்து சர்வாதிகாரத்தை உண்டாக்குவதற்கு ஏற்ற கருவியாகத்தான் பள்ளிக்கூடங்கள் பயன்பட வேண்டும்.

—லெனின் "தொகுப்பு"

கல்வி என்ற ஆயுதத்தின் பயன், அது யாரிடம் இருக்கின்றது, யாரை நோக்கி எய்யப்படுகிறது என்பதைப் பொருத்துத்தான் இருக்கிறது

—ஸ்டாலின்.

4. மதம் என்பது விஞ்ஞான வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதால், கட்சி அதனிடம் நடுநிலைமை வகிக்க முடியாது. விஞ்ஞானத்தை வளர்ப்பதற்காக நிச்சயமாக மதத்தை எதிர்த்து அது பிரச்சாரம் செய்துதான் தீரும்.

—"லெனினிஸம்" ஸ்டாலின்.

5. ஒரு தொழிலாளி தானே கூட்டுறவுச் சங்கத்திலிருந்தோ, அல்லது பொது நிலையம் ஒன்றிலிருந்தோ விலகிக் கொள்ளுவதோ, அல்லது ஒரு நிலையத்திலிருந்து மற்றொன்றிற்குத்தானே மாறிக்கொள்வதோ தடுக்கப்பட்டிருக்கின்றது.

இரசியச் சட்டம். 26 ஜூன் 1940.

தகுந்த காரணம் இல்லாது 20 நிமிடங்கள் தாமதித்து வரும் ஒரு தொழிலாளிக்கு, 6 மாதங்கள் வரை அதிகப்படி வேலையும், ஊதியத்தில் 25 சதவீதம் வரை வெட்டும் தண்டனையாக அளிக்கலாம்.

—இரசியக் குற்றச் சட்டம்.

6. நாம் ஒருநாட்டில் மட்டுமல்லாது, உலகத்திலேயே ஒரு புதுவகையான அமைப்பில், ஏகாதிபத்திய நாடுகளுக்கு அருகருகே வாழ்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது. இறுதியில் இந்த இருவேறு அமைப்புகளில் ஏதாவது ஒன்றுதான் நிலைத்து நிற்க முடியும். எனவே, முதலாளித்துவ நாடுகளுக்கும், சோவியத் குடியரசிற்கும் போர் மூள்வது தவிர்க்க இயலாத ஒன்று

—லெனின் "சேகரிப்புத் திரட்டு."

முதலாளித்துவமும், பொதுவுடைமையும் தனித்தனியாக உள்ளவரையில் நாம் அமைதியாக வாழ்ந்துவிட முடியாது. இறுதியில் அந்த இரண்டில் ஏதாவது ஒன்றுதான் வெற்றிக்கொடி நாட்டப்போகின்றது. அந்த மரண கீதம் ஒருக்கால் சோவியத் குடியரசின் மீதும் பாடப்படலாம், அல்லது உலகத்திலுள்ள முதலாளித்துவ நாடுகளின் மீதும் பாடப்படலாம்.

—லெனின். "சேகரிப்புத் திரட்டு"

7. நாம் பணக்காரர்களுக்கு பத்திரிகை சுதந்திரம் அளிக்கவில்லைதான். எதிர்க்கட்சிக்காரர்களான மென்ஷ்விக்குகளுக்கும், சமுதாய எதிர்ப் புரட்சியாளர்களுக்கும் பத்திரிகை சுதந்திரம் அளிக்கவில்லைதான். ஆனால், இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? நாம் எல்லா வகுப்பினரையும் இன்பத்தில் ஆழ்த்துவதாகவும், எல்லா வகுப்பினர்க்கும் சுதந்திரம் அளிப்பதாகவும் எப்போதும் உறுதி அளித்ததில்லையே.

—"லெனினிஸம்" ஸ்டாலின்.

நம்முடைய பத்திரிகைகளின் ஒவ்வொரு வரியும், பொதுவுடைமை அச்சுக் கூடங்களில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும், தொழிலாளர்களை பொதுவுடைமையில் பயிற்றுவிப்பதற்கும், மனித உணர்வில் இருந்தே முதலாளித்துவத்தை வேரறுப்பதற்குமே பயன்படும்.

பக்கம் 1. பிராவ்டா தலையங்கம்.

8. வாழ்க்கை முறையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்ற இடத்தில்தான் பல்வேறு வகையான கட்சிகளும், கட்சிகளமைக்கின்ற உரிமைகளும் மக்களுக்குத் தேவைப்படுகின்றது. ஆனால், இரசிய நாட்டில் ஒரே ஒரு இனம்தான் வாழ்வதால் அங்கு இருப்பதும் ஒரே ஒரு கட்சியான பொதுவுடைமைக் கட்சிதான்.

—ஸ்டாலின், இரசிய அரசியல் சட்ட விளக்கம்—1936.

9. விரிந்து பரந்து கிடக்கும் இரசிய நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிக்கக்கூடிய வானொலியை பயன்படுத்தி இரசிய மக்களுக்கு மார்க்ஸ்—லெனின்—ஸ்டாலின் ஆகியோரின் கருத்துக்களைப் பரப்ப வேண்டும்.

"யூ. எஸ். எஸ். ஆர். பேசுகிறது" நம். 2. 1935.

வானொலி என்பது கட்சிக் கொள்கைகளை மிக விரைவாகவும், மிகப் பெரும்பாலான மக்களுக்கும் ஒரே மயத்தில் எடுத்துச் சொல்லக்கூடிய பெரிய ஒலிபெருக்கி.

"யூ. எஸ். எஸ். ஆர். பேசுகிறது" நம். 2. 1935.

10. திரை என்பது குடியானவர்களுக்கு பொது உடைமையையும், அரசியல் நாகரீகம் ஆகியவற்றையும் விளக்க வல்ல மிகப் பெரியதும், விலை மதிப்பற்றதுமான கருவியாகும்.

—ஸ்டாலின். "லெனின், ஸ்டாலின், கட்சி ஆகியோர் சினிமாவைப்பற்றி."

11. இசை என்பது கூட்டமாகச் சேர்ந்து பாடி கூட்டுமனப்பான்மையை வளர்க்கும் விதத்திலேயே இருத்தல் வேண்டும்.

மாஸ்கோ இசைவாணர் மாநாடு. பிப். 1948.

12. நாங்கள் போர் முழக்கத்தை தடை செய்ய மாட்டோம். எங்களுடைய வழியில் வருவோர் ஆயுதம் ஏந்தி போராட்டங்களில் வெற்றி பெறுவதற்காக நாங்கள் எப்பொழுதும் போரைப் பற்றித்தான் எழுதுவோம்,

"மாஸ்கோ இலக்கிய ஏடு" 1946,



# நவீன அறுபத்திமூவர்

சீ.ரா.

முன்னிருந்த நாயன்மார்கள் முழுமுதற் கடவுளின் திருவருளைப் பெறுவதற்காக நாளும் தேவாரப் பண்பாடி செந்தமிழையும், செந்தழல் மேனியானை அரனின் புகழையும் வளர்த்தார்கள். ஆனால் இன்றிருக்கும் நாயன்மார்களோ நாளும் மனித சமுதாயத்தின் நலன் வளர்ப்பதையே தம் வாழ்க்கை நெறியாகக் கொண்ட நல்லறிஞர்கள்.

இவர்களிலே மக்கள் பணியையே மகேசனின் பணியாகச்செய்து மகிழும் அரசியல் தலைவர்கள் உண்டு. புத்தனைப்போல செல்வக் குடும்பத்திலே பிறந்தும் பிறருடைய நல்வாழ்விற்காக தம் வாழ்வையே கருக்கிக்கொண்ட விஞ்ஞான வித்தகர்கள் உண்டு. கரிகாலனைப்போல போரில் புலியாகி மாற்றார் படை நடுங்கவைக்கும் மாவீரர்கள் உண்டு. கம்பனும் காளிதாசனும்கூடத் தோற்றுப் பின் வாங்கவல்ல கவிவாணர்கள் உண்டு. "காதற்ற ஊசியும் கடைவழிக்கு வாராதுகாண்" என்று நிலையாமைபேசி மக்களை நிலைகுலைய வைக்காது, புதுப் புதுத் தொழில்களை மிக்க புகழுடன் முடிக்கும் தொழில் மன்னர்கள் உண்டு. ஒரே வார்த்தையில் கூறுவதென்றால் இன்றைய உலகின் உயர்விற்கு வித்திட்ட உத்தமர்கள் அனைவரும் இதில் உண்டு.

இதோ நான் எழுதுகிறேனே இந்தப் பேனா, அது விஞ்ஞானம் நமக்களித்த புதுமைதான். நான் எழுதுவதற்குப் பயன்படுகின்றனவே இந்தத் தாள்கள், அவையும் இந்த நவீன நாயன்மார்களிலே முன்னோர் ஒருவர் அளித்ததுதான். நான் எழுதியதை இவ்வளவு அழகாக அச்சியற்றித் தந்திருக்கிறதே அந்த அச்சு இயற்றும் இயந்திரம் அதுவும் இவர்களைப்போன்ற ஒரு மனித தெய்வம் செய்து தந்ததுதான்.

காலையில் எழுந்தது முதல் கண்ணயரும் நேரம்வரையில் நமக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் இந்த நவீன நாயன்மார்களைச் சுற்றித்தான் சுழன்று கொண்டிருக்கிறது. நமக்கு இந்த வளமான வாழ்வளித்த இந்த நல்லவர்களை—நானிலத்தின் காவலர்களை நாம் மறந்தால் நன்றி மறந்தவர்களாவோம். நன்றி மறந்த எவரும்—எந்தச் சமுதாயமும் வளர்ந்ததுமில்லை, வாழ்ந்ததுமில்லை.

எனவேதான் ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்த ஆண்டவனுடனேயே வைத்து எண்ணப்பட வேண்டிய இந்த அறிவரசர்களுக்கு—பல்துறை மேதைகளுக்கு நாம் சிரம் தாழ்த்துகின்றோம். என்நன்றி கொன்றாலும் செய்நன்றி கொல்லாத தமிழர் சமுதாயத்தின் இதயம் கனிந்த நன்றியை இருகரம் கூப்பித் தெரிவித்துக்கொள்ளுகிறோம். வாழ்க இவர்கள்! வளர்க இவர்தம் பொதுத்தொண்டு!



ஆங்கில அரசியான இரண்டாம் எலிஸபெத் இன்றைய உலகின் மிகப்பெரிய பதவியான காமன் வெல்த் தலைமைப் பதவியை மிகத் திறமையாக நிர்வகித்து வரும்




உலகாளப் பிறந்த அரசிகள் உண்டு. ஆனால் உலகாள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதுமையும், புரட்சியும் நிறைந்த பெண்ணரசி நம்முடைய திருமதி பண்டாரநாயகா ஒருவர் தான்.



ஐக்கியநாட்டு மன்றத்தின் தலைமைப் பதவியையேற்று அதனைத் திறம்பட நடத்திய உலகத்தின் தலை சிறந்த பெண்ணரசியும், இந்தியாவின் தியாகப் பரம்பரையான நேருவின் குடும்பத்தில் உதித்தவ



ஆசிய ஜோதியான ஜவகர்லால் நேரு இந்தியப் பிரதமர் மட்டுமல்லாது, உலகத்தில் எங்கு அறம் குறைந்து மறம் தலைதூக்குகிறதோ அங்கெல்லாம் அமைதியின் காவலராகக் காட்சிதரும் உலகத்தின் வழிகாட்டியுமாவார்.



வானத்தில் பிறந்துவிட்ட நிலவையே அடைய முயலும் விஞ்ஞான வித்தகர்கள் நிறைந்த சோவியத் ரஷ்யாவையே ஆளும் நிகிதா. எஸ். குருச்சேவ் இவர்.




அமெரிக்கக் குடியரசுத் தலைவரான டுவைட். டி. ஐசனோவர் இந்த உலகை அழிக்கவும், ஆக்கவும் சக்தி படைத்த உலகத்தலைவராவார்.



முன்னாள் ஆங்கிலப் பிரதமரான சர். வின்ஸ்டன் சர்ச்சில் உலக வரலாற்றில் தன்னுடைய பெயரைப் பொன்னெழுத்துக்களிலே பொறித்துக்கொண்ட ராஜதந்திரியாவார்.



இந்தியாவிற்கு விடுதலை அளித்த உத்தமரும், உலகத்தின் தலைசிறந்த தொழிலாளர் தலைவருமான முன்னாள் ஆங்கிலப் பிரதமர் அட்லி இவர்.



வியாசெஸ்லாவ் எம். மாலடோவ் முன்பு பதவியில் இருந்து இறக்கப்பட்டாலும், தற்போது புதுப்பதவி தரப்பட்டுள்ள உலக அரசியல் தெரிந்த ஒரே ஒரு ரஷ்யர்.



சீரழிந்து கிடந்த சீனத்தைச் சிவப்பாக்கி டாலர் மழைபொழியும் அமெரிக்காவையே எதிர்த்து நிற்கும் ஆற்றல் படைத்த வல்லரசாக மாற்றிய மா-சே-துங் இவர்.



இருண்ட கண்டமாகக் கிடந்த ஆப்பிரிக்காவின் சுடர்விளக்காகத் தோன்றி, அடிமைப்பட்டுக் கிடந்த அந்த நாட்டின் அடிமைத் தளை அறுத்த சுதந்திர வீரரான கானாவின் பிரதமர் நக்ருமா இவர்.



பணம் படைத்த சான்றோரும் கலை வளர்க்கும் காவலருமான இவர், தென்னகம் இன்னியற் கலைகளான இசை, ஓவியம், நடனம் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்கு வித்திட்ட முதல்வர்களில் ஒருவரான மைசூர் மகாராஜா.




நோயாளி போன்று நலிவுற்றுக் கிடந்த மத்தியகிழக்கை, போராடும் வீரனை மாற்றி அமைத்து, கலமோடும் சூயஸைக் கைப்பற்றிப் புகழ் அடைந்த கமால் அப்துல் நாஸர் இவர்.



ஐக்கிய நாட்டு மன்றத்தின் தலைவரான டாஜ் ஹாமர்சோல்ட்ஜ் உலக அமைதியைக் குலைக்கவரும் தடைக்கற்களை எல்லாம் தன்னுடைய தடந்தோள்களால் தகர்த்தெறிந்து உலக அமைதியின் காவலராகத் திகழ்ந்து வருகிறார்.



இரும்பு மனிதனான ஸ்டாலினை எதிர்த்து மடிந்தவர்கள் நிறைந்த இந்த உலகில், ஸ்டாலினை எதிர்த்தும் வளர்ந்த ஒரே ஒரு வீரத்தலைவரான யூகோஸ்லாவியத் தலைவர் டிட்டோ இவர்.



சாணக்கியனும் தோற்றுப் பின் வாங்கவல்ல அரசியல் ஞானியான இவர், உலகிற்கே வழிகாட்டவல்ல தற்கால மாதகிய வல்லி ராஜாஜி.



தென்னாட்டு மக்களை சிந்திக்கச் செய்த சமுதாய சீர்திருத்தவாதியான இந்நாட்டுச் சாக்ரடீஸ் பெரியார் ஈ. வே. ரா.



ராஜாஜியின் துணிவும், கரிபால்டியின் செயலாற்றலும் படைத்த இந்தியாவின் தற்கால பட்டேலான தமிழக முதலமைச்சர் காமராஜர்.



தென்னாட்டு இளைஞர் சமுதாயத்தின் இணையற்ற தலைவரும், உலகத்தின் தலைசிறந்த பேச்சாளருமான இந்நாட்டு இங்கர்சால் அறிஞர் அண்ணா.



கிளர்ச்சிப் பாதையில் இருந்து அமைதிப் பாதைக்கு இந்தியப் பொதுவுடமைக் கட்சியைத் திருப்பிய ஜனநாயக வீரரான நம்பூதிரிபாட் இவர்.



அமெரிக்கத் தலைமைத் தளபதியான ஜெனரல் ஆல்பிரட் எம். குருந்தர் இவர். டாலர் வலை வீசிப் பின்னப்பட்ட நேட்டோப் படைகள் இவருடைய ஆணை கேட்டு நடக்க எப்போதும் காத்துக் கிடக்கின்றன.



சென்ற உலக யுத்தத்தின் பொழுது நாஜிப்படைகளை முறியடித்தவரும், தற்போது ரஷ்ய மண்ணைக் காக்கும் மாவீரருமான மார்ஷல் ஜியார்ஜி கே. சூகாவ் இவர்



உலகத்தில் உள்ள தலைசிறந்த படைத்தலைவர்கள் மூவரில் ஒருவரும், இந்தியத் துணைக்கண்டத்தின் தானைத்தலைவருமான மாவீரர் திம்மையா இவர்.



டேனிஸ்காரரான நீல்ஸ்போர் அணுசக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்திய சமாதான வீரர்.




அணுவைப் போருக்குப் பயன்படுத்துவோர் நிறைந்த உலகில் அணுசக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்த முயலும் இந்திய விஞ்ஞான மேதை கே. எஸ். கிருஷ்ணன்.




தென்னிந்தியரான சர் சி. வி. ராமன் இன்றைய பௌதிக உலகத்திற்கே அடிப்படையான ஒளிப் புதுமையைக் கண்டு பிடித்தவர்.



ஒரே செடியில் ஒன்பது வகையான பழங்களைத் தயார் செய்த விஞ்ஞான வித்தகரும், தமிழகம் தந்த அதிசய மனிதருமான ஜி. டி. நாயுடு இவர்தான்.



இந்திய விஞ்ஞானிகளில் முது கிழவரும், உலக விஞ்ஞானிகளின் வழிகாட்டியுமான இவர்தான் நானிலம் போற்றும் நம்முடைய விஸ்வேஸ்வரய்யா.




உலகத்தின் மிகப் பெரிய மதக் குழுவினரான ரோமன் கத்தோலிக்கரின் தலைவரான பன்னிரெண்டாம் போப் பயஸ் இவர்.



தருமம் தழைக்கவும், அறநெறி வளர்க்கவும் பாடுபட்டு வரும் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் அகில உலகும் தொழுது பின்பற்ற வேண்டிய தத்துவ ஞானியுமாவார்.



குறள்நெறி தழைக்கவும், தமிழ் மொழி வளரவும் பாடுபட்டு வரும் குன்றக்குடி அடிகளார், பிறநாட்டு நல்லறிஞரும் ஏற்றிப் போற்ற வல்ல தமிழ்ச் சான்றோராவார்.



அமெரிக்கரான எர்னஸ்ட் ஹெமிங்வே இன்றைய உலகின் தலை சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராவார்.




அமெரிக்காவில் பிறந்த ஆங்கிலேயரான டி. எஸ். எலியட் இக்காலத் தலைமுறையின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர்.



சீனத்தில் வாழ்ந்த அமெரிக்க மாதான பேர்ல்பக் சீனர்களின் வாழ்க்கையோடு இயைந்த நாவல்கள் இயற்றுவதில் இணையற்றவர்.



அமெரிக்க வாழ்வை உள்ளது உள்ளவாறே படம் பிடித்துக் காட்டவல்ல அகில உலகப்புகழ் படைத்த ஸ்டீன்பெக்.




ஆங்கில நாடு தந்த பெரியாரான இவர்தான் இன்றைய உலகின் ஈடும் இணையுமற்ற வரலாற்றுப் பேராசிரியரான அர்னல்ட் ஜே. டாயின்பீ.




அமெரிக்கரான வால்ட் டிஸ்னி கேலிச் சித்திரத்தில் தனக்கென ஒரு தனி வழி வகுத்துக்கொண்டு உலகையே வியப்புக் கடலில் ஆழ்த்திய வியன்கலைஞர்.



ஜப்பானியரான தைகான் யோகோயாமா இன்றைய உலகின் தலைசிறந்த ஓவியர்களிலே ஒருவர்.



பிரஞ்சு மருத்துவ மேதையான ஆல்பிரட் ஸ்விட்சர் மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகவே வாழுகின்ற சிந்தனைச் சிற்பியாவார்.



ஆங்கில நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரும், புகழ் வாய்ந்த தத்துவ மேதையுமான பெட்ரண்ட் ரஸலின் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் வைரமணிகளைக் கொண்டு இழைக்கப்பட வேண்டியவை.



இந்தியக் குடியரசின் துணைத் தலைவரும், புகழ்வாய்ந்த அறிவாளருமான சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், தென்னாடு உலகிற்குத் தந்த தத்துவ ஞானியாவார்.



இந்தியாவிலேயே தலைசிறந்த மருத்துவரும், உலகப்புகழ் படைத்த ஆங்கிலப் பேச்சாளருமான தென்னிந்திய அறிவுலக மேதை ஏ. லெட்சுமணசாமி முதலியார்.



இந்தியாவில் உள்ள நேர்மையாளர்களில் ஒருவரும், உலகத்தில் உள்ள தலைசிறந்த பொருளியல் அறிஞர்கள் ஐவரில் ஒருவருமான தேஷ்முக்.



இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரியும், உலக நாடுகளின் அவைக்கே தலைமை தாங்குமளவிற்கு அறிவும், ஆற்றலும் படைத்த சான்றோருமான இவர்தான் கல்வி வளர்த்த பெரியாரான சர். சி. பி. ராமசாமி ஐயர்.




தென்னாட்டில் பிறந்து, பெண்கள் விடுதலைப் பண் பாடி நின்று, பார் புகழும் சமுதாயத் தொண்டாற்றி உயர்ந்த முத்துலக்ஷ்மி ரெட்டி.




இந்தியாவிலேயே மிகச் சிறந்ததும், ஏராளமான விற்பனையுடையதுமான தமிழ் வார இதழான ஆனந்தவிகடனின் ஆசிரியரான மேதை எஸ். எஸ். வாசன் இவர்



தென்னாட்டு ராக்பெல்லர் என்று போற்றப்படும், தொழிலரசரான இவர் உலகத்தில் உள்ள பெருஞ்செல்வர் வரிசையில் வைத்து எண்ணப்படும் அனந்தராமகிருஷ்ணன்.



அமெரிக்காவில் இருந்து வெளிவரும், திசை முழுதும் இசை பரப்பிய 'ஏடான ரீடர்ஸ் டைஜஸ்டின்' ஆசிரியரான டி விட் வாலஸ் இவர்தான்.



உலகையே ஆட்டிப்படைக்கும் அரசியல் ஏடான 'டைம்' கலை ஏடான 'லைப்' ஆகியவற்றை வெளியிடும் ஹென்ரி ஆர். லூசி இவர்.



அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'நியூயார்க் டைம்ஸை' வெளியிடும் உலகப் புகழ் படைத்த பத்திரிகை மேதை ஆர்தர் எச். ஸ்சல்ஸ் பர்கர் இவர்தான்.



ஹாலிவுட்டின் முடிசூடா மன்னனும், உலகத்தின் தலைசிறந்த நடிகவேந்தனுமான இந்த மார்லன் பிராண்டோ நடிப்பதற்கு என்றே பிறந்துள்ள கலைஞன். ஊரும் உலகும் ஏற்றிப் போற்றும் நல்ல நடிகன்.




அமெரிக்காவில் உள்ள ஜெனரல் மோட்டார்ஸின் தலைவரான ஹார்லோ எச். கர்ட்டிஸ் உலகத்தில் உள்ள மிகப்பெரிய தனியார் துறை முதலாளியாவார்.



முதலாளிகள் நிறைந்த அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய தொழிலாளர் தலைவரான ஜியார்ஜ் மீனே இவர்.



இந்தியத் திரையுலகிற்கு அகில உலகப் புகழ் தேடித்தந்த ஒரே ஒரு கலைமேதையான நம்முடைய சாந்தாராம் இவர்.



இந்தியாவிற்குப் புகழ்மாலையை கொண்டுவந்து குவிக்கவல்லவரு உலகத்தின் தலை சிறந்த நடி வேந்தனுமான சிவாஜி கணேசன



பரதக்கலையை பார் புகழும் ஒன்றாக மாற்றி அமைத்து, அந்த மென்மைக் கலையான நாட்டியக் கலையை மேதினியில் எல்லாம் தழைக்கச் செய்த சாராபாய் மிருணாளினி.




தொழில்வளம் குறைந்துள்ள தெற்கில் பிறந்தாலும், தொழில் வளம்மிகுந்த வடக்கையே வென்று குவித்துவிட்ட செயலரசர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் இவர்.



இங்காட்டுப்போர்டு என்று எண்ணத்தக்க தென்னாட்டுத் தொழில் மன்னனான டி.வி. எஸ். வழி வந்த தொழிலரசர் ராஜம் இவர்.



இந்தியாவிலேயே மிகப்பெரிய அச்சக உரிமையாளரும் மூவண்ண வேலைகளுக்குப் பெய போன பிரஸாத் பிராஸஸிற்கு உரி மையாளருமான நாகிரெட்டியா இவர்.



அகில இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளரும், எடுத்ததெல்லாம் பொன்னாகும் வெற்றிப்பட வெளியீட்டாளருமான திரை மன்னன் ஏவி. எம்.




இளைஞராக இருந்தாலும், விளையாட்டு உலகில் புகழ்க்கொடி நாட்டி வரும் இந்தத் தென்னாட்டுக்காரர்தான் அகில உலக டென்னிஸ் வீரரான கிருஷ்ணன்.



கிரிக்கெட் விளையாட்டைத் தோற்றுவித்த ஆங்கிலேயரே கண்டு வியக்கும்வண்ணம் அந்த விளையாட்டில் உலகப் புகழ் படைத்த பிராட்மென்



நகைச்சுவைக்கு என்றே பிறந் தன்னுடைய கருத்துள்ள நகை சுவையால் உலகத்தவரி உள்ளம் கவர்ந்த நடிக மேதை சார்லி சாப்ளின்.


Nalli CHINNASAMI CHETTY
SILK CLOTH & PIECE-GOODS MERCHANTS
T. GOVINDARAJULU NAIDU
T. GOVINDARAJULU NAIDU
Chellarams
PENS
GEM & CO
PEN SPECIALIST
FOUNT. PENS REPAIRED & SERVICED
PHOT
BBAP




VEECUMSEES






CHEMISTS APPAH & CO. DRUGGISTS
APPAH & Co.




THE BANGALORE WOOLLEN COTTON &
SILK MILLS PRODUCTS


S.U.S.DAVEY SONS
Opticians








RADHA SILK EMPORIUM


G.D.SEKHAR & CO.







GENERAL PAPERS Ltd


A.K.A COFFEE



THE BANGALORE PHOTO STORES
G.K.VALE & Co




ZUBEIDA
CHANDRAS
ZUBEIDA


KATHAYEE SILK EMPORIUM











ARYA BHAVAN








USHA



# சென்னைக்கு வந்த சென்னப்பன்

தூரத்து பார்வே பச்சேன்னு நம்ம பக்கத்திலே சும்மாவாசொல்றுங்க. அப்படியே ஆயிரத்துக்கு ஆயிரம் நெசம்னு என் அனுபவத்லே நல்லா புரிஞ்சு போச்சு...

என்னடா போன வருஷம்தான் பட்டணத்தை பார்க்க போனோம்—இந்த வருஷமாவது ஒரு சீமை, கீமை, சிங்கப்பூரு அப்படி இப்படின்னு நெனெச்சாகூட ஒட்டலேயே... அதுக்கெல்லாம் பொறந்தா தானே அனுபவிக்க...! அதுனலே இந்த வருஷமும் பட்டணத்தை பார்க்கவே கெளம்பினேன்... ஹூம் என்ன இருந்தாலும் அவ்வளவு சொரத்து இல்லேதான்...!

ஆன ஒண்ணு...! பட்டணத்தே பாக்க பாகக...பாக்காத எடமும் பல இருந்துகிட்டேதான் இருந்துச்சு. ஏன்ன, கடைசியா நான் ஊருக்கு கெளம்புறப்போ... பட்டணத்தாரே ஒருத்தரு சொன்னரு "நான் பத்து வருஷமா இங்கே இருக்கேன் இன்னும் நான் பார்க்காத எடம் பல இருக்க நீ பரவாயில்லியே"ன்னு ஆச்சரியபட்டாரு. அது போலே போன வருஷத்திலே எது எதுடா பெரிய பெரிய கட்டடம்னு அது மேலேயே கண்ணு வைச்சு ஒரே ஆவலா சுத்து சுத்துண்ணு சுத்தினேன்... அப்போ நட்டமா நிமுந்த கழுத்து ஒரு மாசம் கழிச்சுதான் கொஞசம் தளந்துச்சு. அதுனலேயே இருந்த பெரிய பெரிய கடைண்ணு பெருசா சொல்றுங்களே அதுகளேயெல்லாம் நான் பார்க்கலே... அதான், னலே இப்போ அதுகளெல்லாம் எங்கே இருக்குண்ணு நான் சுத்திகிட்டே போறப்போ... சைனு பஜாருங்குருங்களே..! அது வந்துச்சு..! அவ்வளவுதான்... நைஞ உசாருங்கிற நெனப்பும் ஒடனே வர..! சட்டு புட்டுண்ணு சட்டே பையே லபக்கண்ணு புடிசசி பாக்றபபோ... அந்த கையே, எந்த கையோ பலமா தட்டுச்சு.. அப்புறம் நான் சும்மாவாயிருபடேன்..! ஒரு சுத்து சுத்துனேன் பாரு..! எதுக்கேயிருந்த ஐகோர்ட்டு சும்மாவா இருந்துச்சு... அது என் கண்ணுலேல்லே சுததுச்சு.. ஒடபெல்லாம் ஒரே துடிதுடிப்பு.. 150 வயசுக்கபபுறம் ஆக போற நடுக்கம் மாதிரி...! கண்ணு ஏன் சரியா தெரியுதுண்னேன்...! அப்போ எங்க ஆயா கிட்டேயிருந்தா ஒரு ஆறு மாசத்துக்கில்லே உரபோரு காச்சி கொடுததிருப்பாங்க.. ஏன்ன அந்த நடுக்கம தீர ரெண்டு நிமிஷமில்லே ரெண்டு மணியில்லே ஆயி போசசு...! அது வரைக்கும் ஏன் எதுக்கே டோறவன் எவன இருந்தாதான் என்க்கென்ன..... சட்டே செஞ்சேன்ன...? என்னேல்லே எல்லாரும் தட்டி கொடுத்துட்டுப் போனுனுங்க!

அப்புறம் தான் மொதல்லே தட்டுன கையி எந்த கைபின்னு நெதானிச்சு பார்த்து அப்படியே அசந்து போயிட்டேன்! ஏன்ன...எங்கேயோ பார்த்தாப்லே இருக்கேண்ணு நெனச்ச ஒடனே அவரு காம்ரா அவரே காட்டி கொடுத்துடிச்சி... 'கலை' புத்தக போட்டா பிடிக்கிறவரு மூர்த்தி..."என்னய்யா! போன வருஷம் மாதிரி இந்த வருஷமும் மாட்டிக்கிட்டியா!"ன்னு அவரு கேட்டது என் காதுலே ஏன் உழுவுது...! இன்னும்தான்...! அதுக்குள்ளே அவரே "தம்பி ஒனக்கு ஒடம்புக்கு என்ன ஆஸ்பத்திரிக்கு போகலாமா...?"ன்னரே பார்க்கணும்...! நான் எங்கே ஆஸ்பத்திரிக்கு வர்றது... ஆஸ்பத்திரில்லே இங்கே வரணும்னு சொல்றதுக்குள்ளே அவரு சிரிப்பா சிரிச்சுப்புட்டாரு...

அப்புறம் எல்லாத்தேயும் சமாளிச்சுகிட்டு சைன டெ ரெண்டே ஊத்திகிட்டு, ரெண்டு பேருமா கடெத்தெருவே சுத்த கெளம்பினோம். என்னமோ, பிராட்வே, அரமனே தெரு வந்துச்சு, மொதலாவது, ரெண்டாவது பீச்சு வந்துச்சு, சென்டரலு, மோரு மாருகட்டு, மவுண்டு ரோடு, திருபள்ளிக்கேணி, மைலாபூரு, மாம்பழம் நொங்குபாக்கம்னு சுத்து சுத்துண்ணு மூணு நாளா போட்டா மூர்த்தியும நானும் சலெக்காமே சுத்துனோம். அவரும் எல்லாத்தேயும் போட்டா புடிச்சாரு—ஆன இன்னும் செல முக்கியமான வியாபாரிகளெல்லாம போட்டா புடிக்கிறதுகுள்ளே, அந்த போட்டா மூர்த்தி எங்கேயோ ஒரு கல்யாணத்தே போட்டா புடிக்க என்னே உட்டுட்டு ஓடியே போயிட்டாரு... அப்புறம் மழையும் சும்மா ஊத்து ஊத்துண்ணு ஊத்த ஆரம்பிச்சுடுச்சு...!

சரி இனிமே ஒரு நாளக்கி இங்கே இருநதாகூட ஒடம்பு தாங்காதுண்ணு... ஒடனே பயணபட்டுட்டேன் ஊருக்கு ...ஆன, தூரத்து பார்வேதான் பச்சே... கிட்டெ போன எல்லாம் பழுப்புதான்...! பெரிய பெரிய கடெயிங்கெ எல்லாம் எங்கேயுந்தான் இருக்கு, அங்கே மட்டும் என்ன ஒசத்திண்ணு சொல்றவங்க சொல்லிட்டு போகட்டும்! ஆன பட்டணத்துலே பணம்தான் பஞ்சா பறக்குது. அடேயப்பா...! வியாபாரமுன உங்க ஊட்டு, எங்க ஊட்டு வியாபாரமா? ஓட்டாஞ் சில்லுலேயிருந்து ஓமபொடி வரே எல்லாம் ஒரே ஓட்டம்தான்...! என்ன தான இருந்தாகூட பட்டணத்துப் பகட்டே பகட்டுதான்...!!



செனப்பன்

# என்ன விநோதம் பார்



1



2



3



4



5



6



7



8



9

1. உலகில் ஆணுக்குத் தாடி வளர்வதுதான் இயற்கை. ஆனால் இங்கோ ஆரணங்கு ஒருத்திக்கே அரை அடி நீளமுள்ள குறுந்தாடி வளர்ந்திருக்கிறது.
2. உலகத்திலேயே மிகக்குறைவான உயரமுடைய சித்திரக்குள்ளன் இவன்.
3. ஈஜின் சாண்டோ தன் பணியாட்கள் அத்தனைரையும் ஒரு பலகையில் ஏற்றிவைத்து, அவர்கள் அனைவரையுமே முதுகில் தாங்கிய வீரர்.
4. நயாகரா நீர்வீழ்ச்சியின் மீது இவ்வாறு ஒரு சிறிய கயிற்றின்மீது ஒருவரை முதுகின்மீது தூக்கிக்கொண்டு நடந்தார் இவர்.
. வர்ஜீனியாவைச் சேர்ந்த ஒருவர் ஒரு மரத்தை அறுதபொழுது அதில் இயற்கையே இவ்வாறு ஒரு மனிதத் தலையை வரைந்திருந்தது.
6) இந்த மாபீச மலைகளான கம்பதிகளின் மொத்த எடை மட்டும் 1148 பவுண்டுகள் இருந்தன.
7. ஒட்டிப் பிறந்து ஒன்றாகவே வாழ்ந்த சயாம் இரட்டையர்கள்.
8. அமெரிக்காவைச் சேர்ந்த இந்தச் சிவப்பு இந்தியர் தன் கால்களாலேயே குறி தவறாமல் அம்பு எய்யும் வீரராக விளங்கினர்.
9. யார்க்ஷயரைச் சேர்ந்த இந்த அசையும் குன்றான பிரான்ஸிஸ் சிங்ளேர் எனபவள்தான் இதுவரை உலகத்தில் வாழ்ந்த அதிக எடை உள்ள பெண்ணரசி.








# சிகரெட்டை கையில் வைத்திருக்கும் முறையிலிருந்தும், அவர்களின் குணத்தை அறியலாம்

இப்படிப்பட்ட முறையையுடையவர்களின் செயல்கள் பொதிமணலில் செருகிய கம்பைப் போன்றிருக்கும். மேலும், இவர்கள் திறமை சாலிகளாக விளங்குவது வெகுதுர்பலம்.

இம்மாதிரியான பழக்கத்திலுள்ளவர்கள் மதி நுடப வியாபார தந்திரமுடையவர்களாக விளங்குவார்கள். அன்றியும் வெகுகாலையிலே எழுந்து கடந்த நாளைய வியாபாரத்தைவிட இன்றைய வியாபாரம் தான் மிகவும் முக்கிய மெனக் கருதுவார்கள்.

இம்மாதிரி முறையானவர்கள் எப்பொழுதும் நெருப்புடன் விளையாடுபவர்களாக இருப்பார்கள். இவர்களின் போக்கு யாருக்கும் அஞ்சா வகையில் மிகவும் பயங்கரமாக இருக்கும். சூதாட்டங்களில் போக்கிரிகளாக விளங்குவார்கள்.







இவர்களுடன் நட்பு கொள்ளுவதும், வியாபார முறையில் ஈடுபடுவதும்கூட மிகவும் கஷ்டமானது. மேலும் இவர்களின் செயல்கள் ஒவ்வொன்றும் குழந்தைத் தன்மையை ஒத்திருக்கும்.

இவர்கள் எக்காரியத்தையும் சாதிக்க வல்ல திறமையாளர்கள். மேலும் மற்றவர்களுக்கு பாரமாக என்றுமே வாழவும் மாட்டார்கள்.

இவர்கள் மிகவும் திறமை பொருந்தியவர்களாகவும், புத்தி கூர்மை மிக்கவர்களாகவும் நடந்துகொள்வார்கள். மேலும் எந்த செயலில் ஈடுபட்டாலும், அதைப்பற்றி முன் கூட்டியே ஆலோசிக்காமல் அதில் ஈடுபட மாட்டார்கள்.

---

இம்மாதிரியான பழக்கமுடையவர்கள் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர்கள். சூதுவாது அற்ற யோக்கியர்கள்.

இவர்கள் நேர்மை மிக்க நல்ல குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று அர்த்தம். மேலும் இவர்கள் எல்லோருடனும் சகஜமாகப் பழகி அவர்களின் நல்லெண்ணத்தில் நீங்காது இடம் பெறுவர்.

இவர்களுடைய நடவடிக்கைகள் தைரிய மிக்கதாயும், நேரிடையானதாயும் இருக்கும். பிறரின் பயமுறுத்தலைக்கண்டு சிறிதும் கவலை கொள்ளமாட்டார்கள். மேலும் இவர்களுடன் பழகுவோர் அடக்கத்தைக் கையாள வேண்டியது அவசியம்.










## நீரும் - நீள்விழியாளும்

அழகில் அவன் காமன். வீரத்திலே களிறெறிந்து பெயரவல்ல காளை. அவனுடைய வேலிற்கு இரையான வேழங்களும், வாளிற்குப் பலியான மறவர்களும் ஏராளம். அவனுடைய பெயரைக் கேட்டதுமே மல்லாதி மல்லர்களும் மலைத்து நின்றனர் களத்திலே. ஆனால், அத்தகைய வீராதி வீரனே இந்த மயிலனையாளிடம் மலைத்து விட்டான். போரில் புலியாக இருந்த அவனே இந்தப் புன்சிரிப்புக்காரியிடம் மட்டும் எலியாக மாறிவிட்டான்.

இத்தனைக்கும் பால் போன்ற இன்சொல்லும், பவளம் போன்ற செந்துவர் வாயும், சேல் போன்று பிறழும் திருநெடுங்கண்ணும் படைத்த இந்தப் பாவை நல்லாள் பார்ப்பதற்கு நீரைப் போன்ற மென்மை உடையவள்தான். என்றாலும் தீயைப் போன்ற வலிமையுடைய அந்த ஆணழகனே இவளுடைய தளராத இளமைக்குச் சாய்ந்து விட்டான்.

களத்தில் வென்றாலும் கன்னிக்குத் தோற்ற இந்தக் கட்டழகனின் கதையைத்தான் பொய்யாநாவில் கபிலர், புலவர் போற்றும் குறுந்தொகையில்

“சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே”

என்று எண்ண எண்ணத் திகட்டாத எழிற் கவிதையாக்கியுள்ளார்.

— ராதா

## விலகிய மார்பும்-சினம் மிக்கநோக்கும்

சோலை ஒன்றில் தன்னுடைய நெஞ்சம் கவர்ந்த அந்தக் கள்வன் வாரானே வந்து ஆரமுயங்கானே? என்று தவித்துக்கொண்டிருந்த அந்த முழுநிலா முகத்தாள், அவன் வந்ததுமே மயிலென ஆடி மானெனத் துள்ளி ஓடிச் சென்று தன்னுடைய உருண்டு திரண்டு எழுந்த பருவப் பொலிவுகள் இரண்டும் அவனுடைய மார்பில், வேல் எனப்பாய தென்றலிற்கும் இடைவெளி இல்லாதவாறு ஆரத்தழுவி நின்றாள்.

"போருக்குப் போகிறேன் விடை கொடு கண்ணே" என்று இந்தச் சந்தன மேனியாளிடம் பிரியாவிடை பெறவந்த அவனே, இவளுடைய காதல் வேகத்தைக் கண்டு இவளை விட்டு எவ்வாறு பிரிவது என்று தவித்தான். அந்தத் தவிப்பால் தழுவலில் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டு, கூரிய அவளுடைய குவிமுலைகளில் ஒன்று அவனுடைய விழுப்புண்பட்ட மார்புகளில் இருந்து சற்று விலகி நின்றது.

இந்தச் சிறிய பிரிவைக் கூடத் தாங்க இயலாத அந்தகொடியனையாள் தன்னுடைய இமைகளையே வில்லாகவும், பார்வை அம்புகளையே கணைகளாகவும் பூட்டி அவனைச் சினந்து நோக்கினாள். 'இந்தத் தளர்ச்சியையே தாங்க இயலாத இவள் தான் பிரிந்தால் பொறுப்பாளோ' என்று கருதிய தலைவன் போரையும் மறந்து அவளுடைய பொன்னடிகளிலேயே வீழ்ந்து கிடந்தான்.

கூறுவது நாமல்ல




"சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றேசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்-மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது"

- என்று தண்டியலங்காரத்தில் வரும் சொல்லோவியம் இது.




## ஊடலும் -
## கூடலு

மாலை வருவேன் என்று
கூறிச் சென்ற தலைவன்
மறுநாள் காலைதான் வ
தான். முதல் நாள் இரவ
முழுவதும் பிறமக
ஒருத்தியோடு அவன்
வெண்ணிலவின் பயன்
துய்த்தான் என்பதை
அவனுடைய கலைந்
உடையாலும், சோர்ந்
முகத்தாலும் குறிப்பா
உணர்ந்து கொண்ட
தலைவி அவனுடன் ஊ
ளுள். சினத்தால் மூன்று
பிறையைப் போன்ற அ
ளுடைய அழகிய நெற்
வியர்த்தது. கொவ்வை
கனி போன்ற வாய் துடி
தது. கஞ்சமலர் போன்
கண்கள் சிவந்தன. கா
தள் மலர் போன்ற விர
களும், முல்லைக் கொ
போன்ற உடலும் நடு
கின. உடல் நடுங்குவ
தால் சொக்கட்டான் கா
களைப் போன்ற அ
ளுடைய அழகிய கொ
கைகளும் அசைந்தன.

இதனைக் கண்டதுபோ
அந்தக் காலைக்கு கூடலின்
போது தழுவும் வேக
தால் அவளுடைய நெற்
வியர்ப்பதும், இன்பத்தின்
எல்லையில் வாய் குழ
வதும், உணர்ச்சியின்
வேகத்தில் கண் சிவ
பதும், பின்னிப் பிணையு
பொழுது உடல் சிலிர்
பதும், அதனுல் அவளு
டைய கொங்கைகள்
அசைவதுந்தான் நினை
விற்கு வருகிறது.

வளவாண்மதர் நெடுங்
கண் மானுன அவளிட
ஊடலிலும், கூடலிலும் ஒ
திருக்கும் இந்தப் பண்பு
களை அவன் எடுத்தியம்
பவே, மானம்பார்த்த பூமி
போன்று அவனுடைய
வருகைக்காகக் காத்து
கிடந்த அவளுக்கு ஊடல்
மறந்து கூடலில் விருப்பு
தோன்றியது. ஊடலில்
தோற்றஅவர்கள் கூடலில்
வென்று நின்றனர். இத
னையே தண்டியலங்காரம்

" திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்
அங்கைத் தளிர் நடுங்குஞ் சொல்லசையும் – கொங்கை
பொருகாலு மூடிப் புடைபெயருங் காலும்
இருகாலு மொக்கு மிவர்க்கு "

— என்ற ஒன்பான் சுவை நிரம்பிய பைந்தமிழ்க் கவிதையாக்கியுள்ளது.

## நினைத்ததும் -
## - நடந்ததும்

இந்த அழகோவியத்தைப் புகைபடிய விட்டு விட்டுப் புதுமலர் நாடும் வண்டுபோல் பொதுமகள் ஒருத்தியை நாடிச்சென்றிருந்தான் தலைவன். தலைவனைப் பிரிந்திருந்த துயரால் 'என்னை இவ்வாறு வாடச்செய்த அவர் வந்தால் நான் என் மணிக்கதவத்தாள் அடைப்பேன். மற்று அவரோடு முகம் கொடுத்தும் பேசேன்' என்று தன் தோழியிடம் வீராப்புப்பேசிக்கொண்டிருந்த இந்த வஞ்சிக்கொடி, பின்னர் ஒருநாள் அவன் வருவது கேட்டதுமே தன் நிலைமறந்தாள். தலைவன் வந்ததும் ஊடவேண்டும் என்று அவளுடைய உள்ளம் எண்ணினாலும் உடல் கூடலிற்காகத் தவித்து நின்றது. எனவே விடுபட்ட கணைபோல விரைந்தோடிச் சென்ற அவள் தலைவனுடைய தோளில் தன் மார்பு பதித்து நின்றாள்.

இதை மறைந்திருந்து பார்த்த தோழி, மறுநாள் 'சூளுரைத்த பெண்ணே நீ யாது செய்தாய்நேற்றே' என்று கண்சிமிட்டி நின்ற பொழுது இந்தக் கிளிப் பேச்சுக்காரியோ தலைவர் வந்ததும்நான் கூடுவதற்கு மாறாக ஊடத்துவங்கினால் பொதுமகள் ஒருத்தியோடு புனலாடி விட்டுவரும் அவர், பிறநாட்டு வேந்தர் ஒருவரைபுறமுதுகிட்டோடச் செய்து விட்டு வருவதாகப் பொய்பேசுகிறார். அரிகதிர் பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை என்றதமிழர் பண்பாட்டை மீறுகிறார். நாம் ஊடுவதால் தானே அவர் இவ்வாறு தமிழ்வரம்பைமீறுகின்றார் என்று இப்போதெல்லாம் நான் அவர் வருவதற்கு முன்பே கூடுவதற்குத்தயாராகி விடுகிறேன் என்று மழலைமொழி பயிற்றித் தமிழ்ப் பெண்மைக்கு மற்றுமோர் பெருமைசேர்த்தாள். இதனையே கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை



"விருந்து எதிர்கொள்ளவும், பொய்ச் சூள் அஞ்சவும்
அரும் பெறல் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கு அவிந்து ஒழியும் என் புலவி"

- என்று அழகிய பண்போவியமாக்கியுள்ளது.



# மாணிக்கங்கள் மண்டிய காடுகள்

## மானிட இயல் அறிஞர் பிலோ இருதயநாத்

குறி தவறாமல் சுடுவதில் புகழ் வாய்ந்த கோத்தர்-பிச்சனுடன் நம்முடைய கட்டுரை ஆசிரியர்

பகல் உச்சி நேரம். பசியோ காதை அடைக்கிறது. தாகம் நாக்கை வரட்டுகிறது. 'தலைக்கு மட்டும் கொஞ்சம் நிழல் கிடைக்குமோ?' என்று நடந்தேன். ஒரே மணற்பாங்கான இடம். ஆங்காங்கே பாறைகள் மட்டும் தெரிகின்றன.

களைப்பாக இருந்ததால் நானும், வழிகாட்டியும் ஒரு பாறையின்மேல் உட்கார்ந்தோம். என்னுடைய களைப்பையும் நான் அடிக்கடி நாக்கைத் தட்டி ஈரப்பசையாக்கிக் கொள்வதையும் கவனித்தார் வழிகாட்டி.

"உங்களுக்கு எப்பொழுதும் இதைப் போல் காடு சுற்றும்வேலை தானா? மனைவி மக்கள் கிடையாதோ? நம்ப ஊர் எதுவோ?" என்று பல கேள்விகளைக் கேட்டார். வழிகாட்டி கேட்ட விதம், விட்ட பெருமூச்சு முதலியவைகளைக் கண்ட எனக்குப் பழைய சிந்தனைகள் நினைவிற்கு வந்தன. அவற்றை அவரிடம் கூறினேன்.

"நெஞ்சை யள்ளும் தஞ்சையிலே பிறந்தார் என் தகப்பனார். நீலகிரியில் பிறந்தாள் என் தாயார். நானோ மைசூரில் பிறந்தேன். நீலகிரியும், மைசூரும் சங்க காலம் முதற்கொண்டே சரித்திர வாயிலாகத் தொடர்புடையவை. அங்ஙனம் நல்ல செந்தமிழ் கமழும் நாட்டில் பிறந்த நான் பலர் உள்ளத்தில் பலவித இனத்தினனாக உருவாக்கப்படுகிறேன். பலர்; என் கட்டுரைகளை வாசித்து விட்டு, அவர்களின் உள்ளத்தில் நான் மேலை நாட்டினனாகவும், பெண்ணாகவும், பாதிரியாகவும், ஜெர்மானியனாகவும், இமயமலைவாசியாகவும், காட்டு ஜாதியானாகவும் என்னைத் தம்முள்ளத்தில் கற்பனை செய்கின்றனர்.

நான் மாணவனாக இருக்கும் போதே உலகில் பல ஜாதி மக்களின் படங்களைப் பத்திரிகையிலிருந்து சேகரித்து, என் ஆல்பத்தில் ஒட்டி வைத்துள்ளேன். அன்று ஒட்டியவைகள் இன்றும் என்னிடம் இருக்கின்றன.

இருபதாண்டுகளுக்கு முன் என் தலையில் பூச்சு வெட்டால், சில சொட்டைகள் விழுந்தன. வாலிபப் பருவத்தில் அவை எனக்கு வேதனையாக இருந்தன. பல வைத்தியர்களிடம் தலையைக் காட்டினேன். வைத்தியர்கள் கேட்ட பணத்தைக் கொடுக்க என் ஏழ்மையான நிலை குறுக்கிட்டது.



இந்தியாவிலேயே மானிட இயலை நேரடியாகக் கண்டறிந்த பிலோ இருதயநாத்

ஒருநாள் குருவிக்காரி என் வீட்டின் எதிரில் உட்கார்ந்திருந்தாள். அவளது அழகிலும், உடற்கட்டிலும், அவள் கண்களின் பார்வையிலும், அவள் கூத்திலும் மையல் கொண்டேன். "நானும் ஒரு குருவிக்காரனாக இல்லையே" என்று வருந்தினேன். அவளும் வருந்தினாள் போலும். என் பார்வையில் இச்சை கொண்டவள் போல், "ஐயா! பசி" என்றாள். என்னுடைய ஆகாரத்தில் பாதியை, குனிந்து அவளுடைய "டின்னில்" கொட்டினேன். நான் குனியும்போது என் தலைச் சொட்டையைக் கண்டு, "சாமி உன் மேல் எனக்கு ஆசை. ஆனால், நீ என் ஜாதி இல்லை. அந்த ஆசைக்குப் பதில் உங்கள் தலைச் சொட்டைக்கு ஒரு மருந்தைத் தருகிறேன். அதைப் போடவும்" என்று கூறிப் பையிலிருந்து ஒரு மருந்தை எடுத்துக் கொடுத்தாள். மூன்று நாட்கள் தடவினேன். சற்றுக் குணம் தெரிந்தது. பத்து நாட்களில் என் தலையில் மயிர்கள் முளைக்க ஆரம்பித்தன. சுமார் இரண்டு மூன்று வாரங்கள் கழித்து, மறுமுறை அவள் வந்தாள். எனக்கு உண்டான சந்தோஷத்தால் ரூபாய்ஐந்தை அவளிடம் நீட்டினேன். அவள் என்னைக் கடித்து விடுபவள் போல் பார்த்தாள். அவள் கடித்திருந்தால்



நீலகிரியில் கோத்தர்களுடன் தங்கியிருந்த பொழுது படத்தின் நடுவில் உள்ள கட்டுரையாசிரியரின் துணைவியாரும் ஒருநாள் கோத்தர்களின் அழகுக் கொண்டையைப் போட்டுக் கொண்டார்.

நான் சந்தோஷமடைந்திருப்பேன். ஆனால்......! "பணத்திற்கு நான் மருந்து கொடுக்கவில்லை. உன் மேல் எனக்கு ஆசை. ஆகையால் தான் மருந்து கொடுத்தேன்." என்று கூறினாள். பணம் வாங்கினால், அது அவளுடைய குல தெய்வத்திற்குப் பிடிக்காதாம்.

அன்று முதல் நான் குருவிக்காரர்களிடம் பழக ஆரம்பித்தேன். அவர்களது குடும்பச் சம்பிரதாயங்கள், பல ரசமான ரகசியச் செய்திகள் முதலியவைகள் எனக்கு மிகவும் இன்பத்தைக் கொடுத்தன. அவர்களது சில செய்திகள் எனக்கு ஆச்சரியமாக இருந்தன. நான் குருவிக்காரர்களிடம் சேகரித்தச் செய்திகளை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்தேன். அதில் சில செய்திகளை உங்களுக்குக் கூறுகிறேன்.

"குருவிக்காரர்கள், "ஏழுபானைப் பொங்கல்" இடுவார்கள். ஒன்றின் மேல் ஒன்றாக ஏழு பானைகளை அடுக்கி, ஒவ்வொன்றிலும் அரிசியும் தண்ணீரும் வைப்பர். அவற்றை அடுப்பின்மேல் வைத்துத் தீயிட்டால் அடிப் பானையிலிருக்கும் தண்ணீரும், அரிசியும் பொங்காது. மேல் பானையிலிருக்கும் அரிசியும், தண்ணீரும் தான் பொங்கி வேக ஆரம்பிக்கும்.

திருமணமானவள்மேல் கணவன் சந்தேகப்பட்டால் பஞ்சாயத்தில் காய்ச்சிய இரும்பை அவள் கையில் எடுத்துப் பஞ்சாயத்து வட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வரவேண்டும். இதைப் போல் பல செய்திகளைக் கேட்டும், பார்த்துமிருக்கிறேன். நகர மக்களுடன் சேர்ந்து வாழுமிவர்களிடமே இவ்வளவு 'நல்லகுணங்களை'யும் வியப்புண்டாகும்படியான செய்திகளையும் காணும் போது, மாக்களுடன் கலந்து மாக்களாக வாழும் காட்டு மக்களின் குணங்கள் எப்படி இருக்குமோ? என்று அடிக்கடி சிந்தனை செய்வதுண்டு.

இந்தச் சிந்தனைகளுடன் ஒரு நாள் பல ஊர் மக்களின் படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதற்குள் என் நண்பர் திரு. விவேகானந்தம் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். என் முகவாட்டத்தைக் கண்டு—கேட்டார்.

என் ஆல்பத்தைக் காண்பித்து, "இந்த ஜாதி மக்களை எல்லாம் என் ஆயுள் காலம் முடிவதற்குள் நான் காணமுடியுமா? என்ற கவலைதான் எனக்குஇருக்கிறது!" என்று கூறினேன். "உங்களுக்கு ஊக்கமிருக்கின்றது. ஆகையால் நீர் கட்டாயம் எல்லா இன மக்களையும், ஊர்களையும் காண்பீர்; வெகு சீக்கிரம் உலகம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செல்வீர்" என்று கூறினார்.

என் நண்பர் வாழ்த்தியதற்கு ஏற்ப என்னுடைய வாழ்நாளில் முதன் முதலில் பழகிய மலைஜாதி மக்கள் கோத்தர்கள்தான். நீலகிரியில் இவர்கள்இல்லங்களில்பழகிய நாட்களே மிக மிக இன்பமான நாளாக நான் கருதியதுண்டு.

கோத்தச்சிகள் போடும் கொண்டைகள் மிக்க அழகுடையன. ஏழு நாட்கள் வரையில் அக்கொண்டை கலைந்து போகாமலிருக்கும். இவர்கள் முடியில்லாமல் புடவை அணிவதே ஒரு தனிக்கலை. பூசாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், சுமார் இரண்டு குண்டு எடையுள்ள உருளையான கல்லை, ஒரு விரலால் தூக்கித் தோளின்மேல் வைத்துப் பின்புறமாகத் தள்ளுகிறார். அக்காட்சியைக் கண்டு, என் உடல் சிலிர்க்கச் செய்தது.

என் மனைவியுடன் அவர்களின் குடிசையில் தங்கி இருந்தபோது, என் மனைவியும் கோத்தச்சிகளின் கொண்டையைப் போட்டுக்கொண்டாள். மற்றொரு நாள் உதகையில் தொதுவர்களின் இல்லத்தில் சில நாட்கள் தங்கி இருந்தேன். அங்ஙனம் தங்கிஇருந்தபோது, ஆண்கள் பந்தயம் பேசிக்கொண்டு, பாய்ந்துவரும் எருமைக்கடாவின் கொம்பைப் பிடித்து நிறுத்துகிறார்கள். அக்காட்சியைக் கண்டதும் எனக்கு மிகவும் அச்சம் ஏற்பட்டது. அந்த விளையாட்டால் பல ஆண்கள் கடாவுக்குப் பலியாவதுமுண்டு.

இங்ஙனம் திருமணத்திற்குப் பின் நான் அடிக்கடி நீலகிரிக்குச் செல்வதுண்டு. 'நீலகிரிஜில்லாவில் தொதுவர்களும் படகர்களும்தான் வாழ்கின்றனர்" என்பது கற்ற பலருடைய எண்ணம். ஆனால் நீலகிரி ஜில்லாவில் பூர்வீகக் குடிமக்கள் சுமார் பதினைந்து பேர்களுக்குமேல் இனவித்தியாசங்களுடன் காட்டிலும் மலையின் உச்சியிலும் வாழ்கின்றனர்.

நீலகிரியிலிருந்து அடிக்கடி தென்னாடு முழுவதும் பல காடுகளுக்குப் பிரயாணம் செய்வதுண்டு. அங்ஙனம் காட்டுப் பிரயாணத்தில் கிடைத்த பல செய்திகள் இவை:

"காடுகளுக்குப் பிரயாணம் செய்வதற்கு முன் பிரயாணத்திற்கு வேண்டிய சுமார் இருநூறு சாமான்களை என் குறிப்புப்படி எடுத்துக்கொள்ளுவேன். தக்க வழி காட்டியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு காட்டினுள் பிரயாணம் செய்யவேண்டும். வழி காட்டியைத் தேர்ந்தெடுப்பதே ஒரு தனிக் கலை. வழிதெரியாத வழிகாட்டியைத் தேர்ந்தெடுத்தால் நமக்குக் காட்டில் பல இன்னல்கள், உண்டாகும் என்பது திண்ணம். காட்டைக் கண்டதும் என்னுடைய கடைசிப் பிரார்த்தனைகளை எல்லாம்சொல்லி விடுவேன். ஏனென்றால் நாங்கள் போய்ச் சேர்வதும், திரும்புவதும் நம்பிக்கை இல்லாததோர் கட்டம். வழிகாட்டி அல்லது சிக்காரி அல்லது காட்டில் அடிக்கடி மரம்வெட்டிப் பழக்கமுள்ளவர்கள் தவிர, புதிதாகத் துப்பாக்கி எடுத்துக் கொண்டு காட்டினுள் அடி எடுத்து வைக்க யாராலும் முடியாது என்பது திண்ணம். யாருடைய உதவியுமில்லாமல் துப்பாக்கியிருந்தால் போதும் என்ற எண்ணம் முற்றிலும் குற்றமே. துப்பாக்கியுடன் காட்டுக்குள் நுழைந்தா

லும் கண்டபடி துப்பாக்கியை உபயோகப்படுத்த முடியாது.

காட்டில் ஒற்றையடிப் பாதையில் நடக்கும்போது, தலைக்குமேல் உள்ள மரக்கிளைகளையும், பாதையின் ஓரங்களிலும் பெரிய பாறைகளின் இடுக்குகளையும் கட்டாயம் கவனித்துத்தான் நடக்கவேண்டும். மேலும், ஒற்றையடிப்பாதையில் நடக்கும்போது, இரு பக்கங்களிலுமுள்ள செடி கொடிகளை வெட்டிப் பாதையில் போட்டுக்கொண்டேதான் போகவேண்டும். ஏனென்றால் நமக்குப்பின்னால் எந்த மிருகமும், நம்மைத் தொடர்ந்து வராது. எவ்வாறெனில் வெட்டிய அச்செடிகளில் மனிதனுடைய வாடை அடிப்பதால், அந்த மிருகங்கள் திரும்பிப் போய்விடும்.

“புதிய தழைகள் ஏன் விழுந்திருக்கின்றன. ஏதோ ஒரு பெரிய மிருகம், நமக்கு முன்னால் போயிருக்கிறது.” என்று கருதி எந்த மிருகமும் நம்மைத் தொடர்ந்து வராது. மற்றச் சிறுசிறு விஷஜந்துக்களும், நாம் வெட்டும் ஓசையில் ஒற்றையடிப் பாதையிலிருந்து விலகி, ஓடிவிடும். இந்த ஏற்பாடுகளுடன் நடப்பது அவசியமில்லை என்பர் சிலர். தண்ணீரில் விழுந்தபின் தான் நீந்தத் தெரிந்திருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை ஒருவன் உணரமுடியும். அதைப்போலவே ஆபத்து ஏற்பட்டபின் தான் இதன் அவசியம் விளங்கும். இதனால் நான் அடைந்த அனுபவ நன்மைகள் பற்பல.

இவ்வளவையும் கவனித்துக் கொண்டு காட்டில் பிரயாணம் செய்ய வேண்டும். ஒற்றையடிப் பாதையில் நாம் நடக்கும் ஓசை தவிர, “சலசலா” வென்று ஓசை கேட்டதும், உடனே எங்கள் வயிறு, “ப்ரூக்ஸ் லெக்ஸ்” சாப்பிட்டதைப் போல் மாறிவிடும். இவ்வளவு வேதனையுடன் நடந்து சென்று, காடர்களின் குடிசைகள் தெரிந்ததும், உடனேயே அவர்களது குடிசைகளை நாடிச் செல்லக்கூடாது. அவர்களுக்குக் குரல் கொடுத்தபின் தான் நாம் செல்ல வேண்டும். ஏனென்றால் சிலர் வீட்டில் வேட்டை நாய்களையும், சண்டையிடும் எருமைகளையும் வளர்ப்பார்கள். அவைகளால் நமக்கு ஆபத்து ஏற்படலாம். இவ்வாறு சிரமத்துடன் சென்ற எனக்கு ஒரு சமயம் ஈரமான தரையின்மேல் காட்டுப்புல்லை விரித்து அதன்மேல் படுக்கும்படியான நிலை ஏற்பட்டது. மறுநாள் காலையில் எனக்குக் கடுமையான ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. நான் படும் வேதனையைக் கவனித்த ஒரு காடச்சி, “இந்தாங்கோ இதை ஆகாரத்துடன் கடித்துச் சாப்பிட்டால் நாளைக்கு, ‘சளி’ இருக்காது” என்று ஒரு பொருளைக் கொடுத்தாள். அவள் கொடுத்த பொருள் விஷமில்லாவிட்டாலும், அதைச் சாப்பிட்டால் உடனே, ஜலதோஷம் அதிகமாகும் என்பது பலருடைய கருத்து. ஆகையால், “ஐயோ! இது ஜலதோஷத்தை அதிகமாக்குமே” என்று கூறினேன்.

“கற்றவர்கள் எல்லாம் இங்ஙனம் கூறினால் எப்படி?” என்று காடர் மொழியில் கூறினாள்.

அவளைத் திருப்தி செய்ய வேண்டுமே என்று சாப்பிட்டேன். என்ன ஆச்சரியம்! மறுநாள் எனக்கு ஜலதோஷம் அடியோடு நின்று விட்டது. நான் சென்னைக்கு வந்ததும், ஜலதோஷத்திற்கு எனக்குக் காடத்தி கொடுத்த அந்த மருந்தைப் பற்றிய பல வைத்தியப் புத்தகங்களில் ஆராய்ச்சி செய்யும்போது, “ஒரு சிறிய வெங்காயத் துண்டு ஜலதோஷத்தைக் குணப் படுத்தும்” என்று ஜே அண்டு ஜே டிசேன் (ஐதராபாத் - பக்கம் 13 வரி 19) என்ற வைத்திய நூலில் வாசித்தேன். காட்டில் நல்ல வைத்திய முறைகளும் நல்ல மூலிகைகளும் இருக்கின்றன. ஆனால் அவைகள் நமக்குத் தெரியாமல் நம்முடைய காலடியில் மிதிக்கப் படுகின்றன.

சிறு காட்டினுள் நடந்து சென்றால் திடீரென்று குளம்புகளின் ஓசைகள் கேட்கும். அங்ஙனம் ஓசைகள் கேட்கும் திசையை நோக்கியே நாம் ஓட வேண்டும். குளம்புகளின் ஓசைகள், மலைகளில் “எதிரொலி” (எக்கோ) செய்வதால் அவை கேட்கும் திசைக்கு எதிர்த் திசையில் ஓடினால், காட்டெருமைகளுடன் மோதவேண்டியவர்களாவோம். ஆகையால் அவ்விதமான சந்தர்ப்பத்தில் நம்முடைய காதைத் தரையில் வைத்து கேட்கவேண்டும். அப்பொழுது காட்டெருமைகள் எத்திசையிலிருந்து ஓடி வருகின்றன என்பது நன்றாகத் தெரியும். சாதாரணமாய் இவ்விதமான சந்தர்ப்பத்தில் காடர்கள் சுமார், இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் எந்த மிருகம் வருகிறது என்று மோப்பத்தில் கண்டு சொல்லி விடுவார்கள். சில சமயங்களில் காட்டில் நடந்து செல்லும் போது தூரத்தில் இடியால் தாக்குண்ட எரிந்த அடிமரங்கள் போல் கறுப்பாகத் தோன்றும். அவ்விதமான சந்தர்ப்பத்தில் நாம் சற்று நிதானித்து, அந்த அடிமரத்தை ஆராய்ந்துதான் மேலே நடக்க வேண்டும். ஏனென்றால் அடிமரம் நம்மைச் சேர்த்துப் பிடித்துக் கொள்ளும். உடனே வளைந்து அது நம்முடைய புட்டத்தைத் தான் கடித்துத் துண்டாக எடுத்து விடும். அப்பொழுதுதான் நமக்கு, “அது அடிமரமில்லை— கரடி” என்று தெரியும்.



செயற்கை அழகியர் நிறைந்த இந்த உலகில் இயற்கை அழகியான பணிச்சி



கோத்தர் சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்தவர்களான பூசாரிகளும், அவர் தம் துணைவியர்களும்,

இரண்டு கழிகள் இருந்தால், நாம் கரடியிடமிருந்து தப்பி ஊருக்குள் வந்து விடலாம். கழியில் ஒன்றைக் கரடியிடம் கொடுத்துவிட வேண்டும். மற்றொன்றை நாம் கழியாட்டம் ஆடுவதைப் போல் ஆடிக்கொண்டே ஊருக்குள் கரடியை அழைத்து வந்து விடலாம். நாம் எப்படிக் கழியாடுகிறோமோ, அப்படியே கரடியும் விளையாடும் என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு காட்டில் வாழும் மக்கள், தம்முள் ஒருவன் மனைவி பிரசவ வேதனைப்படும்போது, அவளைத் தூக்கிச் சென்று அவர்களது பாடியின் எல்லையைக் கடந்து காட்டில் தனிக்குடிலொன்று அமைத்து,அதில் அவளுக்குப்பத்துப்பதினைந்து நாட்களுக்கு வேண்டிய தண்ணீர், ஆகாரம்முதலியவைகளை வைத்து விடுவார்கள். அவள் தானே தனிமையில் குழந்தையைப் பெற்று, தன்னைச் சுத்தம் செய்துகொண்டு, குழந்தை பிறந்த ஏழாம் நாள், பாடியின் எல்லையில் கைக்குழந்தையுடன் வந்து நிற்பாள்.

பாடியிலுள்ள ஆண்களும் பெண்களும்மேளவாத்தியத்துடன்பாடிக்குள் அவளை அழைத்து வருவார்கள். அன்று பாடியில் வாழும் மக்கள் எல்லோரும் சேர்ந்து பறையடித்துக்கொண்டு, "குரவைக் கூத்து" என்று ஆடவரும் பெண்டிரும் தம்முட் கைகோத்து ஆடுவார்கள். பண்டைக்கால ஆதிவாசிகளின் கூத்துக்களின் வளர்ச்சியே பிற்காலத்தில் கோவில்களில் சிற்பங்கள், கோவில் நடனமாதர்கள் நடனக்கலை முதலியவைகளாக உருவெடுத்தன என்று சிந்திக்க வேண்டி வருகிறது.

காட்டில்வாழும் மற்றொரு இன மக்களில் மாமனார் மலஜலம் கழித்து விட்டு வந்ததும், மருமகள்தான் செம்பில் தண்ணீர் எடுத்து குழந்தைகளுக்குச் சுத்தம் செய்வதைப் போல் சுத்தம் செய்ய வேண்டும். இப்பழக்கம் இன்றும் உண்டு. திம்பம் பகுதியில் வாழும் சில இன மக்கள் மாமன், மச்சான் என்ற முறை போகாமலிருக்க வேண்டுமென்று, சுமார் பத்து வயதுப் பையனுக்கு, இருபது வயதுள்ள பெண்ணைத் திருமணம் செய்கின்றனர். பையன் வாலிபப் பருவம் அடையும்வரையில், அவனுடைய மனைவி, மாமனாருக்கே மனைவியாக இருப்பாள். மாமனாருக்குப் பிறக்கும் குழந்தைகள், மகனுடைய குழந்தைகளாக மதிக்கப்படும். இப்பழக்கங்கள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றன.

பண்டைக் காலத்தில் மீன்களிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும்,பறவைகளிடமிருந்தும்நம்முன்னோர்கள் நீந்தவும், நடக்கவும், ஓடவும், குதித்துத் தாவவும் கற்றுக் கொண்டார்கள் என்பர் ஆராய்ச்சியாளர்கள். அதை உண்மையாக்க இன்று விலங்குகளைப் போல் இறைச்சியைக் கடித்துக் கிழிக்க, ஆனைமலைப் பகுதியில் வாழும் மக்கள் தங்கள் பற்களை அரத்தால் கூர்மையாக்கிக் கொள்ளுகின்றனர்.

ஒரு முறை நான் காட்டில் நடந்து செல்லும் போது, அடிமரமென்று அருகில் சென்றேன். வழிகாட்டி கொடுத்த குரலில் நடுங்கிப் போய்ப் பார்த்ததில், அது அடிமரமில்லை. அது ஒரு பெரிய மலைப்பாம்பு என்பதைத் தெரிந்து கொண்டேன். இதைப் போலவே சில ஆண்டுகளுக்கு முன் நானும் ஒரு கசவனும் காட்டில் அலைந்த பின் ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்து ரொட்டியைத் தின்ன ஆரம்பித்தோம். அப்பொழுது கசவன் கையிலிருந்த கத்தியை மரத்தில் குத்தினான். உடனே அந்த மரத்திலிருந்து குருதி, "குபு-குபு" வென்று வெளிவந்தது. உடனே எடுத்தோம் மூட்டைகளை. பிடித்தோம் ஓட்டம். சாதாரணமாய்க் காட்டில் குரங்குகள் இருந்தால் அவற்றின் எதிரில் நம் வாயில் ஒன்றையும் போடக் கூடாது. ஏனென்றால் குரங்குகள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு காட்டில் ஒரு புலியையே கொலை செய்துவிட்டதைக் கேள்விப்பட்டுஇருக்கிறேன். குரங்குகள் மனம் வைத்தால் ஓர் ஊரையே அழித்து விடும்.

மற்றொரு நாள் நானும் கோத்தர்-பிச்சன் அவர்களும் வேட்டைக்குச் சென்றோம். கரடி வரும் என்று ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்திருந்தோம். மங்கலான ஒளியில் இடது பக்கம் ஒரு உருவமும், வலது பக்கம் ஒரு உருவமும் வந்து விட்டன, அப்பொழுது எதை முதலில் சுட்டாலும், நமக்கு ஆபத்து உண்டாகும். ஆகையால் வெகுநேரம் சுடாமல் காத்திருந்தோம். கடைசியில் இரண்டு விலங்குகளில் ஒன்று காட்டுப்பன்றி. மற்றொன்று புலி என்பதைத் தெரிந்து கொண்டோம். ஆகையால் எதை முதலில் சுடுவதென்றுசிறிதுநேரம்யோசித்தார் பிச்சன். பிறகு பன்றியைச் சுட்டார். பன்றி தனக்குப் புலியால்தான் ஆபத்து உண்டானது என்று நினைத்துக் குண்டடி பட்டதும், அது உடனே புலியின் மேல் பாய்ந்து, கோரைப் பற்களால் புலியைக் குத்திக்கிழித்துவிட்டது. இக்காட்சி என் சுய நினைவையே இழக்க வைத்துவிட்டது.

இவ்வாறு பல்வேறு சமயங்களில், காடுகளில் எனக்கேற்பட்ட அனுபவங்கள் யாவற்றையும் ஈண்டு உங்களுக்குக் கூறுவதென்றால், நீங்கள் இந்தப் பாறையின் மேல் கற்சிலையாகி விடுவீர்கள் போல் தோன்றுகிறது என் அனுபவத்தில் ஏற்பட்டவைகளில் சிலவற்றைக் கூறினேன். எல்லாவற்றையும் கூறுமைக்கு மன்னிக்கவும்." என்று என்னுடைய செய்திகளை வழிகாட்டியிடம் கூறினேன். அவரும் பெருமூச்சு விட்டார். பிறகு சிந்தனையுடனேயே எழுந்து இருவரும் செடியும் புதரும் நிறைந்திருந்த மலையின் மேலே நடக்க ஆரம்பித்தோம்.

* * *

# உறவு

'எஸ்லார்வி'



கலை!... அதுவே அவன் உள்ளமெல்லாம் நிறைந்திருந்தது. கலை! கலை! அதைப் பற்றியே அவன் எப்போதும் பேசினான். கலை கலை! கலை!! அவன் அதிலேயே முழுகிக்கிடந்தான். கலைஞன் என்று அவனை எல்லோரும் போற்றிப் புகழ்ந்தார்கள். அவனுடைய பெற்றோர் அவன் புகழைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள். பல காலம் அவர்கள் மகப்பேறு இல்லாது வருந்தினார்கள். தவமிருந்து ராஜாவைப் பெற்றார்கள். குழந்தையின் அழகைக்கண்டு கண்ணனின் அவதாரம் என்று எல்லோரும் சொன்னார்கள். அழகோடு அறிவும் அவனிடம் வளர்ந்து வந்தது. அவற்றுக்குச்சிகரம்வைத்தாற்போன்று இனிமையான குரலும், இயல்பான இசை அறிவும் கூடியிருந்தன. முன்னோரில் யாரோ இசைக் கலையில் மேதையாக விளங்கினார் என்று தகப்பனார் சங்கரலிங்கம் அறிந்திருந்தார். எனவே, அவர் தம் புதல்வனைச் சிறந்த இசைக் கலைஞர் ஒருவரிடம் ஒப்படைத்தார். ராஜா இசையரங்கு ஏறினான்; புகழுடன் தோன்றிய கலைஞனாக விளங்கினான். 'ராஜா ராஜவடிவு; அவன் கலை தெய்வீகமானது!' என்று பொதுமக்கள் புகழ்ந்த போது சங்கரலிங்கம், 'எல்லாம் கடவுள் செயல்; அனைத்தும் பரம்பரையின் மகிமை!' என்று மனசுக்குள் எண்ணி மகிழ்ந்தார். ஆம், இசைக்கலை மட்டுமே பரம்பரை வாசனையால் வந்தது அல்ல; மகனின் எழில் தோற்றமும் பரம்பரையின் சிறப்புத்தான் என்பது அவர் நினைவு. அதில் உண்மையும் இருந்தது. சில தலைமுறைகளுக்குமுன் அந்தக் குடும்பத்தினர் பெரிய ஜமீன்தார்களாக விளங்கினார்கள்.

தந்தை இப்படி மகிழ்ச்சியிலே திளைத்தார்என்னும்போது, தாயின் மன நிலையைப்பற்றித் தனியே கூற வேண்டுமா? தெய்வப் புலவர் வள்ளுவரின் வாக்கை அப்படியே மெய்ப்பிக்கும் நிலையில்—'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'என விளங்கினாள். 'தர்மாம்பாள் கொடுத்து வைத்தவள்!' என்றார் ஊரார். ஆனால்... ...

இரவு இரவாகவே இருப்பதில்லை. பகல் பகலாகவே இருந்ததில்லை. வெயிலும்-மழையும் பனியும்—சாரலும் மாறி மாறி வருவதுதான் இயற்கை. பணக்காரன் ஏழையாவதும் ஏழைபணக்காரனாவதும் இப்படியேதான். இதேபோல ஒரே மனிதன், ஒருகால் இன்பத்திற்கும் மறுகால் துன்பத்திற்கும், ஒரு போது புகழுக்கும், மற்றொரு போது இகழுக்கும் ஆளாவதில் வியப்பு எதுவும் இல்லை. 'முப்பது ஆண்டு வாழ்ந்தவர்களும் இல்லை, முப்பது ஆண்டு தாழ்ந்தவர்களும் இல்லை' என்ற வசனம் இந்த நியதியை ஒட்டிப்பிறந்ததுதான்.

ராஜாவையும் அவன் பெற்றோரையும் வானளாவப் புகழ்ந்த வாயாலேயே உற்றாரும் உறவினரும் ஊராரும் நாக்கிலே நரம்பின்றி இகழ்ந்து பேசும் காலமும் விரைவிலேயேவந்தது என்றால் அதுவும் உலகியல்தானே? 'பெற்றோரைப் பேசும் தெய்வங்களாக எண்ணி வழிபட்ட ராஜா, அவர்களைத் துரும்பென மதித்து எதிர்த்துப் பேசுகிறான்!', 'பெற்றோர் உறவையே துண்டித்துக் கொண்டு விட்டான்!', 'எவளோ ஒரு மேனாமினுக்கியின் மையலிலே ஈடுபட்டு அவளிடமே விழுந்து கிடக்கிறான்!', 'கர்வம் பிடித்திருந்த சங்கரலிங்கத்திற்கும் தர்மாம்பாளுக்கும் இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!' 'கலைஞனும் கலைஞன்! காலிப்பயல்......!' இப்படி மனம் போனபடி எல்லாரும் வசைமாரிபொழிந்தார்கள். இத்தகைய மாறுபட்டநிலைஎப்படி வந்தது அது விசித்திரமான கதை!

* * *

முத்தூர் சங்கீத சபையில் ராஜாவின் கச்சேரிக்கு ஏற்பாடு ஆகியிருந்தது. அந்த ஊர் நகரமும் அல்ல, கிராமமும் அல்ல. ரசிக அன்பர்கள் கூடி அங்கே சபையைத் தோற்றுவித்தார்கள்; சிறப்பாக நடத்த அரும்பாடு பட்டார்கள். ஆனால், ஒருநாளும் அவை நிறைய ரசிகர்கள் கூடினதில்லை. போதிய வசூல்கிடைத்ததில்லை.

அன்றும் அப்படித்தான். உரிய நேரத்தில் ராஜா பக்க வாத்தியக்காரர்களுடன் மேடையை அடைந்தான். அவைக்கு அஞ்சலி செய்துவிட்டு அமர்ந்தான். கூட்டம் இல்லாதது அவன் மனத்திலே குறையாகத்தான் இருந்தது. ஆனால் அந்தக் குறையை நிறைகட்டுகிற முறையிலே முன்னணியிலே மகாராணியைப்போல் வீற்றிருந்தாள் சீமாட்டி அநுசூயா தேவி.

முப்பதுக்கு இரண்டொன்று குறைத்தே மதிப்பிடத் தக்க இள இள என்ற தோற்றம். கண்ணைக் கூசச் செய்யும் தக தகவென்ற பொன் மேனி. பளபளவென்ற பட்டாடையும் ஜிலுஜிலுவென்ற வைர நகைகளும் அவள் எழிலைச் சிறக்கச் செய்ததுடன் அவளுடைய செல்வ நிலையையும் எடுத்துக் காட்டின.

ராஜா மேடையை அணுகும் போதே அவனை அவள் பார்த்தாள். கவர்ச்சி நிறைந்த அவளது கரிய பெரிய விழிகள் மேலும் பெரிதாக மலர்ந்தன. அவனையே கவனித்துக் கொண்டிருந்தவர்கள் அவள் முகத்திலே தோன்றிய பிரகாசத்தைக் கண்டார்கள். தங்களுக்குள் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள்.

ராஜாவின் ராஜவடிவைக் கண்டு அவள் சொக்கியிருக்கிறபோதே சுருதி ஒலிக்கத் தொடங்கிற்று; அவன் பாட ஆரம்பித்தான்.

அவள் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்தாள். அவனும் பாடிக் கொண்டே அடிக்கடி, முன்னணியிலே மதிப்புக்கு உரியவளாக வீற்றிருக்கும் அவளை நோக்கினான்.

கூட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஊதியம் நிறைந்ததாக இருந்தாலும் குறைந்ததாக இருந்தாலும், நன்றாகப் பாடி, திறமையை வெளிப்படுத்தி, நல்ல பேர் வாங்க வேண்டும் என்ற துடிதுடிப்புள்ள இளம் கலைஞர்களின் இயல்புக்கு ஏற்ப ராஜா நன்றாக உழைத்துப் பாடினான். அவையினர் அமைதியாக இருந்து ரசித்தனர். அநுசூயா பதுமை போல் அமர்ந்திருந்தாள். அவள் கண்களிலிருந்து தாரையாக நீர் பெருகி அழகிய கன்னங்களின் வழி ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கவனித்தவர்கள் பல பல எண்ணினார்கள். ராஜாவுங்கூட அவள் நிலையைக் கண்டான். இசையின் மேன்மை அவளை அப்படி உருக வைத்து விட்டது என்று சிலர் எண்ணினார்கள். தம் புதல்வனின் கலைத் திறனுக்கு, அந்தச்சீமாட்டியின் நிலையே பெரிய அத்தாட்சி என்று சங்கரலிங்கம் பூரித்துப் போனார்.

கச்சேரி முடிந்தது. கூட்டம் கலைந்தது. ராஜாவும் சங்கரலிங்கமும் புறப்பட்டார்கள். அநுசூயாவும் எழுந்தாள். அவர்களை அணுகினாள்.

"உங்கள் பிள்ளையா?"

"ஆமாம். குழந்தை ஏதோ பாடுகிறான். உங்களைப் போன்றவர்களின் ஆசியாலும் ஆதரவாலும் முன்னுக்கு வரவேண்டும்."

சங்கரலிங்கம் பெருமிதம் தோன்றப் பேசினார். ராஜா முறுவலித்தபடி அவளை நோக்கிக் கரம் குவித்தான். அவளும் பதிலுக்கு வணக்கம் செலுத்தினாள்; முறுவலும் புரிந்தாள்.

"நல்ல சாரீரம், தெளிவான ஞானம், உயர்ந்த பாணி, கச்சேரி அபாரமாக இருந்தது, முன்னுக்கு வந்துவிட்ட புள்ளிதான்"—பட்டுக் கத்தரித்தாற்போல் பேசி அவள் விடைபெற்றுச் சென்றாள்.

* * *

மறுநாள் மாலை. சங்கரலிங்கத்தின் வீட்டெதிரே வாடகைக் கார் ஒன்று வந்து நின்றது. முத்தூர் சங்கீத சபையின் காரியதரிசி சிரித்த முகத்தோடு உள்ளே வந்தார்; படபடவென்று பொரிந்து தள்ளினார்:

"அதிருஷ்ட தேவதை உங்களைத் தேடி வந்து விட்டாள் சங்கரலிங்கம்! பரம ரசிகசிரோமணியான அநுசூயாதேவி நம் ராஜாவின் இசையிலே அப்படியே சொக்கிப் போய் விட்டார்கள்! உடனே அழைத்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்கள். ராஜா எங்கே...?"

சங்கரலிங்கத்துக்கு உள்ளுக்குள் பெருமகிழ்ச்சிதான். ஆனாலும் பழைய காலத்து மனிதராகையால் விவரத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டுமென்று, அதற்கு ஏற்ற முறையில் மகிழ்ச்சியை அடக்கிக் கொண்டு பேசினார்:

"எல்லாம் சரிதான் செகரட்டரி ஸார்; அந்த அம்மாள் ஞானத்திலே மேம்பட்டவர்களாக இருக்கலாம்; ராஜாவின் பாட்டு அவர்களுக்குப் பிடித்திருக்கலாம். ஆனால்...!"

காரியதரிசி குறுக்கிட்டார்: "இருக்கலாமாவது...? நேற்றுக் கச்சேரியின்போது அந்த அம்மாள் தாரையாகக் கண்ணீர் வடித்ததை நீங்கள் கவனிக்கவே இல்லையா...?"

"கவனித்தேன், கவனித்தேன்; எந்த விஷயத்திலும் உணர்ச்சிவசமாகி விடுவது சிலருடைய இயல்பு. அதனாலேயே நாம் எதையும் தீர்மானித்து விட முடியாது. உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா?"

"அந்த அம்மாளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது; அதனால் இப்படிப் பேசுகிறீர்கள். சபை நன்றாக நடைபெற அந்த அம்மாளே காரணம். இல்லை என்றால் தொடங்கின மூன்று மாதத்திலேயே மூடுவிழா நடந்திருக்கும்."

"அதோ, ராஜா வந்துவிட்டான். நாம் புறப்படலாம்."

விவரம் அறிந்த ராஜா விரைவாக உடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"தம்பூராவையும் எடுத்துக் கொள்ளுங்கள்."—காரியதரிசி.

"அங்கே பாட வேண்டுமா?"—ராஜா.

"இது என்ன அசட்டுக் கேள்வியடா ராஜா?"—சங்கரலிங்கம்.

ராஜா தம்பூராவுடன் சென்று காரில் அமர்ந்தான். சங்கரலிங்கமும் ஏறிக் கொண்டார். அவரை அவர் மகனும் அழைக்கவில்லை, காரியதரிசியும் கூப்பிடவில்லை. கார் கிளம்பிக் கனவேகமாகச் சென்றது.

புருஷர்களின் பேச்சை உள்ளிருந்து செவிமடுத்திருந்த தர்மாம்பாள் வாசலுக்கு வந்தாள். முகத்திலே பெருமிதம் சுடர்விட்டது. அக்கம்பக்கத்துப் பெண்மணிகள் அவளைச் சூழ்ந்து கேள்விகளைத் தொடுத்தார்கள்.

"முத்தூர் ஜமீன்தாரிணி நேற்று, சபையிலே நம்ம ராஜா பாட்டைக் கேட்டாள். மறுபடி கேட்க ஆசையாம். கார் அனுப்பினாள். ராஜா அரண்மனையிலே பாடப் போகிறான்...!" தர்மாம்பாள் பொரிந்து தள்ளினாள்.

முத்தூரில் அநுசூயா ஜமீன்தாரிணியா, அங்கே அரண்மனை ஒன்று இருக்கிறதா—என்றெல்லாம் பெண்மணிகள் அறிந்திருக்கவில்லை.

"பேஷ்பேஷ்! ராஜாவுக்கு இனி யோகந்தான்!" என்றார்கள்—இது மேலுக்கு; உள்ளுக்குள் ஒரே புழுக்கம். ஆகவே ஒதுங்கி நின்று தங்களுக்குள் சற்றுத் தாழ்ந்த குரலில் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

"தர்மாம்பாள் ஏற்கனவே கர்வி; இனிமேல் அவள் கால் தரையிலேயே பாவாது!"

"அநுசூயா ஜமீன்தாரிணியா...? முத்தூரில் ஜமீன் ஏது?..."

"ஜமீனும் இல்லை, மண்ணும் இல்லை; அவள் 'எடுபட்டுப்போனவளாம்;' கட்டினவனைவிட்டு வேறு எவனுடனோ சேர்ந்துவிட்டாளாம்; அந்த வகையிலே கிடைத்த இரண்டு காசுதான் அவளை இந்த மினுக்கல் மினுக்கச் செய்கிறது. இல்லாவிட்டால் அவள் ஏன் தனியாய் வாழவேணும்?..."

"அப்படியா சமாசாரம்?...அவளுடைய நடைஉடை பாவனைகளைப் பார்த்தாலே அப்படித்தான் தோன்றுகிறது. உம்...பாவம், ராஜா-சின்னஞ் சிறுசு; அவள் வலையிலே விழாமல் தப்ப வேணும்!"

சற்றுமுன் மகிழ்ச்சி கொந்தளித்த தர்மாம்பாள் உள்ளத்தில் இப்போது அழுகையும் ஆத்திரமும், கவலையும் கலக்கமும் முட்டி மோதிக் குமிழியிட்டன. அவர்கள்

பேச்சினிடையே குறுக்கிட்டுச் சுடச்சுடப் பதில் சொல்லவேண்டும் என்று பலமுறை எண்ணினாள்; முடியவில்லை. முடிவில் அடக்க முடியாத துயரத்துடன் சடக்கென்று திரும்பி உள்ளே போய்விட்டாள். அப்படி அவள் போகிறபோது தெருவிலே கூடியிருந்த பெண்மணிகள் கிளப்பிய ஏளனச் சிரிப்பொலி அவளுடைய இதயத்திலே கூரிய வேலைப்போல் பாய்ந்தது.

* * *

இரவு எட்டு மணிக்குக் கார் வந்தது. தகப்பனும் பிள்ளையும் இறங்கினார்கள். கார் திரும்பிச் சென்றது. இருவரும் உள்ளே வந்தார்கள்.

"தர்மு...!"

"அம்மா...!"

தர்மாம்பாள் ஒரு நாழிகை கழித்துக் கூடத்திற்கு வந்தாள். அங்கே தகப்பனும் பிள்ளையும் கலகலவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவளைக் கண்டதும், சங்கரலிங்கம் பட்டுப் புடவை, சரிகைவேட்டி, பூ, பழம், தாம்பூலம் முதலியன அடங்கிய பையை அவளிடம் கொடுத்தார். ராஜா இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை அவள் கையில் கொடுத்து வணங்கினான். தர்மாம்பாள் முகத்திலே மகிழ்ச்சியின் சுவடே இம்மியும் இல்லை.

"சபைக் காரியதரிசியின் வாயிலே சர்க்கரைதான் போடவேணும் தர்மு..." என்று பேசிக் கொண்டே நிமிர்ந்த சங்கரலிங்கம், மனைவியின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார். "என்னவோபோல் இருக்கிறாய்? இப்போது என்ன உனக்கு?" என்றார். பலமுறை அவர் திருப்பித் திருப்பிக் கேட்ட பின் அவள் கரகரத்த குரலில், "ஒன்றும்... இல்லை..." என்றாள்.

"அட சட்...! நீ எப்போதுமே பெரிய துர்க்குணி! குழந்தை சின்னக் கையாலே சம்பாதித்த பரிசுப் பொருள்களை கொடுத்து வணங்குகிறபோது வாயார வாழ்த்தாமல்......"

"...நானும் எவ்வளவோ...சந்தோஷமாகத்தான் இருந்தேன்..."

இப்படித் தயங்கித் தயங்கிப் பேச்சைத் தொடர்ந்த தர்மாம்பாள் மாலையில் தெருவாசலில் நிகழ்ந்த பேச்சு முழுவதையும் விவரித்தாள்.

"பூ!...என்னவோ ஏதோஎன்று பார்த்தேன். அயல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி கிடக்கிற அசுகையைப் பிண்டங்களின் பேச்சைக் கேட்டா இப்படி இடிந்துபோய் விட்டாய்?...பைத்தியமே! பைத்தியமே! நீயும் எங்களோடு வந்திருந்தால் தெரியும். 'மகாலட்சுமி' என்று சொல்வதற்கு ஒரே ஒரு குறை—திலகம் இல்லை. அடாடா அந்த அம்மாளின் தெய்வ பக்தியும், இசை ஞானமும், உயர்ந்த பண்பும், பெருந்தன்மையும் இங்கே யாருக்கு வரும்? வேறு எங்கேதான் காணமுடியும்? காரிலிருந்து இறங்கி உள்ளே போனதும் ராஜாவைப் பார்த்து, 'வா அப்பா' என்று வாத்ஸல்யம் பொங்க, வாய் நிறைய அவள் அழைத்தது ஒன்றே போதுமே; பங்களாவை மாசுமறுவின்றி எப்படித்தான் வைத்துக்கொண்டிருக்கிறாள். நாங்கள் போனதும் அளித்த சிற்றுண்டியின் உயர்வையும் உபசரித்த அழகையும் நாளெல்லாம் புகழலாம். பிறகு எங்களைக் கை கால் கழுவிக்கொள்ளச் செய்து ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள். அது பூஜை அறை. அங்கே தூண்டா விளக்கின் ஒளியில் சுவாமி படங்களும் பிம்பங்களும் தகதகவென்று பிரகாசித்தன. நறுமலர்கள், வத்தி முதலியவற்றின் மணம் தெய்விகச் சூழ்நிலையை நன்கு அமைத்திருந்தன. கற்பூரம் ஏற்றினாள். ராஜாவை வணங்கச் சொன்னாள். பிறகு, சந்நிதியிலே அமர்ந்து பாடச்சொன்னாள். நேற்று மாதிரியே கண்ணீர் உகுத்த வண்ணம் மெய்ம்மறந்து கேட்டாள். பிறகு இந்தப்பரிசுகளை இவனுக்கு அளித்து ஆசி கூறினாள். அடிக்கடி வந்து போகவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அவளைப் பற்றி யாராவது அவதூறு சொன்னால் அவர்கள் நாக்கு......" என்று தர்மலிங்கம் ஆவேசம் வந்தவர்போல் பேசினார். தர்மாம்பாளின் அகத்திலும் முகத்திலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் இடம் பெற்றன. ஆனால்......... இதே தர்மலிங்கம் மிக விரைவில் தாமே வருந்தி, ஊரார் எதிரில் தலைகுனிந்து ஒதுங்கும் சந்தர்ப்பமும் வந்தது.

★ ★ ★

முதல் தடவைக்குப்பின் அடுத்த வாரம் இரண்டாம் முறையாக ராஜாவுக்கு அநுசூயாவிடமிருந்து அழைப்பு வந்தது. சங்கரலிங்கம் ஊரில் இல்லை. அவன் மட்டுமே போனான். இரவு வீடு திரும்பவில்லை.

தர்மாம்பாள் மனத்தில் சுருக்கென்றது. என்னதான் அப்பாவும் பிள்ளையும் அநுசூயாவைப் பற்றி வானளாவப் புகழ்ந்தாலும் 'வயதுப்பிள்ளை' ஏறக்குறைய சம வயசுடைய பெண்ணோடு இரவிலே தனித்திருப்பது என்பது அவளுக்குச் சரியாகப்படவில்லை. 'விடிந்ததும் யாரையாவது அனுப்பி அவனை அழைத்து வரச்செய்ய வேண்டும்' என்றெண்ணியபடி இரவெல்லாம் தூங்காது புரண்டு கொண்டிருந்தாள். ஆனால்.........

விடிந்ததும் அவனே வந்துவிட்டான். தாய், மிக நயமாகப் பேசி அவன் பிழையை எடுத்துக் கூறினாள். அவனும் சாந்தமான முறையிலேயே பதில் சொன்னான்.

"...முதலில் நான் பாடினேன். பிறகு அந்த அம்மாள், பாடினார்கள். நேரம் போனதே தெரியவில்லை. சாப்பாடு ஆயிற்று. 'காலையில் போகலாமா?' என்றார்கள். எனக்கும் அசதியாக இருந்தது. தட்டிப்பேச மனமும் வரவில்லை; தங்கிவிட்டேன்."

சங்கரலிங்கம் வந்தார்; விவரம் அறிந்தார்; சிறிது கூடப்பொருட்படுத்தவே இல்லை. ஆனால்......

அடுத்தடுத்து இதே மாதிரி நடைபெற்ற போது தர்மாம்பாள் கண்டிக்கத் தொடங்கினாள். அவனும் சிறிது படபடப்பாகவே பேசினான்.

"...இங்கே நீ பெற்ற தாய், அங்கே அவர்கள் பெறாத தாய்; வேறு தவறாக எதுவும் நினைத்து விடாதே அம்மா. கொடிய பாவம் குடும்பத்தைச் சூழ்ந்து விடும்!"...

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கரலிங்கமும் சிறிது காரமாகவே பேசினார்; "...அதெல்லாம் சரிதானடா. பனை மரத்தின் அடியிலே நின்று பாலைக் குடித்தாலும் பார்ப்பவர்கள், பலவிதமாகவும் தான் பேசுவார்கள். உடம்புக்கு பால் குடித்தால் மட்டுமே போதாது; ஊருக்காகவும் குடிக்க வேண்டும். ஆகவே வேண்டாம். இந்த உறவு!"— இப்படிச் சொல்கிற போதே அவர் மனத்திலே அதுவரை அவன் அவளிடமிருந்து பெற்று வந்து கொடுத்த பொருள்களின் கணக்கு எட்டிப் பார்த்தது.

ராஜா பெற்ருேர் சொல்லைத் தட்டி நடந்து கொண்டான். அது மட்டுமல்ல; வரவர அவனிடம் விபரீதமான மாறுபாடுகள் பல தோன்றலாயின. முக்கியமாக, எப்போதும் முகத்திலே ஒருவித சோகக்குறி, அயர்வுக்குறி நிழலாடிய வண்ணம் இருந்தது. சில சமயம் அவன் நாட்கணக்கில் அநுசூயாவிடம் தங்கி வரலானுன். இதனுல் வீட்டிலே பலமான போராட்டம் தொடக்கமாயிற்று. நாளடைவிலே அது எல்லையை மீறியது; அதன் விளைவாக அவன் நிரந்தரமாகவே அநுசூயாவிடம் தங்கிவிட்டான்! ஊர்வம்பு வலுத்தது. கிழத்தம்பதிகள் மனமுடைந்து போனுர்கள். சங்கரலிங்கம் முத்தூருக்குப் போனுல் என்ன நடக்குமோ; போக அவருக்கு மனம் இல்லை. இறுதியில் மனநோய் காரணமாக அவர் நோய் வாய்ப்பட்டுப்படுக்கையில் வீழ்ந்தார்.

* * *

சிவராமன் சங்கரலிங்கத்தின் உயிர் நண்பர். ஓர் ஆண்டுக்காலமாக அவர் ஊரில் இல்லை. இப்போது வந்தார். நண்பரின் நிலையைக் கண்டார். உடனே ராஜாவுக்குச் செய்தி போக்கினுர். 'உடனே வந்தால் தகப்பனுரைக் காணலாம்' என்று. அவருக்கு என்ன தோன்றிற்றே. செய்தி அனுப்பிய அரை மணிக்குப்பின் அவரே நேரில் கிளம்பிச்சென்ருர்.

"செய்தி வந்த உடனேயே ராஜா கிளம்பிப் போய் விட்டானே! வைத்தியச் செலவுகளுக்கு இருக்கட்டும் என்று ஐந்நூறு ரூபாய் கொடுத்து உடனேயே கிளப்பி விட்டேனே!"

அநுசூயாவின் பேச்சைக்கேட்டபடி அவளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றிருந்தார் சிவராமன்.

"செலவுக்கு இருக்கட்டும் என்று பணம் கொடுத்தீர்களா...?"

"ஆம். ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?"

"அம்மா, உங்களைப் பார்த்தால் பெரிய பரம்பரையிலே வந்த மாதிரி தெரிகிறது. நீங்கள் இப்படிச் செய்யலாமா?"

அவள் முகம் மாறுபட்டது. "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? புரியும்படி பேசுங்கள்" என்ருள்.

"வயசான தம்பதிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்! ஒரு குடும்பத்தை அநியாயமாகப் பாழ் செய்கிறீர்கள்! ஊரார் வாயில் நீங்களும் விழுந்து உலகம் அறியாத அந்தப் பிள்ளையையும் விழச்செய்து விட்டீர்கள்!...அங்கே வந்து பாருங்கள் அவனுடைய கிழத்தந்தையை!........மகனின் பிரிவை ஆற்ருமல் விழுந்து கிடக்கிருர், தசரதனைப்போல!..."

ஆயிரம் தேள் கொட்டினுற் போல் இருந்தது அநுசூயாவுக்கு.

"அப்படியா!...நான் அப்போதே சந்தேகித்தேன்; அது சரியாகி விட்டது!...அசட்டுப்பிள்ளை!...

"என்ன சந்தேகித்தீர்கள்?...... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?..."

"ராஜா என்னை ஏமாற்றி விட்டான். பெற்ருேரின் முழு இசைவுடன் இங்கே தங்கியிருப்பதாகச் சொல்லி...உம்...அப்படியா செய்தி?...ஏன், அவன் அப்பா இங்கே வந்து அவனை அழைத்துப் போயிருக்கலாமே!—நானே அனுப்பி வைத்திருப்பேனே!...

'எல்லாம் சரிதான் அம்மா! தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ராசி இருந்தால் அல்லவா அவர் இங்கே வர. ராஜாவுக்கும் உங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது முதல் அவனுக்கும் அவன் பெற்ருேருக்கும் போராட்டந்தான்!— அது இருக்கட்டும், அவன் இங்கே உங்களுடன் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவானேன்?"

அவளுக்கு அழுகை குபீரென்று வந்தது. உதட்டைக் கடித்து அழுகையை அடக்க முயன்றபடி, "ராஜா தங்களோடு இருக்கவேண்டும் என்று அவன் பெற்ருேர் ஏன் விரும்புகிருர்கள்?" என்ருள்.

"நீங்கள் நன்ருகப் பேசுகிறீர்கள்!—தேர்ந்த நடிப்பு!"

"இல்லை. அதோ, அந்தத் தெய்வம் அறிய இது நடிப்பல்ல; சத்தியம்!"

சிவராமன் திரும்பிப் பார்த்தார். "ஆ!..." என்று திடுக்கிட்டார். அது ராஜாவின் படம் அல்ல; ஆனுல் ராஜா போலவே இருந்தது

"...அது...யாருடைய...படம்?"

அவள் குமுறியபடி பேசினுள்!" "என் கணவர் படம். அவரும் நானும் வாழ்ந்திருந்தால் ராஜா என் வயிற்றிலே பிறந்திருப்பான். அதாவது, ராஜாவின் வயதில், இதே சாயலில் எனக்கொரு மகன் தோன்றியிருப்பான். எல்லாரும் நினைப்பது போல் நான் குமரி அல்ல. வயது நாற்பது?...உம் சரி, நீங்கள் போகலாம்!—"

"மன்னிக்கவேண்"—

"பேசாதீர்கள்!...போங்கள்!..." அவள் வீரிட்டாள். அவளுடைய கண்கள் நீரைப் பொழிந்தன; உடம்பு நிலைகொள்ளாது தத்தளித்தது. சடக்கென்று நிமிர்ந்தாள். கணவர் படத்தைப் பார்த்தாள், வெறி பிடித்த நிலையில் அதையே பார்த்தபடி அதனிடம் ஓடினுள். வழியில் கிடந்த ஸ்டூல் இடறிற்று. தடால் என்று தரையிலே விழுந்தாள்!

"ஆ!..." என்று கூவியபடி அநுசூயாவை அணுகினுர் சிவராமன். சந்தடி கேட்டுப் பணிப்பெண் ஓடிவந்தாள். மூச்சோட்டம் நின்றிருந்ததை அறிந்து ஓவென்று அலறினுள்.

ஒரு நிமிஷம் திகைத்தபடி நின்றிருந்த சிவராமன் சட்டென்று வண்டியேறிப் புறப்பட்டார்; சங்கரலிங்கத்தின் வீட்டை அடைந்தார். அங்கே தகப்பனும் பிள்ளையும் ஆரத் தழுவியபடி தழுதழுத்த குரலில் உரையாடிக் கொண்டிருந்தனர். சிவராமன் நொடிக்குள் விவரம் முழுவதையும் தெரிவித்தார்.

"அப்படியா!..." சங்கரலிங்கம் துள்ளி எழுந்தார்.

ராஜா, "அம்மா......அம்மா!..." என்று அலறினுன், முட்டிக்கொண்டான், மோதிக்கொண்டான். எவராலும் அவனைச் சமாதானம் செய்யவே முடியவில்லை.

எல்லாரும் கிளம்பி முத்தூருக்குச் சென்ருர்கள். செய்தியறிந்து வக்கீல் வாசுதேவன் அங்கே வந்திருந்தார். அவர் கொடுத்த பதிவுப் பத்திரத்தின்மூலம் அநுசூயா ராஜாவைத் தன் புதல்வனுக ஏற்றுக்கொண்டிருப்பது தெரிந்தது. அவள் கால்களிலே முகத்தைப் பதித்துக் கதறிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த ராஜா துயரத்தை அடக்கிக்கொண்டு அபிமானத்தாயின் ஆன்மா சாந்தி பெறுவதற்கான செயல்களில் ஈடுபட்டான்.

* * *

கல்யாணபுரம் மிட்டாதார் சோமசுந்தரமும் அவர் மனைவி, அநுசூயாவும் அழகு, அன்பு, அறிவு, பண்பு, கலைஞானம் அனைத்திலும் சரி நிகர் சமானமாக விளங்கினர். திருஷ்டி என்றுதான் சொல்ல வேண்டும். மணமான மறுமாதத்

தில் சோம்சுந்தரம் விஷக்காய்ச்சலில் விழுந்தார்; மீளவே இல்லை.

" ...அநு—எனக்குப்பின் ... நீ—எப்படி இருப்பாய்?"

அவள் குலுங்கக் குலுங்க அழுதாள்.

"அழுவது வீண் அநு: உனக்கு என்னிடம் உண்மையான அன்பு உண்டு என்பதற்கு—...என்ன அடையாளம் தெரியுமா?...பேச—முடியவில்லை. உம்...இதோ பார், மற்றவர்களைப்போல் நீ நடந்து கொள்ளக்கூடாது, பூத்துக்குலுங்கும் மலர்ச்செடியாய் எந்நேரமும் விளங்கவேண்டும்... நாதோபாசனையும் தெய்வ வழிபாடுமாக இருக்க வேண்டும்..இருப்பாயா? இருக்கிறேன் என்று உறுதிமொழி கொடு—அப்போதுதான் உன்னுள் உறைந்து வாழும் என் ஆன்மா சாந்தி பெறும்—"

அவள் துயரத்தை அடக்கி உறுதிமொழி கொடுத்தாள்.

இறுதிக் காலத்தில் கணவருக்குக் கொடுத்த வாக்கின்படி அநுசூயா நடந்துகொள்ள முயன்றபோது உற்றாரும், உறவினரும், ஊராரும் புத்திமதி சொல்லி அவள் நிலையை மாற்ற முயன்றனர். அதில் தோல்வி கிட்டியதும் நிந்திக்கத் தொடங்கினர். வரவர அந்நிலை அதிகரிக்கவே அநுசூயா ஊரை விட்டு வெளியேறினாள். 'இளம் வயதில் நான் சிலகாலம் முத்தூரில் இருந்தேன். அப்போது அங்கே என் அத்தை குடும்பம் வசித்தது. எனக்கு எல்லா ஊர்களிலும் மிகப்பிடித்தது முத்தூர்'-

கணவன் சொன்னதைக் கருத்தில் கொண்ட அநுசூயா முத்தூரை அடைந்து வசிக்கலானாள். ராஜாவின் சந்திப்புக் கிட்டிற்று. அவள் அவனை அபிமானப் புதல்வனாக நேசித்தாள்....

* * *

ராஜாவுக்கு அநுசூயா சொல்லியிருந்த விவரத்தை அவன் இப்போது மற்றவர்களுக்குக் கூறி கண்ணீர் வடித்தான். முன்பு அவர்கள் உறவிலே களங்கம் கற்பித்தவர்கள் கதையைக் கேட்டுக் கண்ணீர் சிந்தித் தங்கள் பாவத்தைக் கழுவிக்கொண்டார்கள்.



" வாத்தியாரே! நீ பார்க்கணுங்கிற எடம். எதுண்ணு சொல் அப்படியே இஸ்துகினு போறேன் "
" யாம் காண விரும்புவது சொர்க்கம் ஒன்றுதானப்பா."
" இன்னு வாத்தியாரே! நல்லா சொல்! சொர்கமா? சொர்க்கமா!"

பங்களாவின் பல பகுதிகளையும், பல பொருள்களையும் பார்வையிட்டுக் கொண்டே வந்த சங்கரலிங்கம், "ராஜா...!" என்று கூவினார். அவன் எங்கிருந்தோ வந்தான். தந்தையின் எதிரே ஒரு பெரிய பெட்டி திறந்தபடி இருந்தது; அவரைச் சுற்றிச் சிறிதும் பெரிதுமாகப் பல படங்கள்; அவர் கையிலே ஒருபடம். அவர் அதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இது நம்மிடம் இருந்ததல்லவா...? நீ எடுத்து வந்தாயா?"

"இல்லையே...! எனக்கு ஒன்றுமே தெரியாதே...!"

"என்னடா இது...!" மோவாயைத் தடவிக் கொண்டார். "சரி, கிளம்பு, ஊருக்குப் போய் வரலாம்" என்று படத்துடன் எழுந்தார்; மகனுடன் கிளம்பினார்.

வீட்டை அடைந்ததும் மச்சில் ஏறிப பழைய பெட்டிகளைக் குடைந்தார். ஒரு படத்தை எடுத்தார். இரண்டையும் அருகருகே வைத்துப் பார்த்தார். புதையலைக் கண்டவர் போல் குதித்தார்.

"ராஜா, இதோ பாரடா, ஒரேபடத்தின் இரு பிரதிகள்! இவர் என் கொள் பாட்டனார். நம் குடும்பத்திற்கும் சோமசுந்தரத்தின் குடும்பத்திற்கும் மூலபுருஷர் இவரே என்று தோன்றுகிறது...இருவம்சாவளியைப் பரிசீலனை செய்யலாம்."—என்று பித்துப்பிடித்தவர் போல் தத்திக் குதித்த சங்கரலிங்கம் வம்சாவளியையும் ஆராய்ந்தார். அவர் ஊகம் வீணாகவில்லை. இதன்படி சோமசுந்தரம் எனக்குத் தம்பி உறவு!" என்றார்.

"அதனாலேதான் நம்ம ராஜா மேலே அவளுக்குப் புத்திரபாசம். இதுதான் விட்ட குறை, தொட்டகுறை என்பது!" என்று நீட்டி முழக்கினாள் தர்மாம்பாள்,






# சங்கீத ரத்தினங்கள்:

## ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர்

இவர் சங்கீதத்திலும் ஹரிகதை செய்வதிலும் வல்லவராக விளங்கினூர். இவர் பல கீர்த்தனைகள் இயற்றிப் பெரும் புகழ் அடைந்தவர். திருவாங்கூர் சுவாதித் திருநாள் அகடமியில் பிரின்ஸ்பாலாக இருந்து அரும் பணி ஆற்றி இருக்கிருர்.




## தஞ்சை பொன்னையா

தஞ்சை பிரகதீஸ்வர ஆலய நாட்டிய பரம்பரையில் தோன்றியவர். தற்காலம் நாம் கண்டு களிக்கும் நாட்டியக் கச்சேரியை, கச்சேரி ரூபமாக முதன் முதலில் அமைத்து அதற்கு வேண்டிய பல பாடல்களையும் இயற்றி அக்காலம் முதல் இக்கலை உள்ளளவும் தன் பெயர் அழியா வண்ணம் செய்த மகாவித்வான் இவர்.

## மஹா] வைத்தினத அய்யர்


இவர் சங்கீதத்திலும் ஹரிகதை செய்வதிலும் வல்லவர். இவர் மானம்புச்சாவடி வெங்கடராம அய்யரிடம் சங்கீதம் பயின்ருர். ஆறு காலத்திலும் மிகச் சுலபமாய் பாடக் கூடியவர். 72 மேள கர்த்தா ராகமாளிகைக்கு வர்ணமெட்டு அமைத்து தஞ்சை அரசரால் சன்மானிக்கப்பட்டுப் பெரும் புகழ் அடைந்தவர்



## வீணை தனம்மாள்


சங்கீதத்திலும் வீணை வாசிப்பதிலும் நிகரற்றவராய் விளங்கிப் பெரும் கியாதி அடைந்தவர். க்ஷேத்திரிஞர் இயற்றிய பதங்கள் யாவும் இவர்களுக்கு பாடம் உண்டு பல வித்வான்களும் இவர்கள் இல்லத்திற்கு வந்து இவர்களுடைய சங்கீதத்தைக் கேட்டு மெய் மறந்து போவார்கள். பதம் பாடுவதில் அர்த்த பாவத்தை நன்கு அறிந்து பாவத்தோடு பாடும் வழக்கத்தை கொண்டு வந்தவர் இவரே.





## சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

இவர் சங்கீதத்திலும் அரிகதை செய்வதிலும் பெரும் புகழ் அடைந்தவர். அக்காலங்களில் அரிகதை செய்வதில் விராயஸ்ஸமும், சங்கீதமும் மேல் நோக்கி இருந்தது இவரது கதைகளில் சங்கீதத்தின மேன்மையும் இன்றும் புகழ் அடைந்து இருக்கிறது. அரிகதைக்கு பெரும் புகழும் தேடித் தந்தவர்களில் இவர் ஒருவர்.



## புதுக்கோட்டை தக்ஷிணமூர்த்தி பிள்ளை

இயற்கையாகவே இவருக்கு லய ஞானம் ஏற்பட்டதால் முதலில் நட்டம் வாசிகக ஆரம்பித்தார். அது கச்சேரிக்குப் பொருத்தமாக இல்லை என்பதை அறிந்து பின் மாண் பூண்டியா பிள்ளை அவர்களிடம் கஞ்சிரா வாசிக்க நன்கு கற்று பல கச்சேரிகளைச் செய்து புகழ் அடைந்தார். கஞ்சிரா வாத்தியத்திற்குப் பெரும் மதிப்பு ஏற்படும்படி செய்த மகா வித்வான் இவரே.


## காஞ்சிபுரம் நயினு பிள்ளை அவர்கள்


இவர் லய சம்பந்தத்தில் மகா வித்வானுக விளங்கினூர். இவர் தம் ஒவ்வொரு கச்சேரியிலும், புதுப் புது கீர்த்தனைகளைப் பாடி உலகிற்கு பல கீர்த்தனைகளை அறிமுகம் செய்தவர். திருப்புகழ் பாடும் வழக்கத்தையும் கொண்டு வந்தவர் இவரே. பல்லவி பாடுவதில் நிகரற்றவராக விளங்கினூர். சங்கீத உலகிற்குச் சக்கரவர்த்தியாக விளங்கினூர்.



## புதுக்கோட்டை மான் பூண்டியா பிள்ளை


கஞ்சிரா என்ற வாத்தியத்தைக் கச்சேரியில் மிருதங்கத்திற்கு அடுத்தபடியாக பக்க வாத்தியமாகச் சேர்த்து வாசிக்கும்படி செய்தவர் இவரே. இவ்வாத்தியத்தில் அபரிமிதமாக வாசித்துப் பெரும் புகழ் அடைந்தார்.





## திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் அவர்கள்

மேல் நாட்டு வாத்தியமான பிடில் வாத்தியத்தை முதன் முதலில் தஞ்சை வடிவேல் பிள்ளை கர்னுடக சங்கீத மகா வாசித்துக் காட்டினூர். அவருக்குப் பிறகு தற்காலம் இந்த வாத்தியத்தைப் பலரும் வாசிக்கும் படியும் அதன் பெருமைகளை எடுத்துக் காட்டி வாசித்த பெரும் புகழ் இவர்களுக்கே உரியது.



## கும்பகோணம் அழகநம்பியா பிள்ளை

இவர் தஞ்சை கந்தசாமி நட்டுவனர் அவர்களிடம் மிருதங்கம் பயின்று பரத நாட்டியக் கச்சேரியில் பல ஆண்டுகள் வாசித்துப் பெரும் புகழ் அடைந்தார். அதன்பின் இவர் சங்கீதக் கச்சேரிகளில் வாசிக்கத் தலைப்பட்டதும் இவர் வாசிக்கும்போது மிருதங்கத்தின் நாதம் எல்லோரையும் மெய் மறக்கச் செய்தது.



### தஞ்சை நாராயணசாமி அய்யர்

சங்கீதக் கச்சேரிகளில் மிருதங்கம் வாசிப்பவர்களைப் பின்புறத்தில் அமர்ந்து வாசிக்கும்படியும் அரிகளைகளில் நின்றுகொண்டு வாசிக்கும் பழக்கமும் இருந்தது நாராயணசாமி அய்யர் அவர்கள் மிருதங்கம் வாசிக்க தலைப்பட்டதும் மிருதங்கத்திற்குப் பாட்டுகாரருடன் சமமாக அமர்ந்து வாசிக்கும்படியும்கௌரவம்கொடுக்கப்பட்டது



### கொன்னக்கோல் பக்கிரியா பிள்ளை

இவர் ஆரம்பத்தில் பாடிக் கொண்டும் நட்டுவாங்கம் செய்து கொண்டும் வந்தார். சாரீரம்வசதி இல்லாமல் போகவே உடன் தவில் வாத்தியத்தைப் பழக்கம் செய்து அக்காலத்தில் மகாவித்வான்களாக விளங்கிய சின்ன பக்கிரியாபிள்ளை, முதலியவர்களுக்கு தவில் வாசித்து பெரும் |கழ் அடைந்தார்.

### கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்ய'ர்

இவர்|ஆரம்பத்தில்பந்தநல்லூர் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையிடம் சிக்ஷைபெற்றவர். இவரது சாரீரம் கட்டையாக இருந்தபோதிலும்' கச்சேரிகளைப் பரிமளிக்கும்படி செய்து பெரும்புகழ். அடைந்தவர். லய ஞானத்தில் நிகரற்றவராகவும், விளங்கியவர். இவர்களுடைய கச்சேரியைக் கேட்ட பலரும் இன்றும் புகழ்ந்துகொண்டிருப்பதையும் நாம் கேட்கிறோம்.



### இராமனுதபுரம பூச்சி சீனிவாச அய்யங்கார்

இவர் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் மாணாக்கர். பல்லவி பாடுவதிலும் வல்லவர். இராமனுதபுரம் சமஸ்தான வித்வானாக விளங்கி பெரும்புகழ் அடைந்தவர். இவர் பல தான வர்ணங்களும், கீர்த்தனைகள் ஜாவளி, முதலிய பல பாடல்களை இயற்றி பெரும்புகழ் அடைந்தவர்.





### தஞ்சை பொன்னையாபிள்ளை

இவர் சங்கீதத்தில் மகாவித்வானாக விளங்கியவர். தமிழிசை இயக்கம் தோன்றிய காலத்தில் இசைக்கு ஆரம்ப பாடம் தமிழில் இல்லையே என்றகுரல் கிளம்பியதும் பிள்ளை அவர்கள் தாமே, ஆரம்பப் பாடங்களான கீதம், லக்ஷணகீதம், ஸ்வரஜதி, சூளாதிப்ரபந்தம், வர்ணம் முதலிய ஆரம்ப பாடங்களை முதன் முதலில் தமிழில் செய்தவர்.



### திருச்சி பிடில் கோவிந்தசாமிபிள்ளை

மேல்நாட்டு வாத்தியத்தை முதன் முதலில் வாசித்துகாட்டிய வடிவேல் பிள்ளைக்குப் பிறகு, கோவிந்தசாமிபிள்ளை அவர்கள் தனி பிடில் கச்சேரியாகவும் செய்து பெருப்புகழ் அடைந்தார். பாட்டுக் கச்சேரியுடன் இவர் பக்கவாத்தியம் சேர்ந்தாலே அந்தக் கச்சேரிக்கு பெரும் புகழும், கீர்த்தியும் அந்தக் காலத்தில் ஏற்பட்டது.


### மதுரை பொன்னுசாமி பிள்ளை


திமிரி நாதசுரமும், சுல இடங்களில் பாரி நாதசுரமும்வாசிக்கப்பட்டு வந்ததைப் பிள்ளை அவர்கள் திமிரி நாதஸ்வரத்தின் ஓசையையும் பாரி நாதசுரத்தின ஓசையையும் தன் ஞான பலத்தினுல் தாமே தெளிவுற ஆராய்ச்சி செய்ததின்பேரில் தற்காலம் வாசித்துவரும் நாதஸ்வரத்தைக் கண்டுபிடித்து வாசித்து பெரும் புகழ் அடைந்தார்.



### மன்னார்குடி பக்கிரியா பிள்ளை

இவர் நாதஸ்வரத்தில் மகா வித்வானாக விளங்கினர். ஒரு இரவு முழுமையும் ஒரே ராகத்தை வாசித்துக் கேட்போரை மெய்மறக்கச் செய்தவர்இவரே பல்லவிவாசிப்பதிலும் ராகம் வாசிப்பதிலும் பிருக்காக்களை மிக அபரிமிதமாக வாசித்து பெரும் புகழ் அடைந்த மகா வித்வான்.





### கோடீஸ்வர அய்யர் அவர்கள்

இவர் கவி குஞ்சர பாரதியாரின் வம்சம். 72 மேளகர்த்தா ராகங்களிலும், அழகாக கவி குஞ்சர தாசன் என்ற முத்திரையோடு தமிழில் பேரின்ப கீர்த்தனைகளாகச் செய்து கியாதி அடைந்தவர். இவர் சாகித்தியங்களில் வர்ண கிரமங்கள் மிகவும் அழகோடு அமைந்திருக்கிறது.



### மதுரை புஷ்பவனம்

இவருடைய சரீர மேன்மையை இன்றும் பலரும் புகழ்கின்றார்கள். இவரது கச்சேரி, ஆரம்ப முதல் இறுதிவரை மிக ரஞ்சகமாகவும், சுருதி சுத்தமாகவும், லய சுத்தமாக கேட்போர் மெய்மறக்கச் செய்யும் படியும் இருக்கும். பிறருக்கு சாரீரத்தில் இல்லாத ஓர் இனிமையும் குளுமையும் இவரது சாரீரத்தில் அடைந்திருந்தது இவர் பல கச்சேரிகள் அபரிமிதமாகச் செய்து பெரும்புகழ் அடைந்த மகா வித்வான் ஆவார்.

# தமிழ்ப்பெண்கள் பண்புள்ளம்

பண்டிதை க. இராசேஸ்வரி அம்மையார்
யாழ்ப்பாணம்

சரித்திர காலந்தொட்டு அணுக்குண்டு காலம்வரை அளவிறந்த மாறுதல்களை மக்கள் கண்டுள்ளார்கள். ஒவ்வோர் அசைவிற்கும் ஒவ்வொரு மாறுதலுக்கும் ஆற்றலே (energy) காரணம் என்று விஞ்ஞானிகள் விளம்புகின்றார்கள். விஞ்ஞானவுலகில் மாத்திரமன்றி அன்றாட வாழ்க்கையிலும் ஆற்றலே உதவுகின்றது. சிறப்பாக அகவாழ்விலுள்ள ஆற்றலை 'சக்தி' என்று அழைப்பார்கள். சக்தியே பெண்ணாகும். அகவாழ்விலும் புறவாழ்விலும் மக்களுக்கு ஆற்றலும் வலிமையும் அளிப்பது தாய்மையாகும். 'வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா' என வீறுகொண்டு கூறுகிறார் பாரதியார். இவ்வாற்றலெல்லாம் பெண்களின் பண்பாடே. பண்பாட்டின் கண்ணாடியே பெண்ணுள்ளம்.

தமிழ்ப் பெண்களின் விழுமிய பண்பாட்டிற்கு அடிப்படையாய் அமைந்தது அன்பு. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்பது வள்ளுவன் கண்ட இல்லற நல்லறமாகும். அறத்திற்கு அடிப்படையாவதும் அன்பே. அன்பிற்குக் கருவியாகவுள்ளது, இயற்கையாகவே மக்களிடம் அமைந்த ஆண், பெண் கூட்டுறவு. ஆகவே, பெண்ணிடம் முதல் முதல் தோன்றுகின்ற தலையாய அன்பு 'காதல்' என்ற பெயர் பெறும். பண்டைத் தமிழ் நூல்களிலே காதலுக்கும் காமத்துக்கும் வேற்றுமை கிடையாது. இல்லறத்தின் பயனை ஒல்காப் புகழ்பெறு தொல்காப்பியனார் "காமஞ் சான்ற கடைக்கோட் காலை" என்று தொடங்கி காமம், அல்லது இல்லறவன்பே வாழ்க்கைக்கு அடிப்படையெனக் குறிப்பிடுகிறார்.

தமிழ்ப்பெண் கண்ட காதற் சிறப்பு உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்புடன் ஒப்பிடப்பட்டது. திருக்குறளில் காதற் சிறப்புரைக்க வந்த தலைவன்,

"உடம்பொ டுயிரிடை
யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை
நட்பு"

என வியக்கின்றான்.

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்த வாழ்வில் பெண்ணின் காதல் தன்னலமற்றது. பெற்றோர் உற்றோர் உறவினரை அவள் மறக்கின்றாள்; செல்வத்தைத் தள்ளுகின்றாள்; செயலை மறக்கின்றாள்; தன்னையே மறக்கிறாள். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற உன்னத நிலைமை எய்துகின்றாள். இத்தகைய பெண்களின் மனோநிலையைப் பழந்தமிழ் நூல்கள் படம்பிடித்துக் காட்டுவன. செல்வப்பெருக்கிற் றிளைத்த தலைவி ஊழ்வினை கூட்ட, பாழ்படுத்தும் வறுமையால் நலிந்தபதியை அடைந்தாள். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையானாள். வறுமை நிறைந்த கணவனின் இல்லம் இந்திரலோகமாக மாறியது. தன்னைக் காணவந்த தோழியை நோக்கி எவ்வளவு தான் தன் பிறந்தகம் செல்வத்திற்றிளைத்த போதினும், தன் கணவன் வறுமையால் நலிந்த போதும்,

"வேண்டேன் பிறந்தகத்
தீண்டிய வாழ்வே
......................................
நன்றே தோழிநம்
கணவன் வாழ்வே."

என இறுமாப்புடன் மொழிகின்றாள்.

"கொண்ட கொழுநன்
குடிவற னுற்றெனக்
கொடுத்த தாதை
கொழுஞ்சோ றுள்ளாள்."

எனும் நற்றிணை அடிகளும் பெண்களின் மனப் பண்பின் திறனைத் தெற்றென விளக்குவன.

மேலும் பழந்தமிழ் மகளிர் கணவனுக்கு உற்ற மனைவியாய் அமைந்து அவர் பணியே தம் நலனாய்க் கொண்டதோடமையாது தம் கணவர் நெறி பிறழ்ந்த காலத்திலே அவரை நன்னெறிக் குய்த்தலையும் தமது உரிமையும் கடமையுமாகக் கொண்டனர். "தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்" என ஆணையிட்டு, இன்பத்துறையில் ஈடுபட்டுத் தம்பால் வந்த கணவனைத் தடுத்து நிறுத்தி அன்றுதொட்டுத் திருநீலகண்டர் மனதாலும் பெண்களைத் தீண்டாதொழிக்கச் செய்த வரலாறும், சமண்வலைப்பட்ட பாண்டிய மன்னனை மங்கையர்க்கரசியார் சம்பந்தர் துணைக்கொண்டு சிவநெறிக்குய்த்த வரலாறும், பழந்தமிழ் மகளிரின் திறனை விளக்குவனவன்றோ?

தமிழ்ப் பெண்களின் காதலுள்ளம் கற்பு வெள்ளத்திலே மிதந்தது. பெண்ணுக்கு ஒப்பாரும் மிக்காரும் யாருமிலர் எனத் துணிந்து கூறும் வள்ளுவரும் பெரிய நிபந்தனை ஒன்றை எச்சரிக்கையாக நிறுத்துகின்றார். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று பெருமை பாராட்ட வந்தவர் "கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" என்றல்லவோ இயம்புகின்றார். இத்தகைய கற்பினாலேயே பெண்குலம் உயர்ந்தது. தமிழ்நாடு வாழ்ந்தது. கற்பென்பது தற்காத்தல். 'நிறைகாக்கும் காப்பையே' காப்பாகப் பெண்கள் அணிந்தனர். எவ்விடர் எவர்க்கு நேரினும் தம் கொழுநர்க்கு இழிவு நேர்ந்தால் இம்மியும் பொறார் தமிழ்ப் பெண்கள். கற்பினுக்கருங்கலமாம் கண்ணகி, கணவன் கொலையுண்ட செய்தி கேட்டுக் கலங்கினாள்.

"பெண்டிரு முண்டுகொல்
பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுநருறு
குறைதாங் குறூஉம்
பெண்டிரு முண்டுகொல்
பெண்டிரு முண்டுகொல்."

எனக் கதறுகிறாள். கொண்ட கொழுநனுக்குற்ற குற்றங் குறைகளைப் பொறுத்தலே பெண்ணின் கற்புக்குரிய இலக்கணங்களுள் சிறந்தது. இங்ஙனம் கணவனின் குறை தாங்கும் பெரும் பண்பினாலன்றோ கண்ணகி தன்னைப் பிரிந்து மாதவி வயப்பட்டிருந்த கணவன் தன்பால் மீண்டு, வாணிபம் செய்து மீண்டும் பொருளீட்டக் கருதித் தன்னுடன் எழுக எனக் கூறியதும் உடனே தன் காதற் கணவனுடன் புறப்பட்டாள். தன் கணவன் அடாத பழி சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான் எனக் கேள்வியுற்றதும் அவனது குற்றமற்ற தன்மையை நிலை நிறுத்துதல் தன் கடனெனப் பொங்கி எழுந்தாள். கணவன் உயிருடனிருந்த காலத்து அவன் வழி நிற்றலே தன் கடமையாகக் கொண்ட பெண்ணரசி அவன் உயிரிழந்து பழி ஏற்றப்பட்டு நின்ற காலத்திலே கணவனின் பழியைத் துடைத்தல் தன் கடனாகக் கொண்டாள். இதனாலன்றோ பாண்டியன் அவைக்களத்து வழக்குரைத்துக் கணவன் பழியைத் துடைத்தாள்: மதுரையையும் தீக்கிரையாக்கினாள். இவளன்றோ தற்காத்துத் தற்கொண்டாற் பேணினாள். தகைசான்ற சொற்காத்தாள். சோர்விலாளுமாயினாள். இத்தகைய பண்புடைமையே தமிழ்ப் பெண்களின் உள்ள நிலையாகும்.

கற்புநெறி தவறாத பொற்புடைய மாதர் இல்வாழ்க்கையில் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். இதனாலேயே 'இல்லாள்' என்ற சிறப்புப் பெயரை மெல்லியர் பெற்றனர். இல்லறத்தில் விருந்தோம்பலே முதற் கடமையாகக் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் உற்றார் உறவினர் விலாப்புடைக்க உண்பதற்கு அறுசுவையுண்டி அகங்களிக்கப் படைத்து, 'அதை விருந்தென்று கொண்டு, புதிதாக வந்தோரை முகந்திரிந்து அனுப்புவது போலன்றி, முற்காலத்தில் 'விருந்தினர்' என்பதைப் 'புதியவர்' என்றே பொருள் கொண்டனர். இன்று நடைபெறும் விருந்தெல்லாம் 'சாப்பாடு போடு

தல்' என்ற பெயரையே பெறத் தகுந்தது. "இருந்தோம்பி இல் வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதே இல்லறத்திற் கண்ட நல்லறமாகும். காதலுக்காகக் கணவனை விழைந்த பெண்ணுள்ளம், முதிர்ந்து விருந்துக்காகக் கணவனை விழைந்தது. கணவனைப் பிரிய நேர்ந்த கண்ணகியின் உள்ளம் அவன் காதலுக்காக மாத்திரம் வருந்தாது கணவனின்றி விருந்தோம்பலையும் இழக்க நேர்ந்ததென வருந்துகின்றது.

"அறவோர்க் களித்தலும்
அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதி ரோம்பலும்
இழந்த வென்னை."

எனக் கூறியவள் கற்பினுக்கணியாம் கண்ணகி என்னும் தமிழ்த் தெய்வப்பெண். அசோகவனத்தில் அளவிறந்த அல்லலுற்ற சிதை இயம் பொண்ணு இடுக்கணுழந்த காலத்தும் இல்லறத்தைப் பற்றியே சிந்திக்கின்றாள். தன்னில்லத்துக்கு விருந்து சென்றால் தானின்றித் தனித்து வாழுங் கணவன் நிலை என்னுமோ என அவள் வருந்தும் மனப் பான்மையைக் கல்விக்கடலாம் கம்பனின் கவின்பெறு தமிழுள்ளம் நயம்பட நவில்கின்றது. தலைவனும் தலைவியும் கொண்ட ஊடலைத் தடுத்து, உவகை பொங்க அவர்களை களிப்பூட்ட வைக்கும் ஆற்றல் விருந்தினர்க்கு உண்டு என்று அகப்பொருள் நூல்கள் அறைகின்றன. விருந்தோம்பல் எனும் பெரும் பண்பினாலேயே தமிழ் நாட்டில் வசியும் வளனும் சுரந்தன என்றால் அது மிகையாகாது.

அன்பும் அறமும் நிறைந்த அக வாழ்வே புற வாழ்விற்கு அடிப்படையாய் அமைந்தது. அக வாழ்வு புற வாழ்வாக மாறியது. வீட்டு வாழ்வு நாட்டு வாழ்வாக விளங்கியது. எந்த நாட்டிலோ எவ்வகைச் சமூகத்திலோ அன்றி எவ் வீட்டிலோ பெண்குலம் தாழ்வுற்றிருக்கின்றதோ, அந் நாட்டிலோ, சமூகத்திலோ, வீட்டிலோ, அன்பு முதிர்ச்சியும் அறிவுப் பெருக்கமும் இன்பக் கலைகளும் இணையில் ஆக்கமும் காணமுடியா. தமிழர் சமூகம் முன்னேற்ற மடைந்திருந்ததற்கு முதற்காரணம் இச் சமூகத்தில் பெண்களின் உணர்ச்சியும் முயற்சியுமேயாகும். என்று சமூகத்திலே பெண் தாழ்ந்தவள் எனும் கருத்துத் தோன்றியதோ அன்றுதான் தமிழ்ச் சமூகத்தின்; தமிழின் வீழ்ச்சிக்காலம் ஆரம்பமாயிற்று. பழந் தமிழ் நாட்டிலே தமிழர் சமூகமும் தமிழ்க்கலையும் உயர்வுற்றிருந்தமை, அக்காலத் தமிழ்ப் பெண்களின் உயர்ந்தவுண்மை, பண்பாடு, சேவை என்பவற்றினாலேயாம்.

புறநானூறு முதலாகிய பழந்தமிழ் நூல்களிலே எத்தனையோ பெண் புலவர்களின் சுவை கனிந்த பாடல்களைக் காண்கிறோம். கவிஞர்களின் உளப்பண்பாட்டைக் காட்டுவது அன்னார் பாடிய தீஞ்சுவைப் பாடல்களேயாகும். இப் புலவர்களின் பாடல்கள் இவர்களின் சொற்பொருளாற்றல்களைக் காட்டுவதோடு அமையாது அவர்களின் வீரம், தாய்மை, அன்பு முதலாகிய விழுமிய குணங்களையும் தெற்றென விளக்குகின்றன. சங்ககாலப் பெண்கள் கல்வியறிவும் பல்கலை ஞானமும் படைத்திருந்தார்கள். "பெண்ணறி வென்பது பெரும்பேதமைத்தே" எனும் வீண் கொள்கை இடைக்காலத்தில்தான் தமிழ் நாட்டில் ஏற்படலாயிற்று.

"தொட்டிலாட்டும் கையே செங்கோலோச்சும் கை" (The hand that rocks the cradle rules the world) எனும் ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. அன்பும் அறிவும் ஆற்றலும் படைத்த தாய்மாரே விழுமிய வீரரை ஆக்கித் தர முடியும். ஒக்கூர் மாசாத்தியார் எனும் பெண்புலவர் தமையனையும் கணவனையும் போரில் இழந்த ஒரு பெண், மீண்டும் போர்ப் பறை கேட்டதும் சிறு பாலகனாகிய தன் ஒரே மகனை அழைத்து வேல் கைக்கொடுத்து, வெளிது விலித்துடீஇப், பாறுமயிர்க்குடுமி எண்ணெய் நீவிப் போர்க்களம் செல்லென விடுத்த சிறப்பைப் பாடினர். மற்றொரு வீரத்தாய் தன் மகன் போர்க்களத்தில் மார்பிலே புண்பட்டு இறந்து கிடத்தலைக் கண்டதும் அவனைப் பெற்றஞான்று உற்ற மகிழ்ச்சியினும் பெரிதும் உவந்தனள். பொன்முடியார் எனும் புலவர், ஒரு தாயின் கூற்றாகக் கூறிய :

"ஈன்று புறந்தருதல்
என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே
நல்நடை நல்குதல்
வேந்தர்க்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம்
முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே."

எனும் புறப்பாட்டு அக்காலத் தாயரின் விழுமிய வீரவுள்ளத்தை விளக்குவது ஆகாதோ? இன்னும் ஒரு அன்னை தன் மகனைப் பற்றிக் கூறுமிடத்து "புலி சேர்ந்து போகிய கல்லமாபோல, ஈன்ற வயிறோ இதுவே தோன்றுவன் மாதோ போர்க் களத்தானே" எனப் புகன்றாள். இத் தகைய மனோவலிமை படைத்த வீரப் பெண்களினாலன்றோ பழந் தமிழ் நாட்டில் வீரப் புதல்வர்கள் பாழ்ந்தனர். இத்தகைத் தாயரன்றோ தண்டமிழ் நாட்டின் தனிப்பண்புக்குக் காரணமாயினர். இவர்களாலன்றோ தமிழுலகம் கலைஞானம், படைத் தொழில், வாணிபம் முதலானவற்றை நன்கு வளர்த்துப் பீடு பெற்றது.

ஔவையெனும் தமிழ் மூதாட்டியின் கவிவன்மையையும், அதிகமான் போன்ற அரசரோடு அவர் கொண்டிருந்த பெரும் நட்புரிமையையும், அதிகமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்று உரைத்த அவர் சொல்லாற்றல் திறனையும் இன்றைய தமிழுலகம் மறக்க முடியுமா? நைடதம் என்னும் பழந்தமிழ் நூலின் திறனை ஆராய்ந்து முடிபுரைத்த அதிவீரராமபாண்டியன் மனைவியின் தமிழறிவின் திறனைத் தமிழுலகம் மறக்க முடியாது. பழந் தமிழ் நாட்டிலே இசைவல்ல பாடினிகள் வாழ்ந்து பாடிப் பரிசு பெற்றார்கள். சீவக சிந்தாமணி, பெருங்கதை முதலான நூல்களிற் காணும் தலைவியர் யாழ் முதலாம் பல்வகைக் கலைகளில் வல்லுநராய் வாழ்ந்தார்கள்.

அன்பும் காதலும் பூண்டு அறநெறி வழுவாது இல்லறம் காத்த மெல்லியர், வீரப் புதல்வர்களை ஈன்று வளர்த்துத் தமிழ்நாட்டுக்களித்த வீர மங்கையர், இடைக்காலத்தே தமிழ் நாட்டிலே புகுந்த அந்நியர் தொடர்பால் – தமிழருள்ளத்தில் ஏற்பட்ட மாறுதலினால், தம்முன்னத நிலையையிழந்து அடிமை வாழ்வு வாழ்வாராயினர். வீட்டு வாழ்விலும் நாட்டு வாழ்விலும் விழுமிய தொண்டாற்றி உயர்ந்த நிலை வகித்த பெண், சமையலறையில் மாத்திரமே இடம் பெற்றாள். மாமந்திரியின் மதி படைத்தவளாய் கணவனுக்கு இன்பத்திலும் துன்பத்திலும் உறுதுணையாய் அமைந்த பெண்ணின் மாண்பை மறந்து அவளுக்குக் கல்வியறிவு அவசியமற்றதெனக் கருதினர் இடைக்காலத் தமிழர். வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டிவைத்தனர். இதனால்தான் இக்காலத்தே தமிழர் சமூகம் வீழ்ச்சி அடைந்தது. தமிழரின் கலைகள் மறைந்தன. அடிமை வாழ்வுக்கு அஞ்சி அவமானம் கருதாத புதல்வர்களும் தமிழ்நாட்டில் தோன்றினர். மடைமையும் அடிமைத்தனமும் பூண்ட பெண்களின் புதல்வர்களும் அடிமைவாழ்வுக்கஞ்சாதவராய் இருந்ததில் வியப்பெதுவுமில்லை.

தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பாரதி போன்ற கவிஞர் தோன்றினர். இவரின் செந்தமிழ்ப் பாடல்களால் தமிழ்நாடு அடிமை மோகம் நீங்கிப் புத்துயிர் பெற்றது. தமிழ்ப் பெண்கள் தம் பெருமையை உணர்ந்து விழிப்புற்றனர். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றார் பாரதி. 'பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்' என வீறு கொண்டனர் புத்துயிர் பெற்ற தமிழ்ப் பெண்

கள். பெண்களின் அடிமைத் தளை அறுந்தது. பெண் கல்வி மிகுந்தது. எந்தத் துறையிலும் பெண்கள் ஆண்களோடு சமமாகப் பங்குபற்ற முன்வந்தனர்.

ஆயின் கீழைத்தேச ஆண்களைப் பீடித்த ஆங்கில மோகம் பெண்களையும் பற்றியது. ஆங்கில மொழிக்கு மாத்திரமேயன்றித் தமக்கு ஒவ்வாத ஆங்கில நடை உடை பாவனைகளையும் பின்பற்றலாயினர். ஈழத்துக்கலைஞனாகிய ஆனந்தக் குமாரசாமி என்பவர் 'இந்திய நாட்டு நாகரிகம் சிதைவுறாமலிருக்கிறதென்றால் இந்தியப் பெண்கள் தம் தொன்மையான நாகரிகத்தைப் பேணிக் காத்தமையே' எனச் சமூகத்தில் பெண்களின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டினார். எனினும் தமிழ் நாட்டுப் பெண்கள் சிலரின் ஆங்கில நாகரிக மோகம் இன்று தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிக உயர்ச்சிக்கும் இடையூறாகவுள்ளது. 'அப்பா, அம்மா' என அமுதூறும் தமிழ் மொழியில் அழைக்காது தமிழ்க் குழந்தைகள், 'பப்பா, மம்மா' என அழைப்பது போன்ற போலி நாகரிகத்தைப் பேணி வரும் பெண்கள் கூட்டமே தமிழரின் இழிவுக்குக் காரணமாவர். இத்தகைய மனப்பான்மை ஒழிந்து தமிழ்ப்பெண்களின் உள்ளத்திலே தமிழர் நாகரிகத்தையும் கலையையும் மொழியையும் பேணும் வேட்கை ஏற்படின் தமிழர் சமூகம் முன்னேறும்; பெண்குலம் ஈடேறும். சமவுரிமைக்காக ஆண்களோடு போரிடும் பெண்கள் ஆண்களைப் போன்றே தங்களுக்குமுள்ள சம கடமையை உணர்ந்து கொள்ள வேண்டும். புற வாழ்க்கையில் எவ்வளவுதான் ஈடுபட்டபோதினும் மனைவிளக்காய் இல்லறம் காத்தலும், புதல்வரைப் பேணலுமாகிய சிறந்த பணிகளை என்றும் பெண்கள் மறந்துவிடுதல் கூடாது. ஆணினமும் பெண்ணினமும் ஒன்றோடொன்று போரிட்டு வாழ முடியாது. ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து ஒன்றுபட்டுக் கடமையாற்றலே மனித சமூகத்துக்கு நன்மையளிக்கும். தமிழ் மொழியையும், தமிழ்க் கலையையும், தமிழ்ப் பண்பையும் தமிழ்ப் பெண்கள் விரும்பிப் பேணுவாராயின் தமிழினம் முழுவதும் உய்ந்து விடும் என்பதிற் சந்தேகம் கிடையாது.

---

# ★ கிழக்கும் மேற்கும் ★

**[இன்று மணிபார்க்க வேண்டுமென்றால் நாம் எல்லாம் நம்முடைய மணிக்கட்டுகளைத்தான் திருப்புகிறோம். ஆனால் மணி பார்க்க வேண்டுமென்றால் மக்கள் மாதாகோவிலை நோக்கி ஓடிய காலம் ஒன்று இருந்தது.**

**அங்கு சூரியனுடைய நிழலைக் கொண்டு மணியைக் கண்டு பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட நிழற் பொறிகள் இவை]**




சென்னை சாந்தோம் மாதாகோயிலில் உள்ள ரோமன் எண்கள் மணி பொறிக்கப்பட்டுள்ள இந்தக் கல்லில் சூரியனுடைய ஒளிக்கிரணங்கள் விழுந்து சரியான மணியைக் காட்டுகிறது.



மேற்கு ஜெர்மனியிலுள்ள 'ஹாம்பர்க்' நகரில் உள்ள மணிப் பொறி இது. இந்த நிழற் பொறியில் சூரிய ஒளியானது ஒரு கழியின் மீது விழுந்து, அந்தக் கழியின் நிழல் மணி குறிக்கப்பட்டுள்ள வட்டத்தின் மீது விழுந்து சரியான நேரத்தைக் காட்டுகின்றது.

புகைப்படம்: பிலோ இருதயநாத்.

## ஆவும் அரசனும்



தமிழகத்தில் முடியுடை வேந்தர்கள் வாழ்ந்தாலும், அவர்கள் மக்கள் முகங் கோணமல்தான் நடந்து வந்தார்கள். தவறு செய்த தன் கைகளையே அறுத்தெறிந்த கொற்கைப் பாண்டியனும், வளைந்த செங்கோலை நிமிர்த்துவதற்காகத் தன் உயிரையே இழந்த நெடுஞ்செழியனும் வாழ்ந்த தமிழகத்தில் பாண்டியர்களுக்குச் சோழர்கள் எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதைக் கூறுவதைப்போல் பசுவிற்கு நீதி வழங்குவதற்காகத் தன்னுடைய மைந்தனையே தேர்க்காலில் பலியிட்ட மனுநீதிச் சோழனும் வாழ்ந்தான். நீதியின் முன்னல், ஆவும் அரசனும்கூட ஒன்றுதான் என நீதி செலுத்தி மக்களாட்சிப் பண்பை வளர்த்தான்.

*தஞ்சைத்தரணி தந்த புகைப்படமன்னன்*
**என். கே. ராமகிருஷ்ண**

## ஆசை தவிர்க்க வந்த ஆணழகு



ஆசை தவிர்க்க வந்த ஆணழகே சித்திரமே !
ஓசை யளித்து மலர் உண்ணுகின்ற தேன்வண்டே !!

*புகைப்படம் – தஞ்சைத் தரணி தந்த புகைப்பட மன்னன் :*
**என். கே. ராமகிருஷ்ண**

## பூனையும் பிஞ்சும்

வெள்ளை நிறத்துப் பூனையோடு விளையாடும்
வெள்ளை உள்ளத்து இளம் பிஞ்சு !

புகைப்படம் : அகில உலகப் புகழ் **உசேன்**



# பார் புகழும் பாரத மதாலயங்கள்



ஔரங்கசீப் மசூதி
காசி



பொற்கோயில்
திருப்பதி



வேளாங்கண்ணி
நாகப்பட்டினம்



காளிகோயில்
கல்கத்தா



பொற்கோயில்
அமிருதசரஸ்



புத்தர்கோயில்
புத்தகயா



லிங்கராஜர் கோயில்
புவனேஸ்வர்



ஜைனர் கோயில்
புவனேஸ்வரர்

BALU BROS

புகைப்படம்: தொ.மு.பத்மனுபன்

# அஞ்சல் தலை வரலாறு

— 'ஜீவகன்' —

இன்று நாம் இருக்குமிடத்தி லிருந்து இந்த உலகத்தின் எந்த பாகத்திற்கு வேண்டுமானாலும் தபால் களின் மூலம் வெகு துரிதமாய் செய்தி களை அனுப்ப முடிகிறது. ஆனால், இப்படிப்பட்டதொரு வசதியின் வழிக்காக அரும்பாடுபட்டவர்களும், சிரமத்தையும், சிக்கலையும் பொருட் படுத்தாது வழிவழியாக முயன்ற பெரியார்களும் பலருண்டு. ஆகவே, தபால் முறை வசதிகள் எத்தனை ஆண்டுகளாக பழக்கத்திலுள்ளது என்பதை சுருக்கமாக இப்பொழுது நாம் காணப்போகிறோம்.

பைபிளில் - செய்திகள் போக்கு வரத்துப் பற்றியும் குறிப்பிடப்பட் டிருப்பதால் இக்கடின பணி சுமார் 2000 ஆண்டுகளாக பழக்கத்தில் உள்ளது என்றும் தெரியவருகிறது. ஆனால், நாகரிகம் தோன்றியதே கிழக்கில் என்ற உலக சரித்திர ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிரா யத்தையும், இந்தியாவிலிருந்துதான் தபால் வசதி முறைகளை கிழக்கு நாடுகள் கற்றன என்ற உண்மையை யும் ஒப்பிட்டுப் பார்த்தால்-நம் நாட் டில் இந்த செய்தி போக்கு வரத்து பணி பல ஆயிரம் ஆண்டுகளாக பழக்க வழக்கத்திலிருந்து வருகிறது என்றும் நிச்சயம் கூறலாம்.

14-ம் நூற்றாண்டில் முகமத் துக் லக் ஆட்சியிலும், அதற்குப் பின் முகலாய மன்னர்கள் ஆட்சி காலங் களிலும் இச்சேவை நல்ல வளர்ச் சியைப் பெற்று நாடெங்கும் பரவி வந்தது என்று 'பெரிஸ்டா' முதலான சரித்திர ஆராய்ச்சியாளர்களின் விளக்க உரைகளிலிருந்து தெளிவா கிறது.

இருப்பினும் இன்று தபால் நிலையங் கள் நிருவப்பட்டிருக்கும் நிலையான நல்ல முறையை ஆரம்பித்து வைத் தது கிழக்கிந்திய கம்பெனியேயாகும். 1600-ம் ஆண்டில் அரசியிடமிருந்து உரிமைப் பத்திரம் பெற்று வாணிபம் துவக்கிட்ட கிழக்கிந்தியக் கம்பெனி யின் அலுவல்களும், அதன் செல் வாக்கும் பெருகி, வேலைகளும் விருத்தி யாகவே, அக்கம்பெனி அதிகாரிகளுக் குள் செய்திகளைப் பரப்பிட 1774-ம் வருடம் மார்ச் 31-ந் தேதி போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் என்ற பதவியை நிர்ணயித்து, இன்றைய விருத்தியின் முற்போக்கிற்காக அப்பொழுது வித் திட்டார்கள்.

கம்பெனி சம்பந்தப்பட்டவைகள் நீங்கலாக, பொது மக்களுக்கும் இந்த வசதியை அளிக்கப்பட்டது. இதற்காக அணா 2-லிருந்து ரூ. 5 வரையில் கட்டணம் வசூலிக்கப் பட்டது.

ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ் பிர புக்களின் காலங்களில் இங்கிலாந்தி லிருந்து ஒரு கடிதம் கிழக்கிந்திய கம்பெனியின் கப்பல் மூலம் கல்கத் தாவை வந்தடைய ஒரு வருடம் ஆயிற்றும். ஏனெனில் கப்பல், ஆப் ரிக்கா கண்டம் முழுவதையுமே சுற் றிக் கொண்டு வந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். அல்லாமல் அப்பொழுது வேறு வழியும் இல்லா திருந்ததுடன், அவசரச் செய்திகளும் காலம் கடந்தே கிடைத்து பயனற்ற வையாகின.

ஆகவே, 1829-ல் இந்த தாமதத் தைத் தவிர்க்க கிழக்கிந்திய கம்பெனி யின் நிர்வாகிகள் பெரும் பாடுபட்டு எகிப்திய மன்னனின் அனுமதியைப் பெற்று சூயஸ் கால்வாய் மூலம் குறுக்கு வழியாகவும், முழு கடல் மார்க்கத்தையும் தவிர்த்து சற்று நில மார்க்கமாகவும் செய்திகள் போக்குவரத்தை ஒரு வருடத்தி லிருந்து 100 நாட்களில் கொண்டு வந்தார்கள்.

1836-ல் லெப்டினெண்ட் வேகர்ன் என்ற அதிகாரியொருவர் தனதுவிடா முயற்சியின் பலனாய் இந்த 100 நாட் களை 60 நாட்களில் கொண்டு வந்தார்.

பின்னர் 1841-ல் லண்டனிலிருந்து பம்பாய்க்கு செய்தி போக்கு வரத்துக் கள் நடைபெற 30 நாட்களும் 10மணி யும் ஆகும்படி செய்தார். இப்படிப் பட்ட இந்த அரிய விடாமுயற்சியாள ரின் நற்சேவையை பாராட்டுவதற் காக சூயஸ் கால்வாயின் முகாந்திரத் தில் நினைவு சின்னமாய் அமைத்த வேகர்ன் சிலை இன்றும் உள்ளது.




வ. உ. சி.

1852-ல் சிந்து மாகாணத்தின் கமி ஷனராயிருந்த சர்பார்டல் பிரேர் என்பவரால் அஞ்சல் தலைகள் விற்ப தின்மூலம் கட்டணங்கள் வசூலிக்கும் முறையை ஆரம்பித்து வைக்கப்பட் டது. இந்த முறை மிகவும் வெற்றிகர மாகவும், லாபகரமாகவும் அமைந்த தால் இந்திய அரசாங்கம் 1854-ல் இந் தியா முழுவதிற்கும் இம்முறையையே பரப்பிற்று. அஞ்சல் தலைகள் இங்கி லாந்தில்தான் அச்சாக வேண்டு மென்ற கருத்தை எதிர்த்து கிழக்கிந் திய கம்பெனி நிர்வாகிகள் கல்கத்தா விலேயே அச்சாக்க வேண்டுமென்ற முடிவு செய்து விட்டனர். அரையணா விலிருந்து ரூ. 1- வரையில் கட்டணங் கள் முதலில் வசூலிக்கப்பட்டன. 1895-லிருந்து ரூ. 2, 3, 5, ஆகியவை களுக்கு அஞ்சல் தலைகள் விற்பனைக்கு வந்தன. 1902-ல் ஏழாம் எட்வர்ட் உருவம் பொறித்த அஞ்சல் தலைகள் ரூ 10, 15, 25, ஆகிய மதிப் பில் அச்சாகி வெளி வந்தன. நாளுக்கு நாள் கம்பெனியின் தபால் போக்கு வரத்துகளும், பொதுமக்களின் தபால் போக்குவரத்துக்களும் பெருவாரியாக பெருகிக் கொண்டு வரவே, துரிதமாக அஞ்சல் தலைகளை அச்சியிடுவதற் காக இங்கிலாந்திற்கே அதன் வேலை களை அனுப்பி வைக்கப்பட்டன.


1926-ல் இந்திய அரசாங்கம் 'நாஸிக்' என்ற இடத்தில் அஞ்சல் தலைகளை அச்சாக்கும் பணியை துவக் கிற்று.

1947-ல் இந்தியா சுதந்திரம் அடை ந்த பிறகும், 1950-ல் குடியரசான பிறகும் இந்திய அஞ்சல் தலைகள் சுதந்திரமாகவே தயாரித்து ஆசிய, ஐரோப்பிய நாடுகளெல்லாமே ஆச்ச ரியப்படும் வகையில் வெளியிட்டு வரு கின்றது. பல தியாகிகளும், பிரமுகர் களும், நாட்டின் நல்வள சின்னங் களும் தொடர்ந்து அஞ்சல் தலை களில் பொறிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஒன்று...வடக்கு தெற்கு என்றபேதமின்றிநாங்கள் பல வருடங் களாகவே முறையிட்டுக்கொண்டே வரும் தியாகச்சுடர் வ. உ. சி., தெய் வப் புலவர் கம்பர், சுதந்திர பேரொளி கட்டபொம்மன் போன்ற இன்னும் பல அறிவு மேதைகளின் அஞ்சல் தலைகளும் விரையில் இடம் பெறவேண்டுமாய் அரசினை கேட்டுக் கொள்கிறோம். இனி நீங்கள் மேலே காணப்போகும் அஞ்சல் தலைகள்; சுதந்திரம் கிடைத்தபின் நம்மரசு வெளியிட்டவைகளும், அதற்கு முன் பிருந்தவைகளும், இன்னும் உலக அஞ்சல் தலைகளையும் ஒரே சமயத்தில் நீங்கள் காண தொகுத்துள்ளோம்...

# பலநாட்டு அஞ்சல் தலைகளும்...



# பாரதத்தின் அஞ்சல் தலைகளும் ...



வடக்கின் வளர்ச்சி

## நிருபாராய் பேட்டி

[பம்பாய் 'கலை' நிருபர் எஸ். நரசிம்மன்]

நரசிம்மன்: நமஸ்காரம்! தீபாவளி பண்டிகையான இந்த நன்னுளில் கலை வாசகர்கள் தங்களைச்சந்திக்க மிகவும் ஆவலாக இருக்கிறுர்கள்! பேட்டியை ஆரம்பிப்போமா!

நிருபாராய்:– எல்லோருக்கும் எனது அன்பார்ந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! எனக்கு ஞாபகம் இருக்கிறவரையில், விபரங்களைத் தெரிவிக்க முயலுகிறேன்!

கேள்வி:- நீங்கள் திரையுலகிற்கு அறிமுகமானதைப்பற்றிக் கூறுங்கள்!

பதில்:- நான் 1931-ம் வருடம் ஜனவரி 4–ந்தேதி பல்ஸார் என்ற ஊரில் பிறந்தேன். பத்தாவது வகுப்புவரை படித்திருக்கிறேன். அக்காலத்தில் எனக்குப் புராணப் படங்கள் பார்ப்பதில் மிக விருப்பமதிகம். ரன்ஜித் பிச்சர்ஸ் தயாரிப்பாளரான சந்துலால் ஷா முதலில் 'குணசுந்தரி' என்ற குஜராத்திப் படத்தில் எனக்கு முதலிலேயே பிரதமபாகத்தை அளித்தார். பெரும் வெற்றியடைந்தது. பிறகு சுமார் 10 குஜராத்திப் படங்களில் நடித்திருக்கிறேன்





நான் முதன் முதலாக நடித்த ஹிந்திபடம், மஹாரய் வாடியாவின் 'அமர்ராஜ்'. பிறகு அவுலாத், முனிம்ஜி, டாங்காவாலி, ஹரி ஹர் மஹாதேவ்; தோபிகா ஜமீன், பாஜிகர், பாபி, சுபர்மேன் ஆகியவை, நான் இதுவரை 125 படங்களில் நடித்ததில் முக்கியமானவை!

கேள்வி:- தற்சமயம் நடிக்கும் படங்கள் யாவை!

பதில்:- மஹாராணு பிரதாப், லால் கிலா, டாக்டர், ஆன்சல், ஏவி. எம். படம் போன்று 8 படங்களில் நடிக்கிறேன்!

கேள்வி :- நீங்கள் சிறந்த நடிப்பிற்கு பரிசு வாங்கிய படங்களின் பெயர் என்ன?

பதில்:– முனம்னஜீ! ஹர் ஹர் மாஹாதேவ், தோபிகா ஜமீன், ஹிராமோதி! நாக் பஞ்சமி போன்றவை!

கேள்வி:- தங்களுக்கு எவ்விதமான பாகத்தில் நடிக்க ஆவல்?

பதில்:- உணர்ச்சிகரமானபாகம் தான்!

கேள்வி:- நீங்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறீர்களா!

பதில்:- 1954 வருடம் இந்திய தூதுகோஷ்டியுடன் மாஸ்கோ சென்றேன்! பிறகு பன்காக், ஜப்பான், கரோல்வேரிக்கும் சென்றிருக்கிறேன்!

கேள்வி:- உங்கள் திருமணம் எவ்வருடம் நடந்தது?

பதில்:- 1945 வருடம்கமல்ராயை மணந்தேன். ஒரு செல்லக் குழந்தை செல்வமும் இருக்கிறது!

கேள்வி:- நீங்கள் இன்னும் எவ்வளவு படங்களில் நடிப்பதாக எண்ணங் கொண்டிருக்கிறீர்கள்?

பதில்:- (சிரித்துக்கொண்டே) ஆசைக்கு அளவில்லை!

கேள்வி:- நீங்கள் பெரும்பாலும் புராணப் படங்களிலும், சரித்திரப் படங்களிலும் நடிக்கிறீர்கள்! அப்பாகங்களில் நடிப்பதில் விருப்பமதிகமோ!

பதில்:- அப்படியொன்றுமில்லை நர்ன் படவுலகத்தில் அறிமுகமானது புராணப்படம் மூலம்தான் அவ்வமயம் அவ்விதமான படங்களுக்கு வரவேற்பு மிகவும் அதிகம். அதுவுமில்லாமல், எப்பொழுதும்போல் நமது படாதிபதிகள் இவளுக்கு இப்பாகம்தான். சிறப்பை தரும் என்று எண்ணியதால் என்னவோ என்னைத் திரையுலக தேவதையாக்கிவிட்டார்கள். தற்சமயம் நான் இம்மாதிரி படங்களில் மிகக் குறைவாக நடிக்கிறேன்!

கேள்வி :- உங்களுக்குப் பிடித்த நடிக நடிகைகள் யாவர்?

பதில்:- ஆங்கிலம்- ஜனிபர் ஜோன்ஸ், ஹிந்தி: ஆஷா, சசிகலா, ஷியமா நெருங்கிய நண்பர்கள்! தமிழ்- பத்மினி, சிவாஜிகணேசன். நான் அடுத்த மாதம் ஏவி. எம். படப்பிடிப்பிற்கு செல்லும்பொழுது இவர்கள் நடித்த தெய்வப்பிறவியை பார்க்கலாமென்றிருக்கிறேன்!

கேள்வி :- சென்னையைப் பற்றிய அபிப்பிராயம்?

பதில்:- மிகவும் பிடித்த நகரம். எனக்கு படபிடிப்பு ஓய்வுகிடைத்தபொழுதெல்லாம் மெரினா கடற்கரைக்கு செல்லுவேன்! வாஹினி, ஜெமினி, ஏவி. எம். ஸ்டுடியோக்கள் மிகவும் பிடித்தது. மேலும் நான் மஹாபலிபுரம்! காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம் போன்ற இடங்களுக்கு சென்றிருக்கிறேன்! அடிக்கடி படபிடிப்பிற்கு சென்னை செல்லும் காரணத்தினால் பழக்கத்தில் இருக்கும் தமிழ் வார்த்தைகளையும் கற்றேன்!

பொதுவாகத் தமிழர்களின் வேலைத் திறனை கண்டு புகழாமல் இருக்கமுடியாது. சுருக்கமாகச் சொல்வதென்றால் எனக்கு தமிழ் நாட்டில் தயாரிக்கும் படங்களில் நடிக்க விருப்பமதிகம்!

கேள்வி:- புதுமுகங்கள் அறிமுகப் படுத்துவதைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயம்?

பதில்:- வரவேற்கவேண்டிய விஷயம்! திரையுலகிற்கு புதிதாக வருகிறவர்கள் முதலில் கிடைக்கும் பாகங்கள் சிறியதாக இருந்தாலும் திறம்பட நடிக்க முயலவேண்டும். கர்வம் கொள்ளக்கூடாது!

கேள்வி:-இந்தியப் பட உலகைப் பற்றி தங்கள் அபிப்பிராயம்?

பதில்:-நமது படாதிபதிகள் என்று கதையில் உள்ள பாகத்திற்கு ஏற்றவாறு நடிக நடிகைகளை தேர்ந்தெடுக்க ஆரம்பிக்கிறார்களோ அன்றுதான் இந்தியப் பட உலகம் நல்ல நிலையை அடையும். தற்சமயம் விநியோகஸ்தர்களின் வேண்டுகோளின்படி நடிக நடிகையின் தேர்தல் இன்னும் நடக்குமானால், முன்னேறுவது மிக கஷ்டம்!

கேள்வி:- கலையைப்பற்றி தங்கள் அபிப்பிராயம்?

பதில்:- பல மணம் கமிழ்கின்ற மலர்கொத்து மிகச் சிறந்தது!

கேள்வி:- கலை வாசகர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

பதில் :- அனைவரையும் சந்திக்க வாய்ப்பளித்த உங்களுக்கும், கலை ஓவியர்களான பாலு சகோதரர்களுக்கும் (இவர்களுடைய சந்திரலேகா விளம்பரங்கள் என்முன் இன்றும் தோன்றுகிறது) மனமார்ந்த நன்றி. மேலும் கலை நல்ல முறையில் பலபாஷைகளில் வளர வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.


## பிலிப்ஸின் தீபாவளி வாழ்த்துகள்!

★ இன்பம் பொங்கும் தீபாவளி நன்னாளில் — பிலிப்ஸ் அலங்கார விளக்குகளை ஏற்றியும், ★




★ பிலிப்ஸ் ரேடியோ மூலம் விசேஷ தீபாவளி நிகழ்ச்சிகளைக் கேட்டும் ஆனந்தியுங்கள்! ★

எங்கள் ஷோ-ரூமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**மாடர்ன் ரேடியோ ஸர்வீஸ்**

பிராஞ்சு :-

51. கச்சேரி ரோடு, விழுப்புரம்.

PHILIPS

146. பெரிய தெரு, கும்பகோணம்.

# கல் எழுதி வைத்த கலை

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்

ஒரு பெரிய போர்க்களம். போரில் சேர மன்னனும் அவனது பகைவர்களும் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கின்றனர். சேரனோ பெரியவீரன். அவனது படையும் அளவிலும், வீரத்திலும் சிறந்தது. ஆதலால் பகை அரசர்களால் அவனை வெற்றிகாண்பது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. வெற்றிகாணவிட்டாலும் பரவா இல்லை உயிரோடு நாடு திரும்பினால் போதும் என்றாகிவிட்டது அவர்களுக்கு. அதற்குக்கூட அவன் இடம் கொடுக்காமல் வளைத்துச்சுற்றி அழித்துத் தேய்த்து விடுவான்போல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் சேர மன்னனின் வீரன் ஒருவன் பகையரசர்களைச் சந்திக்கிறான். அவர்கள் பிழைத்துப்போக வழிசொல்கிறான். 'மன்னர்களே! நீங்கள் பெரிய பெரிய யானைப் படைகளுடன்தான் வந்திருக்கிறீர்கள். ஆனால், இதனால் ஒன்றும் பலன் இருக்கப்போகிறதில்லை. உங்கள் யானைப்படை மாத்திரம் என்ன? குதிரை, தேர், காலாள் முதலிய எல்லாப் படைகளுமே தோல்வியுற்று!அழியத்தான் போகிறது.

நீங்களும் உங்கள் படைகளும் பிழைத்துப்போக நான் ஒரு வழி சொல்கிறேன். கேளுங்கள். லகுவான வழி. முதலில் எங்கள் மன்னன் எவ்வளவு கப்பம் கட்டவேண்டுமென்று விதிக்கிறானோ, அந்தக் கப்பத்தைக் கட்டிவிட்டு எங்கள் அரசனுக்கு அடங்கிய சிற்றரசர்காளாக வாழுங்கள். இதைவிட எளிதாக இன்னொன்று இருக்கிறது. உங்கள் கோட்டை மதில்களில் தேர்ந்தெடுத்த சித்திரக்காரர்களைக் கொண்டு நன்றாக வளைந்த வில் ஒன்றையும், எழுதி வையுங்கள். அப்படி நீங்கள் எழுதிவைத்தால், நீங்கள் விற்கொடி ஏந்தும் எங்கள் மன்னனுக்கு அடங்கி வாழ்பவர்கள் என்று ஒத்துக்கொண்டதாகும். இப்படி வில் எழுதிவைத்து வாழ்கிறவர்கள் யார் என்று தெரியவேண்டுமா? அவர்கள் தாம் வானோர்கள். அவர்களுக்கு இந்த ரகசியம் முன்னமேயே தெரிந்திருக்கிறது. சேரமன்னனைப் பகைவனாகக் கொண்டு வாழமுடியாது என்று தெரிந்திருக்கிறார்கள். அதனால்தான் வானிலே வானவில் ஒன்றை ஆம்! ஏழு வண்ணத்திலே எழுதிவைத்து எங்கள் மன்னனின் பகையைப்பெறாமல் இருந்து வாழ்கிறார்கள். தேவர்கள் இப்படி வானில் வில் எழுதிவைத்த கதையை நல்ல பாட்டிலேயே சொல்கிறான்.

பல்யானை மன்னீர்
படுதிறை தந்து உய்ம்மின்
மல்லல் நெடுமதில்
வாங்குவில்ப் பூட்டுமின்
வள் இதழ்வாடாத
வானோரும், வானவன்
வில்எழுதி வைத்தார்
விசும்பு

இப்படி ஒரு பாட்டு 'முத்தொள்ளாயிர'த்தில். சேரசோழ பாண்டிய மன்னர்கள் ஒவ்வொருவரையும் பற்றி தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாட்டு. பாடினோர் பெயர் தெரியவில்லை. அதுகூடப் பரவாயில்லை. அப்படிப் பாடிய மூன்று தொள்ளாயிரத்தில் இன்று நமக்குக் கிடைத்திருப்பதெல்லாம் ஒரு நூறு பாட்டுகளே. மற்றவை எல்லாம் 'ஏட்டில் எழுதிவைத்த' காரணத்தால் செல்லரித்து அழிந்துபோய் விட்டன. தமிழ்க் கவிவாணர்கள் எழுதியவை எல்லாம் ஏட்டில். அவைகளில் செல்லரித்தது போக எஞ்சியவற்றை கடல் வேறு கொண்டு போயிற்று. எனவேதான் இவற்றை எல்லாம் நன்கு தெரிந்திருந்த நமது தமிழ் மன்னர், அவர்கள் செய்த அறங்களை அவைகள் அழிந்து போகாவாறு கல்லிலேயே எழுதிவைத்திருக்கிறார்கள். அவைகளையே கல்வெட்டு என்று கூறுகிறோம். இந்த 'கல்லெழுதிவைத்த கலை'யைப் பற்றியே ஒருசில வார்த்தைகள் இப்பொழுது.

* * *

**கோ**யில் சுவர் முதலியவற்றிலும், பாறைகளின் மீதும், கல் தூண்களிலும் எழுதப்பட்டிருப்பவைகளையே சிலா சாஸனம் அல்லது கல்வெட்டு என்று கூறுகிறோம். சாஸனங்கள் சில சமயங்களில் செப்பேடுகளிலும் எழுதப்படுவதுண்டு. கல்வெட்டுகளில் பெரும்பாலும் நிலம் விளக்கு, ஆடுமாடு பணம் போன்றவைகளை மான்யமாக



வழங்கிய செய்திகளையே பெரும்பாலும் கூறியபோதிலும் அவற்றில் வரலாற்றுச் செய்திகளும் அடங்கியிருக்கின்றன. வாதாபியில் பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் வெற்றித் தூண் நாட்டியதைக் கூறுகிறது ஒரு பாறைக் கல்வெட்டு. இரண்டாம் விக்ரமாதித்தன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிராஜசிம்மேச்சுரம் என்னும் கைலாசநாதர் கோயிலுக்குப் பொன் வழங்கியதை ஒரு கல்வெட்டு கூறுகிறது. புதுக்கோட்டையை அடுத்த குடுமியா மலையிலும், திருமயத்திலும் உள்ள கல்வெட்டுகள் இசைக்குறியீடுகள் தமிழரின் கலை, பண்பாடு எவ்வளவு உயர்ந்திருந்தன என்பதனைத் தெளிவாக்குகிறது. இலக்கியச் சிறப்பு மிக்க கல்வெட்டுகளுக்கும் குறைவில்லை. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் 'லளிதாங்குச பல்லவேசுர கிரஹம்' என்னும் பல்லவர் குகையில் மலைக்கோட்டை இறைவனைப் போற்றும் நூறு அந்தாதிக் கலித்துறை செய்யுள்களே அல்லவா கல்லில் வெட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அரசியல் சிறப்புடைய கல்வெட்டுகளும் நம் நாட்டில் பல விடத்தும் காணப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூர் கல்வெட்டுகள் பஞ்சாயத்து தேர்தல் முறையை விரிவாக விளக்குகின்றன. சோழ மன்னர் காலத்தில் நிலவரி விதிக்க குறைந்த அளவுள்ள நிலங்களையும் சரியாக அளவிட்ட செய்தியை தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கல்வி நிலையங்கள், மருத்துவசாலைகள், முதலியவற்றை பற்றிக் கல்வெட்டுகள், எண்ணாயிரம், திருஒற்றியூர், திருமுக்கூடல் முதலிய தலங்களில் காணப்படுகின்றன. இன்னும், நமது பண்டைய மன்னர்கள் கால்வாய்கள், ஏரிகள் முதலியவைகளை வெட்டி நீர்ப்பாசனம் ஏற்படுத்திய செய்திகள் எல்லாம் பல்வேறு கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. இம்மட்டோ! இன்னும் நாடகம், நடனம், இசை, ஓவியம் முதலிய அருங்கலைகளைப் பற்றிய குறிப்புகளும், வாணிபம், வரிவிதிப்பு, முதலிய பல துறைகளைப் பற்றிய குறிப்புகளும் கல்வெட்டுகளில் இருக்கின்றன. நிரம்பச் சொல்வானேன். பண்டைத்தமிழ் நாட்டின் சரித்திரமே அழியாத இந்தக் கல்வெட்டுகளிலே தான் பொறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் இன்னும் விசேஷம் என்னவென்றால் இந்த கல்வெட்டுகள் பல நல்ல பாடல்களாக அமைந்திருப்பதுதான். அப்படி கல்லிலெழுதி வைத்த கவிதையில் இரண்டை மட்டும் எடுத்துக் கூறி அவை கூறும் செய்திகளையும் நாம் அறிந்து கொண்டால், நமது தமிழக வாழ்வு அன்று எவ்வளவு சிறந்திருந்தது என்று தெரியும்.

* * *

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே பன்னிரண்டு மைல் தூரத்தில் திருவெள்ளறை என்னும் வைணவத்தலம் இருக்கிறது. அங்கு நாலுமூலைக்கேணி என்னும் பெருங்கிணறு ஒன்று இருக்கிறது. இந்தக் கிணறு பல்லவ அரசனான நந்திவர்மன் காலத்தில் வெட்டப்பட்டிருக்கிறது. இக்கிணற்றை வெட்டியவன் கம்பன் அனயன் என்றும் தெரிகிறது. இந்தத் தகவல்களோடு நிற்கவில்லை. அங்கு வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டு, இவ்வுலக மக்கள் தருமங்களை எக்காலத்தே செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்றும் கூறும் அறவுரை தாங்கியதாகவும் இருக்கிறது.

கண்டார் காணா உலகத்தில்
காதல் செய்து நில்லாதேய் !
புண்டேய் பரமன் படைத்த நாள்
பார்த்து நின்று நையாதேய் !
தண்டார் மூப்பு வந்து உன்னை
தளரச் செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டு, மிக்கது
உலகம் அறிய வைம்மின்னேய் !

உலகம் அறிய உங்களது அறவிகளை நிறுவுங்கள் என்று கல்லில் அல்லவா எழுதி வைத்திருக்கிறான் கிணறு வெட்டி வைத்த அறங்காவலன். ஊருக்கு ஒரு கிணறு என்று திட்டமிட்டுப் பணி புரியும் செய்தியை அல்லவா அன்றே எடுத்துக் கூறுகிறது இக்கல் எழுதி வைத்த கலை.

திருநெல்வேலி மாவட்டத்தின் திருக்குற்றாலத்தை அடுத்துத் தென்காசி என்று ஒரு தலம். அங்கே அரிகேசரி பராக்கிரம பாண்டியன் அங்குள்ள காசி விசுவநாதருக்கு ஒரு கோயில் கட்டுகிறார். கோயில், கோபுரம் எல்லாம் கட்டி முடித்து குடமுழுக்கையும் ஏற்பாடு பண்ணி, அந்தக் குடமுழுக்கைக் கண்காணிக்க வந்தவன் கீழே விழுந்து வணங்குகிறான். யாரை வணங்குகிறான்? கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் மூர்த்தியையா? இல்லை கோயில் கட்டிக்கொடுத்த சிற்பிகளையா? இல்லை கோயில் கட்டத் துணைநின்ற மக்களையா? இத்தனைப் பேரையும் அவன் வணங்கவில்லை. அவன் வணங்கியது யாரை என்று அவனே சொல்கிறான். அவன் சொன்னதை அங்குள்ள கல்வெட்டு – ஆம், பாட்டாக இருக்கும் கல்வெட்டே கூறுகிறது.

ஆராயினும் இந்தத் தென்காசி
மேவு பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால்
அப்போது அங்கு வந்து அதனை
நேராகவே திருதரிப் புரப்பார்
தமை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே !

எவ்வளவு அழகிய உள்ளத்தை இந்த மன்னன் பெற்றிருக்கிறான். கோயிலைக் கட்டுபவர்களைவிட அதற்குப் பழுது பார்ப்பவர்களே உயர்ந்தவர்கள் என்றல்லவா எண்ணியிருக்கிறான். கோயில் கோபுரம் இன்று பழுதுபட்டிருக்கிறது. திரிதருத திருப்பணி புரிவார் வரக்காணோம். கல்வெட்டு நின்று மன்னனின் ஏக்கத்தைச்சொல்லிக் கொண்டிருக்கிறது. தமிழ் மன்னர்களது அபிலாஷைகள்தான் எப்படிப்பட்டவை. தமிழன் வளர்த்த பண்பாடெல்லாம் எவ்வளவு உயர்ந்தது. இவற்றையல்லவா கூறுகிறது இக்கல் எழுதிவைத்த கலை.

●

---




வீட்டுக்காரர்: 'இந்தத் தண்ணீப் பாலுக்கு சொந்த மாடே கூட வாங்கிடலாம் போல இருக்கே!''

பால்காரர் :– '' மனுசன்தான் கடன் தருவானே தவிர மாடு தராது சாமி!''

*Wish you a Happy Deepavali*
*and*
*Prosperous New Year*

FROM

**Jayant Paper Box Factory**

Khorshed Building

SIR P. M. ROAD, : : BOMBAY - 1

★

Our Madras Associate:

**Jayant Pakaging (P) Limited**

B-6, INDUSTRIAL ESTATE, GUINDY,
MADRAS - 16.

★ சிறந்த சிற்றுண்டி
★ சுவையுள்ள உணவு
★ சூடான புலவு
★ சிறந்த உபசரிப்பு

இவைகட்கு சிறந்த இடம்

**HOTEL VENUS**

(High class Non-Vegetariyan Restaurent)

71, MOUNT ROAD,
(AZEEZ MARKET)
TEYNAMPET,
MADRAS-17.

*For Effecient service...*

Contact

Raja Service Station

Caltex Dealers

ALWARPET :: MADRAS - 18.

★

**RAJA AUTOMOBILES**

158, Lloyds Road,
MADRAS - 14.

எங்களிடம் மாணவர்களுக்கு தேவையான
பென்சில், பேனு, நோட்டுக் தினுசுகளும்

★

மழைகாலத்திற்கு தேவையான நயமான
குடை தினுசுகளும்,

★

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் தேவையான
செருப்பு, பூட்ஸ் தினுசுகளும்

மற்றும்

ஸ்டீல் ட்ரங்குகள், ஸ்டேஷனரி
முதலிய சாமான்களும் நயமாகவும்
விலை மலிவாகவும் கிடைக்கும்

ஒரே இடம்

**P. S. தாண்டவன் & பிரதர்ஸ்**

ஜெனரல் மர்செண்ட்


கடைவீதி அறந்தாங்கி (தஞ்சாவூர் ஜில்லா)



வந்தான்

இவளுடைய இதழ்கள் நிறத்தில் சிவப்பு - சுவையில் அமிழ்தம். இவளுடைய சிறிய இடைக்கு பெரிய பாரமாக இருக்கும் எழில் மார்புகளோ இளைஞர்களைக் கொல்வதற்கு என்றே காலன் அனுப்பிய தூதுவர்கள். இவ்வாறு அங்கங்கள் முழுவதையுமே தங்கமாகப் பெற்ற இந்த வஞ்சியை எல்லோரும் கொடுத்துவைத்தவள் என்றனர். ஆனால் அவளோ மன்னன் மார்பிலே புரளும் அந்தத் தங்கநகை செய்த பாக்கியம் கூடத் தான் செய்ய வில்லையே என்று தவித்தாள்.
மூவருலா-

-தாரா




## கண்டான்

சொர்ணத்தில் வார்த்தெடுத்தது போன்ற இந்தத் தோகை மயிலைக் கண்டு கள்வெறி கொண்ட அந்தக் காளை, இவள் தனித்திருக்கும் நேரமாகச் சென்று அவள் மார்புபற்றி இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். வழியோடு போகின்ற தன்னை இவ்வாறு இடைமறித்து வம்பு செய்வது யார் என்று சினந்து நோக்கிய அவள், "யாரைக் கேட்டுக் கொண்டு என்னைக் கட்டியணைத்தீர்?" என்றாள். அதற்கு அந்தப் பன்மாயக்கள்வனோ தாகம் எடுக்கிறது; அப்போது நீரைக் கேட்டுக்கொண்டா நாம் தண்ணீர் குடிக்கின்றோம்" என்று கண் சிமிட்டி நின்றான் -கலித்தொகை.




## வென்றான்

இந்த மயக்கு விழிக்காரியுடன் வெண்ணிலவின் பயன் கண்டு கொண்டிருந்த தலைவன், இடையில் 'பொன்தா! பொன்தா!' என்றான். வருபவர்களுக்கெல்லாம் பொன்னை வாரி இறைக்கும் வள்ளலான இவர் தன்னிடம் பொன் தா' என்கிறாரே என்று அவள் விழித்தாள். ''பொன்னென்றால் பொருளைச் சொல்லவில்லை-என்னுடைய பிரிவால் பொன் னாகி விட்டதே அந்தத் தளிர் உடலைத்தான் கேட்கிறேன் என்றான். இதைக் கேட்டதுமே அவள் புலியாக மாறி, புயலாக அவனை அணைத்துக்கொண்டாள். -கலித்தொகை





## சென்ருன்

தேன் உண்ணும் வண்டு போன்று இந்தத் தளிர்க்கொடியின் பெண்மை நலன் உண்ட தலைவன், பின்னர் பரத்தை ஒருவளை நாடிச் சென்று விட்டான். தனியளான தலைவியோ சோகத்தின் எல்லையிலே நின்று தவித்தாள். 'அன்புடைக் கணவர் அழிதகச் செய்யினும் பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை' என்று தோழிதேற்றிய போது, "என் செய்வேன் தோழி! வெயில் காலமாக இருந்தாலும் பொறுத்துக்கொள்ளுவேன். ஆனல், இது குளிர்கால மல்லவா?" என்று கண்ணீர் முத்தரும்பத் துவண்டாள். -நற்றிணை









## திரைச்சித்திரம் தயாரிப்பது...?


திரைப் படங்கள் தயாரிப்பது என்னவோ சின்ன விஷயமென்று நினைப்பதுடன் மட்டுமல்ல எங்கிருந்தோ கிடைக்கும் மலிவு சரக்கென்றும் நினைத்து மனம்போனபோக்கில் பேச்சுவார்த்தைகளை உதிர்த்து விடுகிறார்கள். இது நேர்மையான நியதிக்கே முரணான செயலாகும். குறைகள் பலகாணலாம். ஆமாம்...! அப்படிக் காணும் குறைகளிலே கூட குறைகள் பொதிந்திருக்கும். இது தான் கொண்ட எண்ணத்தை சாதிக்கும் வழியும், உலகவழக்குமாகும்

அதனால் முதலில் நாம் சினிமாப் படங்கள் தயாரிப்பது என்பது மிகவும் சிக்கலான ஒரு தீராத பிரச்னை என்பதை நன்கு உணர வேண்டும். ஒரே சமயத்தில் பல நூறு பணியாட்களையும் தொழில் நுணுக்கத்தார்களையும் நம் நட்சத்திரங்களையும் திரட்டி படத்தையும் வளர்ப்பதென்பது என்ன அவ்வளவு சுலபமா..? அதற்காக பணம் மட்டும் கரைவதோடு நின்றுவிடுவதில்லை. ஆட்களின் உடலும் கரைகிறது. நல்ல வேளையாக இருதயத் துடிப்பு நின்று போகாமல் தப்பிப்பதுதான் அவர்கள் செய்த புண்ணியம்.

இதில் பழுத்த அனுபவ ஞானியும், தென் திரை மூவேந்தர்களில் ஒருவரும், வடநாட்டாரையும் வாகைசூடும் வகையில் ஹிந்திப்படங்களை உருவாக்கியவரும், வடநாட்டு நட்சத்திரங்களே பூரிப்புடன் புகழும் திரு ஏவி. மெய்யப்பன் அவர்களின் ஏவி எம் ஸ்டுடியோவிற்கு உங்களை அழைத்துச் செல்லுகிறேன்.

அதோ...! அந்தப்புரங்களும், நந்தவனங்களும், நீரோடைகளும் தாமரைக் குளங்களும் கண்கவரும் வனப்போடு காட்சியளித்து நம்மை வரவேற்கின்றன. இப் பக்கத்தில் காணப்படுபவை முழுதும் ஸ்டுடியோவினுள் உள்ள அலுவலகங்களும், ஸ்டுடியோவின் முழு தோற்றமும். அதில் A என்று குறியுள்ளவை போன்று நான்கு பிரம்மாண்டமான செட்டுகள் உள்ளன. அங்கேதான் அரண்மனை முதல் குடிசை வரை உருவாகின்றன.















1. ஏ. வி. எம். அவர்கள் வெகு சுறுசுறுப்புடன் அன்றாட அலுவல்களை கவனிக்கிறார்.
2. காமிராமேன் முத்து, வளைவு மாடியிலிருக்கும் தேவிகாவை சிறப்புடன் படமாக்குகிறார்.
3. வெளிப்புற காட்சி காசியானாலும் சென்று படமாக்கத் தவறமாட்டார்கள்.
4. காரில் செல்லுவதாக அந்த எழில்வண்ண நங்கையை மோட்டார் வானிலிருந்து படமாக்குகின்றார்கள்.
5. கமலாவின் நடன 'போஸ்' மிகவும் கச்சிதமாக இருக்கிறது என்கிறார் டைரக்டர்
6. திரு ஏ வி. எம். குமாரர் சரவணன். விளம்பர சம்பந்தப்பட்ட செய்கைகளை ஆராய்ந்து திறமையுடன் ஆற்றுவதில் வல்லவர்.
7. சிலைகளும், சிற்பங்களும் தயாராகும் கலைக்கூடம். இதற்கு மோல்டிங் டிபார்ட்மெண்ட் என்று பெயர்
8. ஏவி. எம். அவர்கள் தம் நண்பர்களுடன் மிகசுவாரஸ்யமாக உரையாடுகிறார்.
9. சங்கீத டைரக்டர் சுதர்சன் தன் இசைக் குழுவுடன் கானமழை பொழிகின்றார்
10. அரசன் முதல் ஆண்டி வரையில் அளவெடுத்து ஆடைகளை தைக்கும் பாரபட்சமற்ற தொழிற்கூடம்.
















11. மூவியாலா என்ற இயந்திரம்.

12. எடிட்டிங் நடைபெறுகிறது. கத்தரிக்கோல் போடுவதெல்லாம் இங்கேதான்.

13. மழையும், காற்றும் புயலென கிளம்பச் செய்யும் இயந்திரமும்,கிரேயின்என்ற இயந்திரமும்

14. படமெடுத்தவுடன் அதைக் கழுவும் இடம். டெவலப்பிங் அறை.

15. டிபார்ட்மெண்ட்.


16. ஏவி.எம் அவர்களின் இரு கரங்களைப் போன்றவர்கள் வெற்றிப்பட டைரக்ட் மணிகள் கிருஷ்ணன்-பஞ்சு.

17. படங்களை பிரிண்ட் செய்யும் இயந்திரங்கள்.

18. சினிமாப் படங்களை திரையிடும் திரையந்திரங்கள் புரொஜெக்டர்கள்.

19 இன்று படப்பிடிப்பிலிருக்கும் படத்தை உடனே திரையிட்டுப் பார்க்கும் அறை. அதோ ஏவி எம். 'திலகம்' வருகிறது.

ஹாலிவுட் பட ஸ்தாபனங்களின் முறைகளில் தம் ஸ்டுடியோவை நிர்வகித்து திறன்மிக்க ஆற்றலாலும், அயர்வடையா முயற்சியாலும், கலை நுணுக்க மேன்பாட்டாலும் உயர்ந்து, ஒப்பற்ற முறையில் இலவும் தம் கலைத் தொழில் வளத்தை சிறந்த உழைப்பால் உயர்த்திவிட்டமேதையே இந்த அபூர்வ கலை உள்ளம் ஏவி. எம். அவர்கள் இதோ அவரும் புன்னகை தவழும் அன்புவணக்கம். நன்றி























# கலைக்கண்

குமாரி. க. மல்லிகா மயிலாப்பூர்.

ஒரு அழகிய ரோஜா மலரைப் பார்க்கின்ற கவிஞன் ஒருவன் "ஆகா! என்ன அழகான மலர். இதனுடைய மென்மை மாதர் கன்னங்களை அல்லவா நினைவூட்டுகிறது" என்றுதான் கற்பனை செய்வான். அதே நேரத்தில் தாவர நூல் கற்றவனோ இதனிலே புறவிதழ் எது; அகவிதழ் எது; எந்த வகையான உரமிட்டால் இது இன்னும் செழித்து வளரும் என்று இப்படிப்பட்ட ஆராய்ச்சியில்தான் ஈடுபடுவான்.

இவர்கள் இருவரும் அல்லாது வாசனை வியாபாரி ஒருவனின் கண்ணிலே இந்த ரோஜா பட்டால் இதைக் கசக்கிப் பிழிந்து எந்த வகையான அத்தர் செய்யலாம்; அதை கும்பகோணம் மணமகனுக்கு என்ன விலையில் விற்கலாம் என்றுதான் அவனுடைய மூளை வேலை செய்யும்.

காண்பது ஒரே பொருளாக இருந்தாலும் அவரவர் கருத்துக்கு ஏற்ப அதனுடைய பலன் மாறுபடுகிறது. கண்ணாடியின்முன் நிற்பவனுக்கு தன்னுடைய உருவமே தெரிவது போல, காணுகின்ற ஒவ்வொரு பொருளும் அதைக் காணுகின்றவர் எந்த நோக்கத்தோடு காணுகின்றாரோ அதற்கு ஏற்ப மாறுபடுகிறது.

கலைஞன் ஒருவன் ஏடு எடுத்து கவிதை மழை பொழிந்து தள்ளுகிறான் என்றால் அதைக் காவியக் கண்ணை கலைக்கண் கொண்டுதான் பார்க்கவேண்டுமே தவிர, அதனைக் காமக்கண் கொண்டு பார்த்து இவன் 'வண்ண வனமுலை மடவார் தம் பூஞ்சுசூழ் பரவை அல்குல் பற்றிப் பாடிவிட்டான்" என்று அவன்மீது போர் தொடுப்பதோ, அல்லது அவனை ஒரு காமக்களஞ்சியம் என்று தள்ளி வைப்பதோ அறிவுடைமையாகாது. ஏனெனில் ஒரு பெண்ணை வர்ணிக்க வேண்டுமென்றால் இன்ன இன்ன பகுதிகளை எல்லாம் வர்ணித்துத்தான் ஆகவேண்டுமென்று தமிழ் இலக்கணத்தில்; ஏன் உலகிலுள்ள அத்தனை மொழிகளிலுமே இலக்கணமுண்டு அதை வைத்துக்கொண்டுதான் என்றும் அழியாத இலக்கியங்களைப் படைத்துள்ளனர். மேலைநாட்டு ஷேக்ஸ்பியரிலிருந்து கீழைநாட்டுக் கம்பர் வரையில் பழங்காலத்தவர் எழுதியதை ஆபாசம் என்று வெறுத்து ஒதுக்கியவரே கூட நாளைக்கே கவிதை எழுதத் துவங்கினால் நிச்சயம் அணங்குகளின் அங்கவர்ணனையில் கம்பனையும் காளிதாசனையும் மிஞ்சுபவராகப் போவாரே தவிர எதையும் அவரால் மூடி மறைக்க முடியாது. அப்படியே அதை மூடி மறைத்தாலும் அதிலே சுவை இருக்காது.

கலைக்கண் அற்ற நிலையில் காமக்கண்கொண்டு பார்ப்பவர்களுக்கு ஆபாசக் களஞ்சியங்களாகத் தோன்றுகின்ற ஒன்றுகூட கலைக்கண் கொண்டு பார்க்கின்றபொழுது கலைத் தெய்வங்களாக மாறிவிடுகின்றன.

எனவேதான தஞ்சையில் சிறப்புக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்த அகில உலக மேதை ராஜாஜி அவர்கள், இவைகளைக் கலைக்கண்கொண்டு பார்க்கவேண்டும் என்றார்.

அப்படிப் பார்க்காது மங்கையர் வனப்பை வர்ணிப்பதே தவறு என்றால்-அல்லது அவர்களுடைய கொள்ளை அழகை சிலையில் வடிப்பதே கூடாது என்றால்-நம்முடைய இலக்கியங்கள அனைத்தையும் பொசுக்கிவிட்டு-கோயில்கள் அத்தனையுமே இடித்துத் தள்ள வேண்டியதுதான்.

ஏன் எனில் பழங்காலத் தொல்காப்பியரில் இருந்து தற்கால பாரதியார்வரையில் பாவையர்



மேலைநாட்டினர் காண ஓடோடி வரும் கஜுராஹோ காதலர்கள்.



எதையும் கலைக்கண்கொண்டுதான் பார்க்கவேண்டுமே தவிர காமக்கண் கொண்டு பார்க்கலாகாது

அழகை பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டாத கவிஞர் இல்லை.

தலைவன் தன்னைப் பிரிந்துசென்றதை, என் மார்போடுகோவித்துக் கொண்டு சென்றவர் எனனும் பொருள் படும்படி "நம் முலையிடை முனிநர் சென்ற ஆறே" என்று சொல்லோவியமாக்கிய ஔவை மூதாட்டியை நாம் என்ன காமக் கடல் என்றுகூறுவது?

''மருந்து எனின் மருந்தே;
வைப்பு எனின் வைப்பே
அருப்பிய அணங்கின்
அம்பகட்டு இளமுலை
பெருந்தோள். நுணுகிய
நுசுப்பின்
கல்கெழு கானவர்
நல்குறு மகளே''

என்று நாலே வரியில் நங்கையர் அழகை எல்லாம் வடித்தெடுத்த குறுந்தொகைக் கவிஞர் கருவூர் ஓதஞானியை போகப் புலவர் என்று ஒதுக்குவது?

பெண் பருவமடைந்தாள்; அவளுடைய மறைவிடம் வளர்ந்து கொண்டே போனதால் அதை அவளுடைய சிறிய இடையால் தாங்க இயலவில்லை. அவளுடைய மார்புகளோ வீங்கிப் புடைத்துக் கொண்டு எழுந்தன என்பதை,

"தழை அணி அல்குல்
தாங்கள் செல்லா
நுழை சிறு நுசுப்
பிற்கு எவ்வம்ஆக.
அம்மெல் ஆகம்
நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை
செப்புடன் எதிரின''

என்று திதிக்கும் கவிதையாக்கிய சங்கசான்றோர் வடம வண்ணக்கன் பேரிசாத்தன் என்ன பெண்பித்தரா? அல்லது தன் பெயரையே வருமுலையாரித்தி என்றே வைத்துக்கொண்ட பெண்பாற் புலவர்தான் என்ன காமக் கடலில் உழன்றவரா? அல்லது வீட்டுக்கு வருகின்ற தலைவன் தன்னை நன்றாகத் தழுவவில்லை என்பதை,

''ஓர் ஊர் வாழினும் சேரிவாரார்
சேரிவரினும் ஆரமுயங்கார்''

என்று தன்தோழியிடம் கூறிய காவியப்பெண்ணை படைத்த பாலை பாடிய பெருங்கடுங்கோ தான் என்ன காமப்பித்தரா?

அட இவர்கள்தான் பொல்லாதவர்கள் என்று விட்டுவிட்டாலும் இவர்களுக்கு பின்வந்த இளங்கோவும் பெண்களைவிட்டார் இல்லையே. துறவியாக இருந்தும் அவர் இயற்றிய கானல்வரிப்பாடல்களில்,

''வடங்கொள் முலையால்
மழை மின்னுப்போல
நுடங்கி உகுமென்
நுசுப்பிழவல் கண்டாய்''

என்றுதானே கோவலன் பாடுகின்றான்.

அவர் இட்ட இடத்தில் இருந்து தொடர்ந்த சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையைப் பற்றிக் கூற வரும்பொழுதெல்லாம்,

''ஏந்திள வனமுலை
மடந்தை மெல்லியாள்''

என்றுதானே குறிப்பிடுகின்றார்.

உலகையே திருத்தவந்த உத்தமரும்-வையத்தின் முழுமுதல் தத்தவ ஞானியுமான வள்ளுவப் பெருந்தகையேகூட மாதர் அழகைப்பற்றிப் பாடவந்தபோது விம்மிப் புடைக்கும் அவர்தம் எழில் மார்புகளை,

''கடாஅக் களிற்றின்மேல்
கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்''

என்று யானையின் மத்தகத்தோடு தான்ஒப்பிடுகின்றார் அதுமட்டுமா காதலர்கள் தழுவும்பொழுது காற்றுக்கே இடைவெளி இல்லாதவாறு தழுவவேண்டும் என்று அல்லவா நமக்குச் சொல்லிக்கொடுக்கிறார். மனிதர்களைப் பற்றிப் பாடிய இவர்கள் அன்றி தேவர்களைப் பற்றிப் பாடவந்த கம்பர்கூட மலையைக் கண்டாலும், மடுவைக் கண்டாலும், வாழைமரத்தைக் கண்டாலும் மாதர் எழிலையே அல்லவா நினைத்துக்கொண்டார். ராமனைக் கண்டு மையல் கொண்ட சீதை இராவைக்கண்டு அஞ்சி கண்ணீர் வடிப்பதை கற்பவர் நெஞ்சத்திலே நன்றாக நிலைக்கவைக்க வந்த கம்பர் சீதையின் கண்ணீர் முத்துக்கள் கன்னத்தில் வழிந்தோடி அவளுடைய எழுந்து நிற்கும் எழில்மார்புகளில் பட்டுச்சிதறியதை மலைமீது மழை பெய்து சிதறுவதற்கு அல்லவா,

''மலை மிசைத் தடத்துகு
மழைக் கணிபோல்
முலைமுகட்டுதிர்ந்தன
நெடுங்கண் முத்தினம்''

என்று ஒப்பிடுகிறார்.

இவர்கள்தான் இப்படி என்றால் விடுதலைக் கவிஞரான பாரதியாரோ காதல் ரசம் பற்றிப் பாட வந்துவிட்டால் தன் முன்னோர்கள் எல்லோரையுமே கூட தூக்கி அடித்துவிடுகிறார். கட்டிலறையில் புகுந்து,

''கன்னி வயதிலுனைக்
கண்டதில்லையோ?-கன்னங்
கன்னிச் சிவக்க முத்த
மிட்டதில்லையோ''

என்று முதற் கட்டத்தைப் பாடி முடித்தவர்,

''பன்னிப் பலவுரைகள்
சொல்லுவதென்னே?-துகில்
பறித்தவன் கைபறிக்கப்
பயங் கொள்வனோ?''

என்று இரண்டாவது கட்டத்தையும் பாடிமுடிக்கத் தவறவில்லை.

இன்றைய உலகில் எந்த மூலையில் சென்று கேட்டாலும் வடமொழிப் பெருங் கவிஞரான காளி

இந்திய அரசாங்கத்தால் முதற் பரிசு பெற்ற மார்க் இதழில் வெளிவந்தது.





கோயிலில் உள்ள வீணை வாசிக்கும் விஞ்சை மகள் இவள்

தாசனைப் பற்றியும், அவன் காதல் சுவையில் நனைத்தெடுத்த சாகுந்தலத்தைப்பற்றியும் தெரியும். மற்ற இலக்கியங்கள் பரவாத அளவிற்கு இந்த வடமொழிக் காவியம் காட்டுத் தீபோல பரவியதற்கு அதில் வடித்தெடுக்கப்பட்ட காதல் ரசம்தான் காரணம் என்பதை நடுநிலையாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுவர்; கம்பனும் காளிதாசனும் தங்களுடைய காவியத் தலைவிகளை படைக்கும்பொழுது காவியக் கண்ணோடு படைத்தனர். எனவே அவற்றை கலைக்கண் கொண்டு பார்க்காது காமக்கண் கொண்டு பார்ப்பது அதனைப் பார்ப்பவர்களுடைய குற்றமே தவிர அதைத் தீட்டியவர்களுடைய குற்றமல்ல. ஏனெனில் கோயிலுக்குப் போகும் போது சாமி கும்பிடத்தான் போக வேண்டுமே தவிர, அங்கு வரும் வாலைக் குமரிகளுக்கு வலைவீசும் எண்ணம் இருக்கக்கூடாது. அதே போன்று ஒரு காவியத்தை கற்கத் துவங்கும்பொழுது அதனுடைய கதை அழகிலும், புலவரின் கற்பனை நயத்திலும்தான் ஈடுபட வேண்டுமே தவிர எங்கே ஆபாசம்

கரம் தொட்டுப்பயிலும் தென்னாட்டுக்கோயில் ஒன்றில் உள்ள சீதையும்-ராமனும்



இருக்கும் என்று தேடி அலைந்து அது கிடைத்ததுமே "கண்டேன் கண்டேன்" என்று உள்ளுக்குள் களிகொண்டாலும் வெளியில் கடுகடுத்து நோக்கும் சில போலி நடிப்புக்காரர்களைக் கண்டு நான் பெரிதும் பரிதாபப்படுகிறேன்.

'சிந்தையில் கள் விரும்பி 'சிவ, சிவ' எனபதுபோல உள்ளத்தில் காமத்தை விரும்பி வெளியில் மேலுக்கு நடிக்கும் இவர்கள் சற்று மேலாடை குலைவதே தவறு என்றால் முதலில் கோயில் சிற்பங்களை அல்லவா உடைக்கக் கிளம்பி இருக்கவேண்டும்?

எட்டுவயது சிறுவன் முதல் எண்பது வயது கிழவன்வரை முத்திக்கு வழிஎன்று வரும் கோயில்களில் கூட அல்லவா கல்லில் கலை இருக்கிறது. புலவர்கள் எதை எழுத்தில் வடித்தார்களோ அவற்றையே அல்லவா சிற்பிகள் காண்பவர் மயங்கும் கட்டழகு வல்லிகளாக மாற்றியிருக்கிறார்கள்.

தலைவனும் தலைவியும் நெருங்குகின்ற நிலையில் இருந்தால்கூடப்பரவாயில்லை. அவர்கள் இணைகின்ற காட்சியையே நம்முடைய கோயிற் சிற்பங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவற்றை இந்திய அரசாங்கம் வெளியிட்ட 'லலித கலா' என்ற ஏடே மிகப் பெருமையாக எடுத்து வெளியிடுகின்றது. இந்தியாவிற்கு வாருங்கள் என்று வெளிநாட்டார்களுக்கு அழைப்பு விடுக்கும் நம்முடைய அரசாங்க வெளியீடுகள் எல்லாம்கூட ஆடை அற்ற இந்த அழகோவியங்களைக் காட்டித்தான் வெளிநாட்டினரை அழைக்கின்றன. இதில் தவறு ஏதும் இல்லை. ஏதன்ஸின் சிற்பமாக இருந்தாலும் எல்லோரா குகையாக இருந்தாலும்-ரோமிலே உள்ள வீனஸாக இருந்தாலும் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட யட்ஷினியாக இருந்தாலும் பெண்மைப் பகுதிகள் யாவும் புடைத்து எழுந்து விம்மி வெடிப்பதுபோல பூரித்துக்கொண்டு நின்றால்தான் அது சிற்பக்கலையாகும். ஏன் என்றால் என்றும் அழியாத கலை வடிக்க விரும்பும் சிற்பி. தன்னுடைய சிற்பப் பெண்ணிற்கு இணையான அழகி இந்த உலகத்திலேயே பிறக்கக்கூடாது என்றுதான் எண்ணுகிறான். எனவே பிரம்மாவைவிட அதிகமாகவே அக்கறை எடுத்துக்கொண்டு தன்னுடைய அமைப்பை அணு அணுவாக உரு-

வாக்குகிறான். அந்த சிற்பத்தின் சிறிய இடையும், பெருத்த மார்புகளும் குமுத மலர்போன்ற இதழ்களும், தாமரை மலர்போன்ற முகமும், மானின் விழிபோன்ற கண்களும் சிற்பி தன கற்பனையிலே பெண்மையின அழகை எப்படி எல்லாம் கற்பனை செய்து பார்த்தான் என்பதன் பிரதி பலிப்புத்தான். அதைப்பார்க்கின்ற நாமும் சிற்பி எந்த கற்பனைக் கண் கொண்டு பார்த்தானோ அதே கலைக்கண் கொண்டுதான் பார்க்க வேண்டுமே தவிர மறந்தும் தங்களுடைய சொந்தக் கண்ணான காமக்கண் கொண்டு பார்க்கக் கூடாது.

ரவிவர்மா எழுதிய சரஸ்வதியை



பெரும்பாலான கோயில்களில் உள்ள எழுச்சியான பாவைவிளக்கு

யும் லக்ஷ்மியையும் கடவுள் கண் கொண்டுதான் பார்க்கவேண்டுமே தவிர அவற்றைக் காமக் கண் கொண்டு நோக்கினால் அவை பள்ளி அறையில் மாட்டவேண்டிய ஓவியங்களாகத்தான் இருக்கும்.

சென்னை திருவற்றியூர் கோயிலில் குழந்தை பிறக்கும் காட்சியே கூட தத்ரூபமாகக் கல்லில் வடிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் கோயிலில் ஒரு அழகிய நங்கை நின்று கொண்டு அங்கு வரும் இளைஞர்களின் உள்ளங்களை எல்லாம் புண்ணாக்கிக் கொண்டிருக்கிறாள். ஆணும் பெண்ணும் குஞ்சும் குழந்தையுமாக பக்த கோடிகள் வந்து



ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள அழகி

குவியும் கோயில்களில் இந்தச் சிலைகளும் இருக்கின்றன. வடநாட்டுக் கோயில் ஒன்றில் ராமனும் சீதையும் கட்டித் தழுவி முத்தமிடும் காட்சியே சிலையாகி இருக்கின்றது. திரைப்படங்களுக்காவது ஒரே ஒரு முத்தக் காட்சி இருக்கிறது என்பதற்காக 'பெரியவர்களுக்கு மட்டும்' என்று அரசாங்கம் தடை செய்து வருகிறது. ஆனால் 8 வயது முதல் 80 வயதுக் கிழவன் வரையில் எவ்விதத் தடையும் இன்றிச் செல்லும் கோயில்களிலோ இவை நட்டநடுவிலே மொட்டை மொட்டையாக நிற்கின்றன. அதிலும் கஜுராஹோ, கோனாரக் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களிலோ சிங்கார ரசம் முழுவதுமே, வாஸ்ஸாயனருக்கேகூட பாடமாக அமையும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் உள்ள எந்த ஏடும் இந்தியாவைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால் அதனுடைய சிற்ப சிறப்பையும் இந்த காந்த வல்லிகளையும் வெளியிடாது இருப்பதில்லை. இந்தியாவின் தலைசிறந்த ஏடும், உலகத்தின் மற்ற ஏடுகளுக்கு எவ்வகையிலும் குறையாததுமான டைம்ஸ் ஆப் இந்தியாவிலேயே இந்த கல்லில் வடித்த கலைகள் தான் காட்சி தருகின்றன. இந்திய அரசாங்கத்தால் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த ஏடு என்று தேர்ந்தெடுக்கப்படும் 'மார்க்' இதழில் பக்கத்திற்கு பக்கம் இந்த சட்டழகு வல்லிகள் தான் காட்சி அளிக்கின்றனர். அவ்வளவு தூரம் ஏன்? இந்தியாவிலேயே தலை சிறந்த எழுத்துலக மன்னனான முல்க்ராஜ் ஆனந்தினால் தொகுக்கப்பட்டு, ஸ்விட்சர்லாந்தில் அச்சியற்றப்பட்டு 140 ரூபாய் விலையில் இந்தியாவின் பெருமையை விளக்கும் தூது வகைப் பவனி வரும் ஏட்டிலே வந்த சிற்பம் இது.

இவைகளை எல்லாம் தவறு என்று கூறாதவர்கள்—கலைவளர்க்கும் கவின்மிக்க காட்சிகள் என்று ஏற்றுக் கொள்ளுபவர்கள்—திரையுலகு என்றால் மட்டும் ஏனோ கச்சை கட்டிக்கொண்டு தாக்கக் கிளம்பி விடுகிறார்கள். திரையில் ஒருநடிகை ஆபாசமாக நடிக்கிறாள் என்றால் அது அவளுடைய தனிப்பட்ட விருப்பமல்ல. அந்தக் கதையில் அவள் வில்லியாக வருகிறாள். வில்லியாக வரும் ஒருத்தி பதினெட்டு முழத்தில் புடவையை சுற்றிச் சுற்றிக் கட்டிக்கொண்டு மேலாடைகூட கலையாதபடி தாண்டாத பத்தினியாக இருக்கமுடியாது. அப்படியே இருந்தாலும் அவள் வில்லி நடிகையாக மாட்டாள். எனவே திரையுலகத் தாரகை சாவித்திரி அண்மையில் கூறியதுபோல, நடிகைகள் பிறருடைய இன்பத்திற்காகத்தான் தாங்கள் இவ்வாறு துன்பமடைகிறார்கள். பிறர்கண்டு களிக்க வேண்டுமே என்பதற்காகத்தான்; திரைக்கலை வளர வேண்டுமே என்பதற்காகத்தான் தங்களுடைய சொந்த விருப்பத்தைக் கூட சில போது விட்டுக்கொடுத்து சற்று கவர்ச்சியாக நடிக்கிறார்கள்.


ஒருத்தி பரத நாட்டியம் ஆட வேண்டுமென்றால் அவள் எவ்வளவுதான் நல்லவளாக இருந்தாலும் மேடையில் ஏறும்பொழுது மேலாடையை இறுகக் கட்டிய கவர்ச்சியான பரத நாட்டியத் தோற்றத்தோடுதான் ஏறவேண்டுமே தவிர, புடவையை பழங்கால பத்தாம்பசலி பாணியில் சுற்றிக்கொண்டு ஏறமுடியாது. மேடையில் நாட்டியம் நிகழும் பொழுது அவளுடைய முகத்தில் தோன்றும் பாவ மாறுதல்களையும் கைகள் காட்டுகின்ற முத்திரைகளையும்தான் கலைக்கண்களோடு பார்க்கவேண்டுமே தவிர எப்போது மேலாடை சற்றுச்சரியும்; அவளது பருவப் பொலிவு தெரியும் என்று காமக் கண்கொண்டு நோக்கிக் கொண்டு இருத்தலாகாது.

எனவே ஒரு காரியத்தையோ—ஓவியத்தையோ—சிலையையோ அல்லது திரையையோ நோக்குகின்றபொழுது கலையோடு ஒட்டித்தான் பார்க்க வேண்டுமே தவிர வேறு காம எண்ணத்தோடு பார்க்கலாகாது. இதுவல்லாது சிலர் கண்டதை எல்லாம் 'ஆபாசம்' என்று காமக்கண் கொண்டு கூறிக்கொண்டு திரிவார்களேயானால் உண்மையில் அவர்கள் மனிதர்கள் அல்ல—தாயக்கும் தாரத்திற்கும் கூட வேற்றுமை தெரியாத விலங்கினத்தோடு வைத்து எண்ணப்பட வேண்டிய மாக்களாவர்.

முல்க்ராஜ் ஆனந்தின் 'காமகலாவில்' உள்ள சிலைகளிலேயே இது தான் சற்று ஒழுங்கானது



எனவே இனியாவது நீங்கள் மாக்களாக வாழாது மக்களாக வாழ முயலுங்கள். எதையும் காமக் கண் கொண்டு பார்க்காது கலைக் கண் கொண்டு பார்த்து ரசியுங்கள்.



? ! ? ! ? ! ?





! ?

? !









? ( )



என்னடா இவன் இப்படி இருக்குறுன்னு என்னுடைய இந்த பல கோணத்தே பாத்து நீங்கள் ஏதாவது முடிவு கட்டிட போறீங்க...ஏன்னு நாவ துக்கப்படுகிறதும, சந்தோஷப்படுகிறதும், ஆச்சரியப்படுகிறதும், ஆலோசனே செய்ரதும் ..பாக்குற கண்களுக்கு பல தினுசா தோணும், .ஒண்ணும் தெரியாதவங்க புரியாமலே முழிப்பாங்க..இதுதான் மனுஷ லட்சணங்குறது. மனுஷன் எப்பவும் பாதாமல்வாவா சாப்புட முடியும்...? டழைய கஞ்சியும் தான் குடிச்சாகணும்...ஆனு நான் ஏராளமாக குழந்தைகளை தர்ராளமாய் பெத்த அஞ்சா நெஞ்சன் அதனுலே ஏங்கிட்டே எதுவும் நடக்குமா...? நடக்கத்தான் முடியுமா ! நான் அப்படியே சிகரெட் மாதிரி பூண்ணு ஊதியில்லே தள்ளிடுவேன்...!

**நகை மன்னன் டி. எஸ். துரைராஜ்**



? ! ! ?





# எழிலரசி எலிசபெத் அமைத்த காதற் களங்கள்

'கௌதமன்'

'எலிசெபத்' என்றாலே பிரிட்டானிய நாட்டுச் சரிதத்தின் 'ஒளி நிலவு' என்றுதான் பொருள்! காலமும், கடவுளும் சாதிக்க முடியாததை வெறும் கன்னியாக மட்டுமே இருந்து சாதித்தவள் எலிசபெத்! அவளுக்கிணை இவ்வுலக சரித்திரத்தில் இனி வந்துதான் பிறக்க வேண்டும். காதலும், வீரமும், சோகமும் சொல்லழகும் கொண்ட அவளுக்கு இவ்வுலக வாழ்வு இனித்ததைப் போல் உலகில் வேறெவருக்கும் இனித்ததில்லை என்று கூட துணிந்து சொல்லலாம்!

ரஷ்யக் காதல் தேவதை காதரைனும், ரோமானிய காதற் கிழத்தி மசாலினாவும், எகிப்திய எழிலரசி கிளியோபாட்ராவும், இவளிடம் பிச்சைதான் வாங்க வேண்டும்! ஏனென்றால் இம்மூவருக்கும், கடிமணமான பிறகுதான் காதலே பிறந்தது; ஆனால் இவளுக்கோ காதலுக்குப் பிறகுதான் மானஸிகக் கணவன்மார்களே தோன்றினர்! விரிந்த மனப்பான்மை என்கிறீர்களா? — என்ன செய்யலாம், பிறந்த பொன்னாடும், தவழ்ந்து வளர்ந்த நற்பெரும் குடும்பமும் அத்தகைய பெருமையையுடையது தானே? பிரிட்டானிய அரச குடும்பமென்றாலே அன்று முதல் இன்று வரை 'காதற் கலைக்கு' புதிய புதிய இலக்கணங்களமைத்த வண்ணம் தானே அது இருக்கிறது!

எட்டாம் ஹென்றி — எட்டாம் எட்வர்ட் — எழிலரசி மார்கரெட், ஈடும் எடுப்புமில்லா அந்நாளைய எலிசபெத், இவர்களின் காதல் விளையாட்டுகளுக்கு ஈடு செய்ய எந்த அரச குடும்பமிருக்கிறது உலகில்? கொண்ட காமப் பசியை காதலென்று காட்டி, கற்பழிக்கப்பட்டு, சாகடிக்கப்பட்ட எத்தனையோ இளவரசிகளின் பட்டியலை தன்னகத்தே ஒளித்து வைத்திருந்தவன் எட்டாம் ஹென்றி — கொண்ட காதலுக்காக அரசினையே துறந்து வாலி சிம்ஸனுடன் இன்றும் வாழும் எட்டாம் எட்வர்ட் — காதலிலே தோல்வியுற்ற எழிலரசி மார்கரெட் — போன்றாரின் காதல் நினைவுகள் உள்ளபடியே காதற் பொன்னேட்டுக்குப் பல்வேறு கோணங்களிலேயிருந்து இலக்கணமமைப்பவையாகத் தானே இருக்கின்றன! ஆனால் இவர்களையெல்லாம் தூக்கி அப்படியே விழுங்கி விடும் திறம் படைத்தவள் 'எலிசெபத்' ஒருத்திதான்.

கட்டினவனுக்கு ஒரு வீடு என்றால், கட்டாதவனுக்குப் பல வீடுகள் சொந்தமென்பதைப் போல, பல வீடுகளிலே குடியேறி வாழ்ந்தவள் எலிசபெத். ஆனால் எதையுமே தனக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளவில்லையவள்! சாமர்த்தியந்தான்!

சரிதம் அவளைக் 'கன்னி' என்கிறது — சம்பிரதாயம் அவளைப் புனிதமானவள் என்கிறது — ஆனால் காதற் பெருநிலமோ, அவளை 'ஆண்டு அனுபவித்த ஆடலழகி' என்று பழி சுமத்துகிறது! இதில் எது நிஜம்? எது சரி என்கின்ற ஆராய்ச்சி ஓர் புறம் கிடக்கட்டும்; அப்பழுக்கற்ற உண்மைகளும், ஆடவர் அவ்வப்போது காட்டிய அன்பை அழித்து விட முடியாத சூழ்நிலைகளும், அவளுக்கிருந்த போது — எல்லாமே — உண்மை — அவள் வாயிலாகவே உண்மை — என்ற முடிவு கட்டித்தான் நாம் மேலே போக வேண்டும்.

எலிசெபத் ராணியை புதிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முன்னோடும் பேரரசி என்று சொல்லு முன், அவள் அந்தப் பெரும் அரச பதவியை எட்டிப் பிடிக்க எத்தனை நாள் 'லண்டன் டவரிலே' சிறைக் கைதியாய், ஒவ்வொரு நிமிஷமும் தன் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள் என்பதை நாமெண்ணிப் பார்க்க வேண்டும். பட்டம், பதவிக்கு வந்த போட்டியிலே இவளின் ஒன்று விட்ட சகோதரி மேரிக்கு (Bloody Mary!) அரசபீடமும், இவளுக்குச் சிறைவாசமும்தான் பரிசாகக் கிடைத்தது! மேரியைப் பட்டமேற்க அரசமன்றம் அழைத்தபோது, அவளோ எலிசெபத்தை சிறைவாசமேற்க அழைத்ததில் வியப்பில்லை! எலிசெபத் வெளியிலிருந்தால் சதி உருவாகும் — ஆண் வாரிசில்லாத பிரிட்டிஷ் சிம்மாதனத்தில் அவளுக்கும் உரிமையிருப்பதால் வேதனை விளையுமென்ற நல்லெண்ணம் (!) எலிசெபத்தை சிறைக்கனுப்ப மேரியைத் தூண்டியது! அதுமட்டுமா? சிறையில் வாடிய எதிர்காலப் பேரரசியை, திரை மறைவில் கொன்றுவிடச் சதி செய்தவர்களும், தூண்டி விட்டவர்களும், மேரிக்கருகில் ஏராளமான பேர்களிருந்தனர் என்றால் எப்படி இருந்திருக்கும் அந்த பயங்கரம்? — என்று நாம் நினைக்கவே வேண்டியதில்லை. கட்டிய கணவன் ஸ்பெயின் மன்னனால் கைவிடப்பட்டவள் மேரி — எனவே உலகில் அரசபீடத்தைத் தவிர வேறு ஆதரவில்லையவளுக்கு!

ஆனால் எலிசெபத்திற்கோ அந்த ஆதரவுமில்லை — ஆதரவு கோரவும் உரிமை மறுத்தது அரசமன்றம். ஆரம்ப முதலே அப்பனின் ஆதரவும் ஈன்றெடுத்த அன்னையின் அரவணைப்பும் அவளுக்கில்லாமற் போனது துரதிர்ஷ்டத்தினும் துரதிர்ஷ்டப்தான். ஏனென்றால், அவளின் அன்னை 'ஆன்பொலினை' யாரென்று அடையாளம் கண்டுபிடிக்கு முன்னரே, துடிக்கத் துடிக்கக் கொன்று விட்டான் எலிசெபத்தின் தந்தையான எட்டாம் ஹென்றி; எனவே அனாதையாக வளர்ந்தவள் எலிசெபத். அதனால்தான் கேட்பாரில்லாத நிலையில் அவளைச் சிறையிலடைத்து விட்டாள் மேரி. ஆனால் எலிசெபத்தோ (1554) சிறைக் கோட்டத்திலேதான் தன் எதிர்காலத்தையே உருவாக்கினாள். அவள் உருவாக்கினாள் என்பதை விட காலம் உருவாக்கியது என்பதுதான் வெகு பொருத்தம்.

நலிவான மனம் படைத்த மேரிக்கு ஓர் சமயமிருந்த குணம் மற்றொரு சமயமிருந்ததில்லை. எலிசபெத்தைச் சிறையிலடைத்தாள் — தூக்கில் போட வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டிருந்தாள் — ஆனால் அதைப் பற்றியோர் முடிவுக்கு வருமுன்னர், அவளின் துன் மந்திரிகளில் ஒருவன் எலிசெபத்தைச் 'சிறைச் சேதம்' செய்யும்படி சொந்த ஹோதாவில் உத்தரவிட்டு லண்டன் டவருக்கே சேதியனுப்பி விட்டான் — ஆனால் சிறையதிகாரியோ அந்த உத்திரவைத் தூக்கிக்கொண்டு இது உண்மையா? என்று விசாரிக்க மேரியிடம் ஓடி வந்த போதுதான் — மேரிக்கே தன் நிலையும், அதைப் பயன்படுத்தி மற்றவர் செய்த சதியும் புரிந்தது. உடனே சிறையதிகாரியிடம் எலிசெபத்தைச் 'சிறைச்சேதம்' செய்வதற்குப் பதில் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டனுப்பினாள்; எனவே துன்பத்தின் விளிம்பி[illegible] இன்பம் பிறந்தது! இது முதல்தா[illegible] எலிசெபத்திற்கு எதிர்காலமும் உருவாகியது!

எனவே ஏதேதோ காரணங்களால் சிறை[illegible]யிடப்பட்ட எலிசெபத் இறுதியில் எப்படியோ விடுதலை செய்யப்பட்டாள். பருவமங்கை[illegible] — எதிர்காலத்தின் ராணியை — பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எழிலான இளவரசியை சிறையிடுவது நாட்டுமக்களின் நல்லெண்ணத்தையே சிறையிடுவது என்பதை எப்படியோ உணர்ந்திருந்த அவள் தமக்கை மேரி அவளை நல்ல நேரத்தில் (1555) விடுதலை செய்து விட்டாள். 21 வயதை எட்டிப் பிடித்திருந்த எலிசெபத்திற்கு இந்த விடுதலை மாபெரும் வியப்பைத் தந்தாலும் மற்றொரு விஷயத்தில் அவள் பெரிதும் கவலை கொள்ளத்தான் செய்தாள். காரணம் இப்போது அவளோர் முகிழ்த்தெழும் தாமரை! மலர்ந்து மணம் வீசத் தொடங்கி விட்ட மனோரஞ்சிதம் — சிவந்த கன்னங்களும், சிங்காரப் பொன்னிலவு முகமும், நீலக் கருவிழியும் நெஞ்சையள்ளும் புன்னகையும் கொண்டு விட்ட நேரிழையாள்! அந்த அன்றலர்ந்த தாமரையை நின்றலற வைக்க பெரும் பெரும் புள்ளிகளெல்லாம் வெகு நாட்களாகவே எண்ணமிட்டுத் திரிந்த வண்ணமிருந்தனர். எனவேதான் தன் உயிரைக் காத்துக் கொள்வதை விடத் தன் கற்பைக் காத்துக் கொள்ளுவதே அவளுக்குப் பெரும் வேலையாகி விட்டது. கண்டவனெல்லாம் கடிமணம் செய்துகொள்ளலாம் வருகின்றாயா? — என்றழைக்கும் பருவமும், அரசகுடும்பமும் அவளுக்கில்லையேல் இவ்வளவு தொல்லையில்லை.

ஆரம்பத்திலேயே தாயை இழந்து விட்ட அவளுக்கு மாற்றாந்தாயாக இருந்தவள் — இருக்க ஒப்புக்கொண்டவள் 'காதரைன்பார்' என்ற சீமாட்டி. இவள் எலிசபெத்தின் தந்தை, எட்டாம் ஹென்றியின் மனைவியர்களில் ஒருத்தி. எனவே மாற்றாந்தாயான இவளிடம் எலிசபெத் வளர்ந்து வர விடப்பட்டதும், அவளே அங்கு வளர்ந்து வர ஒப்புக்கொண்டதும் ஆச்சர்யமில்லை. ஆனால் எலிசெபத்தின் தந்தை ஹென்றி இறந்ததும் (1847) இவள் வாழ்ந்த சூழ்நிலையே வேறாகி விட்டது — காரணம் இவளின் மா[illegible]றாந்தாய்க்குப் புதுக் காதலன் தோன்றி வி[illegible]டான். அன்றுவரை அரச குடும்பத்தின் மெ[illegible]க்காப்பாளர்களில் ஒருவனாக அமர்த்த[illegible]ட்டிருந்த தளபதி 'செய்மோர்' என்பவன் [illegible]காத்து வந்த 'மெய்களில்

ஒன்றை மெய்யாகவே தனக்காக்கிக் கொள்ள முன் வந்து விட்டான். 'காதரைன்பாரை' ரகசியமாகக் கட்டியணைத்துக் கொண்டிருந்தவன், ஹென்றி இறந்த பிறகு அந்த ஹென்றியின் விதவையைத் தனக்கானஎழிலரசி என்று ஏற்றுக் கடிமணமும் புரிந்து கொண்டான். இந்த நிகழ்ச்சி அந்தப்புரத்திற்கு உள்ளும் வெளியிலும் ஒரே குழப்பத்தையே உண்டாக்கி விட்டது — பலர் பலவிதமாகப் பேசத்தொடங்கினர் ஆனால் 'செய்மோரு'க்கோ உள் எண்ணம் வேறு !

'பாரிடம்' வளர்ந்துவரும் எலிசெபத்தைப் பாரறியத் தானே திருமணம் செய்து கொண்டால் ஆங்கிலத் தீவும், அதை ஆளும் உரிமையும் தனக்கே மாறுமென்று அவன் திட்டமிட்டிருந்தான் ! அதன் முதற்படியாகத்தான் 'தாயை'த் தனதாக்கிக் கொண்டு அந்தத் தனிர் மேனியாள் எலிசெபத்திடமும், அடிக்கடி நெருங்கிப் பழகிக் கொண்டுவந்தான். ஆனால் அப்போதோ எலிசெபத்திற்குப் பதினான்கு ஆண்டும் ஆகாத நிலை !!

ஆனால் இந்த நிலையிலும் அவன் காமவெறி எலிசெபத்தை விடவில்லை ! வளர்ப்புத் தந்தையாக இருக்கவேண்டியவன்- நஞ்சை நாவில் வைத்து அவளிடம் பழகமுற்பட்டான். அவள் மாடிப்படி ஏறும்போதும் இவனும் கூடவே போவான். யாருமில்லாத வேளையில் இந்த ஆரணங்கைக் கட்டிப் பிடிப்பான். ஆசையாகத்தான்! ஆனால் அந்த ஆசை எந்த அளவிற்கு வளர்ந்தது என்பதை அவன் எலிசெபத்தை இறுகக் கட்டிப் பிடித்து, மிருகமாக முத்தமிட்ட போதுதான் 'அவளுக்கும்' தெரிந்தது ஒஹோ-இவன் வளர்ப்புத் (தந்தை) அந்த...! எண்ணத்தில் தான் இப்படிச்செய்கிறானென்று. சிறியவளல்லவா எலிசெபத்? வயது 14-முடியவில்லை எப்படித் தெரிந்து கொள்ளமுடியும் அவ்வளவு வயதில், அவன் சொல்லிக் கொடுத்தது நெஞ்சினிக்கும் வாழ்க்கைக்கு நெகிழ்சி தரும் 'பால பாடம்' என்று. எனவே தான் கொஞ்சம் நாள் பிடித்தது அன்பின் தரத்தையுணர ! 'செய்மோரின்' செய்கை வளர்வதைக் கண்டுபயந்த சிங்காரி எலிசெபத் தாயிடம்-பாரிடம்' சென்று முறையிட்டாள்- தாயோ-சொய்மோர் தகாத வேலையொன்றும் செய்துவிடவில்லை என்று வக்காலத்து வாங்கினாள். ஆனால் அந்தப்புரமோ 'கொல்' என்று சிரித்துவிட்டது இந்தப் புதுநட்புறவு கண்டு ! மேரி ராணி வெகுண்டாள் அதைவிடவெகுண்டாள் எலிசெபத் தனக்கு நேர்ந்த கதியை எண்ணி. விஷயம் விபரீதமாகுமுன் செய்மோர் கைதி செய்யப்பட்டான். அதோடு பல்வேறு அரசியற் காரணங்களையும், குழப்பங்களையும் முன்வைத்து எலிசெபத்தும் லண்டன் டவரில் (1554) சிறையிடப்பட்டாள். விசாரணைக் குழப்பமும் முடிந்தது. ஆனால் சிறையில் வாடிய சிங்காரிக்குத்தான் விமோசனமில்லை. ஆரம்பத்தில்சொல்லியபடி அவள் அரியணைக்கு அடுத்த வாரிசு என்பதையும் ஆகவே அவள் மேரியைக் கொல்லவும் சதிசெய்வாள் என்பதையும் சிலர் குறிப்பாக மேரிக்கு உணர்த்தினர். மேரியும் அதைப்பற்றி நினைத்தபோது தான், வேறொர் பயல் அவளுக்குச் சாவோலையே கொண்டுபோனான் மேரியின் கையொப்பமும் மனச்சம்மதமுமில்லாமல்! இந்த நிலை தான் எலிசெபத்தின் வாழ்க்கையிலேயே ஓர் திருப்பத்தையுண்டாக்கிவிட்டது எப்படியோ மரணவோலை விடுதலைச் சாஸனமாகிவிட்டது. தன் நிலையையும், செயலையும் உணர்ந்த தமக்கை மேரி அவளை உடனே (1555) விடுதலை செய்துவிட்டாள்.

இடையில் எப்படியோ ஒரு மூன்றாண்டுகள் ஓடிமறைந்தன. ஸ்பெயின் நாட்டு இளவரசனின் கடிமணத்தால் கவலை கொண்டுவிட்ட மேரி நோய்வாய்ப்பட்டு 1558-ல் இறந்து போனாள், எனவே வாரிசில்லாத அவளுக்கு அடுத்த வாரிசு எலிசெபத்துதான்.

எனவே சிறையிலும், சிதைந்துபோன பெருமையிலும், வாடிவளர்ந்து வந்த எலிசெபத்திற்கு திடீரென்று யோகம் பிறந்தது. அரசபீடம் அவளை அழைத்தது வேறு வழியில்லாமல் மணிமகுட விழா-ஹும்! அதையவர்கள் பெயரளவில் அப்படித்தான் அழைத்தார்கள் அதுவும் நடைபெற்றது! கிரிக்கட் பந்தயத்தில் நம்பிக்கையற்ற நிலையில் கடைசியாகச்செல்லும்பந்தாட்டக்காரன்(Batsman)இன்னும் பத்து நிமிஷங்களில் ஆட்டமிழந்து திரும்பிவந்து விடுவான் என்று அனைவரும் நினைப்பதைப் போலத்தான் இவள் ஆட்சி யேற்றபோதும் மற்றவர் நினைத்தனர்! ஆனால்கடைசி ஆட்டக்காரனும் சிலவேளைகளில் தன் அபார ஆட்டத்தினால் 100-ரன்களும் எடுத்துக்காட்டித் தன் கோஷ்டிக்கே வெற்றியும் உயிரும் ஊட்டுவதைப்போல எலிசெபத் தனி அரசபரம்பரைக்கே உயிரூட்டியதுமட்டுமல்ல; உலக சரிதமே இன்றுவரை காணாத அளவுக்கு ஓர் சிறந்த பேரரசியாகவும் ஆகிவிட்டாள். உலகையாண்ட ஆண், பெண் இருபாலர்களிலுமே அவளைப் போல் இமாலயவெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையிலும், அரசியற்களங்களிலும்-ஏன் காதற் களங்களிலும்-கூடத்தான் எவருமே இல்லை.

ஆகவே ராணியாகிவிட்ட எலிசெபத்திற்கு மகிழ்ச்சிபொங்கியது. சிலநாளைக்குமுன் சீரற்றுக்கிடந்த நமக்கு, இன்னும் சீரும், சிறப்பும், பிரிட்டானிய சிங்காதனமும், ஒளி வீசும் மணிமுடியும் கிடைத்ததே என்று பெருமகிழ்ச்சி கொண்டாள். எலிசெபத். அனாதை என்று பிரகடனப்படுத்தப்பட்டுக் கிடந்தோம் இன்று அகிலமும் நம்காலடியில் விழும் பாக்கியம் கிடைத்திருக்கிறதே என்று எண்ணிப் பூரித்தாள்.

மணிமுடிதரித்த பிரிட்டானிய ராணிக்கு ஆண் வாரிசு—தேவை யென்பது பிரிட்டானிய நாட்டு அரச அவையின் சித்தாந்தம்! இதன்படி எலிசெபத் மணம் செய்து கொள்ள வேண்டும். ஆணும் ராணிக்குப் பக்கத்தில் வாழும் கணவனுமிருந்து வழிகாட்ட வேண்டும்—ஏன் அவளின் பாதுகாவலனாகவும், இதய வேந்தனாகவும் அவனிருக்க வேண்டும். இதன்படியிருக்க ஒரு மன்னனையோ, மாவீரனையோ, இளவரசனையோ அல்லது ஏதோ ஓர் பொம்மைக் கணவனையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அவளை வேண்டியது பிரிட்டானிய அரச மன்றம்! ஆனால் அவளோ எள்ளி நகையாடினாள் இவர்களின் திடீர் அக்கரையைக் கண்டு !

இன்று திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தும் இவர்கள் எல்லாம் அன்றைய நாட்களில் இவளை ஏறெடுத்தும் பாராதவர் தான் சிறையிலே வாடியபோது வெளியிலே நின்று சிரித்துக் கொண்டிருந்தவர்கள்! தன்னை அரச குடும்பத்துடன் சேர்த்துக் கொள்வதையே—ஏன்தான் உயிருடனிருப்பதையே விரும்பாதவர்கள்—அத்தகையவர்கள் தான் இன்று இவளிடம் நல்லபிள்ளையாக இருக்க நாய் போல் வால் குழைத்து—நரி போல் எண்ணமிட்டு வருகிறார்கள் — இதை அறிந்துதான் என்னவோ தனக்குத் திருமணமே வேண்டாமென்று அறுதியிட்டுச் சொல்லிவிட்டாள் எலிசெபத் !

திருமணத்தினால் தன் தாய் 'ஆன்பொலின்' ஹென்றியிடம் பலியானதையும், விவாகத்தினால் தன் தமக்கை மேரி தன் இளமையையெல்லாம் தன் கணவன் ஸ்பெயின் மன்னன் வந்து சேராத கவலையால் இழந்துவிட்டதையும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்த அவள் திருமணத்தை அறவே வெறுத்து விட்டாள்!

தன்னைத் திருமணம் செய்து கொள்ளவும் அதால் பிரிட்டானிய அரியணையில் பங்கு கொள்ளவும், காத்துக் கிடந்த எத்தனையோ நாட்டு இளவரசர்களையும், மாவீரர்களையும், பிரபுக்களையும், தளபதிகளையும், தன் திடீர் முடிவால் ஏங்க வைத்துவிட்ட அவள் தன் திருமணத்தைப் பற்றிச் சொன்னதெல்லாம் இதுதான்! நானோர் திருமணமாகாத கன்னியாகவே என் வாழ்வை வாழ்ந்து முடிக்கத் திட்டமிட்டிருக்கிறேன்—நான் வீழ்ந்து மடிந்த பிறகு என் கல்லறைக்குக் கணவன் பூஜை செய்யாமல்-அகில பிரிட்டனும் அன்பால்பூஜை செய்தால் அதுவேபோதும். உலகம் எனக்குப் பிறகு என்னை புனிதமான கன்னிப்பெண், என்றழைத்தால் அதுவே எனக்குப்பரம திருப்தி. என்றுதான் அவள் சொல்லி முடித்தாள்.

எனவே பிரபுக்களும் அரசஅவையினரும் தங்களின் 'பெரும் பேரமும்'-செல்வாக்குப்பெரும் புதுவாய்ப்பும் போய்விட்டதே என்று ஏங்கியே போய்விட்டனர்- ஆனால் வேறுசிலர் அரச வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் தான்-ஆனாலும் அக்கப்போர் பேர்வழிகள் - அவர்கள் சொன்னதெல்லாம் சொல்ல நினைத்ததெல்லாம் வேறு! வேறு!

திருமணம் செய்து கொள்ள விரும்பாதவாலிபனைப்பார்த்து இவனும் ஒரு ஆண்பிள்ளையா? இப்படி நெளிகிறானே திருமணம் என்றதும் இவனுக்கென்ன ஆண்மையே, இல்லையா? பேடியா இவன்! என்றெல்லாம் நண்பர்கள் கேலிசெய்வதைப்போல இவளைப்பல பல விதமாக கேலிசெய்தனர் திரைமறைவில்தான்.

'எலிசெபத்திடம் பெண்மை பிருந்தால் தானே அவளுக்குத் திருமண ஆசைகள்சுரக்குமென்றனர்' வேறு சிலர். 'எலிசெபத் ஓர் பெண்ணே அல்ல; இளமையிலேயே மாண்டு போன—எலிசெபத்தின் சாவை மறைக்கவும் ஹென்றியின் கோபத்திற்காளாகாமலிருக்கவும் ஓர் ஆண்பிள்ளையை ஈடுவைத்துத் தாதிகள்செய்த சதியின் விளைவுதான் இன்றைய பெயரளவு எலிசெபத்' என்று கூசாமல் ஆதாரமற்ற பேச்சை அள்ளி வீசினர் சிலர். இன்னும் சிலரோ அக்கப்போரே புரிய ஆரம்பித்தனர்.

கட்டினவனுக்கு ஒருவீடு என்றால் கட்டாதவனுக்குப் பலவீடு என்று பொருள் நிரம்பிய கேலிசித்தாந்தம் பேசினர் வேறுசிலர் மற்றும் சிலரோ தன்இளமைகால நண்பர்கள் தனக்குக் காதற்பொன் விலங்கிட்ட நேயர்கள் எலிசெபத்தினால் மறக்கமுடியாததாலே இப்படிபேசுகின்றான் என்று 'ராபர்ட்டட்லி' என்ற திருமணமாகிவிட்ட ஓர் திரைமறைவுக் கதாநாயகனைச் சுட்டிக் காட்டினர். யாரென்ன சொன்ன போதிலும் தனக்குச் சரியென்றுபட்டதை தப்பாமல் செய்து வந்தாள் எலிசெபத் காதல் விவகாரங்களிலே அக்கறை காட்டுவதை விட முதலில் அரசியல் பேதாபேதங்களைச் சமன் செய்து கொள்வதே தன் முதல் வேலையென்று தீவிரமான மாறுதல்கள் பல செய்ய ஆரம்பித்தாள் எலிசெபத்.

அப்படிப்பட்ட அறப்பணி அவளுக்கு வெற்றியைத் தராமலுமில்லை அரசியல் விவகாரங்களிலும், ஓர் நடுநிலைமையை அவள் கையாண்டது மற்றவர் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளமுடியாமல் அவளைப்பெரிதும் தப்புவித்தது. தான் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்காத ஒரே காரணத்தால் தன் மீது விரோதம் பாராட்டி நின்ற ஆஸ்திரிய — ஸ்பெயின் இளவரசர்களையும் மற்றும் பல அரிப்பு மனம் கொண்டவர்களையும், அவள் தகுந்த சமயத்தில் சரியானபடி தண்டிக்க வேண்டுமென்றே கருதி காலத்திற்கும் வாய்ப்புக்கும் காத்திருந்தாள். இதற்காக பிரஞ்சு நாட்டு இளவரசனைத் தன் பக்கத்தில் ஈர்த்துக் கொண்டு அவனைத்தன் காதல்தொட்டிலிட்டுத் தாலாட்டினாள் திருமணம்சய்துகொள்கிறேன் என்று வேடிக்கைக்காக மட்டும் சொல்லி வந்தாளே தவிர அந்த அப்பாவி இளவரசனுக்கும் அழகான திருநாமத்தை அன்பாகச் சாத்தி விட்டான் எலிசெபத், பாவம் அந்த அப்பாவிப் பயல் அவளின் அமுத உதடுகள் இனிக்கக் கண்டானே தவிர, அவளை மனைவியென்று ஒரு நாளாகிலும் சொல்லிக் கொள்ள வாய்ப்பில்லாமலேயே வாயைப் பிளந்து விட்டான்.

எலிசெபத்தின் வாழ்க்கையில் அவளையுயர்த்தியது இரண்டு மூன்று முக்கியமான சம்பவங்கள்தான் ஸ்காட்லண்டுமேரியை இவள் 19 ஆண்டுகள் சிறையிலிட்டு இறுதியில் 1587-ல் சிறைச்சேதமே செய்து விட்டாள். அவளின் மணிமுடிக்கும், உயிருக்கும் ஏற்பட்ட பலத்த

போட்டியில் இறுதியில் இவனே வெற்றிபெற்ருள். தொடர்ந்து சதிசெய்து வந்தமேரி தொலைந்தபிறகு தான் இவளுக்கு ஆளும் துறையில் நிம்மதி ஏற்பட்டது. அந்தநிம்மதியையும் குலைக்க முன்வந்தான் ஸ்பெயின் நாட்டு பிலிப்.

தன்னை தொடர்ந்து ஏமாற்றி வந்த எலிசெபத்தை எப்படியும் பழிவாங்கவும் இங்கிலாந்தை தன் காலடியில் வீழ்த்தவும், இவன்பெரியதோர் கப்பற்படையை தயாரித்து அதற்கு தோற்கடிக்கமுடியாத ஆர்மாடா" (The invencebl-Armeda) என்று பெருமிதத்துடன பெயரிட்டு அவ்வளவு கப்பற்படைகளையும் இங்கிலாந்து மீது மோதவிட்டனர். சுமார் 132 கப்பல்களடங்கிய அந்தபெரும்படை ஆங்கிலக் கால்வாய் வழியே நுழைந்தபோது இங்கிலாந்தே படுசூரணமாகி, ஸ்பெயின் நாட்டு ராஜவீதிகளிலே ராணி எலிசெபத் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்படுவாள் என்றே அனைவரும் எண்ணினர், ஆனால் ஏமாந்து போயினர்.

எலிசெபத்திடம் வேலைசெய்த பெரும்தளபதிகளெல்லாம் வெறும் பொன்னுக்காகவும், பொருளுக்காகவும் மட்டும் வேலைசெய்யவில்லை. ராணியின் அன்பிற்காகவும் அருளிற்காகாவும், இந்த இரண்டையும் மீறிய அரவணைப்புக்காகவும் கூடத்தான் அவளிடம் சேவை செய்தனர். எனவே உணர்ச்சிவயப்பட்ட அத்தனை பேரும் போட்டிமனப் பான்மையிலே பொங்கி எழுந்தனர். போரிட்டு ஜெயித்தால் கிடைப்பது ராணியின் அன்புபசாரமும் அரவணைப்பும் என்ற உணர்ச்சியே அவர்களைச் சீறிப்போரிட வைத்தது... டிரேக்—ராலே போன்ற ஈடும் எடுப்புமில்லா கடற்படைத் தளபதிகள் ஸ்பானிஷ்ஆர்மடாவை ஆங்கிலக்கால்வாயிலே தீயிட்டுப்பொசுக்கிவிட்டனர். அந்த 132 கப்பகளுக்கு மிடப்பட்ட பெரும் தீயை ஸ்பெயின் நாட்டு அரசனின் தாடிக்கே வைக்கப்பட்ட பெரும்தீயாகக் கருதி ஐரோப்பா முழுவதும் எள்ளிநகையாடும் வண்ணம் பரிபூரண வெற்றிபெற்ருள். எலிசெபத் கடற்துறையிலே இன்னும் 5, 6, சகாப்தத்திற்கு எவரும் பெறமுடியாத வெற்றியைப் பெற்று ஆங்கில நாட்டின் பெருமிதத்தை நிலை நாட்டிய பெருமை இன்றும் உலக சரித்திரத்திலேயே மிகமிக உயர்ந்த நிகழ்ச்சியாகும். அன்று இங்கிலாந்தின் கடற்படையின் சிறப்புக்கு வித்திட்ட எலிசெபத்தின் வீரத்தை இன்றும் நிலைநாட்டி வருகிறது பிரிட்டன். இன்றைய எலிசெபத்தும் அதை நிலைநாட்டிப் புகழடைவதுமிகவும் போற்றத்தக்கதுதான்

எனவே ஸ்பானிஷ் ஆர்மடா வீழ்ந்ததும் இங்கிலாந்தின் எதிரிகளே வீழ்ந்தனர். இனி, எலிசெபத்திற்குத் தேவையானதெல்லாம் வீரமல்ல-விவேகமும், தன் விரகதாபத்தைத் தணித்துக்கொள்ளுகின்ற நல்வாய்ப்புதான் அதைத்தான் தொடர்ந்து செய்தாள் எலிசெபத்!

அவள் காலத்தையும் ஆங்கிலக் கலாச்சாரத்தையும் ஏன் அவள் உள்ளத்தையும் கூட பொன் மயமாக்கிய ஷேக்ஸ்பியர் முதல் அவளின் போர்ப் படைகளுக்கும் பொக்கிஷத்திற்கும் பொலிவூட்டிய ராலே-டிரேக்-போன்றவர்கள் வரையிலுள்ள அனைவரிடத்திலுமே அவள் சரசமாடத் தொடங்கினுள் அவளின் நீலக் கரிய விழிகள் எத்தனையோ பேரின் நெஞ்சத்தைத் துளைத்த கூர் அம்புகளாகி விட்டன...! ஆங்கிலச் சரித்திரத்திலேயே கேட்டதை இல்லையென்னுதுகொடுத்தஒரே பெண்மணி எலிசெபத்துதான். பொன்னு? பொருளா? பொலிவுள்ள தன் உடலா? எதையும் தயங்காது அளித்த அந்தத் தளிர் மேனியாளைப்போல் இனி உலக சரித்திரத்திலேயே எவருமே வரமுடியாது! வரவும் வேண்டாம்!

உலக சரித்திரத்திலேயே வனப்பையும் வாலிபத்தையும் சரியான அரசியற் காரணங்களுக்காகவும் பயன்படுத்திய பெண்மணிகளில் இரண்டாவது ஆள் எலிசபெத்! முதல்வள் தான் கிளியோபாட்ராவாயிற்றே! ஆனால் அவளுக்கும் ஏற்கெனவே திருமணமாகிக்கிடந்தது. ஆனல் எலிசெபத்திற்கோ அதுவும் இடையாது! ஆகவேதான் அவளுக்குச் சாகும்வரை வாழ்க்கை இனித்தது...!

பதினுன்காம் வயதில் சிற்றப்பன் 'செய்மோர்' சொல்லிக் கொடுத்த பால பாடத்தின் எதுகை மோனை-வளைவு நெளிவுகளை-24வது வயதிலேதான் நன்கு புரிந்துகொண்டாள் எலிசெபத்!

ராபர்ட்டடல்லி அந்த வளைவு நெளிவுகளைச் சமன் செய்ய முன் வந்தான். 'செய்மோர்' சொல்லித் தந்த அந்த பால பாடங்களுக்கு முதன் முதல் நேரிடையான தெளிவுரை சொன்னவன் ராபர்ட் டல்லிதான். டட்லி என்ற பெயரைச் கேட்டவுடன் எலிசபெத்தினிதயமே பூரிப்பால் மலர்ந்துவிடும். அவனுக்கு மட்டும் மணமாகாதிருந்தால், எலிசெபத்தை இப்படி ஏகாங்கியாகத் தவிக்கவிட்டே இருக்கமாட்டான். பாவம் மணமாகிவிட்டிருந்ததால் சொந்தம் செய்று கொள்ளமுடியாத சொத்தாகவே இருவருமிருந்தனர்.

"ராபர்ட் டட்லி ஓர் சிறு வட்டாரத்தின் குட்டி ராஜா-எலிசெபத்தின் இளமைகாலக் கூட்டுத் தோழன் எனவே எலிசெபத் ஆட்சியேற்ற பின் இவன் மாட்சிபெறத் தொடங்கினுன் புதிய குதிரைப் படைகளின் கவர்னர் பதவிக்கு அவனுக்களிக்கப்படடது. ஆனல் அவனே இரண்டு வேலைகளைச் செய்யத் சம்மதம் தெரிவித்தான் கவர்னர் பதவியையும் எலிசெபத்தின் மெய்க் காப்புப் பதவியையும் அவனே ஏற்றுக்கொண்டு எலிசெபத்திற்கு எவரும் தாராத புதுவெள்ளத் தேனிலவுக் காட்சிகளைத் தினமும் சக்கைபோடு போட்டுக்கொண்டிருந்தான் ஊர்திட்டுகிறதே-உலகம் தூற்றுகிறதே என்று எவருமே பார்க்காத அளவுக்கு அவர்களின் காதல் வெறி சரளமாக திரண்டோடிக் கொண்டிருந்தது. ஆனல் அதுவும் அதிக நாட்கள் நீடிக்கவில்லை 'ஆசை அறுபது நாள் — மோகம் முப்பது நாள் — தொண்ணூறு நாளும் போனுல் பிறகு...!' என்பதைப் போல இவர்களை அதிகமாக நெருங்க விடவில்லை அரச அவையும் அந்தப்புறமும். எனவே டட்லியின் விவகாரங்களுக்கு ஓர் தொடர்புள்ளி போட்டு விட்டு மற்ற விவகாரங்களிலே புகுந்தாள் எலிசெபத்.

சதா தன்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்த — ஸ்பானிஷ் இளவரசர்களிடம் — நட்பும் சாகஸமும் கொண்டு ஒரு கை பார்க்கலாமென்று எண்ணினுள் எலிசெபத்...! ஆனல் அந்த கணக்கும் ஓர் தப்புக் கணக்காகி விட்டது. இந்த இரண்டு இளவரசர்களும் அவளின் சாகஸத்தில் சிக்காமல் சம்மதமல்லாத பிரெஞ்சு இளவரசன் அகப்பட்டுக் கொண்டு தவியாய்த் தவித்தான் கொஞ்ச நாள். ஆனல் அதற்குள்ளேயே ஸ்பெயின இங்கிலாந்தின் மீது போர் தொடுத்தது. எனவே ராலேயும்—டிரேக்கும், இப்போது தேவைப்பட்டன்ர். இவர்களின் வீரமும் விவேகமும் இங்கிலாந்தின் வெற்றிக்கும், இவர்களின் வனபபும் அழகும் எலிசபெத்தின் திருப்திக்கும் தேவைப்பட்டது. போர் முடிந்தது; புகழ் கிடைத்தது என்றில்லாமல் அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய சொக்கட்டான்களாடத் தொடங்கினுள் எலிசபெத்.

ராலேயும், டிரேக்கும், தங்கள் உயிரை ராணிக்காகக் கொடுக்கவும் தயாராக இருந்தனர். ஆனல் அவளுக்கு வேண்டியதெல்லாம் உயிரா...? உடலா...? இரண்டும்தான் என்ருள் அவள்! முதலில் உடல்; பிறகு உயிர்! இப்படி இரையானவர்கள் எலிசெபத்தின் ஜீவியத்திலே ஏராளமான பேர்கள் குவிந்து கிடக்கத்தான் செய்தனர். ஆரம்பத்தில் சாகஸம் — அதன் பிறகு அன்பணைப்பு — அது முடிந்ததும் குற்றச்சாட்டு; பிறகு மரண தண்டனை! இப்படியொரு நிலை, எலிசெபத்திற்கு மட்டுமல்ல; அந்நாளைய அரச குடும்பத்திற்கே இதுதான் வரலாறு.

லார்ட 'செய்மோர்' தூக்கிலிடப்பட்டான்— லார்ட் டட்லி பல்வேறு குற்றம் சாட்டப்பட்டு, வாழ்வின் இறுதிக்கும் சாவின் முனைக்கும் ஓடிக்கொண்டிருந்தான். பிரெஞ்சு இளவரசன் சாகஸத்தால் ஈர்க்கப்பட்டு, ஆசையால் நிரப்பப்பட்டு, இங்கிலாந்தை ஆதரிக்கப் போர்க்களம் சென்றபோது மடிந்தான். லார்ட் ராலே எலிசெபத்திற்கு வெற்றியையும். அவள் பொக்கிஷற்திற்குப் பொன்னையும், அவள் உள்ளத்திற்கு இனிக்கும் இன்பத்தையும் கொட்டிக் கொடுத்தவன். இறுதியில் அரச குடும்ப வரலாறுபடி சிறைச்சேதம் செய்யப்பட்டு மடிந்து போனவன். ராலே, கண் காணு நாடுகளிலிருந்தெல்லாம், கண்ணுறு செல்வக் குவியலை ராணிக்குக் கொடுத்து பைத்தியக்காரனுனவன். இவர்களையெல்லாம் விட மிக மிக அன்பாக நேசிக்கப்பட்டு 'எலிசெபத்'தின் கண்ணீரைக் கடைசி வரை ஆருகப் பெருக விட்டவன் எஸெக்ஸின் இளவரசன். ராலே கண்காணு நாடுகளிலிருந்து செல்வக் குவியலைக் கொண்டு வந்து அவள் காலடியில் கிடத்தியதைப் போல, எலிசெபத் இதுவரை காணு இன்பப் பெருவெள்ளத்தை அவளின் நெஞ்சகத்திலே பாய்ச்சியவன். ஆரம்ப காலத்தில் லார்ட் டட்லியும் அந்திம காலத்தில் லார்ட் எஸெக்ஸும்தான் எலிசெபத்தின் வாழ்க்கையிலே மிக மிக முக்கியமானவர்கள்.

வாழ்க்கையில் எவரை மறந்தாலும், எஸெக்ஸை அவளால் மறக்கவே முடியாது. வயதான காலத்திலும் அவள் வனப்பை முழுக்க முழுக்க அனுபவித்தவன் எஸெக்கஸ் ஒருவன் தான். எனவேதான் எலிசெபத் அவனைத் தன் இதயவேந்தனுக ஏற்றுக் கொண்டு அவனுக்கு மளமளவென்று உயர்பதவிகளை அளிக்கலானுள். அயர்லாந்து மக்கள் புரட்சி செய்யக் கிளம்பியபோது அதை அடக்க எஸெக்ஸ்ஸைத்தான் அனுப்பினுள் எலிசெபத். அதுமட்டுமல்ல, அவன் மீது கொண்ட அளவில்லா காதலால் அவனை அயர்லாந்தின் கவர்னர் ஜெனரலாகவுமாக்கினுள். இவ்வளவு தானு..? அவள் செய்த எவ்வளவோ சதிகளுக்கெல்லாம் அவனை அவள் மன்னிக்கவும் செய்தாள். ஆனல் அவனே அளவு மீறிப் போனுன் அயர்லாந்தின் புரட்சி மக்களை அடக்கப் போனவன், அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இங்கிலாந்தை கவிழ்க்கவும் சதி செய்தாள் — ராணி எலிசெபத்தை நேருக்கு நேராக நின்று, 'பெருங் கிழவி' என்று ஆத்திரத்தோடு சொன்னுன்...ஆனல் இவ்வளவையும் அன்பாகப் பொறுத்துக் கொண்டாள் எலிசெபத்—அவன் இளமைக்காக! ஆனல் இறுதியில் அயர்லாந்து பறிபோகும் என்று தெரிந்தபோதுதான் அவன் சிறைபிடிக்கப்பட்டு லண்டன் டவரிலே வைக்கப்பட்டான்.

எலிசெபத்தின் அவையினர் அவனுக்கு மரண தண்டனை விதிக்கக் கோரினர்...எலிசெபத்தோ...அதையும் செய்ய மனமில்லாமல் எவ்வளவோ நாட்களை நலிவு மனத்துடன் தன் அறையிலே தனிமையில் கண்ணீரும் கம்பலையுமாகக் கழித்தாள் — லார்ட் எஸெக்ஸும் எத்தனையோ காதல் கடிதங்களைப் பழைய நினைப்புடன் எழுதிப் பார்த்துவிட்டான்...ஆனல் எலிசெபத்திற்கே ஒரு பெரும் பொறுப்பும் ஆட்சியின் கௌரவமிருந்ததை மறந்தே போனுன், அதன் பயன் தூக்கு தண்டனைதான். ஆம்; இறுதியில் எலிசெபத் அவன் மரண தண்டனை பத்திரத்தில் கையெழுத்திடத்தான் செய்தாள். வேதனை பொங்க. இதயம் மெலிந்து நெஞ்சே குமுற அவன் மரணத்திற்குக் கையொப்பமிட்டாள்...எலிசெபத் பிறகு கண்ணீர் பெருக தன் அறையில் ஒடித்தாளிட்டுக்கொண்டாள்.

எஸெக்ஸ் மாண்டான் என்ற செய்தி அவளை செயலற்றவளாக்கிவிட்டது! பித்தம் பிடித்தவளைப்போல பல நாட்கள் அரச அவைக்கு வாராமல் அழுது கொண்டே இருந்தாள் எலிசெபத். அவ[illegible] அதிகமாக்கவோ

என்னவோ, மாண்டுபோன எஸெக்ஸின் மனைவி' அவன் சாவதற்கு முன்னால் எலிசெபத்திடம் சேர்ப்பிக்கச் சொல்லிக்கொடுத்த ஓர் அழகான மோதிரத்தினை அரசியிடம் சேர்ப்பித்தாள். இதுதான் அவளை நிரந்தரமாகப் படுக்கையில் கிடத்திவிட்டது; அந்த மோதிரம் எஸெக்ஸுக்குத் தன் காதல் அடையாளமாகவும் என்ன ஆபத்து வந்தாலும், அவனைக் காப்பாற்றுவதாகவும் எலிசெபத்தினால் அந்நாளில் வழங்கப்பட்டது! ஆனால் இந்நாளில் அவனையே அவள் கொல்லும் நிலைக்கும், அந்த ஆபத்து நேர்ந்தபோது, அவனைப்போய் காப்பாற்றாத பெரும் பாசத்திற்கும் அவளை ஆளாக்கிவிட்டது; இதை எண்ணித்தான் அவள் அழுது புரண்டாள்.

இந்தப் பெரும் பேரிடியால் வீழ்ந்த எலிசெபத் கடைசி வரையில் தேராமலேயே தன் மரணத்தை அணைத்துக்கொண்டாள்... 1603ல் அவளை மனநோய் கொன்றுவிட்டது. ஆனால் அவள் சாகும்போதும் தன் கௌரவத்தையும் கண்ணியத்தையும் இழக்காமல், அதிகார தோரணியில் ஒரு இம்மியளவும் விட்டுக்கொடுக்காமல்தான் மடிந்தாள் அவள் மரணமஞ்சத்தில் கிடத்தப்பட்டுக் கிடக்கும்போதுகூட 'யாரோ ஒருவன் தளபதிகளில் ஒருவன்— அரசியார் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். (Your majesty must take rest!) என்று அன்பின் மிகுதியால் சொன்னான். அதற்கவள் சொன்ன பதில்...என்ன தெரியுமா? 'வேண்டும்' (Must) என்ற சொல்லை ஒரு ராணியிடமா நீ உபயோகிக்க வேண்டுமென்று கேட்டாளாம் எலிசெபத்; எப்படி இருக்கிறது பார்த்தீர்களா எலிசெபத்தின் பெருமிதம். கடுகு சிறுத்தாலும் காரம் போகவில்லையல்லவா?

ஆம்! எலிசெபத் மாண்டுபோனாள். இறுதியில் இங்கிலாந்தின் சரிதத்திற்கும், உயர்வுக்கும் அரும்பாடுபட்ட ஆடலழகி இறுதியில் பெயரளவில் கன்னியாகவே காதல் இலக்கியத்திற்குப் புதிய ஏடுகள் சேர்த்து மறைந்து போனாள் எத்தனையோ பேர்களின் இதயங்களிலே எழிலான காதற் களங்கங்லமைத்து, அவர்களை அன்புச் சங்கிலியால் பிணைத்து இங்கிலாந்தின் பெருமிதத்தை நினைக்கமுடியாத பல தலைமுறைகளுக்கு உயர்த்தினாள் எலிசெபத். கலை, விஞ்ஞானம், காவியம், இலக்கியம் நாடகம், நடனம் இவைகளும் அவன் காலத்திலே வளர்ந்தாற்போல் எவர் நாளிலும் வளரவில்லை... உலகமகாகவி ஷேக்ஸ்பியரை இவள் வாழ்த்திவரவேற்றதுபோல்- வேறொருவருமே வரவேற்கவுல்லை யென்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

தேம்ஸ் நதிக்கரையில் உல்லாசப்படகிலேறி ஷேக்ஸ்பியரின் இலக்கிய காவிய சேவைக்காக அவருடன் உல்லாசபவனி வருவாள் எலிசெபத் என்றால் எந்த அன்புக்கு அவள் கலையுள்ளம் சிறந்திருந்ததென்றுபாருங்கள்.

இத்தகைய எலிசெபத்து தான் பெரும்சிறப்புடன் இறுதியில் பலர்மனதில் பலப்பலகாதற் களங்களமைத்து இங்கிலாந்தை தன்கணவனாக்கி மாண்டுபோனாள்? லார்ட்செய்மோர்- லார்ட்டட்லீ-ராலே எஸெக்ஸ் என்று இப்படி போகிறது முக்கியஸ்தர்களின் பட்டியல்போகட்டும்நமக்கேன் இந்த பட்டியல் தயாரிக்கும் தொல்லை.

★



விற்பனை மன்னன்

## திருச்சி எல். வைரவன்

இவர் புரட்சி எழுத்தாளரின் அண்ணன். பத்திரிகை ஏஜண்டுகளில் புரட்சியை உண்டுபண்ணிவருபவர். திருச்சிக்கு குமுதம், கலை ஏஜண்டு இவர். இருபது ஆண்டுகள் இன்ஷுரன்ஸில் நல்ல பதவியிலிருந்து விலகியவர். இவர் மட்டும் பத்திரிகைஏஜண்டாக வராமலிருந்தால் புரட்சி எழுத்தாளரைவிட பெரிய எழுத்தாளராக இருப்பார். அவரைப் போல் யாரையும் தாக்கிப்பேச மாட்டார் எல்லோரையும் நண்பராகவே கருதுவார். தன்னைப் பெருமைபடுத்திக்கொள்ளாதவர். காலை 4 மணியிலிருந்து இரவு 10 மணிவரை ஓயாமல் உழைத்து வருகிறார். குமுதமும், கலையும் திருச்சியில் இவ்வளவு தூரம் அதிக விற்பதற்கு மூலகாரணமானவர். இவரைப் போல் கடிதங்கள் எழுதுபவர்கள் யாரும் இரார். ஏஜண்டுகளுக்கெல்லாம் உதாரண புருஷர். அவரிடம் ஒருதரம் பழகுபவர் வாழ்நாள் முழுதும் அவரின் நட்பிலிருந்து விலக முடியாது. ஏனென்றால் பிறரைப் புண்படுத்தித் தான் உயர்வதைவிட, உயிர் விடுவதே மேலென்று எண்ணும் பண்பு படைத்தவர். வைரவன் நமக்குக் கிடைத்த நல்ல வைரம்.



புகைப்பட வேந்தன் :


## நாகராஜராவ்

சினிமா உலக நடிக, நடிகைகளை நேரில் பார்ப்பதை விட 100 மடங்கு அழகாக இருப்பதாக புகைப்படம் எடுத்து வரும் நிபுணர். மேனாட்டுப் புகைப்பட போட்டியில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் பரிசு பெற்றவர். சினிமா (Still Photographer) புகைப்படமெடுப்பவர்களுக்கெல்லாம் மூத்தவர், தலைமையானவர். இவர் எப்போதும் சிரித்த முகத்துடன்எளிய வாழ்க்கையுடன் வாழ்ந்து வருகிறார். இவருக்கு எல்லா நட்சத்திரங்களும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளார்கள். சினிமா உலகில் இவருக்கு அநேக சிடர்கள் இன்று இருக்கிறார்கள். விளம்பரங்களுக்கு இவரின் புகைப்படங்கள்தான் உயர்ந்தவைகளாகக்கருதப்படும்.




USE ALWAYS OUR DELICIOUS EAPPETISING
HELTH GIVING DRINK'S






## நேர்த்தியான சவாரிக்கு

நேர்த்தியான கார் சவாரி என்பது சக்தி; கண்ட்ரோல், கருவிகள் அதனுடைய பேலன்ஸ் சக்தி, ஸ்பிரிங் வசதி ஆகிய காரின் எல்லாப் பகுதிகளையுமே பொறுத்திருக்கிறது.

அம்பாசடர் இந்தத் தேர்வில் மிகச் சுலபமாகத் தேறிவருகிறது. அதனுடைய அற்புதமான ஓவர் ஹெட் வால்வு 25% அதிகமான சக்தியை 25% குறைந்த செலவிலேயே தருகிறது. அதனுடைய விசைகள் இயக்குவதற்கு மிக எளிதாகவும் அதே நேரத்தில் மிகச் சரியாக இயங்கக் கூடியதாகவும் இருக்கிறது. அதனுடைய உயர்ந்த ரக ஸ்பிரிங்குகள் பிரயாணத்தை உல்லாசகரமாக ஆக்குகின்றன. அம்பாஸடரின் ஒவ்வொரு பகுதியும் நேர்த்தியான சவாரிக்கே என்று செய்யப்படுகின்றன.

சிறந்த உழைப்புக்கு

# இந்துஸ்தான் அம்பாசடர்

இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா-1.

**விற்பனையாளர்கள் :**

ஆக்ரா; அம்பாலா கண்ட்; ஆஜ்மீர்; அகமதாபாத்; அகமத் நகர்; அலகாபாத்; பரோடா; பெங்களூர்; பிலாய்; பெர்ஹாம்பூர்; பாம்பே; பாரில்லி; கல்கத்தா; கட்டாக்; கோயமுத்தூர்; கொழும்பு; திப்ருகார்; தான்பாத்; குவாலியர்; ஹௌகாத்தி; இம்பால்; இந்தூர்; ஜெய்பூர்; ஜபல்பூர்; ஜோத்பூர்; ஜால்ன்; ஜோர்காட்; ஜம்ஷட்பூர்; ஜலந்தர்சிட்டி; ஜம்மூ; கான்பூர்; கோல்காபூர்; கர்னூல்; லக்னவ்; சென்னை; மதுரை; மங்களூர்; மீரட்; நாகபுரி; புதுடில்லி; நேபால்; பாட்னு; பூனு; பாண்டிச்சேரி; பாளையங்கோட்டை; ராஜ்கோட்; ராஞ்சி; சாம்பல்பூர்; சில்லாங்; செகந்தராபாத்; சில்சார்; ஸ்ரீநகர்; சாட்னு; டெஜ்பூர்; திருச்சிராப்பள்ளி; திருவனந்தபுரம்; வாரணசிகண்ட்; விஜயவாடா; விசயநகரம்.

60
ஆண்டுகளாக
பெண்மையுடன்
உள்ளதோர்
அதியற்புத
உறவு




## லோத்ரா

மாதர்களின்
ஆரோக்கியத்திற்கும்
ஆனந்தத்திற்கும்

கேசரி குடீரம்
பிரைவேட் லிமிடெட்
ராயபேட்டை, சென்னை-14

SISTA'S

Agents for Tamilnad
M/s Seetharama General Stores
West Tower Street, Madurai

**S.T.K.S. சீல் உத்திரவாதமானது**

நூதன டிசைன்களில்

பவுன் நகைகள்

வெள்ளிப் பாத்திரங்கள்

கொலுசுகள் ஆகிய இன்னும் பல அலங்கார ஆபரணங்களுக்கும்

ESTD: 1930

PHONE 74



*நம்பிக்கையான இடம்:*

**S.T.K. சுப்பையா பத்தர் & பிரதர்ஸ்**

பவுன், நகை, வெள்ளிப்பாத்திர வியாபாரம்,

*விஜயபுரம்* *திருவாரூர்.*

B.B.

**"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"**



1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தது.

ஆயுள் பூராவும் பலன் தரும்.

வெள்ளி ரக்ஷை ரூ. 43-75

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-75 மணியார்டர் செய்யவும், ஷை தொகை வெள்ளி விளம்பரம், தபால் செலவிற்காக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

**N. B.** (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும், நாஸ்திகர்களும் தடுக்கப் படுகிறார்கள்.

கோட்டமருதூர்

**ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்**

அரகண்டநல்லூர் P.O. (S. A. Dt.)



*போனிக்ஸ் விசிறிகள்*

Mfrs: ENG. WORKS OF INDIA (Private) Ltd., CALCUTTA-2

CHARI

தென்னகம் தன்னில் மிக்கச்
சீருடன் விளங்கும் நல்லோர்
நன்முறை வகுத்து நாளும்
நடத்திடும் பெரிய பாங்காம்

அன்புடை மக்கள் பாய்ச்சும்
ஆதரவென்னும் நீரால்
என்றுமே செழித்து நிற்கும்
இந்தியன் பாங்க் தானே

★

# இந்தியன் பாங்க்
## லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
வடக்கு பீச்ரோட், சென்னை.

G. S. சுந்தரம்,
*காரியதரிசி.*



ஸ்தாபிதம் 1907

---

உயர்ந்த ரக உணவு வகைகளுக்கும்
உளம் கனிந்த உபசரிப்புக்கும்

சிறந்த இடம்
## ஸ்ரீ வெங்கடா லாட்ஜ்
மடத்துத் தெரு :: கும்பகோணம்

நற்சுவையும்
நறுமணமும் உள்ள உணவு சாதனங்கள்

லோட்டஸ் பிராண்டு

ஊறுகாய் தினுசுகள், சாம்பார் பௌடர்,
ரஸ பௌடர், கரி பௌடர், மஸாலா பௌடர்
முதலியன

*தயாரிப்பவர்கள்:*
ஸ்ரீ வெங்கடா லாட்ஜ் காண்டிமெண்ட்ஸ்
கும்பகோணம்.

---

நாட்டுக்கு அழகு
முத்தமிழ் மொழித்திரம்

★ எல்லா ஊர் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும் ★




★ ஏஜண்டுகளுக்கு கமிஷன் உண்டு ★

வீட்டுக்கழகு முத்தமிழ்க் காலண்டர்
விபரம் வேண்டுவோர்:

## முத்தமிழ்
## காலண்டர் கம்பெனி
காஞ்சீபுரம் :: போன் நெ. 6.

FOR

Presentation articles
Electric Appliances
Kerosene Stoves
&
Electric Fancy Brackets, Shades etc.,

—— : Visit : ——

**Basheer's Novelty Palace**

112, Devaraja Mudali Street,
MADRAS - 3

Phone : 3939

*Distributors for :-*

CAPTIP PLYWOOD
STEEL - LORD
STEEL FOLDING CHAIRS
DEEPAK & JYOTI KEROSENE STOVES

ஆபீஸ் : 21818 பாக்டரி : 3325

KAMDAR'S STAINLESS STEEL
TRADE MARK

எல்லோருக்கும் எங்கள்
**தீபாவளி வாழ்த்துக்கள்**

★

தயாரிப்பாளர்கள்

TELEPHONE BRAND

**ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்**

ஷோரூம் : 4365 வீடு : 3820

**Nutrine மிட்டாய்கள்**




சுவைமிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும் அழகான டின்களில் கிடைக்கின்றன. நியூட்ரைன் டின்களில் நிறைய டாபிகள் கிடைக்கின்றன, காரணம், டின் முழுவதும், டாபிகளால் நிரப்பப் படுகின்றன. அரைகுறையாக நிரப்பப்படுவதில்லை

நியூட்ரைன் கன்பெக்‌ஷனரி கம்பெனி
பிரைவேட் லிட்

சித்தூர், ஆந்திரப் பிரதேசம்

எல்லோருக்கும் எங்கள் இதய பூர்வமான வாழ்த்துக்கள் !

# பாலு பிரதர்ஸ்

(ஓவியர்கள்)

## பீபீஸ்

(விளம்பர இலாகா)

2. தாயார் சாகிப்தெரு, சென்னை-2.

போன் : 85515

***

## பாலு பிரதர்ஸ் பப்ளிகேஷன்ஸ்

(புத்தகம் வெளியிடுவோர்)

## கலை

(தமிழ் இலக்கிய மாத இதழ்)

131. தாயார் சாகிப் தெரு, சென்னை-2.

போன் : 85952

***

## 'திருவள்ளுவர்'

(மாதம் இருமுறை மாணவர் ஏடு)

131, தாயார் சாகிப் தெரு, சென்னை-2.

*

## அமிர்தம் ஏஜென்ஸீஸ்

(பொங்கல் வாழ்த்துக்கள், காலண்டர்கள் தயாரிப்போர்)

130, தாயார்சாகிப் தெரு, சென்னை—2.

***

## பாலு பிரதர்ஸ் ஆர்ட் பிரிண்டர்ஸ்

(அழகிய அச்சு வேலைகள் செய்வோர்)

1, தாயார் சாகிப் தெரு, சென்னை—2.

உரிமையாளர்கள் : ஓவியர் அ. பாலு, ஓவியர் அ. சீனு.

---

'கலை' தீபாவளி மலர் பாலு பிரதர்ஸ் ஆர்ட் பிரிண்டர்ஸில் அச்சிடப்பட்டது.

Printed by S. NATARAJAN at Balu Bros Art Printers, Madras-2 Published by Artist A. BALU for Balu Bros Publications 131, Thayar Sahib St., Madras-2. Edited by Artist A. SEENU.


உன்னத முறையில்
உருவாகிறது!
வி.என்.எஸ். பிக்சர்ஸ்
ராஜயோகம்
வி.என். சம்பந்தம்
முக்கிய பாகத்தில்...
கதை. வசனம், பாடல்
வி.என்.சம்பந்தம்
டைரக்ஷன்
எஸ்.ஏ.சுப்பராமன்
சங்கீதம்:
பூரண உரிமை...
S.D.லோகநாத முதலியார்
1. கான்ஸ்டேபிள் ரோடு, சென்னை-23.
வி.என்.எஸ். பிக்சர்ஸ்

REGD. No. 7055. Registere... as A Newspaper ...

